1562
25-3-09

வெளியீடு: 12-09-2008 Issued: 12-09-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 21, 2008—தொகுதி 48—எண் 2

**Monday, the 21st April, 2008—Volume 48—No. 2**

...றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...e Assembly Secretariat, Chennai-600 009

D
V24,31'P08
P08·48·2
228412

[Price Rs. 3.00

## 21-4-2008

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 219-248 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 5) | 249-314 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் காவல் துறையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் | 315 |
| (ஆ) அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் வருவாய்த் துறைக்கு மாற்றம் | 315 |
| (இ) வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் | 316-320 |
| திரு. ஜி.கே. மணி | 316,318 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 316-320 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 319 |
| (ஈ) உள்ளாட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்காதது | 320,321 |
| செல்வி கே. பாலபாரதி | 320 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 320,321 |
| (உ) விளாத்திகுளம் தொகுதி, புளியங்குளம், வைப்பாற்று வெள்ளத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம் | 321-322 |
| திரு. போ. சின்னப்பன் | 321,322 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி. | 322 |

| | பக்கங்கள் |
|---|---|
| **2. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (ஊ) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பணியிடங்களை நிரப்புதல் | 322,323-325 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 323,324 |
| மாண்புமிகு திரு. எ.வ. வேலு | 324,325 |
| (எ) ஆண்டிப்பட்டி, உடுமலைப்பேட்டை, அரசியல் கட்சிகளின் தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினை | 323,325-328 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 326,327 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 327-328 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 328-431 |
| *மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை | 328, 348, 351-355,384, 385,397 413-426, 429,430 |
| திருமதி எஸ். தேன்மொழி | 349-359 |
| *திருமதி இரா. இராணி | 360-364 |
| *திருமதி ராணி வெங்கடேசன் | 364-373 |
| *திருமதி பெ. கமலாம்பாள் | 373-381 |
| திருமதி ஜி. லதா | 382-387 |
| *திருமதி பி. பத்மாவதி | 387-391 |
| திருமதி பெ. பிரபாவதி | 391-394 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 394-404 |
| திருமதி இளமதி சுப்பிரமணியன் | 408-413 |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 431,432 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 9

## 2008 ஏப்ரல் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்*
*காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு."*

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**121—**

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***24177—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 ஏப்ரல் 21

பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 2-6-1964 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது சிறிய இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சொந்த இடம் வாங்க நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் சொந்தக் கட்டடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கும், அப்பகுதிக்கு வருகிற ஆயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் தாங்கள் உற்பத்திச் செய்கின்ற விவசாயப் பொருட்களை மழைக் காலங்களில் மழையில் நனையாத அளவில் பாதுகாப்பாக வைப்பதற்கும், அதேபோல சில பொருட்களை ஈரப் பதத்தோடு கொண்டுவரும்போது, அதைக் காய வைப்பதற்கு உலர்களத்துடன்கூடிய விற்பனைக் கூடம் அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கின்றேன். சொந்த இடம் வாங்க நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. நிலம் வாங்கியவுடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டடம் கட்டி விரைவிலே முடிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். பெரணமல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1964 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. 400 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்திற்கு மாத வாடகை ரூ.150 செலுத்தப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டு 425 மெட்ரிக் டன்னும், 2006-2007 ஆம் ஆண்டு 432 மெட்ரிக் டன்னும் விளைபொருட்கள் வரப்பெற்று, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 2005-20[illegible] ஆம் ஆண்டு 25 ஆயிரம் ரூபாய் வருமானமும் 20[illegible] ஆம் ஆண்டு [illegible] ஆயிரம் ரூபாய் வருமானமும்

228412



2008 ஏப்ரல் 21]

கிடைத்துள்ளது. உணவுப் பொருள் வரத்தும் குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், அங்கு வாடகைக் கட்டடத்தில் இயங்குவதைவிட, நிலம் வாங்கி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டடம் கட்டி விவசாயிகளுக்கு இன்னும் சிறந்த முறையிலே சேவை செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 122, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**123—**

## கட்டடம்

***30892—திரு. எஸ் ஜெயபால்:**
**திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இராஜாக்காமங்கலத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இராஜாக்காமங்கலம் என்ற இடத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாவட்டத்தினுடைய தலைநகர், இராஜாக்காமங்கலத்திலே புதிய கட்டடம் கட்டினால், அங்கே

வட்டாரப் போக்குவரத்தினுடைய பணிகள் நிறைவேறுவதற்கு, உரிமம் பெறுவதற்கு, வாகன எண்களைப் பதிவு செய்வதற்கு எளிதாக இருக்கும். எனவே, மாவட்டத்தினுடைய தலைநகர் என்பதால் நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் சார்பாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *9-35*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்ட கடந்த *3* ஆண்டுகளாக அரசினுடைய புறம்போக்கு நிலம் இருக்கிறதா என்று ஆய்வுசெய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிலமாற்றம் செய்வதற்கு தொடர்ந்து முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அது மக்கள் நிறைந்த பகுதி என்ற காரணத்தினால், நிலம் கிடைப்பதிலே மிகவும் சிரமமாக இருக்கிறது. இராஜாக்காமங்கலம் என்ற இடத்திலே இடம் இல்லை. அதேபோல, நாகர்கோவில் அருகில் அகஸ்தீஸ்வரம் வட்டம், நீண்டகரை கிராமத்தில், கிட்டத்தட்ட *5* ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடம் *10* அடி அளவிற்கு மிகவும் பள்ளமாக இருக்கிற காரணத்தினால் அங்கு கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக இல்லை என்று அறிக்கை சொல்கிறது. திருப்பதிசாரம் என்ற இடத்திலே கோவில் நிலம் *3* ஏக்கர் இருக்கிறது. அதை மாற்றலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக முயற்சி எடுத்தபோது, கோவில் நிர்வாகம் தர மறுத்திருக்கிறது. எனவே, அங்கே கட்டடம் கட்டுவதற்காக, தொடர்ந்து மூன்று ஆண்டு காலமாக முயற்சியை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், *50, 60* ஆண்டு காலமாக, மொத்தம் இருக்கிற R.T.O. அலுவலகங்களில் *22* அலுவலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வந்தன. இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட *15* சொந்தக் கட்டடங்களுக்கு அனுமதியளித்தார்கள். இந்த *50* ஆண்டு காலமும் *22* சொந்தக் கட்டடங்கள் இருந்தன. ஆனால், கடந்த ஒரு வருடம் *8* மாதக் காலத்தில் *15* புதிய கட்டடங்களைக் கட்ட உத்தரவு தந்திருக்கிறார்கள். எனவே, முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தளவில் பணம் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அங்கே இடம்



கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. எனவே, இடத்தினைத் தேர்வு செய்து விரைவிலே கட்டடம் கட்டுவதற்கு இந்தத் துறை நிச்சயமாக முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு, இராஜாக்காமங்கலத்தில் புதிய கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் அவர்கள் கோரியதற்கு, நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்போது பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால், நான் ஏற்கெனவே கேட்டிருந்தது, நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை, நாகர்கோவிலிலேயே அமைக்க வேண்டும். ஏனென்றால், நாகர்கோவில் மாவட்டத்தின் தலைநகரம். பல ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினமும் அங்கே பதிவு செய்யப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், இடம் இல்லையென்று நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்பொழுதெல்லாம் தமிழகத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழகத்திற்குப் பொற்காலம். அதுபோல, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நேரு அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் இந்தக் காலம் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம். இப்பொழுது, இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் நாகர்கோவில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. அ. ராஜன்:** நாகர்கோவிலில் நீங்கள் ஒரு பஸ் டெப்போ தருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். ஐந்தரை, ஆறு ஏக்கர் பரப்பளவுள்ள போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. எனவே, அந்த இடத்திலே பஸ் டெப்போவையும் அமைத்து, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தையும் அமைக்கலாம். அதை இந்த ஆண்டிலேயே அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் அவர்கள் நாகர்கோவில் பகுதியில் ஒரு பஸ் டெப்போ தேவை என்று மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது கோரிக்கை வைத்தார்கள். குறிப்பாக, மதுரை போக்குவரத்துக் கழகம் என்பது நிதிநிலையில் சிரமமாக இருக்கின்ற போக்குவரத்துக் கழகம். அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய பணத்தை தந்து, 1,000 புதிய பேருந்துகளை மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் வாங்கித் தந்திருக்கின்றார்கள். எனவே, நிலைமை சீரடையும்போதுதான் பஸ் டெப்போ வருவதற்குரிய வாய்ப்புகள் கிடைக்கும். அதேநேரத்தில் அந்த பஸ் டெப்போவிற்கு அருகிலேயே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்ட முடியுமா? கீழே பேருந்து நிலையம், மேலே அலுவலகம் என்ற அளவிலே கட்ட முடியுமா என்பதை ஆய்வதற்கு அதிகாரிகளை அங்கே அனுப்பிப் பார்த்து, அப்படிக் கட்டலாம் என்ற வாய்ப்பு இருந்தால் இந்த அலுவலகத்தைக் கட்டுவதற்கு இந்தத் துறை முயற்சி எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலே, போக்குவரத்துப் பாதை அமைக்கின்ற திட்டம் வேண்டுமென்று நாங்கள் முதலிலே கோரியிருந்தோம். அதுகுறித்து ஏதாவது நடவடிக்கை உண்டா என்பதைத் தங்கள்மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, கேள்வி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பது குறித்து. (குறுக்கீடு) திரு. சின்னசாமி, கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு வந்து, அதைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அது ஒரு மலைப் பிரதேசமாக, முழுக்க, முழுக்க கல் நிறைந்தப் பகுதியாக இருக்கிறது. எனவே, இடத்தை நேர் செய்து, அங்கு Training Track அமைப்பதற்கு முயற்சி எடுக்கலாம். ஆனால், அதற்கு நிறைய



செலவாகும். இடம் மூன்று ஏக்கர் இருக்கிறது. அதற்கு நிறைய செலவாகும் என்கிற காரணத்தினால், இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பிறகு அது குறித்து ஆராய்ந்து பார்த்து, வேறு இடம் கிடைக்கவில்லையென்றால், அங்கு அமைப்பதற்குரிய முயற்சியினை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**124—**

## விடுதிக் கட்டடம்

***34638—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி ஆகியவற்றுக்குத் தலா ரூ.31.50 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 72, நாள் 18-7-2005 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள 6 முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் பணிகள் மேற்கொள்ள யாரும் வராததால் தற்போதைய விலை விகிதப்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

[2008 ஏப்ரல் 21

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர் ஆண்கள், பெண்கள் நல விடுதியைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் கூறியதுபோல ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் பணிகளை நீண்டகாலமாக யாரும் எடுக்கவில்லை என்ற காரணத்தினாலே, குறிப்பாக, மாணவியர் விடுதியைச் சார்ந்த பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதுவரை அவர்கள் இரண்டு முறை இடம் மாறி, அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு இடங்களிலே வாடகைக்கு இடத்தைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவில் நடவடிக்கைக்குக் கொண்டு வர வேண்டும் என்றும், இந்த வருடமே கொண்டுவந்து விடுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையிலே அதற்கு ஒப்புதல் வழங்கிவிட்டார்கள். இந்த ஆண்டிலே உடனடியாக வேலை எடுத்து முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கிற மாமல்லபுரத்தைச் சுற்றி ஏராளமான பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் நலன் கருதி மாமல்லபுரத்தில் புதிதாக விடுதிகள் அமைக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலிக்கும்.



2008 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் திருமகள் ஆலைக் கல்லூரி இருக்கின்றது. இந்தக் கல்லூரிக்கு, திருப்பத்தூர், ஆலங்காயம் போன்ற மலைப் பகுதிகளில் இருந்து பெண்கள் வந்து படிக்கிறார்கள். அவர்கள் திரும்பிச் செல்வதில் சிரமங்கள் இருக்கின்றன. படிப்பதற்காகப் பல பகுதிகளில் இருந்தும், வெகு தூரங்களிலிருந்தும் மகளிர் வருவதால் அவர்களின் நலன் கருதி, குடியாத்தம் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதியை அமைக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போலத்தான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தந்தப் பகுதிகளுடைய தேவைகளைச் சரியான முறையிலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, வருங்காலத்திலே இதற்கு வேண்டிய நிவாரணங்களை நாங்கள் செய்து கொடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் சோலைக்கொட்டாய் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியானது ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாணவிகளுக்கு குளியல் அறை, கழிப்பறை வசதிகள் இல்லாத இடமாக அந்த இடம் இருந்துகொண்டிருக்கிறது. விடுதிக்குத் தனியாக கட்டடம் கட்டுவதற்குப் போதுமான இடம் அங்கே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலேயே அந்த மாணவிகளுக்குத் தனியாகப் புதிய விடுதிக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி கட்டுவதற்கு இடம் தயாராக இருக்கும் என்று சொன்னால், அதற்கு முன்னுரிமை வழங்கி, நமது தலைவர் கலைஞர் அரசாங்கம் மிக வேகமாக அந்தப் பணிகளை முடித்துக் கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**125—**

**பஞ்சாலை**

***27844—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சியில் அரசு பருத்தி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் மாநிலத்திலேயே அதிகப்படியான பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு அரசின் கணக்கெடுப்பின்படி 7,400 ஏக்கர் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, எங்கள் வரகூர் தொகுதியின் மையப் பகுதியான பரவாய், குன்னம், கொளக்காநத்தம் போன்ற பகுதிகளில்



2008 ஏப்ரல் 21]

மிக அதிகப்படியாக சாகுபடி செய்யப்படுகிறது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும், அங்கே உள்ள ஏழையெளிய மக்களின் வேலைவாய்ப்பைக் கருத்தில்கொண்டும் அங்கே ஒரு பஞ்சாலையை அமைத்து அந்தப் பகுதி மக்கள் வளம் பெறுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே உள்ள பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சை உற்பத்தி செய்வதிலே நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிற நிலை இருக்கிறது. கண்டிப்பாக அரசின்மூலமாக கூட்டுறவுப் பருத்தி தொழிற்சாலை துவங்குகிற எண்ணமும், திட்டமும் கிடையாது. ஆனால், பருத்தி விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பருத்தியை தமிழகத்திலே உள்ள பஞ்சாலைகள் நல்ல முறையில், நல்ல விலைக்குப் பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

முற்பகல் 9-45

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் விளைகின்ற பருத்தியை தேனி, ஈரோடு போன்ற பல்வேறு அண்டை மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகள் விற்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, வானம் பார்த்த பூமியை நம்பி வாழும் அந்த விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையான பஞ்சாலையை ஏற்படுத்த அரசு முன்வராவிட்டாலும், விசைத் தறி நூற்பாலையையாவது உருவாக்க வேண்டும். எங்கள் பகுதியில் நெசவாளர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அந்த நெசவாளர்களுக்கும், அங்கே பருத்தியை உற்பத்திச் செய்கின்ற விவசாயிகளுக்கும், வேலையில்லாமல் இருக்கின்ற கூலித் தொழிலாளர்களுக்கும் உதவுகின்ற வகையில் ஒரு நூற்பாலையையாவது அல்லது பஞ்சாலையையாவது அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை என்பது இப்போதுதான் புதிய கோரிக்கையாக வந்திருக்கிறது. நெசவாளர்களுக்கும், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, வர இருக்கின்ற காலங்களில் என்ன அப்பகுதியில் செய்ய முடியுமோ அதைத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**126—**

## நூலகம்

***7511—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் கிராமத்தில் நூலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலக விதிகள் 45 (A) 4(C)-ன்படி 1000 முதல் 5000 வரை மக்கள் தொகை உள்ள ஊர்களில் பகுதிநேர நூலகம் திறக்க வழிவகை உள்ளது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் கிராமத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யும்பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லாத இலவசக் கட்டடம்

2. தலா ரூ.1000/-வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.



2008 ஏப்ரல் 21]

3. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டு சந்தா ரூ.5/- ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

4. சுமார் ரூ.2000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்கிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இன்றைக்கு சட்டப் பேரவையிலே வருகிறது என்றவுடனே மாண்புமிகு அமைச்சருடைய உத்தரவுக்கிணங்க நேற்றையதினம் மாவட்ட நூலக அதிகாரி அவர்கள் நடுக்குப்பம் கிராமத்திற்குச் சென்று, மாண்புமிகு அமைச்சர் சொன்ன விதிகளுக்குட்பட்ட அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுமாறு, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினரிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைத்தையும் நேற்றையதினம் பூர்த்தி செய்துத் தந்திருக்கிறார்கள். ஆதலால், வரும் வாரங்களிலே அங்கு புதிய நூலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு ஏற்கெனவே இந்தக் கேள்வியின் அடிப்படையில் அங்கே பூர்வாங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக வரக்கூடிய வாரங்களில் அதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்த ஊரக நூலகங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தானாக முன்வந்து எந்தவித ஊதியமும் இல்லாமல் பல ஆண்டு காலமாக இந்த நூலகத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். பல்வேறு

[2008 ஏப்ரல் 21

மாவட்டங்களில் இந்த நூலகத் துறைப் பணிக்கு ஆள் எடுக்கின்றபோது நம்முடைய அரசு அவர்களை பணி நிரந்தரம் செய்திருக்கிறது: பல மாவட்டங்களில் அது விடுபட்டிருக்கிறது. ஆதலால், ஆர்வமுடன் முன்வந்து, தானாக அந்தக் கிராமப்புறங்களில் கல்வியை, அதுவும் படிக்கின்ற அந்த நோக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றுகின்ற அந்தக் கிராமப்புற நூலகர்களை பணி நிரந்தரம் செய்வதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகர் நியமனங்களைப் பொறுத்தமட்டிலே வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக அந்தப் பட்டியலைப் பெற்று, அவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை முடிவாக இருக்கிறது. இப்போதுகூட காலியாக இருக்கக்கூடிய பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுமூப்பு அடிப்படையில் நிரப்புவதற்கு அரசு முயற்சித்து வருகிறது. தற்காலிக ஏற்பாடாக, சில இடங்களில் தற்காலிக ஊழியர்களை நியமித்திருக்கிறோம். அவர்களை நிரந்தரம் செய்வது என்பது அரசினுடைய கொள்கை முடிவு. ஏனென்றால், இப்போது வேலைவாய்ப்பு பதிவுமூப்பு அடிப்படையில் நாம் நியமித்துக்கொண்டிருக்கிறோம். எனவே, அதுகுறித்தெல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசித்தான் பிற்காலத்திலே முடிவு எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்பதற்கு முன்னால், நம்முடைய மூத்த அமைச்சரும், மின்சாரத் துறை அமைச்சருமான மாண்புமிகு அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுடைய பிறந்த நாள் என்று அறிகிறேன், அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய நூலகம் அமைப்பதற்கு என்ன அளவுகோலை அரசு வைத்திருக்கிறது? ஜனத்தொகையின்



2008 ஏப்ரல் 21]

எண்ணிக்கையா அல்லது வாசகர்களுடைய எண்ணிக்கையா, எதை மையமாகக்கொண்டு புதிய நூலகம் அமைக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். திருப்பூர் பகுதியிலே இந்த இரண்டுமே அதிகமாக இருக்கின்றன. ஜனத்தொகையும் கூடுதலாக இருக்கின்றது, புத்தகக் கண்காட்சிகளெல்லாம் நடைபெறுகின்றபோது ஏராளமான வாசகர்களும் அங்கே நிரம்பியிருக்கின்றார்கள். கூடுதலாக இருக்கின்ற ஜனத்தொகைக்கு ஏற்ப, அங்கே நூலக வசதி இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த விவரத்தைத் தெளிவுபடுத்துவதோடு, திருப்பூர் பகுதியிலே மக்கள்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதலாக நூலகங்களை அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களை அமைப்பதற்கான அளவுகோலைப் பொறுத்தவரையில், முதலிலே அங்கே இருக்கக்கூடிய மக்கள் தொகையைத்தான் கணக்கிலே எடுப்போம். மூலக் கேள்விக்கான பதில் அளிக்கிறபோதுகூட அதைத்தான் நான் சொன்னேன். மக்கள் தொகை 1,000 முதல் 5,000 பேர் இருக்கக்கூடிய கிராமங்களாக இருந்தால் உடனடியாக ஒரு பகுதிநேர நூலகத்தைத் தொடங்கலாம் என்று சொன்னேன். அவ்வாறு மக்கள்தொகையை அடிப்படையாக வைத்து நூலகங்களை அமைக்கின்றபோது நாம் வாசகர்களை உருவாக்குகின்றோம். எனவே, வாசகர்களை முதலிலே நாம் அளவுகோலாக வைத்துக்கொள்வதில்லை. நூலகங்களை அமைப்பதன்மூலமாக அதிக எண்ணிக்கையில் வாசகர்களை உருவாக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய குறிக்கோள்.

இன்னொன்று, திருப்பூர் பகுதியாக இருந்தாலும், தமிழ்நாட்டில் எந்தப் பகுதியாக இருந்தாலும், நான் பெருமையோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன், நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள், இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பொது நூலகம் மாத்திரமல்லாமல், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு நூலகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு

[2008 ஏப்ரல் 21

கிராமத்திலும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் இந்த நூலகங்கள் அமையப்பெற்று முடிவுற்று வரக்கூடிய காலங்களில், இந்தியாவிலேயே தமிழ்நாடு மாநிலத்தில்தான் அத்தனை பஞ்சாயத்துகளிலும் நூலகங்கள் இருக்கக்கூடிய பெருமையை நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நிச்சயமாக எல்லா இடங்களிலும் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றபோது, திருப்பூர் பகுதியில் இருக்கின்ற பல்வேறு கிராமங்களும் அதில் பயனடையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களில் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றுபவர்களை நிரந்தரப்படுத்துவது அரசின் கொள்கை. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். எங்களுடைய ஆட்சியிலே மாவட்ட அளவிலே இருக்கின்ற நூலகத்தைப் போன்று திண்டிவனம் நகரத்திலே ஒரு நூலகத்தை அமைத்தோம். மேலும், 5 பெண் பிள்ளைகளைப் பெற்றால், அரசனும் ஆண்டியாவான் என்று சொல்வார்கள். எனவே, ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு ஏழை, தனது 5 பெண் பிள்ளைகளும் கல்வி பயிலவேண்டுமென்று படிக்க வைத்துக்கொண்டிருக்கின்றார். அவர் எந்தக் கட்சியையும் சாராதவர். அந்த ஒரே காரணத்திற்காக அவரை தினக்கூலி அடிப்படையிலே நியமனம் செய்தோம். மூன்று ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையில் வேலை செய்துகொண்டிருந்தார். அவரை பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்றுகூட நான் கேட்கவில்லை, அவரை பணியிலிருந்து வெளியேற்றி இருக்கின்றார்கள். அதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இதை என்னுடைய கவனத்திற்கு இந்த அவையின் மூலமாகக் கொண்டு வந்திருக்கின்றார்கள். உடனடியாக இதைப் பரிசீலித்து மீண்டும் அவருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும்.



2008 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தில் மாவட்ட மத்திய நூலகம் ஒன்று இயங்கி வருகின்றது. ஆனால், அந்த நூலகத்திற்கு மாவட்ட மத்திய நூலகர் பணியிடம் வழங்கப்படவில்லை. உதவி நூலகரே அதை நிருவகித்து வருகின்றார். எனவே, மாவட்ட மத்திய நூலகர் பணியிடம் வழங்கப்படுமா? மேலும், இராமநாதபுரம் மாவட்ட மத்திய நூலகத்தில், பேராசிரியர்களும், மாணவர்களும் பயன்படுத்தும் இந்த நூலகத்தில் Digital Library வசதியை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, எங்கெல்லாம் நூலகர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றதோ, அவை ஊர்ப்புற நூலகமாக இருந்தாலும், கிளை நூலகமாக இருந்தாலும், மாவட்ட மத்திய நூலகமாக இருந்தாலும், இந்த ஆண்டு அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இராமநாதபுரத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால், நிச்சயமாக இந்த ஆண்டு அதுவும் கவனிக்கப்படும்.

Digital Library-யைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நாங்கள் அறிவித்திருக்கின்றோம். ஒவ்வொரு மாவட்ட நூலகத்திலும் Internet வசதியோடு கம்ப்யூட்டர் மையம் அமைத்து, அதன்மூலம் மாணவர்கள் Internet facility-ஐ பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றோம். இந்த ஆண்டு குடிமைப் பணியான I.A.S., I.P.S. தேர்வுகளை எழுதுபவர்களுக்கு இந்த வசதியை மாவட்ட நூலகங்களிலிருந்து கிராம நூலகங்களுக்கு, கிளை நூலகங்களுக்கு வழங்கக்கூடிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கெனவே எல்லா மாவட்ட நூலகங்களிலும் இந்த வசதிகளை உருவாக்கித் தந்திருக்கின்றோம். அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய நூலகத்திற்கு அந்த வசதியை செம்மைப்படுத்த அரசு முயற்சிக்கும்.

[2008 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10, 15 ஆண்டுகள் கிராமப்புறங்களிலே பகுதிநேர ஊழியர்களாகத் தினக்கூலி அடிப்படையில் நூலகர்களாகப் பணியாற்றுகின்றவர்களில் மார் 1,000 பேரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகப் பணியமர்த்தி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கின்றார்கள். இன்னும் 450 பேரை தகுதியின் அடிப்படையில் நிரந்தரப்படுத்த அரசு பரிசீலனை செய்வதாக அறிகின்றேன். அவர்களையும் விரைவில் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், காலத்திற்கு ஏற்ப எல்லா இடங்களிலும் கணினிமூலம் நூலகம் அமைக்கின்ற வாய்ப்பை, தமிழகம் முழுவதும் அரசு உருவாக்கிக் கொடுக்குமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்தது உண்மைதான். அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மானியக் கோரிக்கை விவாதம் 24 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. எனவே, அதற்கு முன்பு அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி அரசு ஒரு முடிவினை எடுக்க வேண்டும். கணினிமூலமாக எல்லா நூலகங்களையும் இணைக்கக்கூடிய அந்த வசதியை இப்போது படிப்படியாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நமது மதிப்பிற்குரிய உறுப்பினர், திரு. கு. ஹசன் அலி அவர்களுடைய கேள்விக்கு பதிலளிக்கும்போது சொன்னேன், மாவட்ட மைய நூலகங்களிலிருந்து இப்போது கிளை நூலகங்கள் அளவிற்கு இந்தக் கணினியை எடுத்துச் செல்லக்கூடிய முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம். படிப்படியாக, அனைத்து நூலகங்களுக்கும் இதைக் கொண்டு செல்லக்கூடிய முயற்சியினை, அரசு வரக்கூடிய காலங்களில் நிச்சயமாக மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 21]

**127—**

## உள் விளையாட்டு அரங்கம்

***30672—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடத்தில் போதுமான நிலம் உள்ளது. திருப்பூர், கோவைக்கு மையப் பகுதியாக இருப்பதால் பரிசீலனை செய்யுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சென்னைக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய கோவையில் உள் விளையாட்டரங்கம் இல்லை. கோவை மாநகராட்சி, C.V. Residency பகுதியிலும், G.B.T. அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய பகுதிகளில் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக பரிசீலனையில் இருக்கின்றது. அது விரைவில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், மத்திய அரசு உள் விளையாட்டு அரங்கத்திற்கு நான்காண்டு காலத்திற்கு முன்புவரை உதவித் தொகை கொடுத்துக்கொண்டிருந்தது. தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அதைப் பெறுவதற்காக இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய விளையாட்டரங்கம் கட்டுமானப் பணிகளுக்கான திட்டங்கள், பொதுவாக, அந்தந்த மாவட்டங்களில் உள்ள இடவசதி, குறிப்பிட்ட பகுதிகளில்,

[2008 ஏப்ரல் 21

பிரபலமான விளையாட்டுகளில் சிறப்பாக விளையாடும் விளையாட்டு வீரர்கள், பயிற்றுனர்களின் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கோவை மாவட்டம் திருப்பூரில் ஒரு உள் விளையாட்டரங்கம் கட்டுவது தொடர்பான கருத்துரு பெறப்பட்டு, அதனை அமைத்திட அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, பல்லடத்தில் உள் விளையாட்டரங்கம் அமைக்கப் போதிய இடவசதி தேர்வு செய்து கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன், அந்த இடத்தினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் கொடுக்கும்பட்சத்தில், தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவையைப் பொறுத்த அளவில் உள் விளையாட்டரங்கம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, உள் விளையாட்டரங்கம் என்பது எல்லா மாவட்டங்களிலும் ஒன்று கட்ட வேண்டும் என்பது அரசினுடைய நோக்கம். ஆனால், கோவையில் அதற்கான இடவசதி இல்லாத காரணத்தினாலும், கடந்த காலத்தில் அதற்கான முயற்சி எடுக்கப்படாததாலும், ஏற்கெனவே SPAT பயன்பாட்டில் உள்ள விளையாட்டு மைதானம் மாநகராட்சியினுடைய இடத்தில் இருக்கின்ற காரணத்தினாலும், பேச்சுவாாத்தைமூலம் அந்த இடம் கிடைக்குமானால், அதைப் பரிசீலிக்கும் என்பதையும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்த அளவில் விளையாட்டுத் துறைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி சொல்லுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மையப் பகுதிக்கு உள் விளையாட்டரங்கம் ஒன்று தேவை. அதேபோன்று கோவை விளையாட்டு அரங்கத்தில் இருக்கக்கூடிய நவீன ஓடுகளத்திற்காக 2005-இல் இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இந்தியாவிலே நவீன ஓடுகளங்கள் 24 இருக்கின்றன. அதில் ,தமிழகத்தில் மட்டும் மூன்று இருக்கின்றன. அதில் ஒன்று நேரு ஸ்டேடியம், மற்றவை கடந்தகால மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மதுரை மற்றும் கோவை மாவட்டங்களுக்கு இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு,



2008 ஏப்ரல் 21]

அங்கு அதற்கான பணிகள் முடிக்கப்பட்டு 2008 பிப்ரவரியில் trial பார்க்கப்பட்டிருக்கிறது. இருப்பினும்கூட, இன்னும் முழுமையாக அந்தப் பணிகளைச் செய்யாத காரணத்ததால், இரண்டாண்டு காலமாக அங்கேயுள்ள விளையாட்டு வீரர்கள் பயிற்சி செய்வதற்கு வழி இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் இதே அவையில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் ஊரக விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக, போட்டிகள் நடத்தப்பட்டு கொடுக்கப்படவேண்டிய பரிசுகள், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. பரிசுப் பொருட்களை கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். கேட்கும்போது, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், விரைவில் கொடுப்போம் என்று இந்த அவையில் சொன்னார்கள். இதுவரை அந்தப் பரிசுப் பொருள்கள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் குப்பைகளாக கிடக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் பத்திரிகையில் வந்த ஒளிவிளக்கு ஏற்றுவது பற்றிய கோவை செய்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அதில்...

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் கேட்கிறீர்களே...

**திரு. செ.ம. வேலுசாமி:** சொல்கிறேன், சொல்கிறேன். முதலமைச்சர் சொன்னதைத்தான் சொல்கிறேன். அதைப் பற்றிக் குறிப்பிட்ட அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல், ஏதோ எதிர்க்கட்சியினர் மானியத்தில் பேசுவது போல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் என் துறை சம்பந்தப்பட்ட ஒரு விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர், கடந்த ஆட்சியில் 2004 வரை மத்திய அரசு நிதி கொடுத்தது, இப்போது அதற்கு முயற்சி செய்வீர்களா என்று கேட்டார். ஒன்றை அவர் மறந்துவிட்டார். இந்த ஆட்சிக்கும், அவர்களுடைய ஆட்சிக்கும் இடையிலேயே அது நிறுத்தப்பட்டுவிட்டது. அவர்களே அதற்கு முயற்சி செய்யவில்லை

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இந்தத் துறைமூலம் எவ்வளவுதூரம் செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டும், மக்கள் பங்களிப்பையும் பெற்றுக் கொண்டுதான் இன்றைக்கு இந்தத் துறை பல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது. இன்னொன்று இங்கே இந்த synthetic track அவர்களுடைய ஆட்சியிலே அமைக்கப்பட்டதாகவும், அது திறக்கப்படாமல், மக்கள் பயன் பெறாமல் இருப்பதாகவும் சொன்னார்கள். அது உண்மைக்கு மாறான தகவல். காரணம் அந்த synthetic track கடந்த காலத்திலே போடப்பட்டது சரியில்லை என்ற காரணத்தால் அதற்கான சில அத்தாட்சிகளைப் பெற முடியவில்லை என்றும், அதற்கான பணிகள் நடைபெற்றதில் குறைகள் இருப்பதாகச் சொல்லப்பட்ட காரணத்தால், முறையான ஆய்வுகள் செய்யப்பட்டு இப்பொழுது மக்களுடைய பயனுக்காக summer பயிற்சிக்காகப் பள்ளிக் குழந்தைகள் விளையாடுவதற்கு, அவர்களின் உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) உங்கள் ஆட்சியில் நடந்ததைச் சொன்னார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்று அரசு ஏற்கெனவே கொள்கை முடிவெடுத்து பல மாவட்டங்களிலே விளையாட்டு அரங்கங்களைக் கட்டி முடித்துவிட்டார்கள். ஆனால், எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் இதுவரை விளையாட்டு அரங்கம் கட்டப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே, நம்முடைய வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரியில் இருக்கக்கூடிய இடத்தைப் பெற்றாவது அல்லது நம்முடைய வேலூர் கோட்டைக்குள்ளே இருக்கக்கூடிய விளையாட்டு மைதானத்தில் அனுமதி பெற்றாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூரில் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அதேபோல், அங்கே உள் விளையாட்டு அரங்கமும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மாவட்ட விளையாட்டு மைதானம் ஏற்பட்டதற்குப் பின்னால்தான் உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைக்கப்படுவது பற்றி பரிசீலிக்கப்படுவது வழக்கம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சென்னைக்குப் பக்கத்தில் இருக்கிற வேலூரிலே மைதானம் இதுவரை பெறப்படவில்லை என்பதை அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லி இருக்கிறேன். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமாக, அந்த இடம் கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) கோட்டை மைதானம் பொதுக்கூட்டத்திற்குத் தேவைப்படுகிறது. (குறுக்கீடு) தனியார் கல்லூரியினுடைய இடத்தைப் பொறுத்தவரை, பல்கலைக்கழகம் மூலமாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். உறுப்பினருடைய முயற்சியால் உரிய இடம் கிடைத்தவுடன் அதைப் பரிசீலித்து, பணி எடுத்துக்கொள்ளப்படும். உள்ளபடியே தமிழ்நாட்டிலேயே மாவட்ட அளவில் மைதானம் இல்லாதது வேலூர்தான் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *128*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**128—**

**கால்நடை மருந்தகம்**

***38774—திரு. ம. குணசேகரன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு கால்நடை மருந்தகத்தை நவீனப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 ஏப்ரல் 21

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு கால்நடை மருந்தகத்தை நவீனப்படுத்தும் பொருட்டு நபார்டு திட்டத்தின்கீழ் 47 வகையான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, முழுக்க முழுக்க வேளாண்மைத் தொழிலை முதன்மையாகக் கொண்ட தொகுதியாகும். இங்கே வாழ்கிற விவசாயிகள் அதிகமான ஆடு, மாடுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வசதியாக 1966 ஆம் ஆண்டு மாண்புமிகு உள் துறை அமைச்சராக இருந்த திரு. கக்கன்ஜி அவர்கள்தான் அந்தக் கால்நடை மருந்தகத்தைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். அதற்குப் பின்னால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த மருந்தகத்தைச் சீரமைத்து சுற்றுச் சுவர்களை எல்லாம் கட்டியிருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு அந்த மருந்தகம் ஒரு டாக்டர், ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர் கொண்ட மருந்தகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த மருந்தகத்தின் சுற்றுச் சுவர் இடிந்திருக்கிறது. மின்சார வசதி இல்லை, மின் விளக்கு வசதியும் குறைவாக இருக்கிறது. ஜன்னல்கள், கதவுகள் ஆகியவை பழுதடைந்து இருக்கின்றன. குடியிருப்பு வசதிகள் கிடையாது. தண்ணீர் அடிபம்ப் வசதியும் கிடையாது. குடிதண்ணீர் வசதியும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அந்த மருந்தகத்தை விவசாயிகளினுடைய நலன் கருதி, பராமரித்து நவீனப்படுத்தித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற மேற்படி மருந்தகத்தின் கட்டடத்தை நவீனப்படுத்தக் கூறுகின்றாரா அல்லது அதற்கு நவீன உபகரணங்கள் கேட்கிறாரா என்று தெரியவில்லை. கட்டடம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அவற்றைப் பராமரிக்க வேண்டும் என்று கூறினாலும், அதனை இந்த அரசு பரிசீலித்து, செய்யும்.



2008 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடமும் பழுதாகி இருக்கின்றது. அதேபோல, மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் வருகின்ற சப்பை நோய், அடைப்பான் நோய், நீலநாக்கு நோய், துள்ளும் மாரி நோய், ஆட்டம்மை நோய், கானை நோய் போன்ற தொற்று நோய்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோய் குறித்தெல்லாம் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. ம. குணசேகரன்:** கேள்வியை இனிமேல்தான் சார் கேட்க வேண்டும். நோய்களையெல்லாம் சொல்லிவிட்டுத்தானே கேள்வியைக் கேட்க வேண்டும்? நோய்களைப்பற்றிச் சொல்லாமல் எப்படிக் கேள்வி கேட்க முடியும்? நோயை சொல்லிவிட்டுத்தானே அதற்குத் கேட்க முடியும்? நோயை சொல்லிவிட்டுத்தானே அதற்குத் தேவையானவற்றைக் கேட்க வேண்டும். அப்படிப்பட்ட நோய்கள் வருகின்ற நேரத்திலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சில நேரங்களில் மருந்துகளும், மாத்திரைகளும், தேவையான மருத்துவ வசதிகளும், உபகரணங்களும் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால், விவசாயிகளினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஆடு, மாடுகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அந்த மருந்தகத்தில் நவீனப்படுத்தித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 47 வகையான சுமார் 75 எண்ணிக்கைக்குரிய நவீன உபகரணங்கள் (equipments) கடந்த 2 மாதங்களாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், மருந்துகள் தட்டுப்பாடு என்று கூறினார்கள். மருந்துகள் தட்டுப்பாடு என்ற நிலை தமிழகத்திலே எங்கும் இல்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மானாமதுரை மருந்தகத்தில் அத்தகைய நிலை

இருக்குமேயானால் உடனடியாக, நாளையதினமே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**129—**

### சமுதாயக்கூடம்

***19210—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூர் மற்றும் பொத்தியம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக்கூடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி இல்லியம்புதூர் மற்றும் பொத்தியம்பாளையம் ஆதி திராவிடர் காலனிகளில் சமுதாயக்கூடங்கள் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூரிலே, 100 வீடுகளும், அதன் அருகிலே உள்ள பெரிய இல்லியத்திலே 50 விடுகளும், கொல்லுக்காட்டு என்ற பகுதியிலே 50 வீடுகளும், ஆக, சுற்றிலும் மொத்தம் 200 வீடுகள் இருக்கின்றன. அப்பகுதிகளில் உள்ள அனைவரும், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த ஏழையெளியவர்கள். அவர்கள் திருமணம் செய்வது என்று சொன்னால், தனியார் திருமண மண்டபத்தில் செய்வது சிரமமான





விஷயம். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் அந்த அளவுக்கு வளரவில்லை. எனவே, ஆதி திராவிடர் சமுதாய மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு அவசியம் அந்தப் பகுதியிலே ஒரு சமுதாயக் கூடத்தைக் கட்டித் தந்தால், அங்குள்ள ஆதி திராவிட சமுதாயத்தினருக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதைப்போல, நூலகம் சம்பந்தமாகப் பேசுகிறபோது உள்ளாட்சி அமைப்பின் சார்பிலே ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு நூலகம் என்று அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் சேர்த்ததைப் போல, இந்த அரசு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு சமுதாயக்கூடம் என்ற அடிப்படையிலே, ஆதி திராவிடர் நலத் துறையும் சேர்ந்து அமைத்தால் நன்றாக இருக்கும். அதுகுறித்து அரசினுடைய திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில், முக்கியத்துவத்தின் அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்ட இட வசதி, நிதி நிலை வசதி போன்றவை குறித்து ஆய்வு செய்து, முன்னுரிமை அடிப்படையிலே சமுதாயக்கூடம் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையைத் தற்போது ஏற்க வாய்ப்பில்லை. வருகின்ற நிதியாண்டில் வேண்டுமானால் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் காலனிக்கு நான் செல்கிறபோதெல்லாம் அங்குள்ள மக்கள் தொகுப்பு வீடுகள் மிகுந்த பழுதடைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, பழுதடைந்து இருக்கிற வீட்டு வசதி வாரிய வீடுகளை வீட்டு வசதித் துறையின் சார்பிலே பழுது நீக்கித் தருகிற திட்டத்தைப்போல, தொகுப்பு வீடுகளை பழுதி நீக்கித் தருவதற்குத் தனி நிதி ஒதுக்கி, பழுது நீக்கித் தந்தால், ஏழையெளிய ஆதி திராவிட மக்கள் பயனடைவார்கள். இப்போதுள்ள தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு

20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் ஆகி இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. அவ்வீடுகளை செப்பனிட்டு சரிசெய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளை மராமத்து செய்யும் பணிகள் எல்லாம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக செய்யப்படுகிறது. மிகவும் அத்தியாவசியமான தொகுப்பு வீடுகளை மராமத்து செய்யவேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்துகொள்ளலாம். ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக இந்த மாதிரி மராமத்து செய்வதற்கென்று தனியாக நிதி எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**130—**

### படகு தங்குதளம்

***19470—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் மேற்குப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஆழப்படுத்தி விசைப்படகுகள் தங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் மேற்குப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஆசிய வளர்ச்சி வங்கி



நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர உதவி திட்டத்தின்கீழ் தூர் வாரி ஆழப்படுத்திடும் நடவடிக்கை துறையின் பரிசீலனையில் உள்ளது. தூர் வாரும் பணி மேற்கொள்ள தேவையான ஆய்வுகள் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆழ்கடல் மேலாண்மைப் பிரிவின்மூலம் மேற்கொள்ளப்பட்டன. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையின் அடிப்படையில் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்திடமிருந்து இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெறப்பட்டுள்ளது. தூர் வாரும் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்பொருட்டு விரைவு ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், தூர் வாரும் பணிக்கென மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையினை ஆராய்ந்து இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து பரிந்துரை செய்யும்பொருட்டு உயர்மட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்று அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மீன் வளத் துறை ஆணையர் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் கூடி இத்திட்டம் தொடர்பான ஆய்வு அறிக்கையினை ஆராய்ந்து அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் அரசின் நிர்வாகம் மற்றும் நிதி ஒப்புதல்.பெற்று இத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும். மேலும், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை நவீனப்படுத்திடவும், கூடுதல் தங்குதள வசதிகளை ரூபாய் 1 கோடியே 44 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்திக்கொடுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசனை நிறுவனமான திருவாளர்கள் ஸ்மக் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாய்வுப் பணிகள் வரும் செப்டம்பர் 2008-ல் முடிவடையும். ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும் பெறப்படும் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஒப்புதல் பெற்று 18 திங்கள்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் முடிவுற்றதும் பழையாறு பகுதியில் வாழும் மீனவர்கள், அவர்களது விசைப்படகுகளை மீன் பிடி துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்திட இயலும் எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்கு எனது சீர்காழி தொகுதி பழையாறு கிராம மீனவ மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பணி விரைந்து எப்போது முடிக்கப்படும் என்று கேட்டுக்கொள்வதோடு, பக்கத்தில் மீனவ கிராமங்களாக இருக்கக்கூடிய திருமுல்லைவாசல், தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய பக்கிங்காம் கால்வாயைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் திருமுல்லைவாசல், தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம் மற்றும் கீழையூர் கிராமங்களில் பக்கிங்காம் கால்வாயை 4 1/2 கி.மீ. நீளத்திற்கு ஆழப்படுத்த ரூ.1 கோடியே 74 லட்சம் ஒதுக்கீடு கோரிய முன்மொழிவு, 9-4-2008 அன்று நடைபெற்ற 12-வது உயர்மட்டக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கான அரசாணை வெளியிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒருமுறை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.



2008 ஏப்ரல் 21]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

**(பட்டியல் 5)@**

**1—**

### மின் விளக்கு வசதி

**வினா எண் 9918—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி நான்கு வழிப்பாதையிலிருந்து வெற்றிலைகாரனூர் வரை மின்விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி நான்கு வழிப்பாதையிலிருந்து வெற்றிலைகாரனூர் வரை 5 மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அதில் 4 மின்கம்பங்களில் தெரு மின்விளக்குகள் ஏற்கெனவே உள்ளன. ஒரு மின்கம்பத்திற்கு தெரு மின்விளக்கு இல்லாமல் உள்ளது. தெருவிளக்குக் கோரி இதுவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. தெரு மின்விளக்குக் கோரி உரிய விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு தெரு மின்விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**2—**

### மின் வசதி

**வினா எண் 12205—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.

[2008 ஏப்ரல் 21

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கழுகர்கடை பெருமாள்புரம் ஆதிதிராவிடர் காலனிக்கு மின் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கழுகர்கடை பெருமாள்புரம் ஆதிதிராவிடர் காலனியில் 15 குழும வீடுகளும், 41 குடிசைகளும் உள்ளன. இவற்றில் 12 குழும வீடுகளுக்கும் 41 குடிசைகளுக்கும் இது வரை மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் அளிக்கப்படும்பட்சத்தில், உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும். மேலும், இப்பகுதியில் 11 தெருவிளக்குகள் ஏற்கெனவே எரிய விடப்பட்டுள்ளன. தெருவிளக்குகள் வேண்டி விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லை.

**3—**

## மின் இணைப்பு

**வினா எண் 13023—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலமலை ஒன்றியம், பிலிக்கல்பாளையம் ஊராட்சி 5-வது வார்டு மிட்டாக்குன்னத்தூர் பகுதியில் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலமலை ஒன்றியம், பிலிக்கல்பாளையம் ஊராட்சி, 5-வது வார்டு மிட்டாக்குன்னத்தூர் பகுதியில் 22 குடிசைகள் உள்ளன. இவற்றில் 12 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்டப்பட்டுள்ள குடிசைகளுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 21]

**4—**

## மின் விளக்கு வசதி

**வினா எண் 13098—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதி, அட்டவணைபுதூர், புதுவலவு காலனியில் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அட்டவணைபுதூர் கிராமம், புதுவலவு காலனியில் தெருவிளக்குகள் அமைக்க பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து விண்ணப்பம் எதுவும் இதுவரை மின்வாரியத்தில் பெறப்படவில்லை.

உரிய விண்ணப்பம் அளித்து அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அலுவலகம் செலுத்தும்பட்சத்தில், வாரிய விதிமுறைகளின்படி தெருவிளக்குகள் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**5—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 18491—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள கிராமங்களில் சீரான மின்சாரம் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் தொகுதிக்கு கொளத்தூர் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 5 மின்னூட்டிகள்மூலம், மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 21

இந்த 5 மின்னூட்டிகளும் கிராமப் பகுதி மின்னூட்டி நிலையில் உள்ளன. இப்பகுதியில் உள்ள 5 மின்னூட்டிகளிலும் பகல் பொழுதில் 6 மணி நேரமும் இரவுப் பொழுதில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரம் சீராக முறை வைத்து வழங்கப்படுகிறது. மற்ற நேரங்களில் இரு முனை மின்சாரம் வழங்கப்படுகிறது.

—

## சீரான மின்சாரம்

**வினா எண் 18501—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் தோட்டத்தில் சீரான மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசினர் தோட்டத்திற்கு மின்சாரம் அரசினர் தோட்டம் 33/11 கி.வோ. துணை மின்நிலையம் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. மேலும், அத்தோட்டத்திற்கு 8 எண்ணிக்கை 500 கே.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றிகள் மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இங்குள்ள மின் பளுவைச் சமாளிப்பதற்குத் தேவையான மின்மாற்றிகள் உள்ளன. 400 மீட்டர் நீளத்திற்கு பழைய குறைந்த அழுத்த புதைவடம், புதிய புதைவடமாக மாற்றப்பட்டுள்ளது. தற்போது சீரான மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

7—

## புதிய மின் கம்பங்கள்

**வினா எண் 23542—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வன்னிகோட்டையில் பழுதாகியுள்ள மின்கம்பங்களை புதியதாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட வள்ளி கோட்டை கிராமத்தில் பழுதடைந்த பதினொன்று மின்கம்பங்கள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன.

8—

## மின் கட்டண வசூல் மையம்

**வினா எண் 33488—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வாணக்கன்காட்டில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதியில் உள்ள மாங்காடு, வடக்கு/ஆலங்குடி பிரிவு அலுவலகத்திற்கும், வாணக்கன்காடு, வெட்டன் விடுதி பிரிவு அலுவலகத்திற்கும் உட்பட்டதாகும் தற்போது புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் வடக்கு ஆலங்குடி, வெட்டன்விடுதி உட்பட 60 பிரிவு அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட மின் கட்டணம் வசூல் செய்யும் மையம் அனுமதிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு கணினி மையம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கணினிமயமாக்கப்பட்டு மின் கட்டணம் செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளதால் எந்த ஒரு பிரிவு அலுவலகங்களின் மூலமாகவும் மின் கட்டணம் செலுத்தலாம். ஆகவே, வசூல் மையம் அமைக்க வேண்டிய சாத்தியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

9—

### சீரான மின்சாரம்

**வினா எண் 34903—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கணக்கன்குடி பகுதி, பத்துப்பட்டி பகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு ஊராட்சி, காஞ்சிரங்குளம் ஊராட்சி, ஓடாத்தூர் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கணக்கன்குடி பகுதி, பத்துப்பட்டி பகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு ஊராட்சி, காஞ்சிரங்குளம் ஊராட்சி, ஓடாத்தூர் ஆகிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

10—

### மின் மாற்றிகள்

**வினா எண் 36619—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், லாடனேந்தல், பொட்டாப்பாளையம், மேலச்சொரிக்குளத்திலுள்ள மின்மாற்றிகளை அதிக மின்னழுத்தமுள்ள மின்மாற்றிகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஒன்றியம், லாடனேந்தல், பொட்டாப்பாளையம், மேலச்சொரிக்குளம் ஆகிய பகுதிகளுக்கு லாடனேந்தல் எஸ்.எஸ்.1, 2 (100 கே.வி.ஏ) லாடனேந்தல் 3, 4 மற்றும் 5 (63 கே.வி.ஏ.) பொட்டாப்பாளையம் எஸ்.எஸ். (100 கே.வி.ஏ.) மேலச்சொரிக்குளம் எஸ்.எஸ். (100 கே.வி.ஏ.) ஆகிய மின்மாற்றிகளின்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இம்மின்மாற்றிகளில் இணைக்கப்பட்டுள்ள மின்பளு மின்மாற்றியின் திறனைவிட குறைவாக உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்த தற்போதைக்கு அவசியம் எழவில்லை.



11—

### மின் வசதி

**வினா எண் 39134—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டம், சோமாத்தூர் காலனி குடியிருப்புக்கு மின்வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், சோமாத்தூர் குடியிருப்பில் ஏற்கெனவே உள்ள 20 குடியிருப்புகளில் 11 குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பகுதியில் எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் பெறப்படும்பட்சத்தில் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும்.

12—

### குப்பை அகற்றல்

**வினா எண் 2118—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, தீயணைப்பு அலுவலகக் குடியிருப்பு பகுதியிலுள்ள குப்பையை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 21

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தீயணைப்பு அலுவலர் குடியிருப்புப் பகுதியில் உள்ள கழிவுகள் மற்றும் இலை தழைகள் அனைத்தும் தினசரி சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**13—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 5910—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், புதூர் பூங்குளம், தலப்பாகாரன் வட்டம், பசலிக்குட்டை, பூங்குளம் ஊராட்சி ரெட்டிவலசை, பொம்மிகுப்பம் ஊராட்சி, அண்ணா நகர், ஜமனாபுதூர் ஊராட்சி, இராமதாஸ் நகர், இருளுப்பட்டு ஊராட்சி, பாப்பானூர் ஆகிய கிராமங்களுக்குத் தெரு விளக்குகள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், புதூர் பூங்குளம், தலப்பாகாரன் வட்டம், பசலிக்குட்டை, பூங்குளம் ஊராட்சி, ரெட்டிவலசை, பொம்மிகுப்பம் ஊராட்சி, அண்ணா நகர், ஜமனாபுதூர் ஊராட்சி, இராமதாஸ் நகர், இருளுப்பட்டு ஊராட்சி, பாப்பானூர் ஆகிய கிராமங்களுக்கு 20 சோலார் தெரு விளக்குகள் தேவைப்படுகின்றன. ஒரு விளக்கு ரூ. 28,000/- வீதம் 20 விளக்குகளுக்கு மொத்தம் ரூ.5,60,000/- மதிப்பீடு ஆகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும்பட்சத்தில், மேற்கண்ட பணி எடுத்துச் செய்யப்படும்.



2008 ஏப்ரல் 21]

**14—**

## குடிநீர் வசதி

**வினா எண் 6420—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் கிராமம், மசியன் தெரு பகுதியில் மினி டேங் வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், தாதாபுரம் மசியன் தெரு பகுதியில், சுமார் 15 குடும்பங்கள் உள்ளன. ஓ.எச்.டி.-யிலிருந்து பைப்லைன்மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், இரண்டு கைப்பம்பு, ஆழ்துளைக் கிணறுகள் வசதியும் உள்ளது. இந்த வசதிகளே இச்சிறிய குடியிருப்புகளுக்குப் போதுமானது.

**15—**

## தண்ணீர் தொட்டி வசதி

**வினா எண் 6534—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம் ஊராட்சி, சின்ன ஊஞ்சக்காடு சதாசிவம் வீடு அருகில் சிறிய தண்ணீர் தொட்டி வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம் ஊராட்சி, சின்ன ஊஞ்சக்காடு, சதாசிவம் வீடு ஆகிய பகுதிகளுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம், 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வாயிலாக காவிரி குடிநீர், பொது மக்களுக்கு 10/2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதிக்கு இரண்டு கையிறைப்பான்கள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இப்பகுதியில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து புதிய குடிநீர்த் திட்டத்தைச் செயலாக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**16—**

## கட்டட வசதி

**வினா எண் 6669—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மேல்புதுப்பாக்கம் கிராமத்தில் ஆறு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியத்தைச் சார்ந்த மேல்புதுப்பாக்கம் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் 2004-2005 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது.



**17—**

## கழிவுநீர் அகற்றல்

**வினா எண் 7451—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் விழமங்கலம் செல்லும் வழியில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இடதுபுறத்தில் கழிவுநீர் தேங்கி நிற்பதை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* பண்ருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட விழமங்கலம் செல்லும் வழியில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இடதுபுறத்தில் கழிவுநீர் தேங்கி உள்ளதை நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலமாக ஒட்டுமொத்த துப்புரவுப் பணி மேற்கொண்டு இடம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**18—**

## குடிநீர் வசதி

**வினா எண் 7663—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி, கொட்டாப்புளியூர் மக்களுக்குக் குடிநீர் வசதியும் மற்றும் பக்கநாடு கிராமம் கவேரியப்பன்வளவு மேட்டுத் தெருவில் சிறிய தொட்டி கட்டி குடிநீர் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி, செட்டிமாங்குறிச்சி கொட்டாப்புளியூரில் சுமார் 10 குடும்பங்கள் உள்ளன. பனங்காடு ஓ.எச்.டி.-யிலிருந்து பைப்லைன்மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. இருக்கும் வசதியே போதுமானது. காவேரியப்பன்வளவு மேட்டுத் தெருவில் 20 குடும்பங்கள் உள்ளன. இதற்கு வெட்டினித் தெருவிலுள்ள ஓ.எச்.டி.-யிலிருந்து பைப்லைன்மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு கைப்பம்பு வசதியும் உள்ளது. எனவே, மேல்குறிப்பிட்ட இரு இடங்களிலும், கூடுதல் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

**19—**

## மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்

**வினா எண் 8153—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திம்மனாமுத்தூர் ஊராட்சி மக்களுக்கு சுய உதவிக் குழுக் கட்டடம் மற்றும் வெங்காலப்பள்ளி ஊராட்சி, வெள்ளக்கண்ணன் வட்டம், திம்மணா ஊராட்சி, குருவப்பள்ளி ஆகிய இடங்களில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடமும் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திம்மனாமுத்தூர் ஊராட்சி குஸ்தம்பள்ளியில் ஏற்கெனவே மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது கோரும் குருவப்பள்ளிக்கும், குஷ்தம்பள்ளிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 750 மீட்டர் ஆகும். எனவே, தனியே மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.





வெங்காலப்பள்ளி டேக்கன் வட்டத்தில் ஏற்கெனவே ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. வெள்ளக்கண்ணன் வட்டத்தில் 2 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மட்டுமே உள்ளன. எனவே, தனியே கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**20—**

## குடிநீர் வசதி

**வினா எண் 8444—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்குட்பட்ட பழையக் கோட்டை, பழைய மேலப்பாளையம், முத்தையன்வலசு, சென்னிமலையில் ஈங்கூர் பஞ்சாயத்து கவுண்டனூரில் புங்கம்பாடி ஊராட்சி, சாலைப்பாளையம் ஆகிய பகுதிகளுக்குத் தண்ணீர் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பழையக் கோட்டை ஊராட்சி, கஸ்பா பழையக் கோட்டை குடியிருப்பில் திறந்தவெளிக் கிணறு, நீர்மூழ்கி விசைபம்பு திட்டம் மற்றும் ஆழ்குழாய்க் கிணறு விசைபம்பு திட்டம் ஆகியவற்றின் மூலமாக 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயன்பாட்டில் உள்ளது. முத்தையன்வலசு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு சிறு மின்விசை பம்பு திட்டம்மூலம் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பி.வி.சி. தொட்டி மற்றும் முத்தூர் - காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியும் பயன்பாட்டில் உள்ளன. பழைய மேலப்பாளையம் குடியிருப்பில் ஆழ்குழாய்க் கிணறு விசைபம்பு திட்டம் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பி.வி.சி. தொட்டி மற்றும் ஆழ்குழாய் கைப்பம்பு திட்டம் ஒன்றும் உள்ளது. சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சி, கவுண்டனூரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி உள்ளது. அந்த

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் தற்போது போதுமான அளவுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இங்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை. புங்கம்பாடி ஊராட்சி, சாலைப்பாளையம் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி உள்ளது. அந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை. எனவே, புதியதாக தண்ணீர் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

**21—**

## பயிற்சி அரங்கம்

**வினா எண் 10669—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கான கூட்ட மற்றும் பயிற்சி அரங்கம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி மற்றும் கூட்ட அரங்கம் மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பொதுப் பணித் துறைமூலம் கட்டப்பட்டு வருகிறது.

**22—**

## கட்டட வசதி

**வினா எண் 11069—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியம், கீழ்பாலப்பட்டி கிராமத்தில் மகளிர் சங்கக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியத்தில் கீழ்பாலப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் ஒன்று ஏற்கெனவே உள்ளது. எனவே, மேலும் சுய உதவிக் குழுச் சங்கக் கட்டடம் கட்ட திட்டம் எதுவுமில்லை.

**23—**

## பரிசோதனை

**வினா எண் 11384—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சியின்மூலம் அமைத்துத் தரப்படும் தார்ச் சாலைகளை தரக் கட்டுப்பாடுமூலம் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சிமூலம் அமைக்கப்படும் தார்ச் சாலைக்குப் பயன்படுத்தப்படும் தளவாடப் பொருட்கள் அருகில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் தரம் ஆய்வு செய்து தரமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**24—**

## நவீன கொள்கலன்கள்

**வினா எண் 11402—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் நகரில் ஆங்காங்கே குப்பைகள் போட நவீன கொள்கலன்கள் வைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஏப்ரல் 21

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குப்பைகளை சேகரிக்க திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் 12-வது நிதிக்குழுத் திட்டம்மூலம் 106 நவீன குப்பை கொட்டும் கொள்கலன்கள் வாங்கப்பட்டு டம்பர்பிளேசர் வாகனம்மூலம் குப்பைகள் அன்றாடம் சேகரிக்கப்பட்டு தூய்மை காக்கப்பட்டு வருகிறது.

25—

**மரக்கன்றுகள் வளர்த்தல்**

**வினா எண் 12648—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மகளிர்/ ஆடவர் சுய உதவிக் குழுக்கள்மூலம் மரக் கன்றுகளை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மகளிர், ஆடவர் சுய உதவிக் குழுக்கள்மூலம் மரக் கன்றுகள் நடுவது குறித்து திட்டம் ஏதும் இல்லை.

26—

**கட்டட வசதி**

**வினா எண் 13318—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கொளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், அத்திரிவயலில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில் குளத்தூர் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் அதே ஊராட்சியில் உள்ள அத்திரிவயல் கிராமத்திற்கு தனியே மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை.

27—

**கட்டட வசதி**

**வினா எண் 13320—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கீழக்குறிச்சி ஊராட்சி, கும்பம்பட்டியில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழக்குறிச்சி ஊராட்சியில் 2004-2005 ஆம் ஆண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய் பகுதி 2 திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் அதே ஊராட்சியில் உள்ள கும்பம்பட்டி கிராமத்திற்கு புதிய மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை.

[2008 ஏப்ரல் 21

**28—**

## காவிரிக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 13426—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியம், வேட்டமங்கலம் ஊராட்சியில் புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கி, குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேட்டமங்கலம் ஊராட்சியின் மக்கள் தொகை 8,051 ஆகும். இதன் மொத்த குக்கிராமங்கள் 37. இவற்றில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை 35. பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை 2. இவ்விரண்டு குக்கிராமங்கள் 2006-2007 ஆம் நிதியாண்டில் எடுக்கப்பட்டு, தனி மின்விசைத் திட்டம்மூலம் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. வேட்டமங்கலம் பஞ்சாயத்தில் உள்ள 7 குக்கிராமங்கள், கரூர் மற்றும் கரூர் பரமத்தி ஒன்றியங்களைச் சார்ந்த 101 குக்கிராமங்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமும், இதர குக்கிராமங்களுக்கு தனி மின்விசைத் திட்டங்கள்மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வேட்டமங்கலம் ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களுக்கு புதிய குடிநீர்த் திட்டம் தேவையில்லை.

**29—**

## காவிரிக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 13427—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூர் ஊராட்சி, மல்லம்பாளையம், நெடூர் தென்பாகம் ஊராட்சி, நெடூர் வடபாகம், மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஆகிய 3 ஊராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த்



2008 ஏப்ரல் 21]

திட்டம் (காவேரி) பயன்பாட்டில் உள்ளது போல், நெடூர் தென்பாகம், நெடூர் வடபாகம் ஆகிய ஊராட்சிக்கு விடுவிக்கப்பட்டு, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சிக்கு புதிதாக காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நெடூர் தென்பாகம் ஊராட்சியில் உள்ள 12 குக்கிராமங்களில் 8 குக்கிராமங்கள் முழுமையாக குடிநீர் வசதி பெற்றுள்ளது. பகுதியாக குடிநீர் வசதிபெற்ற 4 குக்கிராமங்களில் 2006-2007 ஆம் நிதியாண்டில் 3 குக்கிராமங்களுக்கு தனி மின்விசைத் திட்டம்மூலம் குடிநீர் வழங்க திட்டம் செயல்படுத்தப்பட்டது. மீதமுள்ள, பகுதியாக குடிநீர் வசதி பெற்ற 1 குக்கிராமத்திற்கு தனி மின்விசைத் திட்டம் மற்றும் கையிறைப்பான் திட்டங்கள்மூலம் தற்போது போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நெடூர் தென்பாகம் ஊராட்சியில் உள்ள 5 குக்கிராமங்களுக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நெடூர் வடபாகம் ஊராட்சியில் உள்ள 7 குக்கிராமங்களும் முழுமையாக குடிநீர் வசதி பெற்றவைகளாகும். நெடூர் வடபாகம் ஊராட்சியில் உள்ள 7 குக்கிராமங்களுக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு அரசு காலனி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் தனி மின்விசைத் திட்டங்கள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சியில் உள்ள 18 குக்கிராமங்களும் முழுமையான குடிநீர் வசதி பெற்ற குக்கிராமங்களாகும். இக்குக்கிராமங்களுக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு பஞ்சமாதேவி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் அரசு காலனி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நெடூர் தென்பாகம், நெடூர் வடபாகம் மற்றும் மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சிகளுக்கு மேலும் புதிதாக குடிநீர்த் திட்டங்கள் தேவையில்லை.

**30—**

## விற்பனைக் கூடம்

**வினா எண் 15521—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 21

(அ) வால்பாறை தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய விற்பனைக் கூடம் கோவையில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

**31—**

## கொள்முதல்

**வினா எண் 18220—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை அரசே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை அரசே கொள்முதல் செய்ய இயலாது. எனினும் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலமாகப் பொருட்காட்சி அரங்கங்கள் ஏற்படுத்தி அதன் மூலமாக விற்பனை செய்ய உதவி செய்கிறது.



2008 ஏப்ரல் 21]

**32—**

## கட்டட வசதி

**வினா எண் 22408—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், புதுப்பாக்கம் செல்வி நகர், பொன்விளைந்தகளத்தூர் காலனி ஆகிய பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றுக்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் வீதம் அனைத்து ஊராட்சிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. பொன்விளைந்தகளத்தூர் கிராமத்திலும், ஒத்திவாக்கம் கிராமத்திலும் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி, பொன்விளைந்தகளத்தூர் காலனி மற்றும் ஒத்திவாக்கம் ஊராட்சி, புதுப்பாக்கம் செல்வி நகர் ஆகிய பகுதிகளில் கூடுதலாக மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுவதற்குத் திட்டம் ஏதுமில்லை.

**33—**

## சுற்றுச் சுவர்

**வினா எண் 30074—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, நன்மங்கலம் ஊராட்சி, அத்திக்குளம் ஏழுமலை சாலை குளம் ஆகியவற்றை ஆழப்படுத்தி, சீரமைத்து சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சியில் உள்ள ஊராட்சி பொது நிதியின்மூலம் அத்திக்குளம், ஏழுமலைசாலை குளம் ஆகியவற்றை ஆழப்படுத்தி சீரமைத்து, சுற்றுச் சுவர்கள் அமைத்து மேம்பாடு செய்ய, ஊராட்சி தீர்மானமும் நிர்வாக அனுமதியும் பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**34—**

## குடிநீர் தேக்கத் தொட்டி

**வினா எண் 30082—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, நன்மங்கலம் ஊராட்சியில் ஸ்ரீபெருமாள் நகர், அபிநந்தா நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர்க் குழாய் விரிவாக்கம் செய்யவும், முடிச்சூர் ஊராட்சியில் திறந்தவெளிக் கிணறு அமைக்கவும், சசிக்குமார் நகர், அமுதம் நகர், நேதாஜி நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சியில் உள்ள ஊராட்சி பொது நிதியின்மூலம் ஸ்ரீபெருமாள் நகர், அனார்கலி நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர்க் குழாய் விரிவாக்கம் செய்யவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக முடிச்சூர் ஊராட்சியில் திறந்தவெளிக் கிணறு அமைக்கவும், சசிக்குமார் நகர், அமுதா நகர், நேதாஜி நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.





**35—**

## மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 30156—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, ஜல்லடம்பேட்டை ஊராட்சியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், ஜல்லடம்பேட்டை ஊராட்சியில் 2007-2008 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**36—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 33695—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், வடுகபட்டி ஊராட்சி, மதுரையிலிருந்து தேனி பிரதான சாலை, புத்தூர் விலக்கு, தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, அம்பாசமுத்திரம் கிராம சாலையின் தெற்கு, வடக்குப் பகுதி நடுப்பட்டி ஊராட்சி, கீழஅரியக் கோன்பட்டி ஆகிய பகுதிகளில் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வடுகப்பட்டி ஊராட்சி, தேனி பிரதான சாலை புத்தூர் விலக்கு அருகில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி அமைந்துள்ளது. அக்கல்லூரி அருகில் மதுரை தேனி பிரதானச் சாலையில் ஆறு குழல் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சியைச் சேர்ந்த அம்பாசமுத்திரம் கிராமத்தில் தெற்கு மற்றும் வடக்குப் பகுதியில் தெரு மின்குழல் விளக்குகள் நான்கு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. நடுப்பட்டி ஊராட்சி கீழஅரியக்கோன்பட்டி கிராமத்தில் மொத்தம் 8 வீடுகள்தான் உள்ளன. இதற்கு 2 தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

**37—**

## கட்டட வசதி

**வினா எண் 34054—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவிலில் தோட்டக்கலை அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவிலில் தோட்டக்கலை அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.





**38—**

## தூர் வாருதல்

**வினா எண் 39074—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கட்டமன் கோட்டையிலுள்ள ஆழ்குழாய் விவசாயக் கிணற்றைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கட்டமன் கோட்டையிலுள்ள ஆழ்குழாய் விவசாயக் கிணற்றை வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் தூர் வாரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

## குளங்களை சீர் செய்தல்

**வினா எண் 21829—திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், ஒடுக்கூர் ஊராட்சி, பொதியன்குளம், குளத்தூர் ஊராட்சி, சிலம்பன் பெரியகுளம், குளத்தூர் பெரியகுளம் ஆகியவற்றை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, ஒடுக்கூர் ஊராட்சி, பொதியன்குளம், குளத்தூர் ஊராட்சி, சிலம்பன் பெரியகுளம் ஆகிய இரண்டும் குன்றாண்டார்கோவில் பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டில் உள்ளவையாகும். குளத்தூர் பெரியகுளம் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. இதன் பாசனப் பரப்பு 134.67 ஹெக்டேர் ஆகும். இக்குளத்தில் உலக வங்கி நிதி உதவியுடன்கூடிய "நீர்வள நிலவள திட்டத்தில்" 2008-2009ஆம் நிதியாண்டில் மராமத்துப் பணிகள் செய்யப்படவுள்ளன.

**40—**

**வரத்து வாரிகளைத் தூர் வாருதல்**

**வினா எண் 21838—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், சத்தியமங்கலம் ஊராட்சி, நெடுஞ்சேரிகுளம், கதவம்பட்டி ஊராட்சி, நவாக்குளம் ஆகியவற்றின் வரத்து வாரிகளைத் தூர் வாரி சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி, நெடுஞ்சேரிக்குளம் உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் நீர்வள நிலவளத் திட்டத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் சீர் செய்யப்படவுள்ளது. கதவம்பட்டி ஊராட்சி நெய்வாக்குளத்திற்கு (நவாக்குளம்) வரும் வரத்து வாரி நடப்பு நிதியாண்டில் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் சீர் செய்யப்படவுள்ளது.



**41—**

**கட்டட வசதி**

**வினா எண் 25055—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பொதுப் பணித் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பொதுப் பணித் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக தோராய மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**42—**

**சுற்றுலா மாளிகை**

**வினா எண் 26111—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டம் மற்றும் வட்ட தலைநகரங்களில் பொதுப் பணித் துறையின் வாயிலாக சுற்றுலா மாளிகை மற்றும்

[2008 ஏப்ரல் 21

ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டு வருகின்றன. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

43—

## தடுப்புச் சுவர்

**வினா எண் 29564—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, நீலாங்கரை கடற்கரை பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, நீலாங்கரை கடற்கரையில் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், கடந்த 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமியால் தமிழக கடற்கரை பகுதிகளில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு கடற்கரை பகுதிகளை பாதுகாக்கும் பொருட்டும், தேவையான திட்டங்களை வகுக்கும் பொருட்டும், அரசாணை எண் 69, பொதுப் பணித் (டபிள்யூ 1) துறை, நாள்: 31-01-2005-ன்மூலம் வல்லுநர் முனைவர் பேராசிரியர் வி. சுந்தர், துறைத் தலைவர், I.I.T., Department of Ocean Engineering, சென்னை அவர்களை நியமித்தது.

2. பேராசிரியர் வி. சுந்தர், துறைத் தலைவர், I.I.T., சென்னை அவர்கள் தமிழக கடற்பகுதிகளை ஆராய்ந்து மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளை (vulnerable locations) கண்டறிந்து அப்பகுதிகளுக்குண்டான கடற்கரை பாதுகாப்புத் திட்டங்களை (மூன்று பகுதிகளாக நிறைவேற்ற) அறிக்கையாக அரசிற்குச் சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையில் நீலாங்கரை பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க திட்ட நடவடிக்கை ஏதும் பரிந்துரை செய்யப்படவில்லை. மேற்கண்ட பகுதியில் சுனாமியால் ஏற்பட்ட அசாதாரண பாதிப்பைத் தவிர, ஏனைய காலங்களில் கடல் சீற்றத்தால் பாதிப்பு ஏற்படுவதில்லை என்பது தெரிய வருகிறது.



2008 ஏப்ரல் 21]

44—

## தங்கும் வசதி

**வினா எண் 31677—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் நவீன வசதியுடன் தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டம் மற்றும் வட்ட தலைநகரங்களில் பொதுப் பணித் துறை வாயிலாக சுற்றுலா மாளிகை மற்றும் ஆய்வு மாளிகை கட்டப்பட்டு வருகிறது. தாரமங்கலம் ஊராட்சியில் நவீன வசதியுடன்கூடிய தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

## அலுவலக வளாகம்

**வினா எண் 37707—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டில் பழுதடைந்த பயணிகள் விடுதியை அப்புறப்படுத்தி ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டிலுள்ள பழுதடைந்துள்ள பயணிகள் விடுதி நகராட்சிக்குச் சொந்தமானது. எனவே, இந்தப் பழுதடைந்த பயணிகள் விடுதியை அப்புறப்படுத்திவிட்டு ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்ட இத்துறையில் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 9553—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டனூர் கிராமத்திற்கு திருப்புவனம், பிரமனூர், அச்சங்குளம், பழையனூர், கிடாக்குழி, வீரனேந்தல், பி. வாகைக்குளம், உச்சினேந்தல், புதையனேந்தல், உளுத்திமடை வழியாக அரசு நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிட்ட வழித்தடத்தில் தெரிவிக்கப்பட்ட கிராமங்களில் பிரமனூர், அச்சங்குளம் மற்றும் பழையனூர் கிராமங்களுக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்தும், திருப்புவனத்திலிருந்து தேவையான அளவிற்கு நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. பழையனூரிலிருந்து கிடாக்குழி, வீரனேந்தல் வழியாக உளுத்திமடை வரை உள்ள பகுதியில் உள்ள சாலை பல இடங்களில் குறுகலாக உள்ளதால் பெரிய பேருந்து இயக்குமளவிற்குத் தகுதியாக இல்லை. எனவே, இப்பகுதியில் கழகப் பேருந்துகளை இயக்க வாய்ப்பில்லை. இருப்பினும் இப்பகுதிகளில் மினி பேருந்துமூலம் தற்போது போக்குவரத்து வசதிகள் உள்ளன. கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட தடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டனூருக்கு மதுரை, மானாமதுரை மற்றும் திருப்புவனம் ஆகிய ஊர்களிலிருந்து 16 தனி நடைகள் பேருந்து வசதிகள் உள்ளன.





மேற்குறிப்பிட்டவாறு தடத்தின் அனைத்து பகுதிகளும் போதியளவு போக்குவரத்து வசதிகள் பெற்றுள்ளன.

**47—**

## பேருந்து வசதி

**வினா எண் 9556—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, காஞ்சிரங்குளம் கிராமத்திற்கு மதுரை பெரியார் நிலையத்திலிருந்து அவனியாபுரம், பெரியார் நகர் விலக்கு, ஈச்சனேரி, தின்னானேரி, குசவன்குண்டு, பிள்ளையார்பட்டி, காஞ்சிரங்குளம் காலனி வழியாக நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையம் - காஞ்சிரங்குளம் வழி - அவனியாபுரம், பெரியார் நகர் விலக்கு, ஈச்சனேரி, தின்னானேரி, குசவன்குண்டு, பிள்ளையார்பட்டி தடத்தில் ஈச்சனேரி கிராமத்தைத் தவிர அனைத்து கிராமங்களுக்கும் மதுரை பெரியார் நிலையத்திலிருந்து போதுமான அளவில் பேருந்து வசதிகள் உள்ளன. அவனியாபுரத்தை அடுத்து ஈச்சனேரி பிரிவிலிருந்து, ஈச்சனேரி வரை, சாலை குறுகலாக, பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இடையில் பெரிய பள்ளமும் உள்ளது. தவிர ஈச்சனேரியில் 20 வீடுகளே உள்ளன. ஈச்சனேரி கிராம மக்கள் தற்போது இக்கிராமத்திலிருந்து 1.7 கி.மீ. தூரத்தில் உள்ள பிரிவு நிறுத்தம் வழியாக பெரியார் நகருக்கு இயக்கப்பட்டு வரும் 44 தனி நடைகள் பேருந்து வசதிகளை பயன்படுத்தி வருகிறார்கள். ஈச்சனேரிக்கு செல்லும் சாலை மோசமாக உள்ளதாலும், குறைவான மக்கள் தொகை கொண்ட இக்கிராம மக்களுக்கு அருகிலேயே பேருந்து வசதிகள் உள்ளதாலும், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து ஈச்சனேரி வழியாக காஞ்சிரங்குளத்திற்கு புதிய வழித்தடம் இயக்கும் அளவிற்கு தேவை எழவில்லை.

**48—**

## பேருந்து வசதி

**வினா எண் 19573—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வள்ளியூர் பணிமனைமூலம் காவல்கிணறு விலக்கு, வடக்கன்குளம், பெத்தரெங்காபுரம், ராதாபுரம், இளையநயினார்குளம், சிதம்பரபுரம், திருவம்பலபுரம் வழியாக ஆ. பள்ளிவாசலுக்கு நகரப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வள்ளியூரிலிருந்து காவல்கிணறு விலக்கு, வடக்கன்குளம், பெத்துரெங்கபுரம், இராதாபுரம், இளையநயினார்குளம், சிதம்பரபுரம், திருவெண்பலாபுரம் வழியாக ஆத்தங்கரை பள்ளிவாசல் வரை உள்ள தடத்தின் தூரம் சுமார் 45.0 கி.மீ. ஆகும். எனவே, இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. இருப்பினும் வினாவில் குறிப்பிடப்பட்ட கிராமங்களுக்கு கீழ்க்கண்டவாறு பகுதி வாரியாக பேருந்து வசதிகள் உள்ளன. வள்ளியூர்-நாகர்கோவில்/கன்னியாகுமரி பிரதானச் சாலையில் இயக்கப்பட்டு வரும் நூற்றுக்கணக்கான சுற்றுக்களைப் பயன்படுத்தி வள்ளியூரிலிருந்து காவல் கிணறு விலக்கிற்கு வந்து பின்னர் அங்கிருந்து ஆத்தங்கரை பள்ளிவாசலுக்குச் செல்ல 6 சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. அதே போல, வள்ளியூரிலிருந்து நேரடியாக சமூகரெங்கபுரம், ராதாபுரம் வழியாக ஆத்தங்கரை பள்ளிவாசல் செல்ல 1 தனியார் பேருந்து மூலம் 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுபோலவே மற்றொரு தனியார் பேருந்து 1 வாயிலாக திருநெல்வேலி-திசையன்விளை (வழி) பணகுடி, கண்டவிளை, வடக்கன்குளம், ராதாபுரம், ஆத்தங்கரை பள்ளிவாசல் என 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. வள்ளியூரிலிருந்து ராதாபுரத்திற்கு 20-க்கும் மேற்பட்ட சுற்றுக்களும், ராதாபுரத்திலிருந்து ஆத்தங்கரை பள்ளிவாசல் செல்ல நாகர்கோவில் மண்டலப் பேருந்து ஒன்றுமூலம் 8 சுற்றுக்களும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.



**49—**

## பேருந்து வசதி

**வினா எண் 19574—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலிருந்து நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் தடம் எண் 182 பேருந்தை ராஜாபுதூர், ரோஸ்மியாபுரம், தளவாய்புரம், பணகுடி வழியாக இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திருநெல்வேலி வட்டார தடம் எண் 67 D பாபநாசத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு செல்லும்போதும் தடம் எண் 182-7 நாகர்கோவிலிலிருந்து தென்காசிக்குச் செல்லும்போதும் ராஜாபுதூர் ரோஸ்மியாபுரம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. இவ்விரு நடைகளிலும் மக்கள் பயன்பாடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. மேற்சொன்ன இரு நடைகள் நீங்கலாக ரோஸ்மியாபுரம், ராஜாபுதூர் ஆகிய பகுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு பேருந்து வசதிகள் உள்ளன:—

| | |
|---|---|
| தடம் எண் 11 வள்ளியர் - திருக்குறுங்குடி (வழி) ராஜாபுதூர் | 2 நடைகள் |
| தடம் எண் 15M நாகர்கோவில்-ரோஸ்மியாபுரம் | 12 நடைகள் |
| தடம் எண் 200 வள்ளியூர்-களக்காடு | 1 நடைகள் |

இது தவிர தனியார் பேருந்துகள்மூலமாக ரோஸ்மியாபுரம், ராஜாபுதூர் பகுதிகளுக்கு தினசரி 40 சுற்றுகளில் பேருந்து வசதி உள்ளது.

**50—**

## பேருந்து வசதி

**வினா எண் 26828—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக வீரசோழன் வரை இயக்கி நிறுத்தப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக வீரசோழன் வரைக்கும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**51—**

## பேருந்து வசதி

**வினா எண் 35898—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரிலிருந்து நாரணம்பாளையம், அடைக்கனூர் வழியாக கிழக்குக்காடு வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் 102 மற்றும் 102ஏ மூலமாக சேலம்-ஓமலூர் (வழி) கருப்பூர், அடைக்கனூர், நாரணம்பாளையம் வழியாக தினசரி 8 நடைகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில் உள்ள நாரணம்பாளையம் பிரிவு சாலையில் இருந்து 1.0 கி.மீ. தொலைவில் கிழகத்திகாடு கிராமம் உள்ளது. இச்சாலையில் 0.3 கி.மீ.





வரையிலான சாலை தார் சாலையாகவும் மீதமுள்ள 0.7 கி.மீ. சாலை குறுகலான மண் சாலையாகவும் இருப்பதால் இவ்வழித்தடத்தில் கனரக வாகனங்கள் இயக்கிட வழி வகையில்லை. இருப்பினும் அரசு ஆணைப்படி பேருந்து இயக்கப் பகுதியிலிருந்து 1.0 கி.மீ. தொலைவிலுள்ள அனைத்து பகுதிகளும் பேருந்து வசதி பெற்றதாக கருதப்படுவதால், கிழகத்திகாடு கிராமமும் பேருந்து வசதி பெற்றதாக கருதப்படுகிறது.

**52—**

## பேருந்து வசதி

**வினா எண் 35899—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து செம்மாண்டப்பட்டி சின்ன திருப்பதி வழியாக சந்தைபுதூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் தடம் எண் ஓ2, ஓ9, மற்றும் 63டு, மூலமாக ஓமலூரிலிருந்து செம்மாண்டப்பட்டி, சின்ன திருப்பதி மற்றும் சந்தை புதூர் வழியாக எருமப்பட்டி/மேச்சேரி வரை தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், சேலம்-ஓமலூர் தடத்தில் ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது. இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

**53—**

## பேருந்து வசதி

**வினா எண் 35900—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து பூசாரிப்பட்டி அக்ரஹாரம் வழியாக மூக்கனூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் புதிய நகரப் பேருந்து ஒன்று சேலத்திலிருந்து ஓமலூர், பூசாரிப்பட்டி, நாசசமுத்திரம், அக்ரஹாரம் வழியாக மூக்கனூருக்கு தினசரி 4 நடைகள் 2-6-2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

**54—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 41325—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஆத்தூர் முதல் ஆரியபாளையம் தமையனூர் வழியாக வாழப்பாடிக்கு கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், நகரப் பேருந்து தடம் எண் 21, 14 மற்றும் 74 மூலம் ஆத்தூரிலிருந்து ஆரியபாளையம் தமையனூர் வழியாக வாழப்பாடி வரை தினசரி 14 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்நடைகளில் பயணியர் கொள்திறன் 46 சதவீதமே உள்ளதால், இவ்வழித்தடத்தில் தற்போது இயக்கப்பட்டு வரும் நடைகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாகும்.

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 43518—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பொம்மிடி ஆர்.எம். நகர் கொலக்கொட்டாய், கொங்காரப்பட்டி வழியாக ஓமலூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பொம்மிடி-ஓமலூர் வழித்தடத்தில் கொலக் கொட்டாய் என்ற கிராமம் இல்லை. எனினும் ஓமலூரிலிருந்து கொங்காரப்பட்டி, ஜாலிக்கொட்டாய் ஆர்.எம். நகர் வழியாக பொம்மிடி வரை பேருந்து தினசரி 8 நடைகள் இயக்கப்படுகின்றன.

**56—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 2750—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, சுகுணாபுரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், சுகுணாபுரம் கிராம மக்கள் தொகை 7,064 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திற்கு 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 8 கிலோமீட்டருக்கு மேல் இடைவெளி இருத்தல் வேண்டும். சுகுணாபுரம் கிராமத்திற்கும் சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், சுகுணாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

[2008 ஏப்ரல் 21

57—

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 9339—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார கிளை நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், ஆழியார் நகர் துணை சுகாதார நிலையம், ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், ஆழியார் நகர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

58—

## கட்டட வசதி

**வினா எண் 14574—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட பாகோடு ஊராட்சி, வட்டவிளை தாய்சேய் நலக் கட்டடத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வட்டவிளை கிராமத்தின் மொத்த மக்கட்தொகை 453. எனவே, அக்கிராமத்தில் தனியாக துணை சுகாதார நிலையம் இல்லை. இந்தக் கிராம மக்கள் பாகோடு துணை சுகாதார நிலையத்தின்மூலம் பயன் பெறுகிறார்கள். பாகோடு துணை சுகாதார நிலையத்தின்கீழ் வட்டவிளை தாய்சேய் நல விடுதி இயங்கி வருகிறது. பாகோடு துணை சுகாதார நிலையத்திற்கும், வட்டவிளை கிராமத்திற்கும் இடையே உள்ள தொலைவு 1/4 கி.மீ. மேல்புறம் துணை சுகாதார நிலையத்திற்கும், வட்டவிளை கிராமத்திற்கும் இடையே உள்ள தொலைவு 1/4 கி.மீ. மேல்புறம் துணை சுகாதார நிலையத்திற்கும், வட்டவிளை கிராமத்திற்கும் இடையே உள்ள தொலைவு 1/4 கி.மீ. குழித்துறை அரசு மருத்துவமனை 4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பாகோடு துணை சுகாதார நிலையங்களின்மூலம் பயன்பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை மாதமொன்றுக்கு சராசரியாக 100 ஆகும். பாகோடு துணை சுகாதார நிலையக் கட்டடம் 1970-க்கு முன்னால் கட்டப்பட்டது. பாகோடு துணை சுகாதார நிலையத்திற்கு ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டுள்ளது. 2007-2008 நிதியாண்டில் பாகோடு துணை சுகாதார நிலையம் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள சிவில் பணிகளுக்கு ரூ.2,50,000/- மற்றும் மின் பழுதுபார்ப்புப் பணிகளுக்கு ரூ.25,000/-மும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

59—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 18777—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, குட்டக்குழி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2008 ஏப்ரல் 21

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்தில் குட்டக்குழி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. தேசிய ஊரக வளர்ச்சித் திட்ட நிதி உதவியின்கீழ் தற்போது 75 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 30 படுக்கைகளுடன்கூடிய கட்டடம் கட்ட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையமும் அடங்கும். தற்போது 30 படுக்கை வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் இங்கு கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**60—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 22826—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டனூர், தஞ்சாகூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில், மானாமதுரை தொகுதியில் கட்டனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 65,163. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் கட்டனூர், எ. முக்குளம், நரிக்குடி, வீரசோளம் ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இதில் நரிக்குடி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்படுகிறது.



2008 ஏப்ரல் 21]

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் தஞ்சாகூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் முத்தனந்தல் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

அரசின் கொள்கைப்படி ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நரிக்குடி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் முத்தனந்தல் ஆரம்ப சுகாதார நிலையமும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருவதால் கட்டனூர் மற்றும் தஞ்சாகூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**61—**

## சுகாதார மையம்

**வினா எண் 28402—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியம், கதிராநல்லூரில் பகுதி நேர சுகாதார மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சேந்தமங்கலம் தொகுதி புதுச்சத்திரம் ஒன்றியத்திலுள்ள நத்தமேடு துணை சுகாதார நிலையம் சார்ந்த கதிராநல்லூரின் மக்கள் தொகை 738 மட்டுமே. கதிராநல்லூரைச் சுற்றி திருமலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. சமவெளி பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. அரசினால் வரையறுக்கப்பட்ட மக்கள் தொகைக்குக் குறைவான மக்கள் தொகை இருப்பதால், கதிராநல்லூரில் துணை சுகாதார மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 ஏப்ரல் 21

**62—**

### துணை சுகாதார மையம்

**வினா எண் 29029—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியில் துணை சுகாதார மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியிலுள்ள பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுப்பாட்டில் இருக்கும் முடிச்சூர் கிராமத்தில் முடிச்சூர் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. முடிச்சூர் கிராமத்தின் மக்கள் தொகை 14,469. இந்தக் கிராமம் புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 6,72,476. இந்த ஊராட்சியின்கீழ் மேடவாக்கம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையமும், பீர்க்கன்கரணை, பொழிச்சலூர், ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் மூவாசம்பேட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. முடிச்சூர் துணை சுகாதார நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் பீர்க்கன்கரணை துணை சாகாதார நிலையமும் 3 கி.மீ. தூரத்தில் பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி வருகின்றன.

தாம்பரம் தொகுதியிலுள்ள முடிச்சூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், அங்கு மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2008 ஏப்ரல் 21]

**63—**

### சுகாதார நிலையங்கள்

**வினா எண் 29565—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், மடிப்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஒக்கியம் துரைப்பாக்கத்தில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கிடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால் கொட்டிவாக்கம் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும், மடிப்பாக்கத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் மூவாசம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதால் கொட்டிவாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**64—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 29973—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 21

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சம்பராயனேந்தலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சம்பராயனேந்தல் கிராமம், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,06,455 (2001 கணக்கெடுப்பு). இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) பூவந்தி (2) கொந்தகை (3) பழையனூர் (4) திருப்புவனம் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சம்பராயனேந்தல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**65—**

## செவிலியர் பயிற்சிக் கல்லூரி

**வினா எண் 31854—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில்



2008 ஏப்ரல் 21]

21 அரசு செவிலியர் பயிற்சி பள்ளிகள் மற்றும் இரண்டு செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதைத் தவிர தனியார் சுயநிதி நிறுவனங்கள் மூலமாக 96 செவிலியர் பயிற்சிப் பள்ளிகளும் 50 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், கிராமப்புறங்களில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் தொடங்க முடிவெடுத்து 80 தனியார் சுயநிதி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, திருவண்ணாமலையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க வேண்டிய தேவை எழவில்லை. மேலும், இது குறித்த செயற்குறிப்பு ஏதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**66—**

## உபகரணங்கள்

**வினா எண் 32660—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் அரசு மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள், அறுவை அரங்கு மற்றும் அதற்கான உதவியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கத்தில் அரசு மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. அங்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கொமரலிங்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு 17-01-2005 முதல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. இவ்வாரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை அரங்கிற்குத் தேவையான உபகரணங்களுடன், அதற்கான உதவியாளர்களை நியமித்து அறுவை அரங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

**67—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 32703—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் சுகாதார மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எரிசனம்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 13,600 சதுர அடி பரப்பளவில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்பட்டு 6 படுக்கைகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள கட்டட வசதி போதுமானதாக உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் 75 செண்ட் காலியிடம் உள்ளது. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வீதம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்படுகிறது. வருங்காலங்களில் எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தரம் உயர்த்தி, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**68—**

## ஸ்கேன் கருவி செயல்படுத்துதல்

**வினா எண் 37299—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் கிராம மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய ஸ்கேன் கருவியை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் கிராமம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஸ்கேன் கருவி நன்றாக செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கருவியைக் கொண்டு பிரதி வாரம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மக்கள் பயன்பெறும் வகையில் பாரூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் அது இயக்கப்படுகிறது. அதன்மூலம் அப்பகுதி மக்கள் பயன் அடைகின்றார்கள்.

**69—**

## பிசியோதெரபி கல்லூரி

**வினா எண் 39409—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் அரசு பிசியோதெரபி கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ நிலையங்களில் இயன்முறை பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த இயன்முறை கல்லூரிகளில் சேர மாணவர்களின் ஆர்வம் குறைவாக உள்ளதால் அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக இயன்முறை கல்லூரிகள் துவக்க தற்போது அவசியம் எழவில்லை. எனவே, மானாமதுரையில் இயன்முறை பயிற்சிக் கல்லூரி துவங்குவது சம்பந்தமான கருத்துரு ஏதுமில்லை.

[2008 ஏப்ரல் 21

70—

## செவிலியர் கல்லூரி

**வினா எண் 39410—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு செவிலியர் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 21 அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் இரண்டு செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் மொத்தம் 1795 செவிலியர் பட்டயப் படிப்பு மாணவர்களும் 50 செவிலியர் பட்டப்படிப்பு மாணவர்களும் ஆண்டுதோறும் படித்து பயன் பெற்று வருகிறார்கள். இவை தவிர அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் சுயநிதி நிறுவனங்கள் மூலமாக 96 செவிலியர் பயிற்சிப் பள்ளிகளும் 50 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் 4,000 மாணவர்கள் (தோராயமாக) ஆண்டுதோறும் பயிற்சி முடித்து வெளிவருகின்றனர். சமீபத்தில் கிராமப்புறங்களில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் தொடங்க முடிவெடுத்து 80 தனியார் சுயநிதி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மானாமதுரையில் மேலும் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி அல்லது கல்லூரி துவங்க தேவை எழவில்லை.

71—

## தொழிற்சாலை

**வினா எண் 34418—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 21]

(அ) மானாமதுரை தொகுதியில் வாசனைத்திரவியம் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் வாசனைத் திரவியம் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. எனினும், தனியார் எவரேனும் முன்வந்தால் தொழிற்சாலை தொடங்குவதற்கான அனைத்து வழிகாட்டுதல் சேவைகளும் மாவட்டத் தொழில் மையத்தால் வழங்கப்படும்.

72—

## தொழிற்சாலை

**வினா எண் 37978—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு மாவு, ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு மாவு, ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைக்க திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

## தொழிற்சாலைகள்

**வினா எண் 38075—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 21

(அ) மானாமதுரை தொகுதியில் தேங்காய் நார், ஜவ்வரிசி, பிஸ்கட், ரொட்டி, குளிர்பான தொழிற்சாலைகளை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் தேங்காய் நார், ஜவ்வரிசி, பிஸ்கட், ரொட்டி, குளிர்பான தொழிற்சாலைகளை துவங்கிட அரசிடம் செயற்குறிப்பு இல்லை. தனியார் நிறுவனங்கள் தொழில் துவங்கிட முன்வந்தால் அந்நிறுவனங்கள் தொழில் துவங்கிட மின் இணைப்பு, சட்டப்படியான தடைநீக்கச் சான்றிதழ்கள் மற்றும் இதர உதவிகள் பெற்றிட, பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சிவகங்கை அவர்களால் அனைத்து வழிகாட்டுதல் சேவைகள் வழங்கப்படும்.

**74—**

## தொழிற்சாலை

**வினா எண் 39336—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் தென்னை நார் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் தென்னை நார் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை துவங்கிட, அரசிடம் திட்டம் ஏதுமில்லை. தனியார் நிறுவனங்கள் தொழில் தொடங்கிட முன்வந்தால் அந்நிறுவனங்கள்



2008 ஏப்ரல் 21]

தொழில் துவங்கிட மின் இணைப்பு, சட்டப்படியான தடைநீக்கச் சான்றிதழ்கள் மற்றும் இதர உதவிகள் விரைவில் கிடைத்திடவும், மாவட்ட தொழில் மையம் உதவி செய்யும்.

**75—**

## தொழிற்சாலை

**வினா எண் 40145—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் காரல் மீன்கள் மூலம் கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் காரல் மீன்கள் மூலம் கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. தனியார் நிறுவனங்கள் தொழில் துவங்கிட முன்வந்தால் அதற்குத் தேவையான மின் இணைப்பு, சட்டப்படியான தடைநீக்கச் சான்றிதழ்கள் மற்றும் இதர சட்டபூர்வமான அனுமதிகள் விரைவில் கிடைத்திட பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சிவகங்கை அவர்களால் அனைத்து வழிகாட்டுதல் சேவைகள் வழங்கப்படும்.

**76—**

## பட்டா வழங்கல்

**வினா எண் 1694—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 21

(அ) வனப் புறம்போக்கு நிலங்களில் ஒதுக்கீடு செய்யாத வன நிலங்கள் மற்றும் சமூக வனக் காடுகளில் 50 ஆண்டுகளாக வசித்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை நிலை எண் 854, வருவாய், நாள்: 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டம் அரசாணை (நிலை) எண் 498, வருவாய்த் துறை, நாள்: 31-3-2008 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 34, வருவாய், நாள்: 23-1-2008-ன்படி 10 ஆண்டுகள் என்பது 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் வீடுகள் கட்டி குடியிருப்பவர்களின் குடியிருப்புகளை வரன்முறைப்படுத்திட வீட்டு மனைப்பட்டா சிறப்புத் திட்டத்தின்கீழ் 31-1-2008 வரை 9,226 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**77—**

## படகு போக்குவரத்து

**வினா எண் 7816—திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேச்சிப்பாறை அணையின் நடுப்பகுதியினை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2008 ஏப்ரல் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பேச்சிப்பாறை அணையின் நடுப்பகுதியில் படகு விடுவது சம்பந்தமாக எந்தவித செயற்குறிப்பும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**78—**

## பூங்கா

**வினா எண் 43554—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் படகு குழாம் பகுதியில் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்துமிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் படகு குழாம் இருக்கும் இடம், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த் துறை மற்றும் இரயில்வே துறைக்குச் சொந்தமானது. எனவே, படகு குழாம் பகுதியில் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்துமிடம் அமைப்பது சம்பந்தமாக எந்தவித செயற்குறிப்பும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**79—**

## பட்டா

**வினா எண் 4739—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, விளாமரத்துப்பட்டி கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், விளாமரத்துப்பட்டி கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட இன மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியுள்ள க.ச.எண் 116 என்பது கோவில் பூமி என்பதால் அங்கு வீட்டுமனை வழங்க இயலாது. விளாமரத்துப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நேரடி பேச்சுவார்த்தைமூலம், தனியார் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளும்போது விளாமரத்துப்பட்டி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

**80—**

## பட்டா

**வினா எண் 23472—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், தூரிசிலாபட்டு ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், தூரிசிலாப்பட்டு கிராமத்தில் சர்வே எண் 120/1 முதலியனவற்றில் 7.30 ஏக்கர் நிலம் தனியாரிடம் பேச்சுவார்த்தை மூலம் கிரையம் பெறப்பட்டு மேற்படி





புலத்தில் மிகப்பிற்பட்ட இனத்தவருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க மனை வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு முதலில் 2000 ஆம் ஆண்டு 46 நபர்களுக்கும், 2005 ஆம் ஆண்டில் 84 நபர்களுக்கும் ஆக மொத்தம் 130 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**81—**

## மாவரைக்கும் இயந்திரம்

**வினா எண் 34081—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு மாவரைக்கும் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு அரசாணை (வா.) எண் 23, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை நாள்: 22-2-2007-ல் மாவரைக்கும் இயந்திரம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, செப்டம்பர் 2007-ல் வழங்கப்பட்டுவிட்டது.

**82—**

## கூடுதல் தங்கும் விடுதி

**வினா எண் 6869—திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், குமாரவயலூர் முருகன் கோயிலுக்குக் கூடுதலாகத் தங்கும் விடுதி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதி, குமாரவயலூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் தெப்பக்குளத்திற்கு வடபுறம் உட்புற நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கீழ்புறம், திருமண மண்டபத்திற்கு மேல்புறமுள்ள காலியிடத்தில் 52X22 அடி அளவில் சேவார்த்திகள் தங்கும் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**83—**

## முள்வேலி

**வினா எண் 25180—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி புக்கம்பட்டி ஊராட்சி சென்றாயப் பெருமாள் கோயில் மானிய நிலங்களிலுள்ள தனியார் ஆக்கிரமிப்பை அகற்றி முள்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி, புக்கம்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் நிலத்தில் உள்ள தனியார் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வரும். நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்கு முடிவுற்றவுடன் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொண்டு முள்வேலி அமைக்கப்படும்.

**84—**

## மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி

**வினா எண் 39129—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்து மாரியம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி கட்டவும், உணவருந்தவும், ஓய்வெடுக்கவும் கட்டடங்கள் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக இரண்டு ஆழ்துளைக் கிணறுகள், இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், தரைமட்ட தண்ணீர் தொட்டி ஒன்று ஆகியவை கட்டப்பட்டு தண்ணீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பக்தர்கள் தங்குவதற்கும் உணவருந்தவும் நான்கு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் ஓய்வு எடுப்பதற்கும் வசதியாக கோயிலுக்கு முன்புறம் ஒரு திறவை மண்டபமும் ஓட்டு கொட்டகைகள் ஆறும், உள்ளன. பெண்களுக்குத் தனியாக விரத மண்டபம் உள்ளது. திருக்கோயிலின் நுழைவு வாயில் முதல் திருக்கோயில் வரை நிழல் மண்டபம், கருணை இல்லம் மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகியவை கட்ட திட்டமிடப்பட்டு தற்பொழுது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**85—**

## நிர்வாக அதிகாரி நியமனம்

**வினா எண் 43032—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் ஒன்றியம், பாகல்பட்டி அருள்மிகு சோமீஸ்வரர் திருக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி, அருள்மிகு கோனீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் திரு. பாலசுப்பிரமணிய குருக்கள் இறந்துவிட்டார். அவரது வாரிசுதாரர்கள் வாரிசு அடிப்படையில் பரம்பரை உரிமை பதிவு செய்து பெறவில்லை. இந்நிலையில் காலஞ்சென்ற மேற்படி பரம்பரை அறங்காவலரது சகோதரர்களான திரு. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் மற்றும் திரு. விஸ்வநாத குருக்கள் ஆகியவர்களால் மேற்படி திருக்கோயில் நிர்வாகம் கவனிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயிலுக்கு சட்டப்பிரிவு 55 (1)-ன்கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்ய உரிய சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**86—**

## மாணவர் விடுதி

**வினா எண் 12861—திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இஸ்லாமிய மாணவர்களுக்கு முக்கிய நகரங்களில் வக்ஃப் வாரியம்மூலம் மாணவர் விடுதிகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு இஸ்லாமிய மாணவர்களுக்கு முக்கிய நகரங்களில் வக்ஃப் வாரியம்மூலம் மாணவர் விடுதிகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.





**87—**

## யோகா மையம்

**வினா எண் 30252—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் யோகா மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் யோகா மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 33615—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம், அல்லி நகரத்தில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம், அல்லி நகரத்தில் விளையாட்டு மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

89—

### விளையாட்டு மைதானம்

**வினா எண் 37629—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பெரும்பேடு ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பெரும்பேடு ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

### உடற்பயிற்சி மையம்

**வினா எண் 38731—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர், கருப்பூர், காடையாம்பட்டி பேரூர் பகுதிகளில் உடற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர், கருப்பூர், காடையாம்பட்டி பேரூர் பகுதிகளில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

### விளையாட்டு மைதானம்

**வினா எண் 40555—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) காஞ்சிபுரம் தொகுதி, மேல்கதிர்பூர் ஊராட்சி, மேட்டுக்குப்பத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் தொகுதி, மேல்கதிர்பூர் ஊராட்சி, மேட்டுக்குப்பத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

92—

### நீச்சல் குளம்

**வினா எண் 41501—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சி பகுதி I, வள்ளலார் பூங்கா பகுதியில் நீச்சல் குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி நகராட்சி அறிவியல் பூங்கா வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சி அறிவியல் பூங்கா பகுதியில் நீச்சல் குளம் அமைக்கும் இடத்தினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குப் பெயர் மாற்றம் செய்து தரும்படி, வேலூர் நகராட்சியைக் கேட்டுக் கொண்டதில், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள மட்டுமே நுழைவு அனுமதி அளிக்கப்படும் என்றும், பணி முடிவடைந்ததும் நீச்சல் குளம் முழுவதையும் சத்துவாச்சாரி நகராட்சியே எடுத்துக்கொள்ளும் எனச் சத்துவாச்சாரி நகராட்சி தெரிவித்ததால், வேலூர் தொகுதி, பேருந்து நிலையம் அருகில் உள்ள முத்து மண்டபம் என்ற இடத்தில் நீச்சல் குளம் அமைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் இடம் தேர்வு செய்யப்பட்டு அந்த இடத்தில் நீச்சல் குளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**93—**

## தங்கும் விடுதி

**வினா எண் 36499—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் தங்கும் விடுதியில் முதல் வகுப்பு கூடுதல் அறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை டாப்சிலிப் தங்கும் விடுதியில் முதல் வகுப்பு அறைகள் 8, இரண்டாம் வகுப்பு அறைகள் 8, மூன்றாம் வகுப்பு அறைகள் 6 மற்றும் துயில் கூட அறைகள் 2 உள்ளன. இவற்றில் 55 நபர்கள் தங்கலாம். சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு இவை போதுமானவையாக உள்ளதால் முதல் வகுப்பு கூடுதல் அறைகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**94—**

## அலுவலர் காலனி

**வினா எண் 39186—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை, கோட்டூர், ஆழியாற்றில் வனத் துறை அலுவலர் காலனி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் கோட்டூர் பிரிவு வனவர், வனக் காப்பாளர், வனக் காவலர்களுக்கு கோட்டூர் மலையாண்டிப்பட்டினம் தலைமையிடத்தில் குடியிருப்புகள் உள்ளன. வால்பாறை மானாம்பள்ளி சரகக் களப் பணியாளர்களுக்கு



அட்டகட்டி நீர் வீழ்ச்சி, வால்பாறை மற்றும் மானாம்பள்ளி ஆகிய தலைமையிடப் பகுதிகளில் குடியிருப்புகள் உள்ளன. மேலும், ஆழியாறு சோதனைச் சாவடி வனவர்க்கு ஆழியாறு பகுதியில் குடியிருப்புகள் உள்ளன. எனவே, மேலும் குடியிருப்பு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**95—**

## மரங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 44609—திரு. அ. குணசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் மஞ்சநத்தி, உடைமரம், மற்றும் பூவரசு மரங்களை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மஞ்சநத்தி மரம் கரிசல் மண் உள்ள பல விவசாய இடங்களில் தானாக முளைத்து விவசாயத்தைப் பாதிக்கும் அளவில் வளர்ந்து, வெட்ட வெட்ட பூமியில் இருந்து தோன்றும் தன்மை கொண்டது.

உடைமரம் பல்வேறு இடங்களில் இலட்சக்கணக்கில் பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகிறது.

பூவரசு மரத்தினைப் பொறுத்தமட்டில் இது சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் நன்கு வளர்வதாலும் அப்பகுதியில் இவை அதிக அளவில் எளிய முறையில் பயிரிடப்படுகின்றன. எனவே, இவ்வகை மரங்களை சிறப்பினமாகப் பாதுகாக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**96—**

## மேம்படுத்துதல்

**வினா எண் 28344—திரு. அ. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம், பாரதி நகரில் தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் பாரதி நகரில் வரும் கி.மீ. 113/6—115/0, 139-0—140/0, 145/0—146/0, 154/0—155/6 மற்றும் 157/8—159/0 ஆகிய சாலைப் பகுதிகள் சுனாமி நிதி திட்டத்தின்கீழ் செப்பனிடப்பட்டுள்ளன. இப்பணியின் மொத்த செலவினம் ரூ. 216.36 இலட்சம்.

(ஆ) இப்பணி 29-05-2007-ல் துவங்கி 28-09-2007-ல் முடிக்கப்பட்டது.

**97—**

### நடைபயிற்சிப் பாதை

**வினா எண் 37992—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் என்.எச்.7 நான்கு வழிப்பாதை முத்துநாய்க்கன்பட்டி ரவுண்டானா முதல் ஆர்.சி. செட்டிப்பட்டி வரை சாலையில் இருபுறமும் நடைபயிற்சிப் பாதை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஓமலூர் என்.எச். 7 நான்கு வழிப் பாதையில் முத்துநாய்க்கன்பட்டி ரவுண்டானா முதல் ஆர்.சி. செட்டிப்பட்டி வரையுள்ள சாலையின் இருபுறமும் நடைபயிற்சிப் பாதை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

**98—**

### கட்டட வசதி

**வினா எண் 6751—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருவம்பலாபுரம் ஊராட்சி, பார்க்கனேரி கீழூரில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராதபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும் பார்க்கனேரி கீழூர் கிராமத்திற்கு அருகில் 2 கி.மீ. தொலைவில் திருவம்பலாபுரம் கால்நடை மருந்தகம் 16-12-2006 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், மேலும், பார்க்கனேரி கீழூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ நிலையம் எதுவும் செயல்படாத நிலையில் அங்கு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**99—**

### தண்ணீர் தொட்டி

**வினா எண் 27381—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை மருந்தகத்தில் கால்நடைகளுக்கான தண்ணீர் தொட்டி தற்போது அமைந்துள்ள

உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், அந்தத் தண்ணீர் தொட்டியினை சீர் செய்ய ஊராட்சி, ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்தோ, இதர மேம்பாட்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**100—**

### மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 42720—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பல்பாக்கி ஊராட்சி கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, பல்பாக்கி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை எதுவும் தற்போது செயல்படவில்லை. பல்பாக்கி கிராமத்திற்கு அருகில் காமலாபுரம் மற்றும் பாலிக்கடை கால்நடை மருந்தகங்களும் முத்துநாயக்கன்பட்டி கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு காமலாபுரம் கால்நடை மருந்தகத்தின்மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, கால்நடை மருத்துவரை நியமிக்க வேண்டும் என்ற கருத்துரு எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் காவல் துறையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், பெரியகுளம் தொகுதி, கொடைக்கானல் மலைப் பகுதியில் நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் போலீசாருக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில். . .

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்விலே இருக்கிறது. ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். ரிப்போர்ட் வந்ததும் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எப்போது எடுத்துக்கொள்வீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள்.

### (ஆ) அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் வருவாய்த் துறைக்கு மாற்றம்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்புசாரா கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உட்பட 14 நல வாரியங்களும் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டதால் தொழிலாளர்கள் மத்தியிலே மிகப் பெரிய பதட்டம் ஏற்பட்டிருக்கிறது. வருவாய்த் துறையிலிருந்து மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) அவற்றைத் தொழிலாளர் நலத் துறைக்கு மீண்டும் மாற்றிவிட்டீர்கள் என்றால் சரியாக இருக்கும். தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அது பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 21

## (இ) வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயராலே கர்நாடகா மற்றும் தமிழ்நாடு காவல் துறை அதிரடிப்படையினருடைய நடவடிக்கைகளால் அதிகமானோர் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள்கூட நிவாரணம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நடைபயணம் வந்தவர்களெல்லாம்கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்விலே இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** விடுபட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். மனித உரிமை அமைப்பினரும் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள். . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக விஷயங்களையெல்லாம் முனைப்பாகத் தெரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் படைத்த மணி அவர்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரியாமல் போனது என்றுதான் எனக்குப் புரியவில்லை. வீரப்பனைத் தேடுகின்ற அந்தப் பணியில் அப்போது அதிரடிப் படையினர் நடத்திய சில பாதிப்பான காரியங்களால் இன்றைக்கும் சிரமத்திலே இருக்கின்ற அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் அப்போதே நியமிக்கப்பட்டது. நீதிபதி சதாசிவா அவர்களுடைய தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு அதனுடைய முழு அறிக்கை வருவதற்கு முன்பு அக்டோபர் 2006-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசினால் முதல்கட்டமாக 20 இலட்சம் ரூபாய் இடைக்கால நிவாரணமாக, போலீசாருடைய கெடுபிடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்போது கொடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு நீதிபதி சதாசிவா அவர்களுடைய கமிஷனின் முழு அறிக்கை வெளிவந்தது. அவர் குறிப்பிட்டபடி கர்நாடகத்திலேயும், தமிழகத்திலேயும் மொத்தம் 89 பேர் பாதிக்கப்பட்டார்கள். தமிழகத்திலே எவ்வளவு பேர், கர்நாடகத்திலே எவ்வளவு பேர் என்று கணக்கு வைத்து அவர்கள் தந்த அந்தக் குறிப்பின்படி, அவர்களுடைய



தாக்கீதின்படி தமிழக அரசின் சார்பாக ஒரு கோடியே ஐம்பதா`ரம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தி.மு.க. ஆட்சியால் பிப்ரவரி 2007-ல் கொடுக்கப்பட்டு அவர்களிடமிருந்து அதற்கான ரசீதுகளெல்லாம் பெறப்பட்டு பத்திரிகையிலும் வெளி வந்திருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் "நாங்கள் நீதி கேட்டு நெடிய பயணம் புறப்படுகிறோம், அந்தப் பயணம் தமிழகத்திலும், கர்நாடகத்திலும் நடைபெறும். தமிழக அரசும், கர்நாடக அரசும் அந்தத் தொகையைத் தரவேண்டும்" என்று வலியுறுத்தி ஒரு பத்திரிகையிலே செய்தி வந்தது. நான்கூட நண்பர் திரு. தா. பாண்டியன் அவர்களை அழைத்து அவர்களிடத்திலே நேற்றைக்கு முன்தினம் ஒரு மணிநேரம் பேசியிருக்கிறேன். அவரோடு நண்பர் மகேந்திரனும் இருந்தார் சாட்சிக்கு. இருவரும் நான் காட்டிய அந்த ஆதாரங்களையெல்லாம் பார்த்துவிட்டு, ஆங்கிலத்திலே வெளியிடப்பட்ட அந்த அரசாணைகள்--யார் யாருக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்கிற ஆதாரங்கள்--ஒரு கோடியே இருபது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த ஆதாரம்--இவ்வளவும் தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளே பாதிக்கப்பட்டவர்களுக்குத் தரப்பட்ட நிதி. இவ்வளவையும் நாங்கள் தந்துவிட்டோம். ஆகவே, நாங்கள் எங்களுடைய கடமையைச் செய்துவிட்டோம். கடமையைச் செய்ய வேண்டியது கர்நாடக அரசுதான். அவர்கள் அப்போதே பாதியை ஒத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். இன்னும் கொடுக்கவில்லை என்றால் உங்களுடைய போராட்டம் அங்கல்லவா நடைபெற வேண்டும்? 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டிதானா' என்று நான் அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள், நான் கொடுத்த ஆதாரங்களைப் பார்த்துவிட்டு, 'சரி' என்றுதான் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால், அதற்கு முன்பே போராட்டத்தை அறிவித்துவிட்ட காரணத்தால், அவர்கள் நேற்றையதினம் அந்தப் போராட்டத்தை நடத்தி, 200 பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டவுடன், அவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் போராடியிருக்கிறார்கள்; ஆகவே, அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று இங்கிருந்து தாக்கீது அனுப்பப்பட்டு, அவர்களும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் நண்பர் கோ.க. மணி அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, பிரச்சினை முடிந்துவிட்ட பிறகும், இருப்பதாகச் சொல்லி, பிரச்சினை இருப்பதாகக் காட்டி அதற்காகப்

போராடுவது தேவையா என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள். (குறுக்கீடுகள்). மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி சதாசிவா குழு பரிந்துரைப்படி நிவாரணம் முதலில் வழங்கியது தமிழக அரசுதான். அதை நாங்கள் மறுக்கவில்லை. அதை வரவேற்றும், பாராட்டியும் அப்போது அறிக்கைகள் எல்லாம் கொடுத்தோம். ஆனால், 89 பேர்களுக்கு மேலே விடுபட்டவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டும். அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் கர்நாடகத்தில் இருந்தவர்கள்கூட தமிழர்கள் என்ற காரணத்தினாலே, நீண்ட காலமாக தமிழ்நாட்டில் குடியிருந்து வருகிறார்கள். கர்நாடக அரசு வழங்க மறுக்கிறது. ஆகவே, தமிழக அரசின் சார்பிலே கர்நாடக அரசுக்குக் கோரிக்கை வைப்பதற்காக இங்கே தொடர் பயணம் வந்திருக்கிறார்கள். அவர்கள் இன்று காலையிலே அந்தியூரிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு நல்ல தீர்வினை உண்டாக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறோமே தவிர, குற்றச்சாட்டு அல்ல என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுகோளாக இருந்தால், இந்தத் தொகையில், எண்ணிக்கையில் யார் யார் பெயர் விடுபட்டுவிட்டது என்பதை அமைதியான முறையில் எழுதி, தமிழக அரசுக்கு அனுப்பி, அதற்குப் பிறகும் தமிழக அரசு கவனிக்காவிட்டால் நானேகூட உங்களுடன் போராட்டத்திற்கு தலைமை வகிக்க வருகின்றேன். ஆனால், நான் கேட்பதெல்லாம், கொடுத்துக்கொண்டிருக்கும்போதே, கொடுத்து முடித்த பிறகு, ஒரு கோடி ரூபாய், மேலும் 50,000 ரூபாய் அதற்கு முன்பே அச்சாரமாக 20 இலட்சம் ரூபாய், இப்படிக் கொடுத்த அரசின் மீதே நீங்கள் போராட்டம் நடத்துவது எப்படி நியாயம் என்பதுதான் என்னுடைய கேள்வி. இந்த நியாயத்தை நீங்கள்



புரிந்துகொண்டால் போதும். கர்நாடக அரசு கொடுக்கவில்லை. காவிரியிலிருந்து ஒகேனக்கல் வரையிலே அவர்கள் தடையாகத்தான் இருக்கிறார்கள். அதையெல்லாம் பெறவேண்டிய முறையிலே நாம் பெறுவோம். ஆனால், இது வேறு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிரடிப்படை தாக்குதல் குறித்த விஷயங்களை இந்த அவையிலே நீண்டநேரம் நாம் விவாதித்து அதன்மீது கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் என்ற முறையிலே நானும், அந்த மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது திருமதி பத்மாவதி அவர்களும் அந்தக் கோரிக்கையை எழுப்பி, நீதிபதி சதாசிவா கமிஷன் அறிக்கையினுடைய தீர்ப்பின்படி நிதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தபோது, உடனடியாக இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான உத்தரவை வழங்கி, நிதி வழங்கப்படும் என்று அறிவித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு எந்தவிதமான மாறுபாடான கருத்தும் இல்லை.

எங்களுடைய மாநிலச் செயலாளர் திரு. பாண்டியன் அவர்கள் அறிவித்த இந்தப் போராட்டம் தமிழக அரசுக்கு எதிராகவோ, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எதிராகவோ நடைபெறவில்லை என்பதையும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனாலும், இதிலே இருக்கிற பிரச்சினையைப் பொறுத்தவரையில், கண்டறியப்பட்டு சாட்சி சொன்ன 89 பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிவிட்டார்கள். அதிலே எந்தக் குறைபாடும் இல்லை அவர்களுடைய கோரிக்கை என்பது சாட்சியம் சொல்ல வருவதற்கே தயாராக இல்லாமல், அச்சத்தின் காரணமாக அவர்கள் வரவில்லை, அவர்களில் அதிரடிப் படையால் யார், யார் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதைக் கண்டறிந்து, உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அந்தப் பட்டியலில் உள்ள உண்மையைக் கண்டறிந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முயற்சியை எடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. என்ன இருந்தாலும் தஞ்சாவூர் பண்பாடே தனிதான். அந்த முறையிலே நம்முடைய நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் விவாதித்திருக்கின்றார் என்றால் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், உண்மையில் யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? யார் யார் சாட்சி சொல்லவே வா முடியவில்லை என்ற விவரங்கள் எங்களுக்கு இதுவரையிலே அளிக்கப்படவில்லை. அப்படி அளிக்கப்பட்டால் அதை ஆராய்ந்து அதிகாரிகள் மூலமோ அல்லது தாங்களே அதைப்பற்றி விசாரித்தறிந்து அவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால், அதை அளிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், எடுத்த எடுப்பிலே போராட்டம் என்று அறிவிப்பது அவ்வளவு நல்லதல்ல.

## (ஈ) உள்ளாட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்காதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையதினம் உள்ளாட்சி தலைவர்களுடைய தேசிய மாநாடு நடைபெறவிருக்கிறது. இந்த மாநாட்டை, நம்முடைய மாநில அரசின் உரிமையைப் பறிப்பதாகக் கருதி, அதை அரசுச் செயலாளர் அவர்கள் புறக்கணித்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இது குறித்த விவரங்களை நாளையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவர அறிக்கைமூலம் வைத்தால் அது உள்ளாட்சி அமைப்புகளுடைய உரிமையைப் பெறுவதற்கும், மாநில அரசினுடைய உரிமையைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கும். அந்த அறிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வைப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய விவரக் குறிப்புகள் எல்லாம் இப்போது என்னுடைய கையிலே இருக்கின்றன. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சகோதரி பாலபாரதி



அவர்கள் தெரிவித்ததுபோல, நாளையதினம் இதே அவையில் விவர அறிக்கையை வைக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-25

## (உ) விளாத்திகுளம் தொகுதி, புளியங்குளம், வைப்பாற்று வெள்ளத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் ஆய்வில் இருக்கின்றன. பிறகு எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) எல்லோரும் ஒன்றுபோல் எழுந்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் ஒன்றுபோல் எழுந்து நின்றால், யார் பேசுவதைக் கேட்பது? நான் அவையை நடத்த வேண்டாமா? (குறுக்கீடுகள்)

விளாத்திகுளம் தொகுதி, "வைப்பாற்றில் 27-3-2008 அன்று புளியங்குளம் அருகே வெள்ள நீரில் மூழ்கி திரு. சின்னத்தம்பி என்கிற முனியசாமி இறந்துவிட்டதால் அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன். (குறுக்கீடுகள்)

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், எனது விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சின்னத்தம்பி என்கிற முனியசாமி தேவர் 27-3-2008 அன்று வைப்பாற்றைக் கடந்து தன் தோட்டத்திற்குச் செல்லும்போது பெய்த கன மழையால் திடீரென்று ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டு மரணம் அடைந்துவிட்டார். அவருடைய உடலை தீயணைப்புத் துறையினரால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. தூத்துக்குடியிலிருந்து சிப்பிக் குளிப்பவர்கள் வந்துதான் உடலை எடுத்தனர். உடலை விளாத்திகுளம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால், அங்கு post-mortem செய்வதற்குக்கூட மருத்துவர்கள் இல்லை. அவருக்கு முனியம்மாள் என்ற மனைவியும், கற்பகம் என்ற மகளும், திருமணம் ஆகாத சண்முகலட்சுமி என்ற மகளும், மணிகண்டன் என்ற மகனும் உள்ளனர். வயதான தந்தையும் அவருடன் இருந்து வந்திருக்கிறார்.

[திரு. போ. சின்னப்பன்] [2008 ஏப்ரல் 21

மிகவும் ஏழ்மையான குடும்பம். அவரைப் பிரிந்து வறுமையால் வாடும் அந்தக் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் எங்கள் அம்மா ஆட்சியின்போது இரவும் பகலும் மருத்துவர்கள் இருந்து வந்தார்கள். Caesarean operation-கூட அங்கே நடந்தது. ஆனால், இப்போது மருத்துவர்கள் இல்லை. Post-mortem செய்வதற்குக்கூட கோவில்பட்டியில் இருந்துதான் deputation அடிப்படையில் மருத்துவர்கள் வருகிறார்கள். ஆகையால், அங்கு நிரந்தரமாக மருத்துவர்களை நியமிக்க வலியுறுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டுள்ளதுபோல, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்கிற 45 வயதுடைய முனியசாமி தேவர், காப்பாற்ற பலர் முயற்சி செய்தும்கூட பலனின்றி பெருமழையிலே நீரில் மூழ்கி இறந்துவிட்ட சோகச் சம்பவத்தை எடுத்துச் சொல்லி, அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவி தரவேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். தொடர்ந்து இதுபோன்ற இரங்கத்தக்க, வேதனையான எந்தச் சம்பவமானாலும் இந்த ஆட்சி அந்தக் குடும்பத்தைக் கைவிட்டதில்லை. அந்தவகையில் அவர்கள் சொன்னார்கள். அம்மா ஆட்சியில் யார், யாருக்கு எத்தகைய உதவிகள் செய்யப்பட்டன என்று. இந்த ஐயா ஆட்சியிலும் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அந்த உதவிகள் தொடரும் என்பதை அருமை நண்பருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## (ஊ) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பணியிடங்களை நிரப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. எல்லோரும் உட்காருங்கள். "மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் முக்கியப் பணியிடங்கள் காலியாக உள்ளதால், நுகர்வோர் தங்களது குறைகளைத் தெரிவிக்க இயலாத நிலை நிலவுவது குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையிலே எடுத்துக்கொள்கிறேன். திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)



2008 ஏப்ரல் 21]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . (குறுக்கீடுகள்)

## (எ) ஆண்டிப்பட்டி, உடுமலைப்பேட்டை, அரசியல் கட்சிகளின் தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. திரு. சண்முகவேலு. இது உட்கட்சிச் சண்டை. நான் சொல்கிறேன் கேளுங்கள். ஆண்டிப்பட்டியிலும் சண்டை போட்டிருக்கிறீர்கள், உடுமலைப்பேட்டையிலும் சண்டை நடந்திருக்கிறது. இது உங்கள் உட்கட்சிச் சண்டை. இரண்டு கட்சிகளுக்குள் தேர்தலின்போது நடந்த நிகழ்ச்சி. (குறுக்கீடுகள்) பிறகு பார்க்கலாம். திரு. சிவபுண்ணியம், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் சட்டமன்ற உறுப்பினரே அடிபட்டதாக பேப்பரில் வந்திருக்கிறது, பார்த்தீர்களா! உங்கள் கட்சிச் சண்டையில், உங்கள் சட்டமன்ற உறுப்பினரே அடிபட்டதாக பேப்பரில் வந்திருக்கிறது. இதுவெல்லாம் உட்கட்சி விவகாரங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) அதேமாதிரி தி.மு.க.-வைச் சேர்ந்த திரு. லட்சுமணன் என்கிற சட்டமன்ற உறுப்பினர் என்னிடம் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். "தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் அ.இ.அ.தி.மு.க. நிர்வாகிகள் தேர்தலில் இளம் பெண்கள், இளைஞர்கள் பாசறையில் அடிதடி, ரகளை ஏற்பட்டு, பொது மக்கள் அலறியடித்து ஓடியதால் ஏற்பட்ட பதட்டம் குறித்து" என்று அவரும் ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) இதெல்லாம் உட்கட்சி விவகாரம், இரண்டு பக்கமும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் எடுக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

முற்பகல் 10-30

## (ஊ) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பணியிடங்களை நிரப்புதல்—தொடர்ச்சி

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுடைய தலைவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்ற செய்தி பல மாவட்டங்களிலிருந்து வந்திருக்கின்றது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் உட்கட்சி விவகாரம். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதன் காரணமாகவே பொது மக்கள் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்கு வாய்ப்பில்லாத நிலைகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுடைய தலைவரை நியமிப்பதிலே ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? தலைவரை நியமிப்பதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இருக்கிறதா அல்லது அரசுக்கு இருக்கிறதா? அப்படி அரசுக்கு இருக்கிறது என்று சொன்னால், ஏன் அந்தத் தலைவர்களுடைய நியமனத்தைச் செய்யாமல் அரசு காலம் தாழ்த்துகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இதன்மூலம் மக்கள் பாதிக்கப்படுவார்கள். உடனடியாக இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் தமிழகத்தைப் பொறுத்தளவிற்கு 11 இடங்களில் தலைவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த 11 இடங்களிலே 9 மாவட்டக் குறைதீர் மன்றங்களுக்கு அருகிலேயுள்ள மன்றங்களின் தலைவர்கள் பொறுப்பாளர்களாகப் போடப்பட்டு, அந்தந்த மாவட்ட குறைதீர் மன்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், அங்கு இருக்கிற நுகர்வோர்கள் எல்லாம் அந்தந்த மன்றங்களுக்குச் சென்று தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நிவாரணங்கள் வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. மாவட்டக் குறைதீர் மன்றங்களுடைய தலைவர்களை நியமிக்கிற அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இருக்கிறதா, அரசுக்கு இருக்கிறதா என்று ஒரு வினாவை எழுப்பினார்கள். அரசுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அரசைப் பொறுத்தளவிற்கு என்னவென்று சொன்னால், சட்டம் 1981 பிரிவு 10(1) 7-ன்படி நுகர்வோர் மாவட்டக் குறைதீர் மன்றத்தினுடைய தலைவரை நியமிக்கிற அதிகாரம்-மாநில அளவிலே இருக்கிற அதனுடைய தலைவர், துறையினுடைய செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், மூவரும் அந்தக் குழுவிலே இடம் பெறுகிறார்கள். அந்தக் குழுவிலே இடம் பெற்று அவர்கள் கொடுக்கிற பட்டியலை



அரசு ஏற்று, ஆணை பிறப்பித்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைதீர் மன்றத்தினுடைய தலைவரை நியமனம் செய்கிறோம்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே 4 மாவட்டக் குறைதீர் மன்றங்களில் தலைவர் பதவி காலியாக இருந்தது. இது தொடர்ந்து மூன்றன்பின் ஒன்றாக கிட்டத்தட்ட 8 இடங்களில் தலைவர் பதவி இடம் காலியானது. அதனுடைய அடிப்படையிலே 3-8-2007, 3-10-2007, 4-11-2007, 11-01-2008 மற்றும் 27-2-2008 ஆகிய 5 நாட்களில் அரசின் சார்பாக மாநில குறைதீர் மன்றத்தினுடைய ஆணையாளருக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினோம். ஆனால், கூட்டம் கூட்டப்படவில்லை. அவர் கூட்டத்தைக் கூட்டி, அதிலே துறையினுடைய செயலாளரும், சட்டத் துறைச் செயலாளரும் இடம் பெற்று, பட்டியல் தயாரித்து, அரசாங்கத்திற்கு வந்தவுடனே ஆணை பிறப்பிக்க முடியும். கூட்டமே கூட்டப்படவில்லை. ஆனால், அதனுடைய பதிவாளராக இருந்தவர் என்ன குறிப்பிட்டார் என்று சொன்னால், இதுசம்பந்தமாக உயர் நீதிமன்றத்திலே நீதிப் பேராணை மனு 11680/06-ல் திருமதி தாரா முரளி என்பவர் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார். அந்த வழக்கினுடைய தீர்ப்பு வந்தவுடனேயே நாங்கள் கூட்டத்தைக் கூட்டுகிறோம் என்று, அதனுடைய ஆணையாளருடைய சார்பாக பணியாற்றுகிற பதிவாளர் அவர்கள், அரசின் சார்பாக பதில் கடிதம் அனுப்பினார்கள். 2-4-2008 அன்று உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பளித்திருக்கிறது. 17-5-2007 நாளிட்ட தேசிய நுகர்வோர் குறைதீர் மன்றம் National Consumer Commission, அதனுடைய ஷரத்திற்கும், 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கு முரண்பாடாக அந்தத் தீர்ப்பு இருக்கிற காரணத்தினால், மேல்முறையீடு செய்யலாம் என்று சட்டத் துறைக்கு அந்தத் தீர்ப்பை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். அது ஆய்விலே இருக்கிறது. அந்த ஆய்வு முடிந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து பேசி, இதற்கு நல்லதொரு தீர்வை இந்த அரசு காணும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-35

## (எ) ஆண்டிப்பட்டி, உடுமலைப்பேட்டை, அரசியல் கட்சிகளின் தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினை—தொடர்ச்சி

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி, உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லிவிட்டடும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் உடுமலைப்பேட்டை திரு. சண்முகவேலு அவர்கள், அவர் தொகுதியில் ஒரு கட்சியினுடைய அதாவது ஆளுங்கட்சியினுடைய உட்கட்சித் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது; அதில் இருதாப்பிலும் மோதிக்கொள்கின்றார்கள்; ஒரே கட்சியில், இரு தாப்பிலும் மோதிக்கொள்கிறார்கள்; அங்கு சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, காவல் துறையினுடைய துணைக் கண்காணிப்பாளர் போய் மத்தியஸ்தம் செய்கின்றபோது, அங்கே அவரும் தாக்கப்பட்டு, கண் பாதிக்கப்பட்டு, மூக்கு பாதிக்கப்பட்டு, பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை சொல்வதற்காகத்தான் அவர் எழுந்தார். ஆனால், நீங்கள் முந்திக்கொண்டு . . . (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பல கட்சிகளில் ஒரே கட்சியில் அல்லது மாற்றுக் கட்சிகளில் பல சம்பவங்கள் பல்வேறு பகுதிகளில் தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், குறிப்பிட்ட ஒரு கட்சியினுடைய தேர்தல் நடைபெறுகின்றபோது, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கை சீர்செய்வதற்காக, துணைக் கண்காணிப்பாளர் அங்கே வருகின்றபோது, அவர் தாக்கப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது என்பதைத்தான் அவர் கூற வந்தார். ஆனால், நீங்கள் உச்சந்தலைக்கும் உள்ளங்காலுக்கும் முடிச்சுப்போடுகிற விதத்தில், பிரச்சினையை வேறு திசையில், வேறு பக்கமாகத் திருப்புவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்பதை நான் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். ஆளுங்கட்சி சார்பிலே சட்டமன்ற உறுப்பினர் திரு. லட்சுமணன் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவரும் உங்கள் மாவட்டத்துக்காரர்தான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் என்ன கொடுத்திருக்கிறார் தெரியுமா? "தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் அ.இ.அ.தி.மு.க. நிர்வாகிகள் தேர்தலில் இளம் பெண்கள், இளைஞர்கள் பாசறையில் அடிதடி ரகளை ஏற்பட்டு,





பொதுமக்கள் அலறியடித்து ஓடியதால் ஏற்பட்ட நிலை குறித்து" என்று அவரும் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) இரண்டு பக்கமும் . . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏன் எல்லோரும் எழுந்து நிற்கிறீர்கள்? அடுத்து, ஒரு matter-ஐ என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எடுப்பதும், எடுக்காததும் என்னுடைய purview-இல் உள்ளது. தெரிகிறதா? இது என்னுடைய purview-இல் உள்ளது. கட்டாயப்படுத்தி இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவேமாட்டேன். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. ஒரு கட்சியினுடைய சம்பவம் நடக்கிறது, இரு மாறுபட்ட கட்சிகளிலே சம்பவங்கள் நடக்கின்றன. அங்கே பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டால் எந்த உறுப்பினரும் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர, பேரவைத் தலைவரிடம் அனுமதி கேட்டால், எடுப்பதற்கு உங்களுக்கு முழு உரிமை இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உடுமலைப்பேட்டையில் நடந்த சம்பவத்திற்கும் ஆண்டிப்பட்டியில் நடந்த சம்பவத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது? (குறுக்கீடுகள்) நீங்கள் அந்த வகையில் தீர்ப்பு வழங்கினால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உட்கட்சி சண்டை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கட்சியினுடைய நோக்கத்திற்காக இந்த அவையைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கத் தேவையில்லை. அவர்கள் சொல்லக்கூடிய நியாயம் எதுவாக இருந்தாலும் சட்டமன்றத்திலே அதை ஒரு பிரச்சினையாக எழுப்புவதற்கு உரிமை கிடையாது. பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் அது உரிமை. அந்த உரிமையே இல்லாமல், உடுமலைப்பேட்டைக்கும்

ஆண்டிப்பட்டிக்கும் இடையிலே உள்ள பிரச்சினைகளை மேலும், மேலும் பேசுவது அனுமதிக்கப்படாத பிரச்சினையைப் பேசுவதாகும். அனுமதிக்கிற உரிமை பேரவைத் தலைவருக்கு உள்ளது. பேரவைத் தலைவருடைய உரிமையைக் காப்பாற்றுவது ஆளுங்கட்சியினுடைய கடமை. ஆகவே, பேரவைத் தலைவருடைய உரிமைக்கு மாறாக இந்தப் பிரச்சினையை எழுப்புவதை இந்த அவை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் நிரம்ப மதிப்பாக உங்களிடம் சொல்லியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* இதற்குப் பிறகும் நீங்கள் அவை மரபை மீறி நிற்பது முறையல்ல. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* ஒரு கட்டுப்பாடு இல்லாமல் நீங்கள் நடந்துகொள்கிறீர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.80,90,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டு தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 45. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். *(குறுக்கீடுகள்)*



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 257, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7820, திரு. என்.ஆர். ரங்கராஜன். *(குறுக்கீடுகள்)*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9295, திரு. ஆர்.எம். பழனிசாமி. *(குறுக்கீடுகள்)*

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13585, திரு. விடியல் எஸ். சேகர். (குறுக்கீடுகள்)

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்." (குறுக்கீடுகள்)

(அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டு அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13809, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14497, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16659, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16939, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2211, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2781, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10748, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11120, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12418, திரு. தா. மலரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13279, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6496, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9916, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11046, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11159, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11370, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11479, திரு. வி.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12057, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12283, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14433, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14630, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15118, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17115, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10399, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15679, திரு. சி. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15762, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13849, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1836, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2558, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3239, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3787, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களின் பணியை நிரந்தரம் செய்து சட்டப்படியான ஓய்வூதியங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5035, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுப் பணியாளர்களுக்கு பென்சன் வழங்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5416, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அளவில், தாலுகா தலைமையிடங்களில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெண்களுக்காக அரசு விடுதி புதியதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6019, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புறக்கணிக்கப்படும் முதியோர்களைப் பராமரிக்க ஒவ்வொரு கிராமத்திலும் முதியோர் இல்லங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6997, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் சுமார் 800-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இதில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதியோர்கள் உள்ளனர். இவர்களுக்கு முதியோர் உதவித் தொகை கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7852, திரு. க. இராஜேந்திரன், வந்துவிட்டீர்களா?

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள இராமதேவநல்லூர் மற்றும் குண்டவெளி, முத்துசேர்வை மடம், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற ஊர்களில் சமுதாயக் கூடங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8218, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மங்களூர் தொகுதியில் பாதுகாப்பில்லாத சமையல் அறைக்கு தகுந்த கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8900, திரு. இ. மகேந்திரன், வந்துவிட்டார்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பெண்கள் திருமண நிதி உதவி கோரும் மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்து தாமதமின்றி விரைவில் திருமண நிதி உதவி கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9209, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் பலனை பயனாளிகள் விரைந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9267, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9736, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் சத்துணவு மையங்களில் வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10001, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு, வீட்டிலுள்ள வசதி குறைந்த பெண்களுக்கு இலவசமாக தையல், தட்டச்சுப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10098, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தங்கும் வசதியுடன்கூடிய இலவசப் பயிற்சி மையங்களை அரசின் சார்பில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10312, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரியில் தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் எதிர்கால நலன் குறித்து விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10367, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் யானைக்கால் நோயினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வீட்டைவிட்டு வெளியே வர இயலாமல் ஊனமுற்ற நிலையில் இருக்கிறார்கள். வேலைசெய்து பிழைப்பு நடத்த முடியாமல் வறுமையில் வாடும் இவர்களை ஊனமுற்றவர்களாக, இயலாதவர்களாகக் கருதி, அரசு மாத உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மான்ம் எண் 10411, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சமையல்கூடம் இல்லாத அனைத்து பள்ளிகளுக்கும் சமையல்கூடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10428, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவு மையங்களில் அமைப்பாளர்கள் பணி நிரப்பும்போது விதவை மற்றும் கணவரால்



கைவிடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10760, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து அங்கன்வாடி மையங்களையும் எரிவாயு இணைப்புடன்கூடிய நவீன சமையல்கூடங்களாக அரசு, தனியார் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் போர்க்கால அடிப்படையில் மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11231, திரு. செ.ம. வேலுசாமி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11466, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவு கூடங்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11838, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழந்தைகளுக்கு முட்டை வழங்காத பள்ளி நாளில் வாழைப்பழம் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12353, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் உள்ள மிகவும் உடல் ஊனமுற்றவர்களும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களும் அடையாள அட்டை வாங்குவதற்கு தூத்துக்குடிக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளதால், மாதம் ஒரு தடவையாவது தொகுதியில் உள்ள பஞ்சாயத்து அலுவலகங்களில் அடையாள அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12170, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12542, திரு. எஸ். ராஜ்குமார்.

**திரு. எஸ். ராஜ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் இயங்கும் ஊட்டச்சத்து மையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12726, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் கிழக்கு ஆதி திராவிடர் தெருவில் உள்ள சத்துணவுக் கூடம் பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12789, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, தொண்டப்பாடியில் சத்துணவு மையத்திற்கு சொந்தமாக புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12907, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களில் தயார் செய்யும் உணவுப் பொருட்களுக்காக வழங்கப்படும் எரிபொருள் மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12984, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் உள்ள சத்துணவு மையங்களைப் புதுப்பித்து, சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13059, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து சத்துணவுக் கூடங்களையும் சுகாதார முறையில் பராமரித்து உணவு வகைகள் தயார் செய்கிறார்களா எனக் கண்டறிய அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13165, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டக் கல்வி, முதுநிலைக் கல்வி முடித்த சத்துணவு ஊழியர்களுக்கும் ப்ளஸ் 2 முடித்த சமையலருக்கும் அரசு பணி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13601, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிப்பது போல் அங்கன்வாடி மையங்களுக்கும் கோடை விடுமுறை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13705, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை நகராட்சிக்குட்பட்ட கிழக்குத் தொகுதியில் உள்ள அங்கன்வாடி சத்துணவுக் கூடங்களைப் பராமரிக்கவும், புதுப்பிக்கவும், பழுதுபார்க்கவும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13730, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1168, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டி ஒன்றியம், 27 கிராமப் பஞ்சாயத்துகளில் பல்வேறு இடங்களில் புதிய அங்கன்வாடி மையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14351, திரு. ஞா. ஜான் ஜேக்கப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15206, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அனைத்து ஏழைப் பெண்களுக்கும் வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. வருமான உச்சவரம்பின்றி அரசு மருத்துவமனையில் மருத்துவ வசதிபெறும் அனைவருக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16533, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வேண்டி விண்ணப்பித்த அனைவருக்கும் விரைவில் உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16782, திரு. க. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 18961, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி பணியாளர் நியமனத்தில் இட ஒதுக்கீடு முறையை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17030, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 141-வது வட்டத்தில் இயங்கும் மசூதி காலனியில் இடியும் நிலையில் உள்ள கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17075, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் உள்ள சில கிராமங்களில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,733,09,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களைப் பேச அழைக்கிறேன். திருமதி எஸ். தேன்மொழி, உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரம் 18 நிமிடங்கள்.

---

@ 433 முதல் 532 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்த் துடிப்பு, எட்டுத் திசைகளிலும் வாழுகின்ற தமிழ்ப் பெருமக்களின் தன்னிகரற்ற தலைவி, காலம் அளித்தக் கொடை, கருணைக் கடல், எங்களின் குல விளக்கு, தமிழகத்தின் ஒளி விளக்கு, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து, கோடானு கோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதி அளித்த சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு நன்றி. என்னை வெற்றி பெறச் செய்த மனித நேயமிக்க நிலக்கோட்டை தொகுதி மக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுவர்கள், பெண்கள், முதியோர், ஆதரவற்றோர், ஊனமுற்றோர் என்று சமூகத்தில் பரிவோடு கவனிக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பவர்களது பிரச்சினைகளை அணுகக்கூடிய சமூக நலத் துறைக்கு, எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில் தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

தென் பகுதியில் வசிக்கக்கூடியவர்களுக்குத் தெரியும்; பெண் குழந்தை பிறந்தால், அதைச் சுமை என்று கருதி, சிசுவாக இருக்கும்போதே, வறுமையின் காரணமாகக் கள்ளிப்பாலைக் கொடுத்துக் கொல்லுகின்ற கொடுமை தென் பகுதியிலும், அதேபோல, சேலம் மாவட்டத்திலும் நிகழ்ந்து கொண்டிருந்தது. எத்தனையோ ஆட்சிகள் நடைபெற்றன. ஆனால், இந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சிந்தித்து, பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காகத் தொட்டில் குழந்தைத் திட்டம் என்ற மகத்தான மனித நேயமிக்கத் திட்டத்தினைக் கொண்டு வந்தது, மாதர் குலத்தின் தனிப்பெரும் தலைவியாம், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைப் பாராட்டாதவர்களே கிடையாது. உலகமே மதித்துப் போற்றுகின்ற அன்னை தெரசா அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இல்லத்திற்கு வந்து, பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார்களென்றால், அதைவிட வேறு யாருடைய அங்கீகாரம் தேவை?

இந்த நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில், பாமகவைச் சேர்ந்த உறுப்பினர் பேசும்போது, தொட்டில் குழந்தைத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டி, 'அந்தத் திட்டத்தின் இன்றைய நிலைமை என்ன' என்று கேள்வி எழுப்பினார். நான்கூட, அப்போது, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். திமுக. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தில் குழந்தைகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? அப்படிச் சேர்க்கப்பட்டிருந்தால், இந்த ஆட்சியில் எத்தனைக் குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்? அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வளர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு இந்த அரசு தொடர்ந்து வசதி செய்து கொடுக்கின்றதா என்பதைப்பற்றியும், அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெண் கல்வியில், பெண்களுடைய முன்னேற்றத்தில், பெண்களுடைய பாதுகாப்பில் அம்மா அவர்களுக்குத் தனி அக்கறை எப்போதும் உண்டு. பெண்களுக்கெதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தினார்கள். பிற மாநிலங்களுக்கு மட்டுமின்றி, உலகிற்கே முன்மாதிரியான அந்தத் திட்டத்தை, அண்டை நாடான பாகிஸ்தானில் பின்பற்றியிருக்கிறார்கள் என்றால், அந்தப் பெருமை அம்மா அவர்களையே சாரும். இதேபோன்று, போக்குவரத்துத் துறையிலும், ஓட்டுநர், நடத்துநர் பணிகளில் பரீட்சார்த்தமான முறையில், முதன்முதலாகப் பெண்களைப் பணி நியமனம் செய்து பெருமை சேர்த்தவர் எங்கள் அம்மா அவர்கள்தான்.

இன்றைக்கு சமூகத்தில் பல்வேறு துறைகளில் புகழ்பெற்று விளங்குகின்ற பெண்கள், பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் பேட்டியளிக்கின்றபோது, "எங்களுடைய roll model புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்" என்று பெருமையோடு குறிப்பிடுகின்ற செய்திகளை இன்றைக்கும் படித்துக்கொண்டிருக்கின்றோம்.

உலகிலே முதன்முதலாக ஆண், பெண் இருபாலரையும், 'குடிமகன்' என்ற பொதுச் சொல்லுக்கு மாற்றாக, பெண்களை 'குடிமகள்' என்று பெண்பால் பெயர்ச் சொல்லாலும், தாயின் முதலெழுத்தைக் குழந்தைக்கு initial-ஆகப் போடலாம் என்றும் உத்தரவிட்டு,



தாய்மையின் பெருமைக்கு பெருமை சேர்த்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு" என்று கேட்டுக்கொண்டிருந்த நிலை மாறி காவல் துறையா, கம்ப்யூட்டர் துறையா, விமானம் ஓட்டுதலா, எதற்கும் போட்டி போடக்கூடிய அளவிற்கு பெண்கள் தகுதியும், தன்னம்பிக்கையும் பெற்றுத் திகழ்கிறார்கள் என்றால், அத்தகைய சாதனைக்கு, நம்பிக்கையும், உற்சாகமும் ஊட்டுகின்ற உந்து சக்தியாகத் திகழ்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின்போது இப்படிச் சாதனை படைக்கின்ற பெண்களை உற்சாகப்படுத்தும் வகையில் விருதுகளை வழங்கி, அடித்தட்டுப் பெண்களாய் இருந்தால், நிதியளித்து ஊக்கப்படுத்தி இருக்கிறார்கள். ஏழைகளின் குடும்பத்தில் உணவுக்கு வழி இல்லாத காரணத்தால், பிள்ளைகள் பள்ளிக்குப் போகாமல் வேலைக்குப் போகின்ற பரிதாப நிலையைத் தடுப்பதற்காகப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இதே திமுக., அது குழந்தைகளைப் பிச்சைக்காரர்களாக்கும் திட்டம், தட்டேந்த வைக்கும் திட்டம் என்று கேலி பேசியது. ஆனால், அப்படிச் சொன்ன நீங்கள், ஆட்சிக்கு வந்த பிறகு, அந்தத் திட்டத்தை நிறுத்த உங்களால் முடியவில்லை. மக்களுடைய கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று பயந்தீர்கள், அதுதான் உண்மை. இப்பொழுது இரண்டு முட்டையை மூன்று முட்டைகளாக ஆக்கிவிட்டோம் என்கிறீர்கள். ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் தொடர்ந்து தவறான கருத்துகளைக் கூறி வருகிறார். முதன்முதலாக பெண் காவலர்களை நியமித்தது டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் என்பதைக் குறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

ஏழையெளிய பெண்கள்மீது அதிக அக்கறை கொண்ட அரசு எங்கள் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தை நிறுத்தியது உங்கள் அரசுதான். அதேபோல, 3 முட்டைகள் வழங்கும் திட்டம் இந்தியாவில் அல்ல, உலகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு ஒரு சிறந்த திட்டமாகச் செயல்படுகிறது. சிறப்பாகச் செயல்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பற்றி விளக்கமாக என் பதிலுரையில் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள். பேசுங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **அப்படிக் காண்பிக்க வேண்டுமென்றால் என்னிடம் அனுமதி வாங்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**திருமதி எஸ். தேன்மொழி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** அவர் அதுசம்பந்தமாக பேசியது எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order. பேரவைத் தலைவர் அவர்களே, ** இந்த அவையிலே முன் அனுமதி இல்லாமல் எதையும் காட்டக் கூடாது. ** எனவே, நான் பேசியது உட்பட மொத்தத்தையும் expunge செய்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், எதையும் பேரவைக்குக் கொண்டு வந்து காண்பித்தல் தவறு; முதலில் என்னுடைய அறைக்குக் கொண்டுவந்து காண்பித்து, இதைப் பற்றிப் பேசப்போகிறேன் என்று சொல்லிவிட்டு, அனுமதி வாங்கிவிட்டுத்தான் பேச வேண்டும். அவர் ** பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழி முட்டை, அவர்கள் வீட்டில் போட்ட முட்டையா அல்லது நாமக்கல்லில் போட்ட முட்டையா? இது எங்கு வாங்கிய முட்டை? இந்தக் கோழி முட்டை, எங்கு போட்ட முட்டை? இந்தக் கோழி முட்டையை எங்கேயிருந்து கொண்டுவந்திருக்கிறார்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள். சின்ன முட்டை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 18 நிமிடங்கள்தான். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கள் காலத்தில் சத்துணவில் ஒரு முட்டை போட்டோம். அந்த ஒரு முட்டையை எடுத்துவிட்டு, கொட்டை போட்டு, கடைசியிலே நீங்கள் மாணவர்களுக்குப் பட்டை போட்ட காரணத்தினாலே வீட்டுக்குப் போனீர்கள். ** என்று பேசுவதற்கு உங்களுக்கு தார்மீக ஆதாரவும் கிடையாது. பேசுவதற்கு உரிமையும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, அரசாங்கம் ** இரண்டாவது, ஒரு முட்டை கணக்கு அல்ல, 12 முட்டைகள் சேர்ந்து 552 கிராம் இருக்க வேண்டும் என்பதுதான் கணக்கு.

(முற்பகல் 10-55)

**திருமதி எஸ். தேன்மொழி:** இதுமட்டுமின்றி, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு தரமற்றதாகவும், அதில் புழுப் பூச்சி கலந்துவிடுவதாலும், "சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வாந்தி பேதி" என்ற செய்திகள் அடிக்கடி வெளியாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சத்துணவுக் கூடங்கள் சுகாதாரமற்ற நிலையில் பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன. சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் பருப்பில் சமையல் செய்தால் வேக வைப்பதற்கு ஏராளமான நேரம் செலவாகிறது. காரணம், பருப்பு தரம் இல்லாததுதான். இன்றைக்கு விலைவாசியெல்லாம் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில் . . . (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் குழந்தைகள் சாப்பிடும் உணவில்கூட சிக்கனப்படுத்த முயற்சி செய்த அரசு அந்த அரசு. ஒரு கோடி ரூபாய் மிச்சமாகும் என்று மைசூர் பருப்பைக் கொடுத்தார்கள். இன்று நல்ல, தரமான துவரம் பருப்பை டாக்டர் கலைஞர் அரசு வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி தேன்மொழி, பேசுங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவில் வழங்கப்படும் பருப்பு சுத்தமாக வேகவைக்கப்படுவதில்லை. உங்களுக்கு நன்றாகத் தெரியும். என் தொகுதியில் எல்லாம் எந்தப் பருப்பும் வேகவேயில்லை. அது பருப்பே கல் மாதிரி இருக்கிறது.

இன்றைக்கு விலைவாசிகள் எல்லாம் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில் சத்துணவுத் திட்டத்திற்காக காய்கறிகள் வாங்க நீங்கள் கொடுப்பதில் என்ன வாங்க முடியும்? காய்கறிகளை, குழந்தைகள் காட்சிப் பொருளாகத்தான் பார்க்க முடியுமே தவிர, தங்களுடைய தட்டில் வைக்கப்பட்டு சாப்பாட்டில் பார்க்க முடியாது. எனவே, உண்மையாக, சத்துணவு தரப்பட வேண்டுமென்றால், காய்கறிகளுக்காகக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

சத்துணவு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு கவனிக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு அளிப்பதுபோல், சத்துணவுப் பணியாளர்களுக்கும் ஊதியம் மற்றும் பிற சலுகைகள் அளிக்க வேண்டும். சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வுபெறும் நாளன்று ஒட்டுமொத்த ஓய்வூதியத்தையும் அவர்களுக்குத் தர வேண்டும். ஊழியர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றினால்தான் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு



சத்துணவு மற்றும் குழந்தைகள் நல மைய ஊழியர்கள்மேல் அக்கறை வந்திருப்பதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தின் பணி நியமனத் தடைச் சட்டத்தை அவர்கள்மீதும் பாய வைத்தது மட்டுமல்லாமல், அவர்களின் சம்பள உயர்வையே நிறுத்திய அரசு உங்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக, குழந்தைகள் மையத்திற்கு மத்திய அரசின் பங்களிப்பும் மாநில அரசின் பங்களிப்பும் இருக்கும். நீங்கள் என்ன செய்தீர்கள்? 2001 ஆம் ஆண்டு வந்து, மைய அரசு குழந்தைகள் மையத்திற்கு 500 ரூபாய் அதிகமாகச் சம்பளம் வழங்கியபோது, மாநில அரசின் கணக்கில் அதைக் குறைத்துக்கொண்டு ஊதியத்தில் திருத்தம் செய்தவர்கள் நீங்கள். ஆனால், இன்று இந்தியாவிலே, சத்துணவு மைய ஊழியர்களுக்கும், குழந்தைகள் மைய ஊழியர்களுக்கும் அதிக அளவு சம்பளம் வழங்கும் ஒரே அரசு டாக்டர் கலைஞர் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, முட்டைச் சத்துத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். ஒருங்கிணைந்த முட்டைச் சத்துத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறார். ஆகவே, உறுப்பினர் சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லாமல் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்குப் பதில் சொல்லாமல் முட்டைச் சத்துத் திட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திருமதி எஸ். தேன்மொழி:** 2007-2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆசிரியர் பணி பெறத் தகுதியுள்ள பட்டதாரிப் பணியாளர்களுக்கு ஆசிரியர் பணி வழங்கப்படும் என்று மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார். எனவே, தமிழகம் முழுவதும் உள்ள 380 பட்டதாரி சத்துணவுப் பணியாளர்களுக்கும் கருணை அடிப்படையில் விதிகளைத் தளர்வு செய்து தொடக்கக் கல்வித் துறையில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்குப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டு அறிவித்தவாறு பணி நியமனம் வழங்க உத்தரவிடுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் சத்துணவுத் திட்டப் பணியில் அமர்த்தப்பட்ட சத்துணவு சமையலருக்கு ஊதியமாக ரூ.1,300 வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் அதற்கு இணையாக ஊழியர் தாக்குப்

அங்கன்வாடி உதவியாளருக்கு ஊதியமாக ரூ.1000/- வழங்குவது எந்தவிதத்தில் நியாயமானது? எனவே, உடனடியாக ஊதியத்தை உயர்த்தி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

உடல்நலக் கேடு ஏற்படுத்தும் அலுமினியத் தட்டு, டம்ளரிலேயே சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளுக்கு—2001 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், சத்துணவு சாப்பிடும் குழந்தைகளை தன் குழந்தைகளாகப் பாவித்து—முதன் முதலில் எவர்சில்வர் தட்டு, டம்ளர்களுக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தியவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இதை யாரும் மறந்துவிட முடியாது.

பெண்களின் நலனுக்காகவும், அவர்களின் உரிமைகளைக் காப்பதற்காகவும், மகளிர் ஆணையம் முதன் முதலாக 1999 ஆம் ஆண்டு எங்கள் அம்மாவின் ஆட்சியில்தான் ஏற்படுத்தப்பட்டது என்பதை இந்த பெருமையோடு குறிப்பிடுகின்றேன். நிலமற்ற ஆதிதிராவிடர் நிலம் வாங்குவதற்கு அரசு மானியம் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கியது எங்கள் அம்மாதான்.

பெண்கள் சுய உதவிக் குழுவின்மூலம் பெண்களின் பொருளாதார உயர்விற்காகவும், பெண்கள் சொந்தக் காலில் நிற்பதற்காகவும், அதற்காக சிறப்பு முயற்சிகளை முன்நிறுத்தி சமூக அந்தஸ்தையும் மற்றும் சமூகப் பொருளாதாரத்தால் தனித்தன்மையுடன் சுயமாக நிற்பதற்கும் உதவிகளைச் செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஊக்கம் அளித்து, பெண் சிசுக்களை அழிப்பதையும், ஆண் குழந்தைகளை மட்டுமே பெற்றுக்கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காகவும் 1992 ஆம் ஆண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இப்படி, பிறப்பதற்கு முன்பே பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்புத் தந்தவர் எங்கள் அம்மாதான். இந்த அற்புதமான திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்காதது பெண்கள் நலனில் அக்கறை இல்லாத நிலைமையைத்தான் காட்டுகின்றது.

ஆண்களுக்கு இணையாகப் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இட வசதியின்



தேவையும் அதிகரிக்கின்றது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம் அல்லது சுற்றுப்புறத்தில் தங்குவதற்குத் தக்கவாறு இட வசதிகளை நாட வேண்டிய காரணத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்து நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலும் பணிபுரியும் பெண்களுக்கு விடுதி ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் முதன் முதலாக புதுமணத் தம்பதிகளுக்கு இலவச எரிவாயுத் திட்டம் அறிவிக்கப்பட்டு, புதுமணத் தம்பதிகளுக்கு இலவசமாக எரிவாயு வழங்கப்பட்டது. இத்திட்டத்தையே விரிவுபடுத்தியுள்ளீர்கள். இது உங்களது சொந்த மூளையில் உதித்த திட்டம் அல்ல. (குறுக்கீடு) இதே திட்டத்தைதான் தி.மு.க. தேர்தல் அறிக்கையில், இது ஏதோ உங்கள் சொந்தத் திட்டம் போல வாக்குறுதியாக அறிவித்து மக்களை ஏமாற்றுவது சரியல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். படித்து முடிக்கட்டும்.

**திருமதி எஸ். தேன்மொழி:** எங்கள் நிலக்கோட்டை தொகுதியில் சமூக நலப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 57 ஆயிரம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டதாக வறியோர் நலத் திட்ட தாசில்தார் புள்ளிவிவரம் தருகிறார். ஆனால், சுமார் 17,000 குடும்பங்களுக்கு சமூக நலப் பாதுகாப்புத் திட்ட அட்டைகள் சரியாக வழங்கப்படவில்லை. ஆனால், இது விஷயமாக வறியோர் நலத் திட்ட தாசில்தாரிடம் கேட்டால், நாங்கள் திட்ட அட்டைகளை அரசிடமிருந்து பெற்று கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்து பொதுமக்களுக்கு வழங்க உத்தரவிட்டுள்ளோம் என்று பதில் தருகிறார்கள். ஆனால், நிலக்கோட்டை தொகுதியில் மட்டும் 17,000 பேருக்கு திட்ட அட்டைகள் இன்னும் கிடைக்கவில்லை. எனவே, தேர்வு செய்யப்பட்ட அனைத்து பயனாளிகளுக்கும் சமூக நலப் பாதுகாப்புத் திட்ட அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டதாக அரசு கூறுவது சரியல்ல. அரசு விளம்பரம் ஏமாற்றும் அறிவிப்பாகவே உள்ளது. தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்ட அட்டைகள் உடனடியாக வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு அறிவித்துள்ள இரண்டு ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டம் என்பது வெறும் கண்துடைப்பாகவே செயல்பட்டு

வருகிறது. மேலும், இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அவற்றை தமது கட்சிக்காரர்களுக்குத் தாரை வார்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் நிலக்கோட்டை தொகுதி, பச்சைமலையான்கோட்டை ஊராட்சியில் உள்ள புதூர்பேட்டையில் உள்ள ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த திரு. முனியாண்டி அவர்களின் மனைவி முத்தம்மாள் என்பவர் தாட்கோவில் கடன் பெற்று தமது நிலத்தில் சாகுபடி செய்து, கடந்த 10 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார். இந்தச் சூழ்நிலையில் மேற்படி முத்தம்மாளிடமிருந்து வலுக்கட்டாயமாக அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரது நிலத்தைப் பறித்து திமுகவைச் சேர்ந்தவர்களுக்குப் பட்டா வழங்கியிருக்கிறார்கள். இந்தக் கொடுஞ்செயலால் ஏழை விவசாயியான திருமதி முத்தம்மாள் என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டு தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறார். இந்த நிலை தமிழகம் முழுவதும் தலைவிரித்தாடுகின்ற அக்கிரமத்தை மக்கள் தட்டிக்கேட்கும் நிலை விரைவில் உருவாகும். (மணியடிக்கப்பெற்றது)

வறட்சியாலும் வறுமையாலும் வாடுகின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது குடும்பத்தில் உள்ள வயதானவர்களைத் தனியாக விட்டுவிட்டு வெளி மாவட்டங்களுக்கு வேலைக்குச் சென்று விடுகின்றனர். காலப்போக்கில், வாழ வழியில்லாமல் முதியோர் பலர் தங்களைத் தாங்களே மாய்த்துக்கொள்ளும் கொடுமையான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு எங்களது பகுதியில் வெளி மாவட்டங்களுக்குச் செல்லாதவகையில் போதுமான தொழிற்சாலைகள் ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும். மேலும், அரசு முதியோர் காப்பகங்கள் நிறுவப்பட வேண்டும்.

நிலக்கோட்டை அரசு மகளிர் கல்லூரியில் உள்ள பேராசிரியர்களால் கல்லூரி மாணவியர்களுக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. மேலும், பேராசிரியைகள் மற்றும் முதல்வர், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது.

**திருமதி எஸ். தேன்மொழி:** துணை முதல்வர் ஆகியோர் மாணவிகளைக் கட்டாயப்படுத்தி கையெழுத்துப் பெற்றுக்கொண்டு, அவர்களது கல்வி உதவித் தொகையைப் பறித்துக்கொள்வதாகவும், ஏழ்மை நிலையில் உள்ள மாணவிகளைத் துன்பப்படுத்துவதாகவும், எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களது Internal Mark குறைப்பு உள்ளிட்ட



பல்வேறு வகையில் கஷ்டப்படுத்துவதான நிலையுள்ளது. மேலும், அந்த கல்லூரியில் நாட்டு நலப் பணியில் மாணவியர் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பணியில் இருந்தபோது, அவர்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட உணவு மற்றும் இருப்பிட சலுகைகளைச் செய்து கொடுக்காமல் பணத்தையும், பொருட்களையும் கல்லூரி நிருவாகமே எடுத்துக்கொள்வதாக புகார் எழுந்துள்ளது. இந்த நிலைதான் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு கல்லூரிகள் மற்றும் பெண்கள் விடுதிகளிலும் உள்ளது.

முற்பகல் 11-05

பின்தங்கிய, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஏழை மாணவியர் பயிலும், அரசுக் கல்லூரியின் அவல நிலையை உடனடியாக போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி கல்லூரிக்கு, கொடைரோடு, நிலக்கோட்டை, செம்பட்டி, வத்தலக்குண்டு, அணைப்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து உரிய நேரங்களில் மகளிருக்குத் தனிப் பேருந்து விட வேண்டுகிறேன்.

தமிழகத்தில் போலிச் சாமியார்கள், பிச்சையெடுப்பவர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகிறார்கள். வீட்டில் பெண்கள் மட்டும் இருக்கின்ற நேரங்களில் மிரட்டி பிச்சை எடுக்கும் அவல நிலை ஏற்பட்டு உள்ளது. உண்மையிலேயே, பிச்சை எடுக்கும் சூழ்நிலையில், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் உழைக்கும் சக்தியும், ஆதாரவும் இல்லாத நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அரசு சார்பில் ஆதரவுக்கரம் கொடுத்து, போலியாக நடமாடும் பிச்சைக்காரர்களை உடனடியாக ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிலக்கோட்டை தொகுதியில் உள்ள கண்ணாபட்டிக்கும், செக்காப்பட்டிக்குமிடையில் வைகை ஆற்றின் குறுக்கே 1994 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கண்ணகி பாலம் பழுதடைந்ததால் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். 2 வருடங்கள் ஆகியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்கண்ட பாலம் மிகுந்த சேதமடைந்து உசிலம்பட்டி, வத்தலக்குண்டு மெயின் ரோட்டில போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எந்த நேரமும் பாலம் இடிந்து விழும் அபாய நிலை தொடர்கிறது. வெறும் அறிக்கை மட்டும் விட்டுவிட்டுத் திட்டங்களை நிறைவேற்றாமல் மக்கள் நலத்தின்மீது அக்கறை இல்லாத இந்த மைனாரிட்டி தி.மு.க. அரசை, உடனடியாக திட்டத்தை நிறைவேற்றிட தொகுதி மக்கள் சார்பாக வேண்டுகிறேன். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இரா. இராணி. (குறுக்கீடுகள்) அவருக்கு நிறைய நேரம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) அதிகமாக இரண்டு நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்)

***திருமதி இரா. இராணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னஞ்சிறுமலை கிராமத்தில் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி,, . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், நீங்கள் உங்களுடைய இடத்திற்குப் போங்கள். முன்இருக்கைக்கு வந்து சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறீர்களே! (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி ஜெயராமன். உங்களுடைய இடத்திற்குப் போய் உட்காருங்கள்.

**திருமதி இரா. இராணி:** மக்களுக்குப் பணியாற்றுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கி, நாட்டு மக்களுக்கு என்னை அடையாளம் காட்டி, 84 அகவையிலும், அல்லும் பகலும் அயராது உழைத்து, தமிழக மக்களுக்காகப் பணியாற்றுகின்ற, கண்ணை இமை காப்பதுபோல் நாட்டு மக்களைப் பாதுகாத்து வருகின்ற, ஐந்தாவது முறையாக அகிலம் போற்றும் பொற்கால ஆட்சியினை தந்து கொண்டிருக்கின்ற ஐந்தமிழ் அறிஞரே, உலகத் தமிழர்களின் உயிர்த்துடிப்பே, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற வரலாற்றில் பொன் விழா கண்ட ஓரே தலைவர், ஒப்பற்ற முதல்வர் எங்கள் அருமைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெருக்கடி நிலை எனும் நெருப்பாற்றில் நீந்தி வந்த திராவிடத்தின் திருவிளக்கு, வருங்காலத் தமிழகத்தை வழிநடத்த இருக்கின்ற நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) புயல் அடித்தாலும், பூகம்பமே ஏற்பட்டாலும் கொண்ட கொள்கையில் தடம் பிறழாமல் இருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் தூண்களாம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, போக்குவரத்தின் பொற்காலம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, மற்ற அமைச்சர் பெருமக்களே, உங்கள் அத்துணை பேருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பங்கேற்று பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கியமைக்கு நன்றியினை உரித்தாக்குகின்றேன்.



1989 ஆம் ஆண்டு தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது. அப்போது வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.5 ஆயிரம். 1996 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த கழக அரசு இந்த நிதி உதவித் தொகையை ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கியது. ஏழைப் பெண்களுக்கு வாழ்வளிக்கும் இந்த அற்புதமானத் திட்டம் கடந்த கால ஆட்சியிலே கைவிடப்பட்டது. இந்தத் திட்டம் கைவிடப்பட்டது கண்டு ஏழை மக்கள் கண்ணீர் வடித்தார்கள், கவலையிலே ஆழ்ந்தார்கள். 2006 ஆம் ஆண்டு கழக அரசு மீண்டும் மலர்ந்தது. கருணை உள்ளம் கொண்ட நம் தலைவர் அவர்கள், ஐந்தாம் முறையாக ஆட்சிக்கு வந்து மீண்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்தி, ஏழைப் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கின்றார்கள். தற்போது, அதிகரித்து வரும் திருமணச் செலவுகளைக் கருத்தில்கொண்டு, இந்த நிதியாண்டிலிருந்து நிதியுதவித் தொகை ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படவிருப்பது தேனினும் இனிய தித்திப்பான அறிவிப்பாகும்.

பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் வருமானச் சான்று வாங்கிக் கொடுத்தால்தான் உதவித் தொகை பெற முடியும் என்ற நிலை இருந்தது. தாய்மார்கள் படும் இன்னல்களைக் கருத்தில்கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதியாண்டிலிருந்து வருமானச் சான்றிதழ் இல்லாமலேயே நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்து தாய்மார்களின் பாராட்டினைப் பெற்றிருக்கின்றார்கள்.

சத்துணவுத் திட்ட மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் சமையல் பணியாளர்கள், சமையல் புகையினால் பாதிக்கப்படுவதைத் தடுக்க, சத்துணவு மையங்களின் அறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு, எரிவாயு அடுப்பு மற்றும் பிரஷர் குக்கர் வழங்குவதற்காக இதுவரை இல்லாத வகையில் இந்தத் திட்டத்திற்காக 820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிகளில் சத்துணவு உண்ணும் மாணவ மாணவிகளுக்கு வாரம் இரண்டு முட்டைகள் வழங்கப்படும் எனத் தேர்தல் அறிக்கையில் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். வரலாற்று சிறப்புமிக்க தலைவர்

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்போது வாரம் மூன்று முட்டைகள் வழங்கி சாதனை புரிந்து வருகின்றார்கள்.

முற்பகல் 11-10

முதியோர்கள், ஆதாரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத் தொகையை 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக கழக ஆட்சியில் உயர்த்தி வழங்கப்படுகிறது.

அ.தி.மு.க. உறுப்பினர் பேசும்போது முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 1999 ஆம் ஆண்டு மகளிர் ஆணையம் தொடங்கப்பட்டதாகக் கூறினார். 1999 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில்தான் அது கொண்டு வரப்பட்டது என்பதைப் பெருமையோடு குறிப்பிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையும் 400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்திருக்கின்றார் தலைவர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப ஆண்டுதோறும் வரியில்லாத பட்ஜெட்டை, அனைத்து தரப்பு மக்களாலும் பாராட்டப்படுகின்ற பட்ஜெட்டை, ஏன், இந்தியாவுக்கே வழிகாட்டுகின்ற இனிதான வரவு-செலவுத் திட்டத்தை தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையில் பெருமையோடு குறிப்பிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய உப்பிலியாபுரம் தொகுதி, மலைவாழ் மக்கள் தொகுதியாகும். மலைவாழ் மக்கள் இன்றளவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றார்கள். தமிழக மக்கள் கேட்டால் மட்டுமல்ல, கேட்காமலேயே பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் செய்கின்ற தலைவர் அவர்கள், நான் விடுக்கின்ற கனிவான கோரிக்கைகளையும் நிச்சயம் நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையோடு ஒருசில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகின்றேன்.



1996 ஆம் ஆண்டு தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் துறையூர் பகுதிக்குக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்பட்டது. துறையூர் பகுதியில் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்த்து வைத்த பெருமை தலைவர் அவர்களுக்கு உண்டு. இப்போது துறையூரில் போக்குவரத்து நெரிசல் காரணமாக, புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மறு மதிப்பீடு தொடர்பாக இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை விரைவாக முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் அரசின் சார்பில் எந்தக் கல்லூரியும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, ஏழையெளிய, நடுத்தர மக்கள் கல்லூரிக் கல்வியைப் படிக்க இயலாத நிலையில் உள்ளனர். அரசுக் கலைக் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும் ஏற்படுத்தித் தர வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

பச்சைமலையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமெனவும், போதிய ஆசிரியர்களை நியமனம் செய்யவும் வேண்டுகிறேன்.

1967 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு முதன்முறையாகப் பொறுப்பேற்றபோதுதான் பச்சைமலைக்கு மின்சார வசதியும், சாலை வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தும் இன்னும் 13 மலைக் கிராமங்களில் சாலை வசதி இல்லாமல் அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். உடல் நலக் குறைவு ஏற்படும்போது தூளி கட்டிக்கொண்டு ஐந்து, ஆறு கிலோ மீட்டர் சென்று பேருந்து பிடிக்க வேண்டிய நிலை இன்றளவும் நீடிக்கிறது. இவ்வாறு செல்லும்போது, உயிரிழப்பும் ஏற்படுகின்றது. எனவே, சாலை வசதி இல்லாத மலைவாழ் மக்கள் வசிக்கும் மலைக் கிராமங்களில், சோபனபுரம்-காஞ்சேரி மலைச் சாலை; செம்புளிச்சான்பட்டி-மருதை, எருமைப்பட்டி, ஏரிக்காடு வரை; இணத்தூர்-சிலையூர் வரை; குறிச்சி-தேன்பாடி, வாழையூர் வரை; டாப் செங்காட்டுப்பட்டி-சித்தூர், பெரும்பரப்பு வரை; டாப் செங்காட்டுப்பட்டி-நல்லமாத்தி சாலை; சேம்பூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து சேம்பூர் லட்சுமணாபுரம் வரை புதிய சாலை வசதி ஏற்படுத்திக் கொடுத்து, மலைவாழ் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிட வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொண்டு, இதேபோல எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் புதிய

பாலங்களையும் கட்டித் தர ஆவன செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்:

துறையூர்-கண்ணனூர் வடக்கு வெளிச் சாலையில் கலிங்கமுடையான்பட்டி குண்டாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்; துறையூர்-பெருமாள்பாளையம் சாலையில் சிறுநத்தம் அருகே காக்காவாரி ஓடையின் குறுக்கே பாலம்; துறையூர்-வேங்கடத்தானூர் சாலையில் கீரம்பூர் அருகே சூராமாரி ஓடையின் குறுக்கே பாலம்; பாலகிருஷ்ணம்பட்டி-பி.மேட்டூர் சாலையில் பாலகிருஷ்ணம்பட்டியில் பாலம்; கொப்பம்பட்டி-வைரிசெட்டிபாளையம் சாலையில் வைரிசெட்டிபாளையம் சந்தை அருகில் பாலம். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நமது கழக அரசு பொறுப்பேற்ற, முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே எடுத்துரைத்தேன். தற்போது இக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தர மாண்புமிகு முதல்வர் அவர்களை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, அனைவரின் வரவேற்பையும் பெற்று இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி, எனக்கு இந்த நல்லதொரு வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

***திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என் முதற்கண் வணக்கம். எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் தியாகச் செம்மல், அன்னை சோனியா காந்தி அவர்களையும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையும் என்னுடைய இருகரம் குவித்து வணங்குகின்றேன். அவர்தம் அமைச்சரவையில் இம்மாமன்றத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சர்கள் அனைவரையும் வணங்குகின்றேன். நான் இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு வழிகாட்டியான மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களையும் வணங்குகின்றேன். எங்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களையும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்கி, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.



நமது அரசியல் சாசனத்தின் தங்கத் தூண்கள் நீதி, விடுதலை, சுதந்திரம், சமத்துவம் கூட கீர்த்தியாகும் நிலையான இந்த நான்கு தூண்களை நலமாகப் பேணி வரும் மாநிலங்களில் தமிழகம் தனித் தன்மையுடன் உள்ளது. சமூக நீதி, சமத்துவம், சுதந்திரம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளின் வாயிலாக எழுவதே சமூக நலன் ஆகும். ஆக, சமூக நலன், அது பற்றிய துறை யாவும் எப்படியுள்ளன என்று நினைக்கின்றபோது, பிரபல பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இனிய கானம் என் மனதில் ஓடுகின்றது. "குறையொன்றுமில்லை, மலைமூர்த்தி கண்ணா" எனக் குறைவுகள் காண இயலாது, நிறைவுகள் நிரம்பி வழிகின்றன, இத்துறையின் செயலாற்றலில், அதன் வெற்றியில். நிதிநிலை அறிக்கை 2008-2009-ல் புதிய திட்டங்கள் தீட்டி, தந்திருப்பதின் எண்ணிக்கை 117 ஆகும். இதில் 86 திட்டங்கள், எனது கணிப்பில் சமூக நலன் காக்கும் சீரான திட்டங்களாகும். எனவே, இவ்வாண்டின் நிதிநிலை அறிக்கையை சமூக நலன் நிதிநிலை அறிக்கை என்றே அழைக்கலாம். ஏழை எளியோர், மகளிர், சிறுவர், சிறுமியர் மற்றும் ஊனமுற்றோர் யாவர்க்கும் முக்கியத்துவமாக அறிவிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும் அவர்கட்கு ஈடாக நிற்கும் அமைச்சர் பெருமக்கள் யாவரையும் பாராட்டி சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன், நன்றி நவில்கின்றேன்.

கண்ணியம், கூட பெண்ணியம் இரண்டையும் பேணும் பெருமையை தம் உரிமையாக, தம் தனிக் குணமாக அணிந்துள்ள நமது முதலமைச்சர் தம் செங்கோன்மையில் முதலில் பெண்ணியம்; அதன் மலர்ச்சி பற்றி பார்ப்போம். மீண்டும் புதிதாக 25,000 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒன்றரை இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு, ரூபாய் 150 கோடி revolving fund இவை இரண்டும் மகளிரின் கௌரவத்தை நிச்சயமாக உயர்த்தும். மேலும், இலவச எரிவாயு இணைப்பு 6-1/2 இலட்சம் ஏழை, நடுத்தர குடும்பங்களுக்குத் தரப்பட்டுள்ளது. இன்னமும் 8 இலட்சம் எரிவாயு இணைப்புத் தர ரூபாய் 160 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது அடுப்பங்கரையில் மகளிரின் துன்பம் குறைய வழி செய்யும் திட்டம். இதுவும் ஒரு தொடர்கதையே.

7 இலட்சம் மகளிர் இதுவரை குழந்தை பேறுகால உதவியினை பெற்றுள்ளார்கள். வருவாய்ச் சான்றிதழ் பெற்று, இவ்வுதவி பெறுதலில் சிரமம் கண்ட அரசு, Village Health Nurse பரிந்துரையில் உதவி செய்ய ஏற்பாடு செய்ததை மிகமிக முக்கிய முடிவு ஆகும்.

இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை முதலில் ரூ.10,000/-ஆக இருந்தது. பின்பு அது 2006-2007-ல் ரூ.15,000/- ஆக உயர்த்தப்பட்டது. மீண்டும் இப்போது ரூ.20,000/-ஆக உயர்கின்றது. திருமணச் செலவுகளை எதிர்கொள்ள, மீண்டும் மீண்டும் ஆராய்ந்து செயல்படுகின்றார்கள். 65,000 மகளிர் பயனுற ரூபாய் 130 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், தங்கத் தாலிக்கும், தங்கச் சிலுவைக்கும், கருகமணிக்கும் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விடுதலை அளிக்கப்பட்டிருக்கின்றது. திருமண உதவித் திட்டம் என்பது சில இடங்களில் திருமணம் முடிந்த பிறகுதான் கிடைக்கின்றது. அதனை மாற்றி விரைவாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். தமிழக அரசின் நலத் திட்ட உதவிகள் பெற ஆண்டு வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாய் என்பதை 24 ஆயிரம் ரூபாயாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், கணவனை இழந்தவர்கள் குடும்ப உதவி பெற ஆண்டு வருமான வரம்பு 7,500/- ரூபாய் என்று இருப்பதால் யாரும் அந்த உதவித் தொகையைப் பெற முடியவில்லை. அதற்கு அரசு ஆண்டு வருமான வரம்பை 24 ஆயிரம் ரூபாயாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மகளிர் நலன் பராமரிக்கும் State Commission for Women-க்கு சட்ட ரீதியாக அந்தஸ்து தர முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அய்யா, எம் நல் நிதியமைச்சரே, நீவிர் இவற்றை நிதி அறிக்கையில் சொன்னபோது, எங்கள் நெஞ்சமெல்லாம் பொங்கியதன்றோ, கலைஞர்தம் கண்களில் பூரிப்பு மின்னியதன்றோ, தொலைக்காட்சியில் இவை கண்ட பெண்குலம் மகிழ்ந்து சிரித்ததன்றோ,

முற்பகல் 11-20

'வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவிலொழிப்பாராம்'

எனும் மகாகவி பாரதியின் வரிகள் நனவாகிக்கொண்டிருக்கின்றன.

'பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா,
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா'

என பாரதியாரின் வழி கலைஞர் தம் மாபெரும் அரசு பறைசாற்றுகிறதன்றோ.

முதியோர், ஆதரவற்றோர் ஆகியோரின் நலனுக்காக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோருக்கும் மாத ஊதியம் ரூபாய் 400



தரப்படுகிறது. 2005-2006-ல் ரூபாய் 299 கோடியாக இருந்த இச்செலவினம், 2008-2009-ல் ரூபாய் 830 கோடியாக உயர்ந்துள்ளது. இது இவ்வாறு தொடர்ந்து, இச்சமூக நலன் திட்டத்தினை நலமே செய்வதற்குச் சான்றாகும்.

ஊனமுற்றோருக்கும், மிகவும் ஊனமுற்றோருக்கும், மாதாந்திர ஊதியம் இதுவரை 86,000 பேருக்கு தரப்பட்டுள்ளது. சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தில் ரூபாய் 10,000/- வீதம் ரூபாய் 34.63 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. கண்பார்வை பிரச்சினையுள்ளோருக்கான scholarship தொகை இரு மடங்காகியுள்ள போதிலும் இந்தக் குழந்தைகளின் படிப்புச் செலவிற்கு அது பற்றாக்குறையாக இருக்கிறது. அதை சிறிது அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்காக 200 புதிய ஆசிரியர் பதவிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கேட்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ளோருக்காக, மேலும் 21 மாவட்டங்களில் Early Intervention Centres அமைக்கப்படவுள்ளன. 30,000 மன வளர்ச்சி குன்றியோர் மாதம் ஊதியம் பெறுகின்றனர். என்.ஜீ.ஓ.-க்கள் மூலமாக இவர்களுக்கு Early Intervention Centres அமைக்கப்படவுள்ளன. கூடவே, இவர்களுக்காக தொழிற்பயிற்சியுடன் கூடிய 7 தங்கும் விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. எஸ். பழனிசாமி அவர்களால் தமிழகத்தில் ஊனமுற்றவர்களுக்கான பி.எட்., சிறப்புக் கல்விப் பட்டப் படிப்பு வரும் கல்வியாண்டில் கொண்டுவரப்படுகிறது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒரு திட்டம்.

3,53,488 வேலையற்ற இளைஞர்கள் மாத உதவி பெறுகிறார்கள். வரும் ஆண்டில் ரூபாய் 95 கோடி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோல, Palm Workers' Welfare, Welfare of Handicraft Workers, Welfare of Ex-Servicemen என நலன் தேவைப்படுவோர் ஒருவரையும், நமது அரசு விட்டுவிடவில்லை. சொல்லிய திட்டங்கள் யாவும் எஃகுச் சங்கிலியாக எழுச்சியாய் எம்பி நடைபோடுகின்றன. நல்லரசுக்கு நன்றி சொல்லவா அல்லது நல்லரசு அமைய காரணமான மக்களுக்கு நன்றி சொல்லவா? மக்களுக்கு நன்றி. ஏனெனில் அவர்கள் சரியானவர்களை ஆட்சியில் உட்கார வைத்தனர். செய்வதைச் சொல்வோம். சொன்னதையே செய்வோம் எனும் மாபெரும் சூளுரை ஏற்றுள்ள பாங்கான நம் அரசுக்கும் நன்றி, நன்றி.

சமூகப் பாதுகாப்பினை பேணிட, சிறுவர் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களில் சமையலறை நவீனமாக்கல், குழந்தை இல்லங்களை மேம்படுத்துதல், கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள், மகளிர் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றில் உணவுக்காக வழங்கப்படும் சமையல் பொருட்களுடன் கூடுதலாக வாரம் ஒரு முறை கறி மசாலா பொருள்கள் வழங்குதல் யாவும் புதிய திட்டங்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. யாவுமே, மிகவும் மகிழ்வு தரும் திட்டங்கள். மாண்புமிகு அமைச்சருக்கும், அவரை வழிநடத்தும் முதல்வருக்கும் மெத்தவும் நன்றி.

நன்றிகள் நான் குவிக்கும் நேரம்தனில் கோரிக்கைகள் சிலவும் கேட்டிடும் நேரம். ஒன்று முதல் இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இப்போது ஒரு முட்டை வழங்கப்படுகிறது. இந்தக் குழந்தைகள் வருங்கால வளமான இந்தியாவை உருவாக்க வேண்டியவர்கள். இவர்கள் நன்றாக வளர வாரம் இரண்டு தடவை பால் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவாளர்கள் பிரச்சினைகள் தற்சமயம் அமைப்பாளர்கள் நிலையில் பணிபுரிவோர் ரூபாய் 2,955 மாதம் ஊதியமாகவும், சமையலர்கள் நிலையில் பணிபுரிவோர் ரூபாய் 1,389/- மாத தொகுப்பூதியமாகவும், உதவியாளர்கள் நிலையில் பணிபுரிவோர் ரூபாய் 1,040/- மாத தொகுப்பூதியமாகவும் பெற்று பணிபுரிந்து வருகின்றனர். மேற்காணும் ஊதியத்தைப் பெற்று குடும்பத்தை நடத்துவது மிகுந்த சிரமமாக உள்ளது. இவர்களுக்கு சம்பளம் சிறிது அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தையல் இயந்திரம் கூடுதல் பயனாளிகளுக்கு வழங்க வேண்டும். மைய அரசின் மானியங்களை அதிக அளவில் பெற நடவடிக்கைக் குழு, ஊனமுற்றோருக்கு கூடுதல் தொழிற்பயிற்சி நிலையங்கள், அவர்களுக்கு ஒரு National Institute for the Multiple Handicapped அமைத்தல் போன்றவற்றையெல்லாம் 2006-ல் நான் கோரினேன். அரசின் முன்னோடி திட்டங்களால் சமூக நலன் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைத்தலையும் கோரினேன். கடந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் பறக்கும் படைகள் அமைக்கப் போவதாகச் சொன்னார்கள். மேற்சொன்ன பொருள்களில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என இம்மாமன்றத்தில் தகவல் தருமாறு மாண்புமிகு அமைச்சரை பணிவுடன் கோருகிறேன்.



முற்பகல் 11-25

இத்துறை மேலும் மேம்பாடு அடைய சில கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். மகளிர் பாதுகாப்புப் பற்றிய சட்டம் 2006-ல் இருந்து அமலில் இருந்தும், இதன் விவரங்கள் பொதுமக்கள் கவனத்திற்கு இதுவரை சரிவர சென்றடையவில்லை. விளம்பரமில்லாமல் பொருள்கள் விற்க முடியாது. அதுபோல, இச்சட்டம் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டால்தான், சட்டம் பயனுள்ளதாகச் செயல்படும். இல்லையேல், பல சட்டங்களில் ஒன்றாக, இதுவும் கிடப்பில் இருக்கும். காவல் துறையும், சமூக நலத் துறையும் இச்சட்ட விவரங்கள் பற்றி பட்டி தொட்டி எங்கும் தெரிந்திடுமாறு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வரும்முன் காக்கும் திட்ட மருத்துவ முகாம்கள் நடத்துகையில், அது நடக்கும் இடங்களிலும் ஊனமுற்றோர்களுக்கு, ஊனமுற்றோர்களுக்கான சான்றிதழ் அட்டையை வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

'Outlook' என்ற வாராந்திர பத்திரிகையில், "மகளிர் தம் சுய கௌரவம் உயர்ந்திட வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு விடுதலை இல்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிரின் சுய கௌரவத்தை உயர்த்திட உதவுகின்றன. வங்காள தேசத்தில் முகம்மது யுனெஸ் ஏற்படுத்திய கிராமின் வங்கிகள் மகளிர்களுக்குக் கடன் தந்து அவர்களை உயர்த்துதலில் சாதனை படைத்தது. இதுபோன்ற நிலை, இங்கு வர ஆவன செய்ய வேண்டும்.

சிகாகோ நகரில் உள்ள South Shore Development Bank கிராமின் வங்கியின் கொள்கையை ஏற்று, அங்குள்ள வேலையற்ற, தச்சு வேலை செய்பவர்களுக்கும், Electrician-களுக்கும் உதவி செய்ய, கைவிடப்பட்ட கட்டடங்களை, அவர்கள்மூலம் பழுதுபார்த்து சரித்திரம் படைத்தது. நமது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இதுபோல செயல்பட, மாண்புமிகு முதல்வர் ஏற்பாடு செய்திட வேண்டும் என பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அருகிலுள்ள ஆந்திராவில் Deccan Development Society எனும் நிறுவனம் மெடக் மாவட்டத்தில் 75 கிராமங்களிலுள்ள 5,000 மகளிரைக் கூட்டி, அவர்கள் உழைப்பில் 5,000 ஏக்கர் தரிசு நிலத்தைப் பயிர் செய்துள்ளது.

சஹீராபாத் எனும் இடத்தே சராசரி வேலைவாய்ப்பு 200 நாட்களுக்கும்கீழ் இருந்ததில் மேலும் 100 வேலைவாய்ப்பு நாட்களைக் கூட்டியுள்ளது. மகளிர் சங்கங்கள் 1,000 ஏக்கர் நிலத்தில் காடுகள் ஏற்படுத்தியுள்ளனர். கிராம அளவில் விதை வங்கிகள் நடத்தி, அதன் வருவாயில் பாதி, மகளிர் பெறுகின்றனர். இது போன்ற சீரிய முயற்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என பணிவுடன் கோருகிறேன்.

பீகார் மாகாணத்தில் இரண்டே ஆண்டுகளில் 2 இலட்சம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுள் 50 சதவிகிதம் மகளிர் ஆவார்கள். 65,000 புது வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இம்முயற்சி 2 வருடங்கள் நடந்துள்ளது.

தொழிற் பயிற்சி தர 35 மாடல் பள்ளிகள், மேற்கு சம்பரான் மாவட்டத்தில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு, தையல், கணிப்பொறி உதவியுடன் படித்தல் போன்றவை பள்ளிக் கல்வியுடன் அளிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 33 சதவிகித நேரம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மா, ஒரே ஒரு ஆண் உறுப்பினர் டாக்டர் இராமன்தான் பேசுகிறார். அவர் பேசும்போதுதான் அவரை ஏன் இவ்வளவு நேரம் பேசுகிறீர்கள் என்று கேட்க முடியும்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மதுரையில் Auro Lab எனும் Aravind Eye Care நிறுவனத்தைச் சார்ந்த நிறுவனம், கண்ணில் வைக்கப்படும் Intra-occular Lens தயாரிக்கின்றது. பன்னாட்டு நிறுவனம் 5,000 ரூபாய்க்கு விற்கும் லென்ஸ் இங்கு ரூ.1,800-க்கு செய்யப்படுகிறது. சாதாரண லென்ஸ் ரூ.90/- முதல் ரூ.100/- மட்டுமே. Aravind Eye Care நிறுவனத்தினர் மக்கள் சேவைக்காக இதனை ஆரம்பித்தார்கள். இவர்கள் போல், தமிழக முன்னணி வியாபார நிறுவனங்களை மக்கள் சேவைக்கு அழைத்திட வேண்டும் என மாண்புமிகு முதல்வரைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். 2007-2008-ல் எனது தொகுதிக்கு தரப்பட்ட நிறைவுகள் பற்றி இம்மாமன்றத்தில் விளக்குதல் என் கடமை. கென்னடியன் கால்வாய்த் திட்டம் போன நிதியாண்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்காக நன்றி கூறியுள்ளேன். அந்த வேலையை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சடையனேரிக் கால்வாயில் மீண்டும் மீண்டும் நீர் தந்து மாண்புமிகு முதல்வரும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் எங்கள் தொகுதியின் நீர் தாகத்தை நிறைவாகத் தணித்துக் கொண்டிருக்கிறார்கள். மெஞ்ஞானபுரம் தருவை, வைரவன் தருவை, புத்தன் தருவை யாவும் இன்று நிறைந்த நிலையே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** அவை தொடர்ந்து கிடைக்க உரிய அரசு ஆணைகளைப் பிறப்பிக்குமாறு பணிவோடு கோருகிறேன். இப்போதுள்ள அரசாங்க உத்தரவு 1985 ஆம் ஆண்டில் போடப்பட்டது. எனவே, கடந்த 2 ஆண்டுகளில் கிடைத்த அனுபவத்தை வைத்து சடையனேரிக் கால்வாயை வருடா வருடம் குறிப்பிட்ட நேரத்தில் திறக்க புது உத்தரவு தேவை.

வைரவன் தருவை, புத்தன் தருவை ஆகியவற்றைத் தூர் வாரி நல்ல கரைகள் அமைக்கப்பட வேண்டும். இது மிக முக்கியமான பணியாகும். கூடவே வைரவன் தருவையையும், புத்தன் தருவையையும் சரிவரக் கால்வாய்மூலம் இணைக்கப்பட வேண்டும். சடையனேரிக் கால்வாய் விரிவாக்கப் பணிகள் சீக்கிரமாகச் சரிசெய்து முடிக்கப்பட வேண்டும்.

மேலக் கால்வாய் விரிவாக்க மதிப்பீட்டிலிருந்து தலை மதகு விரிவாக்கப் பணிகள் செய்யப்பட வேண்டும். நேரடிப் பாசன மடைகள் அனைத்தும் பழுதுநீக்கம் செய்யப்பட வேண்டும். கால்வாய் மற்றும் வெள்ளியூர் தலை மதகுகள் புதிதாகப் பொருத்தப்பட வேண்டும். கால்வாய் குளத்திலிருந்துதான் சடையனேரிக் கால்வாய்க்குத் தண்ணீர் எடுக்க வேண்டும். எனவே, மதிப்பீட்டில் உள்ளபடி கால்வாய்க் குளம் சீரமைக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 11-30)

முக்கியமாக தூதுகுழியில் உள்ள வெள்ளநீர் வழிந்தோடி outlet முழுமையாக உயர்த்தப்பட்டுவிட்டது. எனவே, வெள்ள நீர் முழுவதும்

அவசர காலங்களில் வெளியேற முடியவில்லை. இதனால் இதற்குக்கீழ் உள்ள குளங்களும், கால்வாயின் கரைகளும் உடைப்பெடுக்கும் சூழ்நிலையில் உள்ளது. உடனடியாக outlet-ன் உயரத்தைக் குறைத்து shutter-கள் பொருத்தப்பட வேண்டும்.

இதில் உள்ள மொத்த குளங்கள் 15 ஆகும். இவை அனைத்தும் தூர் வாரப்பட்டு மடைகள் அனைத்தும் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டும். சடையனேரிக் கால்வாயைப் பொறுத்தவரையில் வருடாந்திர பராமரிப்புச் செலவுத் தொகை, தனியாக ஒதுக்கப்பட வேண்டும். இதில் உள்ள மடைகள், ஷட்டர்கள் மற்றும் கரைகள் செப்பனிடப்பட வேண்டும்.

எங்கள் தொகுதி, மணிமுத்தாறு கால்வாயின் 3-வது மற்றும் 4-வது reach கால்வாய்கள்மூலம் பயன்பெற்று வருகிறது. பிரதானமாக இந்தப் பகுதி 3-வது reach கால்வாய்மூலம் பயன்பெற்று வருகிறது. இதில் இருந்து 44 குளங்கள் பாசனப் பயன் பெறுகின்றன. 3-வது reach வாய்க்காலில் lining பணிகள் செய்யப்பட வேண்டும். அனைத்து மடைகளிலும் பழுதுநீக்கம் செய்யப்பட வேண்டும். இதில் இருந்து செல்லும் கிளை வாய்க்கால்கள் அனைத்தும் தூர் வாரித் தரப்பட வேண்டும். பாசனக் குளங்களில் உள்ள மடைகள் செப்பனிட்டுத் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளம் தொகுதியில் உள்ள உடன்குடி சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1998-ல் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் 308 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்போது அந்தத் தண்ணீர் போதுமானதாக இல்லை. அதனால் பெரியதாழை, படுக்கபட்டு, தட்டார்மடம், அரசூர், பூச்சிக்காடு போன்ற இடங்களில் bore-well அமைத்தும், லாரிகளில் வரும் தண்ணீரை மக்கள் பயன்படுத்துவதால், kidney பாதிப்பு அடைந்து இருக்கிறார்கள். சிலர் இறந்தும் போய் இருக்கிறார்கள். சிலர் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்தத் தண்ணீரில் உப்புச் சத்து அதிகமாகவும், ஒருவித நச்சுத் தன்மையும் கலந்திருப்பதாகவும் மக்கள் பீதி அடைகிறார்கள். இந்தத் தண்ணீர் பிரச்சினையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தீர்த்து வைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் 55 படுக்கைகள் உள்ளன. ஆனால், மருத்துவர் ஒருவர் மட்டுமே உள்ளார். கூடுதலாக 4 மருத்துவர்களை நியமிக்க வேண்டும். X-ray, Scan எதுவும் இயங்கவில்லை. இந்த மருத்துவமனையை நம்பி நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மா, இப்போது பேசுவதைப் பார்த்தால், தொகுதி ரொம்ப பெரிய தொகுதியாக இருக்கும் போலிருக்கிறதே! நிறைய பட்டியல், பட்டியலாகப் படிக்கிறீர்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** சாத்தான்குளம் தொகுதியில் உள்ள எமது மகளிர் கல்லூரி 2003 ஆம் ஆண்டில் இருந்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரியில் 500-க்கு மேற்பட்ட மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். இம்மாணவிகள் பெரும்பாலானவர்கள் ஏழ்மைக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக உள்ளார்கள். ஆகவே, மாணவிகள் கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றினால் சாத்தான்குளம் பகுதியில் உள்ள ஏழை மாணவிகள் பயனடைவார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்தக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் விரிவுரையாளர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள். அம்மா கமலாம்பாள், நீங்கள் நேராக தொகுதிக்கு போய்விட்டு பிறகு subject-க்கு வந்துவிடுங்கள். தொகுதியினுடைய தேவைகளை முதலில் சொல்லுங்கள்.

***திருமதி பெ. கமலாம்பாள்:** காஞ்சிபுரம் என்றாலே எல்லாவற்றிற்கும் பெருமை. அதைப்போல எனக்கும் பெருமையாக இருக்கிறது.

சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மதுவைக் குடித்து மண்ணில் மாண்டு போகாதே, புகையைப் பிடித்து புதைக் குழியுள் புதைந்து போகாதே என்று மக்களை நீண்ட நாள் நலமோடு வாழ வைக்க நினைக்கும் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தியாகச் செம்மல் கோ.க. மணி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா நேரத்திலே அவர் பிறந்த காஞ்சி மண்ணிலே இருந்து வந்து பேசுவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

இந்த அரசு, ஏழைப் பெண்களின் திருமண உதவித் தொகையை ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தியுள்ளது. பெண்கள் அணியும் தாலிக்கு வரி நீக்கம், விதவைப் பெண்களுக்கு மறுமணத் திட்ட உதவி, கலப்புத் திருமண உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி, முதியோர் நிதி உதவி, ஏழைப் பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் உதவி, குடும்ப வன்முறையில் இருந்து பாதுகாப்புச் சட்டம், ஆதரவற்றோர்களுக்கு உதவி, குழந்தைகள் நல உதவி, இதுபோன்ற எண்ணற்ற பெண்களுக்கு நல்ல காரியங்களைச் செய்தாலும், அதைப்போல பெண்களுக்கென்று தனி நல வாரியமும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தனியாக வங்கியும், ஏற்படுத்த இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அடுத்து நரிக்குறவர்கள், அரவாணிகள் ஆகியோருக்கு நல வாரியம் அமைத்ததை வரவேற்கிறேன். அதைப்போல இலட்சக்கணக்கான தானியங்கி இயந்திரப் பணியாளர்களுக்குத் தனியாக நல வாரியம் அமைக்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் நாட்டின் கண்கள். பெண்கள் அனைவரும் உயர் கல்வி பெற்று எல்லா நிலைகளிலும் உயர்ந்தால்தான் நாடு வளரும். எனவே, மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு நிறைவேற மாநில அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைத்திற்கும் தொழில் துவங்க சுழல் நிதி வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சத்துணவு அமைப்பாளர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் 25 ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம். எனவே, அனைவரையும் நிரந்தரப்படுத்தி கூடுதலாக காலமுறை ஊதியம் வழங்க வேண்டுகிறேன். பெரும்பாலோர் பணி ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர். எனவே, சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்றும், காய்கறி செலவினங்களை உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். முதியோர் பற்றிச் சொல்லியிருக்கிறேன். முதியோர் பிரச்சினைகளுக்கு, இன்னும் வழியே பிறக்கவில்லை. முதியோர் உதவித்தொகை கோரி விண்ணப்பித்து கிடைக்காமல், வயது முதிர்ச்சியால் அல்லல்படுவோர் ஏராளமாக உள்ளனர். எனவே, வரன்முறைகளைத் தளர்த்தி விண்ணப்பித்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகையை உடனடியாக அரசு கொடுக்க வேண்டும்.



மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் சிறப்பு ஆசிரியர்கள் குறைந்த சம்பளத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு அரசுத் துறை சம்பளங்கள் கிடைக்கவும், நிரந்தரப்படுத்தவும், கூடுதல் சம்பளம் கிடைக்கவும் வழிவகை செய்ய வேண்டும். மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் செலவிற்குக் கூடுதல் தொகை வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகராட்சிக் கட்டடம் 150 ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்தக் கட்டடம். ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. எனவே, புதிய கட்டடம் கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட சமூக நல அலுவலகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம், மாவட்ட பதிவுத் துறை அலுவலகம் ஆகியவை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

சத்துணவு அளிக்கப்படும் குழந்தைகளுக்குக் கூடுதலாக மாம்பழத்தோடு, வாழைப்பழமும் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் சுய உதவிக் குழுக்களுக்குத் தொழில் பயிற்சிகள் அளித்து, தொழிற்கூடங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலை செய்யும் பெண்களுக்கு என்று புதிய தங்கும் விடுதிகளை நவீன வசதிகளுடன் கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையின் வட்டாட்சியர்களுக்கு அலுவலகப் பணிக்காக கணினி மற்றும் ஈப்புகள் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் தொகுதியில் ஒரு தொழிற்சாலைகூட இல்லை. இங்குள்ள ஏழையெளிய மக்கள் மற்றும் நெசவாளர்கள், பெண்கள் வேலைவாய்ப்பின்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இவர்களுக்கு அரசு மற்றும் தரிசு நிலங்களில் தொழிற்சாலைகளை அமைக்கவும், நெசவுப் பூங்கா அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் உலக அளவில் முன்னேறி உள்ள மாவட்டம். அது எல்லாவற்றிலும் வளர்ந்து உள்ளது. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டத் தலைநகராமான காஞ்சிபுரம் மட்டும் வளர்ச்சி பெறவில்லை. கடந்த

2 ஆண்டுகளாக அண்ணா பிறந்த ஊரில் அரசுத் துறையின் எந்தச் செயல் திட்டமும் செயல்படவில்லை. தற்போது அமைச்சர்கள் செயல்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அண்ணா நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த ஆண்டில் காஞ்சிபுரம் தொகுதிக்கு மாண்புமிகு அமைச்சர்கள் அவரவர் துறையின் சார்பாக புதிய திட்டங்களை அறிவித்து அண்ணா பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்து, இப்போதே நீங்கள் புகழ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மருத்துவமனையைப் பற்றிச் சொன்னால் வெட்கக்கேடாக இருக்கும். அரசு தலைமை மருத்துவமனைக்கு 5000 நோயாளிகளுக்கு மேல் வருகிறார்கள். ஆனால் அங்கு சிறப்பு மருத்துவர்கள் 4 பேர்கள்தான் இருக்கிறார்கள். 4 பேர்களில் 3 பேர்கள் விடுமுறையில் போய் விடுகிறார்கள். ஒரே ஒருவர்தான் இருக்கிறார். எனக்குகூட மார்பு வலி இருக்கிறது. எனக்கு 70 வயதாகப் போகிறது. சிகிச்சை பெறலாம் என்றால் அங்கே டாக்டரே இல்லை. அதனால், நோயாளிகளை சென்னைக்கு அனுப்பி வைக்கிறார்கள். செங்கற்பட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இந்தத் தலைமை மருத்துவமனையில் அது பற்றிக் கேட்பதற்கே ஆட்கள் யாரும் இல்லை. மந்திரிகளும் இது பற்றிக் கவனம் செலுத்தவில்லை. இந்த அவல நிலையைப் போக்க அரசு தலைமை மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவாளர்கள் மற்றும் நோயாளிகளுக்குத் தேவையான படுக்கை வசதி, கட்டட வசதி போன்றவற்றைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம், பொன்னேரி கரையில் அரசு போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகம் கட்டவும், புறநகர் பேருந்து நிலையம் அமைக்கவும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டு, அது அதே நிலையில் உள்ளது. காஞ்சிபுரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், விபத்துகளைத் தடுக்கவும், புறநகர் பேருந்து நிலையம் அமைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் நகரின் மையப் பகுதியான காமராஜர் வீதியில் பஸ் நிலையம், தனியார் அலுவலகங்கள், அரசு மேல்நிலைப் பள்ளி, வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றங்கள் ஆகியவை உள்ளதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. இதனால் அடிக்கடி மாணவர்கள், பெரியவர்கள் விபத்துக்குள்ளாகி உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்தப்



பகுதியில் ஒரு சுரங்கப்பாதை அமைத்து, உயிர்ச்சேதத்தைத் தடுக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சுரங்கப்பாதை அமைத்துக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இத்திட்டத்திற்கான ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. எனவே, இதற்கு நிதியொதுக்கீடு செய்து பணியை முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் பகுதியில் 5,000-க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் செல்வதால், எப்போதும் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, இந்நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நகரைச் சுற்றி புறவழிச் சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் தொகுதி, வதியூர் பகுதியில் பம்பைக் கால்வாய் உள்ளது. அந்தக் கால்வாய்மீது பாலம் கட்டி, போக்குவரத்து தடையின்றி செல்ல ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

வாலாஜாப்பேட்டையிலுள்ள திருப்பாற்கடல் கிராமத்திலிருந்து காஞ்சிபுரம் நகருக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்தக் குடிநீர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மா, இந்தப் புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டாலே போதும். அதை அப்படி ரோடு போட்டு, கையாலேயே காட்டுகிறீர்கள் பாருங்கள், அதுவே ஒரு தனிச் சிறப்பாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு) அதாவது கோடு போட்டு, ரோடு போடச் சொல்கிறீர்கள். (சிரிப்பு)

**திருமதி பெ. கமலாம்பாள்:** நன்றி, நன்றி. வாலாஜாபேட்டை திருப்பாற்கடல் இராமத்திருந்து காஞ்சிபுரம் நகரத்திற்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. அந்தக் குடிநீர் தோல் கழிவு நீரால் மாசுபட்டுள்ளது. அதாவது இராணிப்பேட்டை, வேலூர் போன்ற இடங்களிலுள்ள எல்லாக் கழிவுகளும் கலந்து வருவதோடு அங்கே ஒரு நீரூற்று வந்து சுகாதாரக் கேட்டை விளைவிக்கிறது. இந்த நீரை ஆய்வு செய்து, சுத்திகரிப்பு செய்து நல்ல குடிநீரை விநியோகம் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பாலாற்று நீரை யார், யாரோ குடிக்கின்றார்கள். ஆனால், நாங்கள் குடிக்க முடியவில்லை. மேலும், பாலாற்றின் குறுக்கே காலூர் ஊராட்சியில் ஒரு தடுப்பணை கட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அதன்மூலம் காஞ்சிவாழ் மக்களுக்குப் பாலாற்று நீரைக் குடிக்கக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சரிகை ஆலை காஞ்சிபுரத்தில் உள்ளது. அதில் தொழிலாளர்கள் அனைவரும் மிகக் குறைந்த ஊதியத்தில் பணி செய்கிறார்கள். இவர்களுக்கு விலைவாசிக்கேற்றபடி 2001-ல் ஊதிய ஒப்பந்தம் போடப்பட்டது. அதை அமல்படுத்த வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். தூய சரிகையை தமிழகத்தில் இரண்டாவது விற்பனை செய்வதற்கு 4 சதவீத விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதனால் வியாபாரிகள் மற்றும் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, சரிகைமீது விதிக்கப்படும் 4 சதவீத விற்பனை வரியை இரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரில் செயல்படும் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒருசிலவற்றைத் தவிர மற்றவை நட்டத்தில் இயங்கி வருகின்றன. எனவே, கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுள்ள காசுக் கடன் நிலுவைத் தொகைகளைத் தள்ளுபடி செய்து, புதிய காசுக் கடன்களை வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள், கைவினைஞர்கள், சிறு வியாபாரிகள் ஆகியோர் கடந்த 6 ஆண்டுகளாகத் தொழில் நசிந்துபோனதால் வறுமையில் வாடுகிறார்கள். எனவே, அவர்களுடைய வீட்டு அடமானக் கடன்களை இரத்து செய்து, அவர்களுடைய சொத்துகளை ஏலம் விடுவதைத் தவிர்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஏரிகள் நிறைந்த மாவட்டம். காஞ்சிபுரம் தொகுதியிலுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, வரத்துக் கால்வாய்களைத் தூர் வாரி, மதகுகளைச் சீர் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா பிறந்த காஞ்சியில் ஒரு கலைக் கல்லூரிகூட இல்லை. ஒரேயொரு அரசுக் கலைக் கல்லூரிகூட இல்லை. மேல்நிலைப் பள்ளி ஒன்றுகூட இல்லை. ஆண்கள் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதால் அரசு பொறியியல் கல்லூரியும், அரசு கலைக் கல்லூரியும், மேல்நிலைப் பள்ளியும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் நகர நுழைவுப் பகுதியில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா காணும் இந்த ஆண்டில் அண்ணா நூற்றாண்டு விழா நுழைவு வாயில் அண்ணா பெயரில் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரம் வளர்ந்துவிட்ட சூழ்நிலையில் அந்த நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.



காஞ்சிபுரம் மாவட்டமாக இருந்தாலும் மாவட்டத் தலைமை நீதிமன்றம் செங்கற்பட்டிலே இருக்கிறது. பரவாயில்லை, இனிமேலாவது மாவட்டத்தின் தலைநகரமாக காஞ்சிபுரம் இருப்பதால் காஞ்சிபுரத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தொழிலாளர் தீர்ப்பாயம், நுகர்வோர் நீதிமன்றம் ஆகியவை ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

மின் வாரியத்தில் பணியாளர்களுக்கு பென்ஷன் கிடையாது. எனவே, கோட்ட அளவில் பணிமூப்பு வரிசையில் சிரமம் இருந்தது. 1992-க்குப் பின் பென்ஷன் திட்டம் அறிவித்த பின்னரும் எழுத்துத் துறைப் பணியாளர்களைப்போல மாநிலம் தழுவிய பணிமூப்பு வரிசைப் பட்டியல் அமைப்பதால், வாரியத்தில் 20 கோடி ரூபாய் செலவு மீதம் ஆவதால் அதற்கு உடன் ஆவன செய்திட வேண்டுகிறேன். கணினிப் பயிற்சி முறையாகத் தராமல், கொத்தடிமைகளைப் போல நிர்வாகத்தினர் நடத்துவதால், பொதுமக்கள், கணக்கீட்டாளர்கள் மத்தியில் பகை வந்துள்ளது. கொத்தடிமை முறையை நீக்கி, தகுந்த பயிற்சி தந்து பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டுகிறேன்.

அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களை தொழிலாளர் நலத் துறையோடு சேர்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மதுவை ஒழிப்போம், மக்களைக் காப்போம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படிச் சொல்லிவிட்டு தண்ணீர் குடிக்கிறீர்களே, இதுதான் Top. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி பெ. கமலாம்பாள்:** மதுவை ஒழிப்போம், மக்களைக் காப்போம், மங்கையரின் மாங்கல்யத்தையும் காப்போம் என்று பெண்ணுரிமைக் காவலர், மது ஒழிப்புப் போராளி, மது ஒழிப்பையே கொள்கையாக வைத்து மாநாடுகள், போராட்டம், ஆர்ப்பாட்டம், பரப்புரை செய்து, மதுவைக் குடிக்கக் கூடாது என்று தமிழகம் எங்கும் பரப்புரை செய்து மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதாவது ஏழை எளிய, நடுத்தர மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் இவர்களெல்லாம் குடித்துக் குடித்து

சீரழிகிறார்கள். சிறுவர் முதல் முதியோர் வரை அதிகம் குடிக்கின்றனர். எனவே, டாஸ்மாக் கடைகளின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்து, விற்பனை நேரத்தையும் குறைத்து (மணியடிக்கப்பெற்றது) ஏழைகளின் நலன் காக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். குடி குடியைக் கெடுக்கும், குடி நாட்டைக் கெடுக்கும், குடி உயிரைக் குடிக்கும் என்று பாட்டிலிலே எழுதி வைத்து குடி, குடி என்று சொல்கிறார்கள். அதனாலே நாம்தான் குடிக்கக்கூடாது என்று நாங்கள் எல்லாம் பரப்புரை செய்கிறோம். வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி நாள் முழுவதும் உழைத்துப் பெற்ற சம்பளத்தில் ஒரு பாட்டில் மது குடித்துவிட்டு வீட்டில்போய் சண்டை போடுகிறார்கள். இதைத்தான் விற்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். குருடி பால் கறந்தாலும் கூரையை பிய்த்து தின்கின்ற மாடு வீட்டுக்கு ஆகாது. அதைப்போல கோடி கோடியாக பணம் வந்தாலும், அந்த மதுவால் வரக்கூடிய வருமானம் நாட்டுக்கு ஆகாது, நாட்டு மக்களுக்கு ஆகாது. அதனால் இதைக் குறைக்க வேண்டும். அதற்குப் பிறகு, குடித்தால் என்னென்ன தீமை... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம். இந்தக் குடிக்காக கையெடுத்து இந்தச் சபையையே நான் வணங்குகிறேன். படிப்படியாக கலைஞர் அவர்கள் மதுவை ஒழிக்க வேண்டும். இப்போது அவர் ஒழிக்கவில்லை என்றால், எப்போதுதான் அது ஒழியப் போகிறது? குடியை ஒழித்தால்தான் இந்த நாட்டு மக்கள் நன்றாக இருக்க முடியும். எல்லோரும் நன்றாக இருக்க முடியும்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் உணர்வை நாங்கள் மதிக்கிறோம். உரையை முடித்து விடுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** சமூக நலன் என்றால் அது பெண்களுக்கு மட்டும்தானா! அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று சொல்லிச் சொல்லி படித்துவிட்டோம். திரும்பவும் சமூக நலன் என்றால் எல்லாக் கட்சிகளிலும், பெண்கள்தான் பேச வேண்டுமா? (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்) ஆண்கள் யாரும் பேசக் கூடாதா? ஆண்களில் ஒருவர் பேசலாம் அல்லவா? நாங்கள்தான் பேச வேண்டுமா?. பெண்கள் நலன், பெண்கள் நலன் என்று



நீங்களும் பேசுங்கள். நீங்கள் பேசினால்தான் நன்றாக இருக்கும். நாங்கள் நன்றாக இருப்போம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு நீங்கள் குடிப்பதைப் பற்றி ரொம்பப் பேசிவிட்டீர்கள். (சிரிப்பு)

**திருமதி பெ. கமலாம்பாள்:** அதனால் சமூக நலத் துறை என்றால் பெண்கள்தான் பேச வேண்டும் என்றிருப்பதை எல்லாக் கட்சித் தலைவர்களும் மாற்றியமைக்க வேண்டும். அடுத்தமுறை... (மணியடிக்கப்பெற்றது) எல்லா நிலைகளிலும் நாங்களும் சமமாகத்தான் இருக்கிறோம். அதனால் எங்களுக்கும் சமமாக எல்லாத் துறை மானியக் கோரிக்கைகளிலும் பேச வாய்ப்புக் கொடுங்கள். சமூக நலத் துறை என்றால், இனிமேல் தயவுசெய்து பெண்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்காதீர்கள். எங்கள் தலைவர்களை மட்டும் கேட்கவில்லை, எல்லாத் தலைவர்களையும் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி ஜி. லதா அவர்கள். (குறுக்கீடு) அம்மா, அடுத்து பேசவுள்ளவர் பெண். இன்னொரு பெண்ணுக்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இன்னொரு பெண்ணின் வாய்ப்பைக் கெடுக்காதீர்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி பெ. கமலாம்பாள்:** குடிப்பதினால் என்ன ஏற்படும் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம். அதாவது ஒரு அறையில் ஒரு அழகான பெண், ஒரு மது பாட்டில், ஒரு குழந்தையை வைத்துவிட்டு, அங்கு ஒரு இளைஞனை அனுப்பி, நீ மது அருந்த வேண்டும் அல்லது பெண்ணைக் கற்பழிக்க வேண்டும் அல்லது குழந்தையைக் கொலை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். மூன்று தீமைகளில் ஏதாவது ஒன்றைச் செய்யச் சொல்கிறார்கள். இங்கிருந்து போகிறான். அந்தப் பெண்ணைப் பார்க்கிறான். அந்தப் பெண் அழகாக இருக்கிறாள். அவளைக் கற்பழித்து... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி, ஜி. லதா அவர்கள். (குறுக்கீடு)

**திருமதி பெ. கமலாம்பாள்:** அந்த இளைஞன் முதலில் மதுவைக் குடிக்கிறான். மதுவைக் குடித்தப் பிறகு என்ன நடக்கிறதென்றால்... (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) கதையைக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மைக்கை திருமதி லதாவிற்குக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உணர்வுகள் எல்லாம்

புரிகிறது. அந்த அம்மா குடிக்க வேண்டாம் என்று சொன்னதால், அந்த அம்மாவிற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்கள். உங்கள் உணர்வுகள் எல்லாம் புரிகிறது. அடுத்தது, திருமதி ஜி. லதா அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குடி குடியைக் கெடுக்கும் அதனால் குடிப்பழக்கத்தைக் குறைக்க இந்த அரசு படிப்படியாக மதுக்கடைகளைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறார். அதை ஆதரிக்கின்ற வகையில்தான் இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்புகிறார்களே தவிர, குடியை ஆதரித்து அவர்கள் குரல் எழுப்பவில்லை. தங்களுடைய பதிவு தவறாகச் சட்டப் பேரவையில் பதிவாகிவிடக் கூடாது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி ஜி. லதா அவர்கள், உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது 7 நிமிடங்கள். சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சமூக நலத் துறையில் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கும், தமிழ்நாட்டில் மகளிர் நல ஆணையத்தை அறிவித்து அதற்குச் சட்ட அந்தஸ்தை வழங்கிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் வணக்கத்துடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், தமிழகத்தில் எண்ணற்ற தொழில் வளர்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் சரிபாதி பெண்கள் I.T. துறையிலும், அதற்கு நேர்மாறாக கல் உடைக்கும் தொழிலிலிருந்து அனைத்து முறைசாரா தொழில்களிலும் சரிபாதி பெண்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றப் பெண்களுக்குச் சமூகப் பாதுகாப்பு என்பது இல்லாமல் உள்ளது. அந்தச் சமூகப் பாதுகாப்பை மகளிர் ஆணையம் சட்ட அந்தஸ்தின் வழியாக வரையறை செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். மகளிர் ஆணையத்திற்குச் சட்ட அந்தஸ்து வழங்குகின்ற இந்தக் காலகட்டத்தில் தேசிய மகளிர் ஆணையத்தில் குறிப்பிட்டிருக்கின்ற சட்டத்தினையும், கேரள மகளிர் ஆணையத்தில் குறிப்பிட்டிருக்கின்ற சட்டத்தினையும் இணைக்க வேண்டும். பொதுவாக, தமிழகத்தில் பெண்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிற எண்ணற்ற மாதர் அமைப்புகள்



இருக்கின்றன. போலிச் சாமியார்கள் எதிர்ப்பு இயக்கம், பெண் சிசுக் கொலை, வரதட்சணை, போன்ற பல விஷயங்களுக்காக தமிழகத்தில் 25 ஆண்டு காலமாக 10 இலட்சம் உறுப்பினர்களைத் தாங்கிய அனைத்திந்திய ஜனநாயக மாதர் அமைப்புகளைப் போன்ற பல அமைப்புகளிடம் அவர்களின் கருத்துகளைக் கேட்டு, அதற்குப் பிறகு சட்ட வரைவு என்பதனைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

மகளிர் ஆணையத்தில் இதுவரையில் 10 பெண்கள் உள்ளடங்கியிருக்கிறார்கள். கூடுதல் பணியிடங்களை, ஒதுக்க வேண்டும். இந்த மகளிர் ஆணையத்தில் பெண்ணின உணர்வுகொண்ட, பெண்ணினத்தோடு இணைந்திருக்கின்ற பொறுப்பாளர்களுக்கு, பொறுப்புகளைக் கொடுக்க வேண்டும். அந்தப் பெண்ணினவாதிகள், களத்தில் பணியாற்றி, பல போராட்டங்களை நடத்தியவர்களை உள்ளுக்குக் கொண்டு வந்தால், பெண்களின் பிரச்சினைகளுக்கு நேரடித் தீர்வாக இருக்கும் என்பதனை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். இந்த மகளிர் ஆணையத்தில் ஆதி திராவிடப் பெண்கள், சிறுபான்மையினப் பெண்கள் உள்பட அனைவருக்கும் பிரதிநிதித்துவம் தரும்பொழுதுதான் இந்தச் சமுதாயத்தில் நேரடிப் பாதிப்புக்குட்பட்ட பெண்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதனை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், பெண்கள் ஆணையம், அரசியல் தலையீடு இல்லாத ஆணையமாக, பெண்கள் சுயமாக இயங்குகின்ற ஆணையமாகச் செயல்பட சட்ட அந்தஸ்துகளைத் தர வேண்டும். சட்ட அந்தஸ்து தரும்போது, போராடுகின்ற மகளிர் அமைப்புகளின் கருத்துகளைக் கேட்டு, அதற்கு வடிவம் தர வேண்டும் என்ற என் கருத்தைப் பதிய வைக்கின்றேன்.

விதவைகளுக்குப் பென்சன் என்பது கொடுக்கப்படுகிறது. கொள்கை விளக்கக் குறிப்பு, 148 ஆம் பக்கத்தில் அனைத்து விதவைப் பெண்களுக்கும் பென்சன் அளிப்பதாக அரசால் கூறப்படுகிறது. ஆனால், சென்ற நிதி ஆண்டில்கூட கலைஞர் அவர்களின் வாய்மொழி உத்தரவாகக் கூறப்பட்டிருக்கின்றது. நடைமுறையில் ஆண் வாரிசு இருப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆண் வாரிசு இருந்தாலும் விதவைப் பெண்களுக்கும், முதியவர்களுக்கும் இந்த உதவித் தொகை அளிப்பதற்கு அரசு ஆணை வெளியிட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் துறையில் குழந்தைகளுக்கு வாரத்தில் மூன்று முட்டை, பயறு, உருளைக் கிழங்கு போன்ற உணவுப் பொருட்களைக் கொடுத்து, நல்ல சத்தான குழந்தைகளாக வளரச் செய்வதை உண்மையில் மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனால், அந்தத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்களுக்குக் காலமுறை ஊதியமும், அரசு ஊழியர்களாக அங்கீகாரமும், ஓய்வூதியமும், பதவி உயர்வும் வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மொத்தம் 41,633 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், அந்தப் பகுதி சத்துணவுக் கூடங்களுக்குப் பாத்திரங்கள் படிப்படியாக வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டில்கூட 60 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது, அது போதுமானதாக இல்லை. 41,663 சத்துணவுச் சமையல் கூடங்களுக்கும் பாத்திரங்களை உடனடியாக வழங்க வேண்டும். சத்துணவுக் கூடங்கள் நவீன வசதியோடு அமையப்பெற வேண்டும். நிறைய சத்துணவுக் கூடக் கட்டடங்கள் இடிந்து விழுகிற நிலையிலேயும், மேலே ஓலைக்கீற்றை வைத்திருக்கின்ற மோசமான அவல நிலையிலேயும் இருக்கின்றன. படிப்படியாக என்பதைவிட, ஒட்டுமொத்தமாகச் சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டடங்களைப் புகைபோக்கியோடு அமைத்துத் தருவதற்கு அரசு முன்வர வேண்டும். கூடுதல் விஷயங்களாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் கூறியதைப்போல, தமிழ்நாட்டில் 41,633 சத்துணவுக் கூடங்கள் உள்ளன. சிலவற்றிற்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு 25, 30 வருடங்கள் ஆகிவிட்டதால், பழுது நீக்கம் அவசியமென உணர்ந்த, டாக்டர் கலைஞர் அரசு, படிப்படியாகத்தான் இதைச் சீர்செய்ய முடியும். கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,500 சத்துணவு மையங்களில் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மிகுந்த கனிவோடு முதல் முறையாகச் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம், கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள குழந்தைகள் சத்துணவுக் கூடங்களுக்குச் சமையலறை கட்டுவதற்கு நிதியொதுக்கியுள்ளார்கள். இதன் வாயிலாகக் கட்டமைப்புக்கு மட்டும் இவ்வருடம் ரூ.23 கோடியே 40 இலட்சம் செலவிடப்படும்.



அதேபோல, ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள குழந்தைகள் சத்துணவு மையங்களுக்குக் குடிநீர் வசதிக்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிக் கல்விக் கூடங்களை ரூபாய் 100 கோடி நிதியில் மேம்படுத்தும்போது சத்துணவுப் பள்ளி சமையல் கூடங்களும் நவீனப்படுத்தப்படும் எனக் கூறியுள்ளார்கள்.

முற்பகல் 11-55

**HON'BLE DEPUTY SPEAKER:** I request the Minister to give elaborate reply after the completion of Member's speech. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. அதே நேரத்தில், கலைஞர் அவர்கள் தமிழகம் முழுவதும் இலவச எரிவாயு அடுப்பினை வழங்குகின்ற இந்தக் காலகட்டத்தில், சத்துணவுச் சமையல் கூடங்களுக்கு இலவச எரிவாயுவினையும் தாராளமாக வழங்கலாம். எல்லா பள்ளிகளுக்கும் இதனை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது குழந்தைகள் சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கின்ற பொருட்களுக்கு எரிவாயுவிற்கான மானியம் என்பதை உடனடியாக வழங்க வேண்டும். அங்கன்வாடி ஊழியர்களுக்குப் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். அங்கன்வாடி மையங்களை ஆரம்பப் பள்ளிகளோடு இணைத்து கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகளைச் செய்து தருவதோடு டம்ளர், தட்டு போன்றவற்றை வாங்க அரசு உடனடியாக நிதியொதுக்கீடு செய்ய வேண்டும்.

ஊனமுற்றோர்கள் மறுவாழ்வுக்காக இப்பொழுது நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மாநில நல வாரியம் திறக்கப்படாமல் இருப்பதை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஊனமுற்றோர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையைப் பன்முகத்தன்மை கொண்ட அடையாள அட்டையாக மாற்றி கலைஞர் அவர்கள் அறிவிக்க வேண்டும். ஊனமுற்றவர்களை அலைக்கழிக்கக்கூடாது என்பதனைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஊனமுற்றோர் நல வாரியத்தில் வயது வரம்பு குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிறந்தது முதல் சாகிற வரைக்கும் ஊனம் ஊனம்தான். அதனால் அந்த வயது வரம்பை முற்றிலுமாக அகற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மன வளர்ச்சி குன்றியக் குழந்தைகளுக்கான ஆசிரியர்கள் இதுவரை 1,230 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு கலைஞர் அவர்கள் அறிவித்த அறிவிப்பின்படி காலமுறை ஊதியம் என்பதனை வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதேநேரத்தில் ஆசிரியர் பயிற்சி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி. (குறுக்கீடு) நான் time-ஐ keep-up பண்ண வேண்டும். அதற்காகத்தான். (குறுக்கீடு) Minister நீண்ட reply தர வேண்டும். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே அதிக நேரம் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) Please conclude your speech.

**திருமதி ஜி. லதா:** கண்பார்வையற்றோர் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். கலப்புத் திருமணத் தம்பதியர்களுக்கு உதவித் தொகையோடு நிலப் பட்டாவினை வழங்க வேண்டும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ வேலூர் மாவட்டத்தில் 2,141 மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. 9 மாத காலமாக இந்த நிதியுதவி அந்த மக்களைச் சென்றடையவில்லை. தமிழகம் முழுமையும் தேக்க நிலையில் இருக்கின்றது. மக்களுக்கு உடனடியாக அந்த நிதியுதவியை அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒதுக்குகின்ற ஒதுக்கீடும், பிரசவத்திற்குத் தருகின்ற ஒதுக்கீடும் முறையான நேரத்தில் அந்தப் பெண்களைச் சென்றடைகின்ற தன்மையை உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பெண் சிசுக் கொலை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி. (குறுக்கீடு) No. no, 7 நிமிடங்கள்தான் உரையாற்றுவதற்கு ஒதுக்கப்பட்டது. 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திருமதி ஜி. லதா:** சர்வதேசப் பெண்கள் தினத்தன்று அனைத்து பள்ளிகளிலும் கருத்தரங்கத்தின் வாயிலாக பெண் சிசுக் கொலை,



கருக் கொலையை பிரசாரமாகக் கொண்டு செல்ல அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப வன்முறையிலிருந்து மகளிரைக் காத்திட மாவட்டந்தோறும் பாதுகாப்பு அலுவலர்களை நியமித்ததற்கு நன்றி. குடும்ப வன்முறை வழக்குகளை நடத்திட அரசு வழக்கறிஞர்கள் முழுமையாக ஒத்துழைப்பு அளித்திட உதவி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாட்டில் திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்ய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு அரவாணிகளுக்கு வாரியம், ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 20,000/- ரூபாயாக உயர்த்தியிருப்பது, மாநில மகளிர் ஆணைய சட்டமுன்வடிவு திருத்த மசோதாவைக் கொண்டு வருதல், ஊனமுற்றோர், மன வளர்ச்சி குன்றியோர் மட்டுமின்றி தசை சிதைவால் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் மாதம் ரூபாய் 500 வழங்க அறிவிப்புகள் வந்திருப்பதையும், கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊக்கத் தொகை, உதவித் தொகையைச் செவிலியர்கள்மூலம் கொடுப்பதாக வந்திருக்கின்ற அறிவிப்புகளையும் மனதார நான் வரவேற்கின்றேன்.

தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பராமரிப்புக் கோரி நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், அமைச்சர் மட்டுமின்றி சிறந்த மருத்துவ நிபுணர் என்பதால், நோயாளிகளின் தன்மையறிந்து குழந்தைகளை நேரில் சந்தித்து, அவர்களது பெற்றோர்களுக்கும், அவர்களுக்கும் ஆறுதல் வழங்கியதோடு, பராமரிப்புத் தொகையாக ரூ.63.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, தலா ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.500/- உதவித் தொகை வழங்க அறிவித்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

அத்தோடு அக்குழந்தைகளுக்கான பராமரிப்பு இல்லம் ஒன்றைத் திருச்சியில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான முறையில் உதவிகள் செய்து வருகிறார்கள். அதற்கு நிலம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. மதிப்புமிகு மாவட்ட ஆட்சியர் அவர்களும் வருவாய் அதிகாரி அவர்களும் பல்வேறு முனைகளில் முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு நிலத்தைப் பெற்றுத் தர உதவிட வேண்டுமாய் இந்த நேரத்தில் அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குழந்தைகளைத் தத்தெடுப்பதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குழந்தை நலக் குழுக்கள் நமது மாநிலத்திலே 18 மாவட்டங்களில் இருக்கின்றன என்பதை நான் கொள்கைக் குறிப்பில் படித்தேன். 18 மாவட்டங்களில் மட்டுமின்றி அனைத்து மாவட்டங்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் காஞ்சி நகரில் ஆண் குழந்தைகளைத் தத்தெடுத்து ஒரு வயது ஆனவுடன் அக்குழந்தைகளை உடம்பு எல்லாம் சுட்டும், அடித்தும், காயப்படுத்தியும் கொடூரமான முறையில் வளர்த்து, திருட்டு, கொள்ளை போன்ற சமூக விரோதச் செயலில் ஈடுபட வைத்து பணம் சம்பாதிக்கும் நிலையை நம் திருச்சி மாநகர துணை கமிஷனர் திரு. இராஜசேகர் கண்டுபிடித்து, அக்குழந்தைகளை மீட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட கொடியவர்களுக்குக் கடுமையான தண்டனையை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாநில பெண்கள் ஆணையத்தினுடைய சட்டமுன்வடிவைக் கொண்டுவரவிருக்கிறார்கள். இன்றைக்குச் சமூகத்திலே அதிகமாக, சரி பாதியாக பல்வேறு உழைப்புகளில், உடல் உழைப்புகளில் ஈடுபட்டிருப்பவர்கள் பெண்கள். அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு வேண்டும். முழுப் பாதுகாப்பு மட்டுமல்ல, அவர்களின் ஜீவாதாரப் பிரச்சினைகள்கூட அதில் இருக்கின்றன. எனவே, அந்த வகையில் மகளிர் ஆணையத்திற்கான அந்தச் சட்டமுன்வடிவு அறிமுகத்தை வரவேற்கிறோம். ஒரு சிவில் கோர்ட்டுக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, அந்த அதிகாரத்தை அந்த மகளிர் ஆணையம் பெற்றிருக்க வேண்டும். ஆணையத்தில் பெண்கள் பற்றிய பிரச்சினையைக் கொண்டுவருகிறபோது, அந்த அறிக்கையை அவர்கள்



அரசுக்கு அளிக்கின்றபோது இம்மாமன்றத்திலே அதைப் பற்றி விவாதிக்க வேண்டும். சட்டபூர்வமான தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாக அது செயல்பட வேண்டும். ஆணையத்திற்குக் கூடுதலான நிதியளித்து அதைச் செயல்பட வைக்க வேண்டும். அவர்களுடைய அனைத்து மகளிர் அமைப்புகளையும் ஒன்றிணைத்து, அவர்களுடைய கருத்தறிந்து, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சமூக நலத் துறையின்மூலம் அறிவிக்கப்படுகின்ற பல்வேறு நலத் திட்டங்கள், ஏராளமான நலத் திட்டங்கள், அந்தத் திட்டங்களில் பெரும் பகுதி இன்றைக்கு அங்கன்வாடி சத்துணவுப் பணியாளர்கள்மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. எனவே, அந்த வகையில் அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். 25 ஆண்டுகளாகப் பணி புரிகின்ற அங்கன்வாடி சத்துணவு ஊழியர்கள் குறைந்த ஊதியம், அதிகப் பணிச் சுமை, காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் பணியாற்றுகிறார்கள். பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம், உதவியாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் கோடை விடுமுறை, விடுமுறை போன்ற முக்கியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். O.A.P.-ஆக அரசு முதியோருக்கு ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் 400/- ரூபாய் வழங்குகிறது. இந்த அங்கன்வாடி, சத்துணவிலே பணிபுரிகின்ற அந்தப் பணியாளர்களுக்குக் கூடுதலாக மாதம் ரூ.500/-ஆவது ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இலவசமாகச் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையங்களுக்கும் அதுபோன்று வழங்க வேண்டும். உணவு செலவுத் தொகை குழந்தைகளுக்கு 44 பைசா வழங்கப்படுகிறது. விலைவாசி உயர்வைக் கணக்கில் எடுத்து, அரசு ஒரு ரூபாயாக அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். காலியாக உள்ள அரசுப் பணியிடங்களில் தகுதியான அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும், அதேபோன்று சத்துணவில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கும், முன்னுரிமை கொடுத்து பணி நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முட்டையை வேக வைக்க எரிபொருளை அரசு வழங்க வேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் தினமும் 100 மில்லி லிட்டர் பால் வழங்க வேண்டும். அதோடு ஒரு பழமும் சேர்த்து வழங்க வேண்டும் என்று

இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன். பல துறைகளில் பணிபுரியும் ஊனமுற்றவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதைப்போல, சத்துணவு அங்கன்வாடியில் பணிபுரியும் ஊனமுற்ற ஊழியர்களுக்கும், ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

மன வளர்ச்சிக் குன்றியவர்களைப் பயிற்றுவிக்கும் சிறப்பு ஆசிரியர்களுக்குக் காலமுறை ஊதியம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறுகால உதவியாக, மாதம் 1000 ரூபாய் வீதம், 6 மாதங்களுக்கு 6,000/- ரூபாய் வழங்குகின்ற அந்த நல்ல திட்டம், முறையாக அவர்களைப் போய்ச் சென்றடைய வேண்டுமென்ற நிலையிலே, கிராமச் செவிலியர்கள்மூலம் அதை வழங்க வேண்டும் என்பதை நாங்கள் வரவேற்கின்றோம். அதுவும் சிறப்பான முறையிலே நடைபெற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இரண்டு பெண் குழந்தைகளுக்கான ஊக்கத் தொகை ரூ.15,200/-ஐ, வைப்பீட்டுத் தொகையாக அரசு வழங்குகிறது. அந்த வைப்பீட்டுத் தொகையை வழங்குகின்ற நேரத்தில், குடும்ப அட்டை அவசியம் தேவைப்படுகிறது. குடும்ப அட்டை வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் சென்று அந்த உதவித் தொகையைக் கேட்கின்றபோது, குடும்ப அட்டை கேட்கின்றார்கள். 'குடும்ப அட்டை வந்தபிறகு, நாங்கள் அதை உங்களுக்குச் செய்து தருகிறோம்' என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். குடும்ப அட்டை வந்தபிறகு அங்கே சென்றால், 'இப்போது 4 மாதங்கள் முடிந்துவிட்டன, இனிமேல் கிடையாது' என்று சொல்லி, அவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுகிறார்கள். எனவே, இந்தக் குளறுபடிகள் இல்லாமல் அதை வழங்க வேண்டும். ஏனெனில், குடும்ப அட்டை கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தபோதிலும், அதிகாரிகள்மூலம் கொடுக்கப்படுகின்ற அந்த அடையாளச் சின்னத்தை வைத்து (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வகையிலே, அரசு இதைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, குடும்ப வன்முறைப் பாதுகாப்புச் சட்டம்; இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, மாவட்டங்கள்தோறும்



பாதுகாப்பு அலுவலர்கள் தாமதமில்லாமல் நியமிக்கப்பட வேண்டும். நான் கொள்கை விளக்கக் குறிப்பினைப் படித்தேன்; மாவட்டந்தோறும் அதுபோன்று பாதுகாப்பு அலுவலர்களை நியமிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைக் காலதாமதப்படுத்தக்கூடாது. அதோடு மட்டுமல்லாமல், குடும்ப வன்முறைப் பாதுகாப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்வு அனைத்து பகுதி மக்களுக்கும் சென்றடைய வேண்டும். சாதாரணமாக, குக்கிராமத்தில் வாழுகின்ற, படிப்பறிவு இல்லாத மக்கள் மத்தியிலே, பெண்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அது அவர்களுக்காகப் போடப்பட்ட சட்டம். 'உங்களுக்காகப் போடப்பட்ட சட்டம்' என்ற அந்த விழிப்புணர்வை அரசு தரப்பிலே உண்டாக்கக்கூடிய வகையில், அதற்கான விளம்பரங்களைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சமூக நலத் துறையில் இன்னும் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மக்களுக்கு அந்த திட்டங்கள் போய்ச் சென்றடைகின்றபோது, அதிகாரிகள் மத்தியில் குளறுபடிகள் இல்லாமல், மக்களுக்கு அந்தத் திட்டங்கள் நேரிடையாகச் சென்றடைய வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.

**திருமதி பெ. பிரபாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் நலன் ஒன்றையே தனது உயிர் மூச்சாய் நினைத்து, ஒட்டுமொத்தத் தமிழர்களின் ஒளி விளக்காய், சுடர் ஒளியாய் திகழ்பவரே, ஒப்பற்றத் தனிப் பெருந்தலைவரே, தமிழன்னையின் தவப் புதல்வரே, வாழும் வள்ளுவமே, நடமாடும் தமிழ்ப் பூங்காவே, எங்களின் சுவாசக் காற்றே, பாரத அன்னை பெருமையுடன் போற்றும் பெருமகனாரே, எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் பாதம்தொட்டு வணங்கி மகிழ்கின்றேன். நாளைய தமிழகம், வருங்காலத் தமிழகத்தின் வழிகாட்டி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், தமிழர்களின் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நமது முதல்வர் தலைவர் கலைஞர்

அவர்களின் ஆலோசனையின்பேரில் சிறப்புமிகு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அய்யா பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய ஈரோடு மாவட்டச் செயலாளரான மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் கொறடா அவர்களுக்கும் மற்றும் சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால நல்லாட்சியை அனைத்து தரப்பினரும் போற்றுகின்றனர். இப்படி நாடு போற்றும் நல்ல பல திட்டங்கள் அடங்கியுள்ள, வரலாறு காணாத வரியில்லாத நிதிநிலை அறிக்கையை வழங்கிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பொற்கால நல்லாட்சியை நாடே போற்றிக் கொண்டிருக்கிறது.

அதன்படி, ஏழைப் பெண்களுக்கு ரூ.20 ஆயிரம் திருமண உதவித் திட்டம்; ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கும், ஏழை விதவைகளின் மறுமணத்திற்கும் ரூ.15 ஆயிரம்; சத்துணவுத் திட்டத்தில் வாரம் மூன்று முட்டைகள் வழங்குதல்; அரவாணிகளுக்கும், நரிக்குறவர்களுக்கும் தனி நல வாரியங்கள் என இன்னும் பல்வேறு திட்டங்களை அறிவித்து, கருவுற்றத் தாய்மார்களுக்கு, குழந்தை நலமுடன் இருக்க, மகப்பேற்றிற்குமுன் மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ.1000/- வீதமும், குழந்தை பிறந்தபின் மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ.1000/- வீதமும், மொத்தம் ரூ.6,000/- வழங்கிய தாயுள்ளம் கொண்ட ஒரே தலைவர்தான் எங்கள் தலைவர்.

அதேபோல, மகளிர் நலனுக்காகத் திருமண நிதி உதவித் திட்டத்தை வழங்கியவர் எங்களுடைய கலைஞர் ஒருவர்தான்.

அந்தத் திட்டத்தை அ.தி.மு.க. அரசுதான் நிராகரித்தது. அதேபோல், இன்னும் பல்வேறு திட்டங்களை அறிவித்த நமது முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களின் நல்லரசுக்கு நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.



பிற்பகல் 12-10

கடந்த 10-4-2007 அன்று, 2007-2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, தாராபுரம் தொகுதியின் மேம்பாட்டுக்காக பல கோரிக்கைகளை எனது கன்னிப்பேச்சின்போது இந்த அவையிலே சமர்ப்பித்தேன். அக்கோரிக்கைகளை மீண்டும் சுருக்கமாகக் கூறி நினைவுபடுத்துகின்றேன்.

அதற்கு முன்னதாக, ** நம்முடைய பெண்களுக்கு குழந்தை பிறக்கும்முன் தாய்க்குச் சிறு குழந்தையாகப் பிறக்கிறது, கொழு கொழு என்றும் பிறக்கிறது. ஆனால், அதை எடுத்துக்கொண்டுவந்து இந்தச் சட்டசபையில் அவர்கள் காண்பிப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் முழுமையாகக் கிடைக்காமல் இருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டும். தாராபுரம் தொகுதியில் உடுமலைப்பேட்டை வட்டத்திற்குள் அமைந்துள்ள கணியூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி, தரம் உயர்த்தி, புதியக் கட்டடம் கட்டி, அடிப்படை வசதிகளை உருவாக்கித் தர வேண்டும். மேலும், தாராபுரம் அரசு மருத்துவமனையை நவீன வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுகின்றேன். திருப்பூர் பின்னலாடைத் தொழிலாளர்களுக்குத் தேவையான உப தொழில்களை தாராபுரத்தில் நிறுவ வேண்டும். தாராபுரத்தில் அரசுக் கலைக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி ஏற்படுத்த வேண்டும். மேலும், தாராபுரம் தொகுதியில் பல கோரிக்கைகள் உள்ளன. அதில் சிலவற்றை மட்டும் சுருக்கமாகக் கூறிட விரும்புகின்றேன்.

தாராபுரம் தொகுதியில் உடல் ஊனமுற்ற மற்றும் மனநல வளர்ச்சி குன்றியவர்களுக்காகக் காப்பகங்களை அரசு ஏற்படுத்தித் தாவேண்டும். போதைத் தடுப்புச் சிகிச்சை மையம் ஒன்றை நிறுவிட வேண்டுகின்றேன். காய்கறி குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

ஆதி திராவிட விவசாயிகளின் நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் கிணறு வெட்ட மானியத்துடன்கூடிய கடன் வசதி ஏற்படுத்தித் தா வேண்டுகின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள 10 ஆதி திராவிட சமூக நலக் கூடங்களில் ஒன்றினை, தமிழகத்தில் அதிகமாக ஆதி திராவிடர்கள் வாழும் தாராபுரம் தொகுதியில் அமைத்துத் தர வேண்டுகின்றேன். தாராபுரம் தொகுதியில் ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளிலுள்ள குடிசைவாசிகளுக்கு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

அமராவதி ஆற்றின் முக்கியமான இடங்களில் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டுகின்றேன். சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவாக தாராபுரத்தில் அண்ணலுக்கு சிலை அமைக்க அரசு, இட வசதி ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

மேலும், மகப்பேறு நிதியுதவி ரூ.6,000/- பெற இனி வருமானச் சான்றிதழ் தேவையில்லை என்றும், மாணவர்களுக்கான மாநில அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டத்தில் பயன்பெற குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/-லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தியுள்ள கழக அரசுக்கு நன்றி கூறிக்கொள்வதுடன், சமூக நலத் துறை மூலமாக நடைமுறைப்படுத்தும் பெரும்பாலான திட்டங்களுக்குப் பயனாளிகளின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்ற வருமான வரம்பு பல ஆண்டுகளாக நடைமுறையிலுள்ளது. இன்றைய காலகட்டத்திற்கும், நடைமுறை வாழ்க்கைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது சாத்தியம் இல்லாததாக இருக்கிறது. எனவே, ஆண்டு வருமானம் ரூ.12,000/- என்பதை உயர்த்தினால் பெரும்பாலான ஏழையெளிய மக்கள் அதிக அளவில் பயன்பெறுவார்கள் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அரிய வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், வருங்காலத் தமிழகத்தின் விடிவெள்ளி, எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் மீண்டும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின்மீது அனைத்து கட்சிகளின் சார்பிலும் பெண் உறுப்பினர்களே பங்கேற்றுப் பேசிய நிலையிலே, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக, பெண்கள்மேல் அக்கறையுள்ள இயக்கம்,



காங்கிரஸ் பேரியக்கம் என்று காட்டுகின்ற விதத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை அளித்த தங்களுக்கும், எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவிக்கின்றேன். பொதுவாக, பெண்கள் விடுதலை பற்றியும் . . .

*பிறபகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று நீங்கள், ஒரே ஒரு ஆண் உறுப்பினர்தான் பேசுகிறீர்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அதற்காகத்தான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், தலைவர் அவர்களே. அதோடு பெண்கள் நலத்திற்காகவும், பெண்கள் விடுதலைக்காகவும் பாடுபட்டவர்கள் ஆண்கள் என்ற விதத்திலே, புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அவர்களுடைய நினைவு நாள் இன்றைக்கு, இந்த நாளிலே இந்தத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறுவது சாலச் சிறப்புடையதாகும். "கோரிக்கையற்று கிடக்குதண்ணே வேரில் பழுத்தப் பலா" என்று எந்தப் பெண்களைப் பார்த்து புரட்சிக் கவிஞர் வேதனைப்பட்டாரோ, அவர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டாரோ அவருடைய நினைவு நாளிலே இந்தத் துறைமீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடப்பது ஒரு சிறப்புக்குரிய நிகழ்வு என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நேற்றையதினம் எங்களுடைய தொகுதியிலே பல்வேறு இடங்களிலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்டேன். அப்பொழுதெல்லாம் என்னுடைய மனதிலே ஒரு சிறு கவிதை ஓடியது. இந்தப் பேரவையிலே சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கின்ற ஒருவரை ஆசிரியராகக் கொண்டு வெளியான ஒரு பருவ இதழிலே, ஒரு மாத இதழிலே வந்த கவிதையை எனக்கு அடிக்கடி நினைவுபடுத்தியது, நேற்றையதினம்.

"இருளக வேண்டி இறையவன் இரு விழி வைத்தான்
இரு விழிகளையும் நீ மூடி இருள் என கதறினால்
இறையவன் என் செய்வான்"

இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு, இருட்டுது, இருட்டுது என்று சொன்னால் இறைவன் என்ன செய்வான் என்ற அந்தக் கவிதைதான் என் மனதில் நிழலாடியது. ஏனென்று சொன்னால்,

2006-லே தமிழகத்தை மூடியிருந்த காரிருள் நீங்கி கதிரொளி பரப்பிய இந்த ஆட்சியிலே சமூக நலத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுகின்ற வேளையிலே, பேசுகின்ற வாய்ப்புக்கு நான் (குறுக்கீடு) அதாவது ஒளி என்பது உள்ளத்தில் இருக்க வேண்டும். அந்த உள்ளத்திலே ஒளி உண்டானால் வாக்கில் உண்மை உண்டாகும். ஆகவே, உண்மைகளைப் பேசுவதற்கு நான் பயப்படவில்லை, அச்சப்படவில்லை. உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். அந்தவகையிலே இன்றைக்கு ஒளிமிக்க ஒரு காலத்திலே நாம் வாழுகின்றோம் என்ற நிலையிலே நம்முடைய முதல்வர் அவர்களை நான் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய வரிகள்மூலமாகவே வாழ்த்த விரும்புகிறேன். பாவேந்தர் அவர்கள் சொன்னார்கள்.

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்-இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை, நாட்டினை, இந்த உலகினை ஒன்று சேர்த்திடும்
பேர் அறிவாளன் நீதான்"

என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பாடல்வழியாக ஆளுகின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன்.

அதேநேரத்திலே, இந்த சமூக நலத் துறையின் சார்பாக அச்சிடப்பட்ட கொள்கைக் குறிப்பு விளக்கத்தை நான் பார்த்தேன். இதிலே முக்கியமாக இந்தத் துறையிலே இடம்பெறுவது சத்துணவு. இந்தச் சத்துணவு பற்றிய விளக்கத்தின் ஊடாக நான் பார்க்கையிலே அதிலே பெரியவர் காமராஜர் அவர்களுடைய வரலாற்றைப் பற்றிய குறிப்பு ஏதும் இல்லை என்பதை நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். 1955 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வுதான் இன்றைக்கு இருக்கின்ற இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு அடிகோலியது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். சென்னையிலே பூங்கா நகரிலே இருக்கின்ற Memorial Hall-லே நடைபெற்ற கூட்டத்திலேதான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 1955 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் பகல் உணவு வழங்கப்படும் என்ற அந்தப் பொற்கால அறிவிப்பை வெளியிட்டார்கள். அப்போது கல்வி இயக்குநராக இருந்த N.D.S. என்று அழைக்கப்பட்ட திரு. நெது. சுந்தரவடிவேலு அவர்கள் உடன் இருந்தார்கள். பிறகு எட்டயபுரத்தில் நடைபெற்ற விழாவிலே பெருந்தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், "நீரில்லாத நிலத்திலே எப்படிப் பயிரிட முடியும், வயிற்றிலே ஈரம் இல்லாதபோது அந்தப் பிள்ளைகள் எப்படிப் படிக்க முடியும். ஆகவே, அந்தப் பிள்ளைக்கு உணவிட வேண்டும். இதற்கு எதையாவது செய்ய வேண்டும்" என்று அவர்கள் எட்டயபுரம் விழாவிலே பேசி, "இந்தத் திட்டத்திற்காக நிதியில்லை என்று சொன்னால், நான் தெருத் தெருவாகப் பிச்சை எடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்று சொன்ன காமராஜருடைய அந்தக் குறிப்பை. அவர்கள் பகல் உணவுக்குத் திட்டமிட்ட குறிப்பை, நம்முடைய அரசாங்கம் ஏனோ அதைக் குறிப்பிடவில்லை என்பதை நான் இங்கே வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து ஒரு புரட்சியை ஒரு சட்டத்தின்மூலமாக உண்டாக்கிய கலைஞர் அவர்கள் ஆளுகின்ற நேரத்திலே இத்தகைய omission, அதாவது நான் வேண்டுமென்றே செய்ததாகக் குறிப்பிடவில்லை, அத்தகைய குறிப்பு நிச்சயமாக இடம்பெற வேண்டும். வரும் காலங்களிலே இடம்பெற வேண்டுமென்று நான் இங்கே மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், மிகப் பெரிய ஒரு திட்டத்தை, அதாவது மிகப் பெரிய திட்டம் என்று சொன்னால், இன்றைக்கு இந்தியா முழுவதும். . . (குறுக்கீடு)



பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை எதிர்காலத்தில் உறுதியாக கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கும் எனக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சியில், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் பெயரை நீக்கிய ஆட்சி முந்தைய ஆட்சி, ஆனால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் தாயாரான சிவகாமி அவர்களின் பெயரை மீண்டும் நினைவுபடுத்திய ஆட்சி டாக்டர் கலைஞர் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர்மீது நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் காட்டுகின்ற அக்கறை, பெருமை எங்களுக்கு ஒன்றும் புரியாதது அல்ல. சொல்லப்போனால்,

உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக இலச்சினையிலே அங்கே வரிசையாக தந்தைப் பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணா அவர்களையும், பிறகு கலைஞர் அவர்களையும் ஓவியமாக வரைந்த சி.வி. சோமு என்பவர் என்னுடைய நண்பர். அந்த வரிசையிலே நான் காமராசர் அவர்களின் இடையூடைப் பார்க்கின்றேன். ஏனென்றால், பெரியாருடைய சிந்தனைகளை செயலாக்கம் தருகின்றவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். அதற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜருடைய சிந்தனைகளைச் செயலாக்கம் தருகின்றவர்கள் கலைஞர் என்பதனை உங்களைவிட நான் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறேன், புரிந்துகொண்டிருக்கிறேன். ஆகவே, அவருடைய குறிப்பினை நீங்கள் மீண்டும் தயவுசெய்து அதிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, நீதிமன்றத்திலே தமிழ் மொழியை வழக்கு மொழியாகக் கொண்டுவர வேண்டுமென்ற ஆதங்கத்தை, அக்கறையை கலைஞர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது இருக்கின்ற நிலையிலே சத்துணவுக் கூடங்கள், பெரும்பான்மையாக A.C. Sheet, அதாவது Asbestos Cement Sheet போட்ட கூரைகளாக இருக்கின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா இராதாகிருஷ்ணன் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் நிச்சயமாகக் கூறலாம். அதில் நான் தலையிடவில்லை. (குறுக்கீடுகள்) சத்துணவுக் கூடங்கள் A.C. Sheet போட்ட கூரைகளாக இருக்கின்றன. A.C. Sheet போட்ட கூரைகள் புற்று நோயை உண்டாக்கவல்லன என்பதை இப்பொழுது நம்முடைய நிபுணர்கள் நிரூபித்திருக்கிறார்கள். எனவே, இருக்கின்ற சத்துணவுக் கூடங்களையெல்லாம் concrete கூரைகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஊனமுற்றோர் நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சென்ற முறை சட்டப் பேரவையில், இதே மன்றத்தில் உறுப்பினராக இருந்தபொழுது நான் ஒரு கருத்தைச் சொன்னேன். இளம் வயதிலேயே சர்க்கரை வியாதியால் பாதிக்கப்படுபவர்கள் Juvenile diabetics என்று சொல்லப்படுகின்ற 16 வயதிற்குக் கீழாக இருக்கின்ற சர்க்கரை நோயாளிகள் முழுக்க முழுக்க இன்சுலின் சார்புடைய நோயாளிகள். இன்சுலினை ஊசிமூலம் எடுத்துக்கொண்டால் மட்டுமே வாழக்கூடிய நோயாளிகள். அவர்கள் புறவழியாகப் பார்க்கும்போது



ஊனமுற்றவர்களாகத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் நிரந்தரமாக ஊனமுற்றவர்கள், உள்ளே, Internally handicapped என்று அந்த வார்த்தையைச் சொல்லி நான் அன்றைக்கு இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். அந்த வகையிலே, Juvenile diabetics என்று சொல்லப்படுகின்ற இளம் வயது நீரிழிவு நோயாளிகளை நீங்கள் handicapped என்று அறிவித்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் பொருள் பொதிந்த கோரிக்கை இது. எனக்குத் தெரிந்து, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் நான் படிக்கின்றபோது என்னுடைய பேராசிரியர் கிஷார் அகமது அவர்கள் அத்தகைய குழந்தைகளை தன்னுடைய பாதுகாப்பிலேயே அந்த மருத்துவமனையிலே வைத்துக்கொண்டு அங்கே இன்சுலின் ஊசியையும், அதே நேரத்திலே உணவையும் கொடுத்து, அவர்களுக்கு வேலையும் கொடுத்து காப்பாற்றிய வரலாற்றை நான் நன்றாக அறிவேன். ஏனென்றால், நம்முடைய அமைச்சர் அவர்கள் மருத்துவராக இருக்கின்ற காரணத்தால், அதைச் சிறப்பாகப் புரிந்துகொள்வார்கள் என்ற காரணத்தால், இதை நான் முக்கிய கோரிக்கையாக விடுக்க விரும்புகிறேன். இன்றைக்கு, பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் அந்த வண்ணம் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் நிதியுதவி பெறுவது சாலப் பொருத்தம் என்ற வகையிலே அவர்களுக்குத் தேவையான இன்சுலின் போன்றவற்றைக் கொடுத்து, internally handicapped என்று அவர்களை அறிவிக்க வேண்டும். இது ஒரு புதிய சிந்தனையாக உங்களுக்குத் தோன்றினாலும்கூட, வழிவகைகளைக் கண்டறிந்து நீங்கள் செயல்பட வேண்டுமென்று நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருமண உதவித் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு கலைஞர் அவர்கள், ஏழைப் பெண்களுடைய திருமணத் திட்டத்திற்கு, மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு, பல்வேறு நிதிச்சுமைகள் இருந்தாலும்கூட, 20,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். ஆந்திர மாநிலத்தை ஆளுகின்ற எங்களுடைய காங்கிரஸ் முதல்வர், டாக்டர் ராஜசேகரரெட்டி அவர்கள், திருப்பதி தேவஸ்தானத்தின் மூலமாக வருடந்தோறும் 50,000 ரூபாய் முழு கல்யாணச் செலவையும் அவர்கள்

ஏற்றுக்கொண்டு, மங்கல தாலி முதற்கொண்டு அத்தனையையும் ஏற்றுக்கொண்டு, அங்கே ஒரு தொகுதிக்கு இத்தனை திருமணங்கள் நடைபெற வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து, ஓர் அற்புதமான திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வருமானமுள்ள கோயில்களில் உள்ள உபரி நிதியை ஆதாரமாகக் கொண்டு இத்தகைய நிகழ்வுகளை நாம் நிகழ்த்தினோமானால், மிக அற்புதமான வரவேற்பை நம்முடைய ஏழை மக்கள் மத்தியிலே இந்த அரசாங்கம் பெறும் என்பதை நான் இங்கே ஓர் ஆலோசனையாகக் கூற விரும்புகிறேன். வேண்டுமென்றால், நீங்கள் பக்கத்தில் இருக்கின்ற ஆந்திரா மாநிலத்தில் இருக்கின்ற நண்பர்களைக் கேட்டுப் பார்க்கின்றபோது ஒரு உன்னதமான திட்டமாக ஆந்திர முதல்வர் அவர்கள் அங்கே செயல்படுத்தி வருகின்றார்கள் என்பது தெரியும். நம்முடைய முதல்வர் அவர்கள்கூட தன்னுடைய பவள விழாவின்போது, திருவேற்காடு திருக்கோயிலிலே 75 ஏழை ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்து, வாழ்த்திப் பேசினார்கள். அதிலே பங்கேற்கக்கூடிய பாக்கியம், பேறு எனக்குக் கிடைத்தது. அந்தவகையிலே இந்தத் திட்டத்தை கோயில்களில் உபரியாக இருக்கிற நிதியைக் கொண்டு, தயவுசெய்து நீங்கள் இப்படி மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோல, முதியோர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே இதுவரையில் money order மூலமாகத்தான் அந்தப் பணம் தரப்படுகிறது. money order மூலமாகத் தரப்படுகிறபோது, அஞ்சலக அலுவலர்கள் முழுமையாக அந்தப் பணத்தை உரியவர்களுக்குச் சேர்க்கிறார்களா என்று தெரியவில்லை. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, நடைமுறையில் இருப்பதைச் சொல்கிறேன். ஆகவே, இப்போது இருக்கும் நவீன நடைமுறையைப் பயன்படுத்தி, அதாவது நேரிடையாக வங்கிக் கணக்கிலே e-remittance என்று சொல்லப்படுகின்ற வகையிலே, அந்தப் பணத்தை அவர்களுக்குச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், அதிலே தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதே நேரத்திலே, பல்வேறு இடையூறுகள் தவிர்க்கப்படும். எளிதான நடைமுறையாக இப்போது அது ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, O.A.P. என்று சொல்லப்படுகின்ற முதியோருக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்ற விதத்தினை மாற்றியமைத்து, நேரிடையாக வங்கிமூலமாக, e-remittance அல்லது



நேரிடையாக எப்படி நமக்கு சம்பளம் வருகிறதோ அதேபோல அவர்களுக்கும் நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நிதி உதவியைப் பெறாத பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுவதில்லை. உதாரணமாக, என்னுடைய தொகுதியையே நான் எடுத்துச் சொல்லலாம். என்னுடைய கிராமத்திற்குப் பக்கத்து ஊராக இருக்கிற கிராமத்திலே, ஒரு தனியார் பள்ளி இருக்கிறது. கிறித்துவ மிஷனரி நடத்துகின்ற அந்தப் பள்ளியிலே இருக்கின்ற ஏழை குழந்தைகள், பெரிய பணக்காரர்களுடைய குழந்தைகள் அல்ல. சிறப்பாகப் படிக்க வைக்க வேண்டும், ஆங்கிலத்திலே படிக்க வைக்க வேண்டுமென்கின்ற ஆசையோடு அல்லது இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அங்கே அனுப்பப்படுகின்ற ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு நீங்கள் சத்துணவு வழங்க வேண்டும். அந்தப் பள்ளியிலும் சத்துணவு வழங்க வேண்டும். அதற்கான ஏற்பாட்டினை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, இதுகுறித்து எங்களுடைய கட்சிக் கொறடா மாண்புமிகு திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது இந்தக் கருத்தினை அவர்கள் எதிரொலித்தார்கள். ஆனால், இன்றுவரை அது செயல்படுத்தப்படவில்லை என்று நான் அறிகிறேன். செல்வப்பெருந்தகைகளின் பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிகள் அல்ல, சாதாரணப் பள்ளிகளிலே, Non-eating School-ல்கூட அந்தத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்த ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, தனியாரால் நடத்தப்படுகின்ற, மனதளவிலே பாதிக்கப்பட்ட மறுவாழ்வு இல்லங்களை நமது அரசு கண்காணிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தன்னார்வத் தொண்டு அமைப்புகளாக இந்தப் பள்ளிகள் அல்லது ஹோம் என்று சொல்லப்படுகின்ற அந்த விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவர்கள் நடத்துகின்ற விதத்திலே, அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு நடத்தினாலும் சரி, பணத்தை வாங்காமல் நடத்தினாலும் சரி, அவற்றை சீராகக் கண்காணிக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற விதத்திலே ஒரு Vigilance Committee-ஐ நாம் அமைக்க வேண்டும். அந்த Vigilance Committee-லே நம்முடைய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் இருக்க வேண்டும். பொதுமக்களைச்

சேர்ந்த சிலர் இருக்க வேண்டும். அப்படி இருக்கின்றவகையிலே, அந்த கமிட்டியை அமைத்து, தனியார் நடத்துகின்ற அந்த விடுதிகளை நாம் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல நம்முடைய **Working Women's Hostel**, அதாவது பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப்படுகின்றபோது சில தவறுகள் அல்லது நிர்வாகக் கோளாறுகள் என்று எந்தவகையில் எடுத்துக்கொண்டாலும்கூட, சீராக நடைபெறுவதற்கு வாய்ப்புகள் குறைவான நிலையிலே, அரசாங்கத்தின்மூலமாகத் தேவையான அளவிற்கு பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை அமைக்க வேண்டும். அந்தப் பெண்கள் விடுதிகளை அமைக்கிறபோது நல்ல மனப்பான்மை கொண்ட அலுவலர் பெருமக்களை அங்கே பொறுப்பாளர்களாக நியமித்து அதை நீங்கள் நேர்த்தி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அரசாங்கம் நடத்தினால் ஏதோ **sub-standard**-ஆக இருக்கிறது என்ற எண்ணம் யாருக்கும் வருவதில்லை. உதாரணமாக சொல்லப்போனால், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலேயிருக்கின்ற அந்த **Gastroenterology Department**-ஐ சென்று பார்க்கின்றபோது, தனியார் மருத்துவமனையைவிட சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்ற மருத்துவப் பிரிவாக அது இருக்கின்றது என்பதை நான் கண்கூடாகக் காண்கின்றேன். அந்தவகையில் அரசாங்கத்தின் சார்பாக நடத்தப்படுகின்றது. (குறுக்கீடு) பேராசிரியர் சுரேந்திரன் அவர்களுடைய பெயரை அவர்கள் சொல்கிறார்கள். உண்மையிலேயே அது பாராட்டத்தக்க முயற்சி. அதேபோன்று, பணிபுரியும் பெண்களுக்கான விடுதியை, கட்டடத்தோடுகூடிய விடுதிகளாக நம்முடைய அரசாங்கம் நடத்தலாம். அப்படி நடத்தப்படுகின்றபோது ஒரு சீரான கட்டுமான விதிகளை விதித்து, தகுந்த அலுவலர்களை நியமித்து, அங்கே அதைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளக், கடமைப்பட்டிருக்கின்றேன். காலத்தின் கட்டாயம் இது. ஏனென்றால் 18 வயதிற்குக்கீழாக, திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்ற விதி இருக்கின்ற நிலையிலே பணிபுரிகின்ற பெண்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பிற ஊர்களிலேயிருந்து சென்னைக்கு வந்து பணிபுரிபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அந்தவகையிலே அப்படிப்பட்ட பெண்களுக்கு



நாம் சரியான விதத்திலே, சரியான முறையிலே விடுதிகளை அமைத்து பராமரிப்போமானால், அரசாங்கத்திற்கு வருமானமும் வரும், நல்ல பெயரும் வரும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே பெரியவர் காமராஜர் அவர்கள் கொண்டுவந்த அந்த மதிய உணவுத் திட்டத்தில், **Centralised kitchen** என்று சொல்லப்படுகின்ற மதிய உணவுக் கூடத்திலே ஏறக்குறைய 29 சமையலாளர்கள், 30 வருட காலமாக தினசரிக் கூலிகளாகப் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்தி **time scale** என்று சொல்லப்படுகின்ற காலமுறை ஊதியத்திலே கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-30*

ஏனென்று சொன்னால், ஏறக்குறைய 30 வருட காலமாக, ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை அவர்கள் **daily wages** என்று சொல்லப்படுகிற நிலையிலே இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்து விடுகிறேன். அந்தவகையிலே, அவர்களுடைய கோரிக்கையையும் தயவுசெய்து நீங்கள் கவனிக்க வேண்டும். அதேபோல, நம்முடைய சத்துணவுத் திட்டத்திலே பயன்பெறுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையை நாம் சரிபார்க்க வேண்டும். மொத்தமாக நாம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால், குறைந்த எண்ணிக்கையில் வருகிறபோது அதனுடைய தரம் உயர்த்தப்படக்கூடும். ஆகவே, அங்கே **feeding strength** என்று சொல்லப்படுகிற மதிய உணவு பெறுகின்ற குழந்தைகளுடைய எண்ணிக்கையைத் தணிக்கை செய்வதற்கு அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு நீங்கள் தயவுசெய்து அதிகாரம் வழங்க வேண்டும். ஏனென்றால், பள்ளியிலே பணிபுரிகின்ற சத்துணவு அமைப்பாளர், பள்ளித் தலைமை ஆசிரியரை மதிப்பதும் இல்லை, அவர்களை அனுசரித்து நடப்பதும் இல்லை. அந்தவகையிலே தலைமை ஆசிரியருக்குண்டான அதிகாரத்தை தயவுசெய்து நீங்கள் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பள்ளியிலே பணிபுரிகின்ற சத்துணவு அமைப்பாளருக்கு **at least moral fear**, அதாவது பயமாக இருக்கும். அந்தவகையிலே, தயவுசெய்து நீங்கள் அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு அளிக்கின்ற அதிகாரத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு முக்கியமான வேண்டுகோளை விடுக்க நான் விரும்புகிறேன். நம்முடைய மத்திய சமூக நீதி அமைச்சகத்தின்மூலமாக பல்வேறு உதவிகள் இந்த மானியத்திலே வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலமாக nodal agency என்று சொல்லப்படுகிற அந்த நிறுவனம்மூலமாக இதுவரை உதவிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றை நம்முடைய அரசாங்கத்தின்மூலமாக நேரடியாக வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், பல்வேறு வகைகளிலே, பல கோடி ரூபாய் மதிப்புள்ள உதவிகள் அந்த அமைப்புகளின்மூலமாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றை முறைப்படுத்தி, அரசின் மூலமாக எந்தவொரு குறையும் இன்றி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நிறைவான வாய்ப்பு தந்த பேரவைத் தலைவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு, பெண் உரிமையை வழங்குவதற்காக, நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்திலிருந்து உறுப்பினர் அவர்கள் ஆண்கள் சார்பாகப் பேசியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்துப் பெண்களுக்கு, நமது தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்னென்ன திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு, அதற்கு அவர்கள் பாராட்டு தெரிவித்தார்கள். இத்தகைய பாராட்டுக்குரிய நமது முதலமைச்சர் அவர்கள் இதே சபையில் இரண்டு முறை நமது மத்திய அரசாங்கம் பெண்களுக்கு வழங்கக்கூடிய 33 சதம் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்ற தீர்மானத்தை வலியுறுத்தினார்களே. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழகத்து. இந்தியப் பெண்களுக்கு 33 சதம் இட ஒதுக்கீடு நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும், இன்னும் மத்திய அரசு வழங்கவில்லையே, அதுகுறித்து உறுப்பினர் என்ன சொல்ல வருகிறார் என்பதைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.



***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் 33 விழுக்காட்டினை மகளிருக்கு ஒதுக்குவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறதா, காங்கிரஸ் கட்சி அதை வலியுறுத்துமா என்று கேட்க ஆசைப்பட்டார்கள். அவர்களுடைய கேள்வியிலே இருக்கின்ற நியாயத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிருக்கான இட ஒதுக்கீட்டை வடிவமைத்துக் கொடுத்த அமரர் ராஜீவ் காந்தி அவர்களை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று இந்தியா முழுவதும், தமிழகத்தில் நாம் அதை முன் எடுத்துச் சென்றிருக்கிறோம். இந்தியாவிலே இப்போது, நகராட்சிகளில், கிராமப் பஞ்சாயத்துகளில், மாநகராட்சிகளில், மாநகராட்சி உறுப்பினர்களாக, மேயர்களாக, பெருந்தலைவர்களாக 33 விழுக்காடு மகளிர், அதிலும் குறிப்பாக, ஆதி திராவிடர், பட்டியலின மக்கள் இப்படி எல்லா மகளிரும் உலக வரலாற்றில், ஜனநாயகத்தின் வரலாற்றில் முதன்முறையாக இவ்வளவு பெரும் அளவில் பங்குகொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த கட்சி காங்கிரஸ் கட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்கூட இப்போது காங்கிரஸ் கட்சி மட்டும் தனியாக பெரும்பான்மைப் பெற்று மத்தியிலே ஆட்சி நடத்திக்கொண்டிருந்தால் இதற்குள்ளே அது முடிந்து இருக்கும். ஆனால், எங்களுடைய நேரம் உங்கள் தயவில் எல்லாம் நாங்கள் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம். பல்வேறு அரசியல் இயக்கங்களை, பல்வேறு கட்சிகளை, பல்வேறு எண்ண உணர்வு கொண்டவர்களை உள்ளடக்கி அந்த அரசியல் சாசன சட்டத் திருத்தத்தை மிகச் சுமூகமாகக் கொண்டு வர வேண்டும் என்கிற உணர்விலே, எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்பதை நான்கு நாட்களுக்கு முன்னால் அவர்கள் பேசிய பேச்சிலே இருந்து தெரிந்துகொள்ளலாம். "இந்த முறை கண்டிப்பாக என்ன ஆனாலும் சரி, அந்த இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து தீருவோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்களுக்கு அந்த அச்சம் வேண்டாம். அவர்களுக்குச் சொல்வது எல்லாம், அவர்களுடைய கம்யூனிஸ்ட் கட்சிகளை நன்றாகக் கண்ணை மூடிக்கொண்டு காங்கிரசை ஆதரிக்கச் சொல்லுங்கள், இந்த இட ஒதுக்கீட்டை நிச்சயமாகப் பெற்றுத் தருவோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்களுடைய கேள்விக்கு அவர் பதில் சொல்லிவிட்டார். திரு. நன்மாறன், நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

பிற்பகல் 12-35

**திரு. என். நன்மாறன்:** இட ஒதுக்கீடு விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, எங்களுடைய நேரம், உங்களுடைய ஆதரவோடெல்லாம் இருக்கவேண்டி இருக்கின்றது என்றார். எங்களுடைய ஆதரவில், இடஒதுக்கீடு சம்பந்தமாக ஏதாவது இடையூறு இருக்கின்றது என்று அவர் கருதுகின்றாரா? 33 சதவீத இடஒதுக்கீட்டை இடதுசாரிகள் எதிர்க்கின்றார்கள் என்று கூறுகின்றாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இடையூறு part, part-ஆக வருவதில்லை, அது மொத்தமாகத்தான் வருகின்றது. இதற்கு இடையூறு, அதற்கு இடையூறு என்று சொல்லாமல், எல்லாவற்றுக்கும் ஆதரவு என்ற நிலையை எடுங்கள், நாங்கள் அதை நிறைவேற்றித் தருகின்றோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி என்ன?.

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நல்லவற்றிற்கு என்றைக்கும் கம்யூனிஸ்ட் கட்சியினர் பக்கபலமாக இருப்பார்கள். நீங்கள் குறைந்தபட்ச செயல்திட்டத்தில் ஏற்றுக்கொண்டதை மீறி செயல்படுகின்றபோது, அதற்கு எதிராகக் குரல் கொடுப்பது எங்களுடைய கடமை. நாட்டு மக்களின் நலன், தேச மக்களின் நலன் கருதிச் செய்கிறோம். கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு கொடுத்தால், அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிட்டால் என்ன செய்வது? ஆகவே, அப்படியெல்லாம் செய்ய முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் எங்கோ **sub-track-ல்** போய்க் கொண்டிருக்கின்றது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கோவிந்தசாமி அவர்கள் ஏதோ காங்கிரஸ் இயக்கம்தான் அமெரிக்காவிடம் அடகு வைப்பது போன்ற



ஒரு தோற்றத்தை இங்கே உருவாக்கிப் பேசினார்கள். இன்றைய நிலையை அவர் நன்கு புரிந்துகொண்டிக்கின்றார். உலகத்திலே விலைவாசி ஏறிக்கொண்டிருக்கின்றது. நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல, உலகத்தில் இருக்கின்ற பல்வேறு நாடுகளிலும் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கின்றது. அதற்கு அடிப்படைக் காரணம், இன்றைய பணவீக்கம். இந்தப் பணவீக்கம் இந்தியாவில் இன்றைக்கு 7.4 சதவீதமாக இருக்கின்றது. மூன்று மாதங்களுக்கு முன்னால் இந்தப் பணவீக்கம் 4.6 சதவீதமாக இருந்தபோது, நீங்கள் வாழ்த்தவில்லை. ஆனால், இன்றைக்குக் குறை கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். சீனாவின் பணவீக்கம் 10.6 சதவீதமாக உயர்ந்திருக்கின்றது. அமெரிக்காவில் இன்றைக்கு 17.7 சதவீதமாக பணவீக்கம் உயர்ந்திருக்கின்றது. உலகத்திலேயே வரலாறு காணாத அளவுக்கு அமெரிக்காவில் ஒரு காலன் பெட்ரோலின் விலை 5 டாலராக விற்கின்றது. ஏன் இந்த நிலைமை? உங்களுடைய ஆதரவோடு நாங்கள் மத்தியிலே ஆட்சிப் பொறுப்பேற்றபோது ஒரு பேரல் ஆயில் விலை 37 டாலர். ஆனால் இன்றைக்கு 115 டாலர். நேற்று அரேபிய அமைச்சர் இன்னும் விலை ஏறும் என்று சொல்கின்றார். இந்த விலையேற்றத்திற்கான காரணம் என்ன என்பதை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். உலகத்திலே இருக்கின்ற நாடுகளிலெல்லாம் விலைவாசி உயர்ந்திருக்கின்ற காரணத்தால், இந்தியாவிலும் விலைவாசி உயர்ந்திருக்கின்றது. விலைவாசி உயர்ந்திருக்கின்றது என்பதால் ஏழை மக்களெல்லாம் துன்பப்படுகின்றார்கள். இருந்தாலும், விலைவாசி ஏற்றத்தை காங்கிரஸ் கட்சி ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதைக் குறைப்பதற்கான தீவிர முயற்சியை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கின்றது. மாநில அரசும் தீவிர முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. சுதர்சனம், சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இன்றைக்குப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரில் நீங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றீர்கள். இதனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும், அது அமெரிக்காவாக இருந்தாலும், சீனாவாக இருந்தாலும், எந்த நாட்டுக்கும் அடிமைப்பட விடமாட்டோம். இந்தியா ஒரு சுதந்திர நாடு. அதற்கென்று தனி உரிமையுண்டு. அதை நிலைநாட்டுவோம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, விவாதம் வேறு திசையில் போய்க் கொண்டிருக்கின்றது. உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும், காங்கிரஸ் தோழர்களும் தனியாக ஒரு நாளில் இந்த விவாதத்தை நடத்தலாம். இப்போது நம்முன் இருப்பது, சமூக நல மற்றும் சத்துணவு திட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை. மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் பேசி, அதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அதற்கு இடம் கொடுக்க தாங்கள் ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவமாய், ஆற்றலின் மறு உருவமாய், இந்தியாவின் இமயமாய், அன்னை தெரசாவின் கனிவும், பெரியாரின் துணிவும், அண்ணாவின் அறிவும், தங்கத்தலைவன் புரட்சித் தலைவரின் மனித நேயமும் ஒருங்கே அமையப்பெற்ற தென்திசை தீபமான எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகின்றேன். வலங்கைமான் சட்டமன்ற உறுப்பினராக என்னை இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த இதய தெய்வம் அம்மா அவர்கள், நடமாடும் தெய்வம் அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த என் தொகுதிவாழ் மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-40

சமூக நலம் என்றால் மனித நலன், சமுதாய நலன், குழந்தைகள் நலன், மகளிர் நலன், சமூகத்தில் பாதிக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் அனைவரின் நலமும் சேர்ந்தே பொருள்படும். இவர்கள் எல்லோரும் சமூகத்தில் மேம்பாடு அடைவதே சமூக மேம்பாடாகும்.

சமூகத்தில் சரிபாதியாக இருக்கக்கூடிய பெண்கள், இன்றைக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டு, இழிவான நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே, பெண்களுக்கு மூன்று வகையான பாதுகாப்புகள்



அளிக்கப்பட்டுள்ளன. ஒன்று கணவரால், பெற்றோரால், மற்றொன்று குழந்தையால் பாதுகாப்பு என்பதெல்லாம் மாற்றப்பட்டு பாதுகாப்பற்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற, சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்த மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்ற வேண்டும்.

ஆனால், அதிகமான பெண்களைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, பெண்கள் தனிக் காவல் நிலையம், பெண் கமாண்டோக்களை உருவாக்கி பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்தவர் எங்கள் அம்மாதான்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிட, பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும் என்பதை நடைமுறைப்படுத்தும் வகையில் ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம் கொண்டுவந்தவர் எங்கள் அம்மா. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தொலைநோக்குத் திட்டமான சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதேபோன்று, எவரும் மாற்றிவிட முடியாத தொலைநோக்குத் திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றைக் கொண்டுவந்து மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றவர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களே ஆவார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தினை இதற்கு முன்னதாக பெருந்தலைவர் காமராஜர் கொண்டுவந்த மதிய உணவுத் திட்டம் என்றார்கள். உண்மைதான். ஆனால் அப்போது எளிய உணவான கஞ்சி, சோளத்தினால் தயாரிக்கப்பட்ட உணவுதான் வழங்கப்பட்டது. ஆனால், ஏழையெளிய குழந்தைகள், கிராமப்புறக் குழந்தைகள் சாப்பிடக்கூடிய உணவு என்பதால், அறுசுவையுடன்கூடிய சத்தான உணவு வழங்கப்பட வேண்டுமென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். சத்துணவு சாப்பிடும் இன்றைய குழந்தைகளுக்குத் தரமான, பாதுகாப்பான சத்துணவு வழங்கப்படாமல் வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற நிலைகள் இந்த ஆட்சியில் நிலவும் நிலைமை.

உதாரணமாக, எனது வலங்கைமான் தொகுதியில், வலங்கைமான் ஒன்றியத்தில், ஊத்துக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், குழந்தைகள் சாப்பிட்ட சத்துணவில் அரணை விழுந்ததால் 98 மாணவர், மாணவியருக்கு வாந்தி ஏற்பட்டு பின்பு சிகிச்சை பெற்று திரும்பினார்கள். அதேபோன்று பெருமாக்காநல்லூரில் 19 குழந்தைகள், பாபநாசத்தில் 5 குழந்தைகள் பாதிக்கப்பட்டார்கள். இதுபோன்று அடிக்கடி நிகழாவண்ணம் பாதுகாப்பான சத்துணவு வழங்கிட இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். சுகாதாரமான, பாதுகாப்பான உணவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 100 குழந்தைகள் உண்ணும் சத்துணவிற்கு அரிசி 10 கிலோ, பருப்பு ஒன்றரை கிலோ, எண்ணெய் 100 கிராம், உப்பு 200 கிராம், கொண்டைக் கடலை 2 கிலோ, பச்சைப் பயறு 2 கிலோ, முட்டை 100, இப்பொருட்களை வாங்க வழங்கும் ரூபாய், காய்கறி ஒரு குழந்தைக்கு 20 பைசா, மளிகை சாமான் 9 பைசா, விறகு 15 பைசா. மொத்தம் ஒரு குழந்தைக்கு 44 பைசா, 100 குழந்தைகளுக்கு ரூபாய் 20 வீதம் காய்கறி வாங்கினால் எப்படி சத்துணவு தரமானதாக இருக்கும். ரூபாய் 9 இல் மளிகை சாமான்கள் வாங்கினால், இந்த ஆட்சியில் விலைவாசி ராக்கெட் வேகத்தில் ஏறிக்கொண்டிருக்கும்போது, எப்படித் தரமான சத்துணவாக இருக்கும். உலகம் போற்றும் தொலைநோக்குத் திட்டமான இத்திட்டம் சிறப்பாக அமைய ஒரு குழந்தைக்கு ஒரு ரூபாயாவது மானியம் வழங்கி சுகாதாரமான, தரமான சத்துணவு வழங்கிட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இத்திட்டம் சிறப்பாக அமைய, உதவும், 25 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து ஓய்வுபெறும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கிடவும், அரசுத் துறைகளில் ஏற்படுகின்ற இளநிலை உதவியாளர்கள் காலிப் பணியிடங்களில் பட்டதாரிகளாக உள்ள சத்துணவு அமைப்பாளர்களை, அங்கன்வாடி ஊழியர்களை அமர்த்திடவும், அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதுபோல் சத்துணவுப் பணியாளர்களுக்கும் மருத்துவப்படி, வீட்டு வாடகைப்படி, அகவிலைப்படி அனைத்தும் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, சத்துணவுப் பணியாளர்களுக்கு மாதம் ரூபாய் ஐந்தாயிரம் சம்பளம் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எங்கள் அம்மா அவர்கள், சத்துணவு ஊழியர்களுக்கு ஒட்டுமொத்தமாக, அமைப்பாளருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும், சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு



ரூபாய் இருபதாயிரமும் வழங்கிட ஆணையிட்டார்கள். இனி மாதாந்திர ஓய்வூதியமாக வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், ஓய்வுபெற்ற அமைப்பாளர், உதவியாளர்களுக்கு ஓய்வூதியம் இவர்கள் இறந்த பின்புகூட காலதாமதமாகக் கொடுக்கப்படுகிறது.

பிற்பகல் 12-45

வலங்கைமான் ஒன்றியத்தில் சந்திரசேகரபுரத்தில் துவக்கப் பள்ளியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற சமையலர் கே. இந்திராணி என்ற பெண் இறந்த பின்னரும் வாரிசுக்குப் பணி, ஓய்வூதியம் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவித் தொகையை பெறுவதற்குரிய விதிமுறைகளைத் தளர்த்தி கிராம நிர்வாக அலுவலர் அளிக்கும் சான்றிதழ்களின் அடிப்படையில் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறிட திருமணத்திற்கு முன்பு உதவித் தொகை கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு உதவிடும் வகையில் விண்ணப்பித்த அனைவருக்கும் இலவசமாக தையல் இயந்திரங்கள் கிடைத்திட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

இந்த ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.132 இலட்சம் ஆகும். ஒரு தையல் இயந்திரம் ரூ.3,300/-க்கு மேல் விற்பனையாகிறது. இதன்படி ஒரு மாவட்டத்திற்கு சுமார் 121 நபர்கள்தான் பயனடைய முடியும். எனவே, இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை இரட்டிப்புச் செய்து தகுதியுள்ள, விண்ணப்பித்த அனைவருக்கும் தையல் இயந்திரம் கிடைத்திட செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

திருமண உதவித் திட்டத்தில் விதவைப் பெண்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம், ஆதரவற்றப் பெண்கள், விதவைப் பெண்ணின் மகள் திருமண உதவித் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தி வருகின்றீர்கள். ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைவான பயனாளிகளே பயன்பெறும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். ஒவ்வொரு திட்டத்திலும் அதிக நபர்கள் பயனடையும் வகையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட உன்னதமான திட்டம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம். இது பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திட்டமாகும். அம்மா அவர்கள் ஒரு பெண் குழந்தை பிறந்தால் குடும்பத்தில் ஆணோ, பெண்ணோ கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டால், 22,200 ரூபாய் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால் தலா 15,200 ரூபாய், அதேபோன்று இரண்டாவது பிரசவத்தில் இரட்டைக் குழந்தைகள் பெண் பிள்ளைகளாகப் பிறந்தால் 15 ஆயிரம் ரூபாய் வைப்பீட்டுத் தொகையாக அளித்து, அதில் வரும் வட்டியை வைத்து குழந்தைகள் படிப்பதற்கு வழிவகை செய்தார்கள். இந்தத் திட்டத்தினை அம்மா அவர்கள் கொண்டு வந்து, பெண் குழந்தைகளே வேண்டாம் என்று வெறுப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்தத் திட்டத்தை எங்கள் அம்மாதான் கொண்டு வந்தார்கள் என்று பெருமைபடச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் மேம்பாடு அடைந்திட பெண்களுக்குப் பாதுகாப்பு கருதி பெண் மகளிர் ஆணையத்தினுடைய தலைவியே குழு உறுப்பினர்களோடு புகார் கொடுத்த அனைவரையும் ஒரே இடத்திற்கு வரவழைத்து புகாரின்மீது நடவடிக்கை எடுத்து, பல்வேறு துறைகளுக்குத் திருப்பி அனுப்பி நடவடிக்கை எடுத்தார்கள் எங்கள் அம்மா அவர்கள்.

அதேபோன்று, மகளிர் மேம்பாடு அடைந்திட வலங்கைமான் ஒன்றியம், விருப்பாட்சிபுரம், பாதிரிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள மகளிர் நூற்பாலையைச் சீரமைத்து மீண்டும் இயக்கினால் சுமார் 500 மகளிர் வேலைவாய்ப்புப் பெற முடியும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாக கறவை மாடுகள் வாங்குவதற்கு அரசு உதவி வழங்குகிறது. ஆனால், கறந்த பாலை நல்ல விலைக்கு விற்க முடியாத நிலையில்தான் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள் இருந்து வருகிறார்கள். பாலை அரசே கொள்முதல் செய்து மகளிருக்கான பொருளாதார முன்னேற்றத்தினை அடைய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொட்டில் குழந்தைத் திட்டம் மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த உன்னதமான திட்டம். இத்திட்டத்தைப் பாராட்டாதவர்கள் யாரும் இல்லை. அன்னை



தெரசா அவர்களால் பாராட்டப்பெற்ற மத்திய அமைச்சர் ரேணுகா சவுத்திரி அவர்கள் இந்தியா முழுவதும் கொண்டு வரப்பட வேண்டிய திட்டம் என்று கூறிய இத்திட்டத்திற்கு எங்கள் அம்மாவின் ஆட்சியில் 6.81 இலட்சம் ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், சென்ற ஆண்டு இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாத இந்த அரசு, இந்த ஆண்டு 6.21 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. ஆனால், ரூபாய் 60 ஆயிரம் எங்கள் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த நிதியைவிட குறைவாக ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். மனித உயிர்கள் விலைமதிக்க முடியாதவை என்று சொல்வார்கள். எங்கள் அம்மாவின் தொலைநோக்குச் சிந்தனையுடன் உருவாக்கப்பட்ட இந்த உன்னதத் திட்டத்தின்மூலம், சாக்கடைகளிலும், பேருந்துகளிலும், குப்பைகளிலும் வீசப்பட்ட குழந்தைகளை இறப்பிலிருந்து காக்கின்ற வகையில், இத்திட்டத்தினை சிறக்கச் செய்ய மேலும் நிதியினை ஒதுக்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) சரி, முடியுங்கள், முடியுங்கள்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** கிராமப்புற மாணவர்கள் நலன் கருதி பள்ளி பருவத்திலேயே, நடுநிலைப் பள்ளியிலே கணினிப் பயிற்சி அளித்திட கணினி வழங்கியவர்கள், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்கியவர் எங்கள் அம்மா. கிராமப்புற பெண்களின் கல்வி உயர்வை மேம்படுத்த, பாராட்டும் வகையில் +1, +2 மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியவர் எங்கள் இதய தெய்வம் அம்மா என்பதனைப் பெருமையாகக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) போதும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-வது முறையாக, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 2008-2009 ஆம் நிதி ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது, பேச வாய்ப்பு அளித்தத் தங்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஓர் அமைச்சராக நான் பேச இந்த அரிய வாய்ப்பினைத் தந்திட்ட தமிழினத் தலைவர், சட்டமன்றப் பேரவையில் பொன் விழாவைக் கண்ட தலைவர், தமிழகத்தின் ஒரே தலைவர், ஈடு இணையற்ற தலைவர், ஒப்பற்ற தலைவர், நான் தந்தையாக வணங்கும் நமது முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எங்களைப் போன்ற அமைச்சர்களுக்குக் கடின உழைப்பின் சின்னமாக, உந்துதலாக இருக்கும் கழகத்தின் தலைமகன் மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தின் தலைமகனாக நான் கருதும், பாசத்திற்கும், மரியாதைக்குமுரிய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் என் வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

தென் ஆப்பிரிக்க கறுப்பர் இனத்தின் விடுதலைக்காகப் போராடி வெற்றி பெற்ற தலைவர் நெல்சன் மண்டேலா கூறுகிறார், "சமுதாயத்தின் விளிம்பில் உள்ளவர்கள் 3 சாரார், அதாவது பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர். இவர்களை மனதில் வைத்து எந்த அரசாங்கம் திட்டங்களைத் தீட்டுகிறதோ, அதுவே ஒரு உன்னதமான அரசு, உயர்வான அரசு" என்று. அத்தகைய அரசுதான் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சிக் காலத்தில் காரணமே இல்லாமல் நிறுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம், இன்று புது மணப்பெண் பொலிவோடு ஏழையெளிய பெண்கள் வாழ்வில் ஒளி ஏற்றிடும் அருமருந்தாக உள்ளது. இத்திருமண நிதி உதவித் திட்டம் 1989 ஆம் ஆண்டு நமது முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டு, அப்போது உதவித் தொகை ரூ.5,000/- ஆகவும், 1996-ல் ரூ.10,000/- ஆகவும், 2006 ஆம் ஆண்டில் ரூ.15,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது 2008-2009 ஆம் நிதி ஆண்டில் ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஏனைய திருமண நிதி உதவித் திட்டங்களான அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண திருமண நிதியுதவித் திட்டம், அன்னை



தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மை நினைவு ஏழைப் பெண்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டங்களில் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.10,000/- ஆக இருந்த உதவித்தொகை, தற்போது ரூ.15,000/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இத்திருமண உதவித் திட்டங்களின் நோக்கம் செல்வினத்தை மட்டும் குறைப்பதற்கல்ல. சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அறிமுகப்படுத்தப்பட்டது இந்தத் திட்டங்கள். தந்தை பெரியார் நம்புகின்ற பெண்ணியத்தை, பெண் கல்வியை, சாதி மதம் இல்லாத சமுதாயத்தை உருவாக்குகின்ற, ஊக்குவிக்கின்ற திட்டங்கள். இந்த அனைத்து திருமண உதவித் திட்டங்களுக்கும், கடந்த ஆண்டு மட்டும் ரூ.132.82 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்தின் வாயிலாக 88,406 பெண்கள் பயனடைந்தார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1995 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட தாம்பரம் அரசு இடைநிலை பயிற்சிப் பள்ளி, நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, போதிய உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்து, மீண்டும் 2007 ஆம் ஆண்டு திறக்கப்பட்டு, இதன் வாயிலாக 40 ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைக் காப்பகங்களில், பயின்ற பெண்களுக்கு இலவசமாக ஆசிரியர் பயிற்சி வழங்கி வருகிறது.

பிற்பகல் 12-55

தற்போது இராமங்களிலிருந்து பெண்கள் அதிக அளவில் சென்னைக்குப் பணிபுரிய வருவதால் பாதுகாப்போடு, அதேசமயத்தில் குறைந்த வாடகையில் தங்குவதற்கு பணிபுரியும் பெண்களுக்கு விடுதி அவசியம் என்பதைப் பற்றி பல உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இதனைக் கருத்தில்கொண்டு மைய அரசுடன் இணைந்து சென்னை சாலிக்கிராமத்தில் 500 பேர் தங்கும் வகையில் சுமார் ரூ.13.13 கோடி செலவில் 5.32 ஏக்கர் நிலப்பரப்பில் 5 தொகுப்புகளாக விடுதிகள் அமைக்கப்பட உள்ளன. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை தொடங்குவதற்கு மாநில அரசு கடந்த ஆண்டு ரூபாய் 2 கோடி நிதியொதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு மகளிர் ஆணையத்திற்கு கொள்கை அளவில் தனி அதிகாரம் வழங்க இவ்வரசு முடிவு எடுத்ததன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் Statutory Rights வழங்கப்பட

உள்ளது. எதிர்காலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் காலதாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும் என்பதே இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், அக்டோபர் 26, 2006-ல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை தமிழகத்தில் 433 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குடும்ப வன்முறைச் சட்டத்தின் வாயிலாக இந்தியாவிலேயே முதன்முறையாக தீர்ப்பு வழங்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டு பெண்களுக்குத்தான் அதிக அளவில் அநீதி இழைக்கப்படுகிறது எனத் தவறாக நினைக்க வேண்டாம். குடும்ப வன்முறை உலக அளவில் எல்லாத் தரப்பு பெண்களுக்கும் எதிராக நடத்தப்படுவது ஒரு வேதனையான விஷயம். ஆனால், தமிழ்நாட்டில் பெரியார் வழி வந்த திராவிட இனப் பெண்கள் நெஞ்சுரமும், தன்னம்பிக்கையும் உடையவர்களாக உள்ளதால்தான், எதிர்ப்புகள் மத்தியில் மன வலிமையோடு சட்டத்தின் உதவியை நாடுகிறார்கள்.

இன்று உலக அளவில் ஆயிரம் ஆண்களுக்கு 995 அல்லது சரிசமமான பெண்களின் எண்ணிக்கை இருக்கிறது. ஆனால், நமது இந்தியத் திருநாட்டில் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஆண், பெண் விகிதாச்சாரம் எண்ணிக்கை ஆயிரம் ஆண்களுக்கு 933 பெண்கள் என்ற விகிதம்தான் உள்ளது. தமிழ்நாட்டு விகிதாச்சாரம் இந்திய விகிதாச்சாரத்தைவிட அதிகமாக இருந்தாலும், அதாவது ஆயிரம் ஆண்களுக்கு 987 பெண்கள் என்று இருந்தாலும், குறிப்பாக தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் ஆண் பெண் விகிதாச்சாரம் குறைவாக உள்ளது. கடந்த ஆண்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு இணைந்து கருத்துத் பட்டறைகள், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளன. எனினும், இவ்வாண்டு இந்த 5 மாவட்டங்களிலும் சிறப்புக் கவனம் செலுத்தி எதிர்காலப் பெற்றோர்களான மாணவ, மாணவிகளை முன்னிறுத்தி "பெண் குழந்தை போற்றுதும்" என்ற தலைப்பில் புதிய முயற்சிகளை எடுக்க சமூக நலத் துறை ஏற்பாடு செய்துள்ளது. தொட்டில் குழந்தைகளைப் பாதுகாக்க சிறப்பு குழந்தைகள் நல மருத்துவருக்கும், மேலும், அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வும் அளிக்கப்பட உள்ளது. இத்திட்டம் தொடங்கி இன்றைய தேதி வரை 1,595 குழந்தைகள் தத்து கொடுக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 202, பெண்கள் 1,393 ஆகும். தொட்டில் குழந்தைகள் திட்டம் போற்றுதலுக்குரியதோ அல்லது தூற்றுதலுக்குரிய திட்டமோ அல்ல. இத்திட்டம் இன்றைய



காலச்சூழலில் ஒரு தற்காலிகத் தேவையாக இருக்க வேண்டும் என்பதே டாக்டர் கலைஞர் அவர்களுடைய எண்ணம்.

இங்கே பலர், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அது எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டது என்று பேசினார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் வெறும் 1 கோடி ரூபாய் மட்டுமே இதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 2001 முதல் 2006 வரை 5 ஆண்டுகளில் 175.48 கோடி ரூபாய் நிதி முந்தைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுவும் கடைசி வருடத்தில் நீங்கள் 100 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். மற்ற வருடங்களில் எல்லாம் 1, 14 கோடி என மிகவும் குறைவாக ஒதுக்கீடு இருந்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2006-2007 முதல் 2008-2009 வரை ஆண்டுதோறும் தலா ரூ.75 கோடி வீதம், மொத்தம் 225 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிலும், எதிர்கால வாழ்விலும், டாக்டர் கலைஞர் அரசுதான் அதிக அக்கறை கொண்டுள்ளது எனத் தெளிவாகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1975 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்துப்பட்டு வந்தாலும், ஒவ்வொரு முறையும், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிபுரியும் காலங்களில்தான் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது உண்மை. இத்திட்டத்தின்கீழ் 6 மாதங்கள் முதல் 5 வயது வரை சுமார் 22 இலட்சம் குழந்தைகளும், 5 இலட்சம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களும், 4 இலட்சம் வளர் இளம் பெண்களும், 37,000 முதியோர்களும் பயன்பெற்று வருகிறார்கள். இந்தியாவில் முக்கியமாக 1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் மத்தியில்தான் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகமாக உள்ளதாகத் தெரிகிறது. ஆதலால், தமிழ்நாட்டில்தான் 1 முதல் 2 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு இணை உணவோடு வாரம் ஒரு முட்டையும், முன் பருவ பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் 3 முட்டைகளும் வழங்கப்படுகின்றன.

பிற்பகல் 1-00

வளர் இளம் பெண்களுக்குக் கல்வியின் முக்கியத்துவம், சுகாதாரம், ஊட்டச் சத்தின் மேன்மை மற்றும் சமுதாயப் பொறுப்பை

உணர்த்திடும் வகையில், முதன்முறையாக மாவட்டந்தோறும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை சென்னை, தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன. மேலும், இப்பேரணிகள் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவது மட்டுமல்லாமல், வருகின்ற ஆண்டில் வட்டார அளவிலும் நடத்தப்படும்.

தற்போது வட்டார அளவில் 30 வளர் இளம் பெண்கள் வீதம் மொத்தம் 13,020 வளர் இளம் பெண்களுக்கு இந்த ஆண்டு கணினிப் பயிற்சி அளிக்கப்படும்.

இன்றைய கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் மத்தியில் குறைந்த விலையில் அதிக சத்துள்ள நமது ஊரிலேயே கிடைக்கும் கடலை, கீரை வகைகள், வெல்லம் போன்ற உணவுப் பொருள்களை அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டாலே ஊட்டச் சத்துக் குறைபாடுகளைக் களையலாம் என்ற விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. எனவே, இதனைப் பெண்கள் அறிந்துகொள்ள ஏடுகள், ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 450.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஏனைய மாநிலங்களுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாகத் தமிழகம் சிறந்து விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஊட்டச்சத்துக் குறைபாட்டை வருகின்ற ஆண்டில் கணிசமாகக் குறைப்பதற்குச் சிறப்பு முயற்சிகள் எடுக்கப்படும்.

மதிய சத்துணவுத் திட்டம். இத்திட்டத்திற்குக் கடந்த ஆண்டு 781.44 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 820 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் வாயிலாக 2 முதல் 15 வரையுள்ள 74,69,473 நபர்கள் பயன் பெறுகிறார்கள். சத்துணவுத் திட்டத்தின் கோஹினூர் வைரம், முதல்வர் அறிமுகப்படுத்திய வாரம் 3 முட்டை வழங்கும் திட்டம். வாரந்தோறும் 2,10,84,057 முட்டைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. முட்டை உற்பத்தி செய்யப்படும் நாமக்கல்லிலே எந்த அளவுக்குத் தரமாக, நேரம் தவறாமல் வாரம் 3 முறை முட்டைகள் வழங்கப்படுகிறதோ அதே அளவில் தமிழகத்தின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரியிலும், மலை உச்சியிலுள்ள ஊட்டி, கொடைக்கானல், ஜவ்வாதுமலைகளிலுள்ள பள்ளிகளுக்கும் காலம் தவறாமல் சிறந்த முறையில் தரமான முட்டைகள் வழங்கப்படுகின்றன. இதை நான் ஏன் இவ்வளவு விரிவாகக்



கூறுகின்றேன் என்றால், முட்டை எளிதாக உடையக்கூடிய பொருள், அழுகக்கூடிய பொருள். முட்டை வழங்கும் திட்டத்தை வியந்து பார்க்கும்போது, ஒரு புத்தகத்தில் படித்த விவரம் ஒன்று நினைவுக்கு வருகிறது. "எந்தப் புதிய திட்டத்திற்கும் 3 படிகள் உள்ளன. முதலாவது படி Planning-திட்டமிடுதல், இரண்டாவது ordering-ஆணையிடுதல், மூன்றாவது delivery or implementation-கள அளவில் செயல்படுத்துதல். பைபிள் பழைய ஏற்பாட்டில் கூறுவதாக அந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது, "மோசஸ் திட்டமிட்டு 10 கட்டளைகளைக் கடவுளிடமிருந்து பெற்று வந்தாலும், இறுதிவரை அவரால் அதைச் செயல்படுத்த முடியவில்லை எனவும், கள அளவில் மாற்றத்தைக் கொண்டுவருவது எவ்வளவு கடினம்" என அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால், நமது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்காலத் தமிழகத்தைத் தாங்கிப் பிடிக்கப் போகின்ற மாணவ மாணவியர்களுக்கு வாரந்தோறும் 2 கோடிக்கு மேற்பட்ட முட்டைகளைச் சேதாரமில்லாமல் சிறப்பாக வழங்குவது நமது முதல்வர் அவர்கள் அரசின் நிர்வாகத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்று கூறினால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

நமது முதல்வர் அவர்களுடைய ஆட்சியில்தான் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்து மாணவர்கள் தவறாமல் பள்ளிக்குச் சென்று படிக்கவும், இடையில் பள்ளிப் படிப்பை நிறுத்தாமல் இருக்கவும் ஒரு முன்னேற்ற நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 2002-2003 ஆம் ஆண்டில் இடை நிற்றல்-drop-outs rate 12 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டு, 2006-2007 ஆம் ஆண்டு அது 2 சதவீதமாகக் குறைந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, மதிய சத்துணவுத் திட்டத்தில் நமது முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வாரம் 3 முட்டைகள் வழங்கும் திட்டமாகும். இதை நான் கூறவில்லை, 2007 ஆம் ஆண்டில் நடந்த தணிக்கைக் குழுவில் இதனைப் பாராட்டி எழுதப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஊனமுற்றோர் ஏனைய மக்களோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும், கல்வி பயில வேண்டுமென்பதற்காகவே இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகம்தான் காது கேளாதோருக்கும், மன வளர்ச்சி குன்றியோருக்கும் குழந்தைகளின் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆரம்பப் பயிற்சி மையங்கள்மூலம் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது. இச்சிறப்புப் பயிற்சி மையங்கள் அனைத்து

மாவட்டங்களிலும் தலா ஒரு பயிற்சி மையம் வீதம் தொண்டு நிறுவனங்களோடு இணைந்து சிறப்பாகச் செயல்படுகின்றன. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் பார்வையற்ற மாணவ மாணவியர்களுக்கு பாடங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்கள் மற்றும் ஒலிநாடா இயக்கிகள், செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கு இலவசமாக B.Com., B.C.A., படிப்பு, பார்வையற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பேசும் மென்பொருள் அடங்கிய கணினி, ஊனமுற்ற மாணவ, மாணவியர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனம், தமிழை பயிற்று மொழியாகக் கொண்ட பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசு ஆகிய அனைத்து திட்டங்களும் 2006 ஆம் ஆண்டில் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள் ஆகும். ஊனமுற்றோர்கள், வேலைவாய்ப்பில் மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்துவதில் இவ்வரசு உறுதியாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-05*

பட்டதாரி ஆசிரியர் படிப்பு முடித்து வேலையின்றி இருந்த பார்வையற்றோரின் வேண்டுகோளை ஏற்று, 200 பார்வையற்றோருக்கு 2007 ஆம் ஆண்டில் சிறப்பு இனமாகக் கருதி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை வழங்கி ஆணையிட்டது நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இதுவரை 5,07,258 ஊனமுற்றவர்களுக்குத் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. நமது முதல்வர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியினால் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 4,11,981 தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுகளிலே வெறும் 1,28,277 நபர்களுக்கு மட்டுமே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஊனமுற்றோர் மற்றும் நலிந்தோர்மீது நமது முதல்வர் காட்டுகின்ற பரிவே தனித்துவமானது. It is very unique.

பொதுவாக, தொழுநோயாளிகள் அதிக அளவு ஆலயங்களின் வாசலில் அமர்ந்து இருப்பது வழக்கம். கடவுளின் கண் பார்வை அவர்கள்மீது பட்டதோ இல்லையோ. ஆனால், கருணையே வடிவமான நமது டாக்டர் கலைஞர் அவர்களின் பார்வை



பட்டதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 1971 ஆம் ஆண்டு உலகத்திலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு தொழுநோயாளிகளுக்கான 10 மறுவாழ்வு இல்லங்களை தமிழ்நாட்டில் அமைத்தவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். 2007 ஆம் ஆண்டில் 25 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக மனவளர்ச்சி குன்றியோருக்காக ஒதுக்கி இந்தச் சிறப்பு ஒதுக்கீட்டால் தற்போது 30,000 மனவளர்ச்சி குன்றியோர் வயது வரம்பில்லாமல், வருமான உச்சவரம்பு இல்லாமல் மாதந்தோறும் ரூ.500/- பெற்று வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த ஆண்டு நமது நிதிநிலை அறிக்கையில் கூறியதுபோல், முதன்முறையாக Duchenne Muscular Dystrophy என்ற ஒருவிதமான தசை நோய் பாதிக்கப்பட்டவருக்கு மாதந்தோறும் ரூ.500/- உதவித் தொகையாக வழங்க உத்தரவிட்டார்கள் நமது முதல்வர் அவர்கள். நான் இந்த விவரத்தை இன்னும் கொஞ்சம் விவரமாக, விரிவாக உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்த Duchenne Muscular Dystrophy என்ற நோய் ஆண்களை மட்டுமே தாக்கும் மரபணு சார்ந்த நோய். இந்த நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், முதலில் 6 முதல் 8 வயது வரை கை, கால்களை உபயோகிக்க முடியாமல் இருப்பர். பின்னர், உடல் தசைகள் படிப்படியாக வலுவிழந்து இறுதியாக சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு 20 முதல் 25 வயதில் தங்கள் நிலையை உணர்ந்தவாரே மரணம் அடையும் ஒரு கொடுமையான நோய். இந்த நோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் தொகை வழங்க முடிவெடுக்கப்பட்டபோது முதலில் ரூ.50,00,000/-தான் ஒதுக்கப்பட்டது. அப்படி ரூ.50,00,000/- மட்டும் ஒதுக்கப்பட்டால் குறிப்பிட்ட சில நபர்களுக்கு மட்டும்தான் உதவித் தொகை வழங்க முடியும். பாதிக்கப்பட்ட அத்துணை பேருக்கும் வழங்க முடியாது எனக் கருதி, தாயுள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள், Standing Finance Committee கூட்டத்தில் பேசும்போது ரூ.50,00,000/- என்ற உச்சவரம்பை எடுத்துவிட்டு, தமிழ்நாட்டில் இந்நோயால் பாதிக்கப்பட்ட அத்துணை பேருக்கும் உதவித் தொகை வழங்கிட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களே, தாங்கள் 5 ஆம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருப்பது வேறு எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கோ இல்லையோ, இதுபோன்ற மனிதாபிமான திட்டங்களை நிறைவேற்றத்தான் என மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியில், 5 ஆண்டுகளில், ஊனமுற்றோர் நலத் துறைக்கு செலவழித்த தொகை மொத்தம் ரூ.143.97 கோடியே ஆகும். எங்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இதுவரை 203.13 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஊனமுற்றோர்களும் தமிழகப் பொருளாதார வளர்ச்சியில் பயனடைய வேண்டும் என்ற முனைப்போடு செயல்படுகிறது டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு. சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் 1,21,425 பேர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பணி நியமனத் தடைச் சட்டத்தை நீக்கி, சத்துணவு மற்றும் குழந்தைகள் மையங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏழை ஆதரவற்றப் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து 29,497 காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் பதவி உயர்வு வழங்காமல் இருந்த 1,051 நபர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 31 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையும் வழங்கப்பட்டது, நமது முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான். இதிலிருந்து வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், அரசு ஊழியர்களை அக்கறையோடு கவனித்துக்கொள்வதிலும், முதன்மையானவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே என்பது புலனாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

அரவாணிகள் நலம், 2008-2009 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் அறிவித்தபடி, அரவாணிகளுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டு, அதற்காக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வயது முதியோர், ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு தமிழக அரசு, ஓய்வூதியத் திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. முக்கியமாக தேசிய முதியோர் உதவித் தொகைத் திட்டம் என்பது, இந்திரா காந்தி முதியோர் தேசிய உதவித் திட்டம் எனப் பெயரிடப்பட்டு, முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் பிறந்த நாள் அன்று 2007 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு ஆதரவற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை 1-8-2006 முதல் ரூபாய் 200/-லிருந்து ரூபாய் 400/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தில் தற்போது பயனாளிகளின் எண்ணிக்கை 14 இலட்சத்து 46 ஆயிரம் ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக கூடுதலாக 2 இலட்சத்து 49 ஆயிரத்து 180 முதியோர்கள் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் திரைப்படங்களில் பெண்களைப் புகழ்ந்து, போற்றிப் பாடிய ஒரு பெண்ணை முதல்வராகப் பெற்றிருந்தாலும், பெண்களின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில், அக்கறை உடையவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களின் துணிவுக்கு உதாரணமாக விளங்கிய கற்புக்கரசி கண்ணகி சிலையை மீண்டும் நிறுவியதாகட்டும், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியதாகட்டும், மகளிர் சுய உதவிக் குழுத் திட்டமாகட்டும், இதைப்போல பல உதாரணங்களை நான் அடுக்கிக்கொண்டே போகலாம். பெண்களின் உயர்வுக்காகப் பாடுபடும் முயற்சியைத் தொடர்ந்து இன்றளவும் செய்துகொண்டிருக்கின்றார் நமது முதல்வர். அதில் முத்தாய்ப்பானது, முக்கியமானது, பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டுமென வலியுறுத்தி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு சமூக நலத் துறையின் வாயிலாக நமது முதல்வர் அவர்கள் 16-6-2007 ஆம் நாளன்று கடிதம் எழுதியுள்ளார்கள். உறுதியாக 33 சதவிகித இட ஒதுக்கீடு நமது முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு சட்டவடிவம் பெறும் என்பது நிச்சயம்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் புதிய அறிவிப்புகள். பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட மையங்களிலுள்ள 10,327 காலிப் பணியிடங்கள் இவ்வாண்டு நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் 31 பாதுகாப்பு அலுவலர்களும், அவர்களுக்குத் தேவையான 31 அமைச்சுப் பணியாளர்களும் உடன் நியமனம் செய்யப்படுவார்கள். சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் 12 நன்னடத்தை அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

சமூக நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் திருமண நிதியுதவித் திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் தமிழக அரசு

இணையதளத்திலிருந்து பொதுமக்கள் எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்படும்.

தமிழ்நாட்டில் தத்து எடுக்கும் திட்டம் செயல்படாத 20 மாவட்டங்களில் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படும். தத்துத் திட்டத்தின் பயனை விரிவாக மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் மாவட்டம் மற்றும் மாநில அளவில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.

முதல் முறையாக தமிழ்நாட்டில் அரவாணிகள் குறித்த கணக்கு எடுப்பு விவரங்கள் அடங்கிய தகவல் தொகுப்பு துறையின்மூலம் நிறுவப்படும். இத்துறையின்கீழ் இயங்கும் சேவை இல்லங்களிலுள்ள ஏழைப் பெண்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி, கணினிப் பயிற்சி வழங்கப்படும். மாவட்ட மறுவாழ்வு மையங்கள் நல்ல முறையில் இயங்க ரூபாய் 47.40 இலட்சம் செலவில் கணிப்பொறிகள் மற்றும் துணைக் கருவிகள் வழங்கப்படும். சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இல்லங்களிலும் உள்ள சிறார்களுக்கு மறுவாழ்வு அல்லது ஆற்றுப்படுத்தல் அதாவது கவுன்சிலிங் வழங்க அனைத்து மாவட்டங்களிலும் 31 வள மையங்கள் ஏற்படுத்தவும், அவர்களது வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையில் கணினிப் பயிற்சி, துரித உணவு தயாரித்தல், செல்லிடப்பேசி பழுதுபார்த்தல் ஆகிய நவீன தொழில் பயிற்சிகள், உடற்பயிற்சி, இசை, நடனம், விளையாட்டுப் பயிற்சி அளிக்கவும் ரூபாய் 37.84 இலட்சம் செலவிடப்படும். அதேபோல, சிறார்கள் தங்கும் இல்லங்கள் வளர்ச்சிக்குத் தேவையான சூழலை உருவாக்கும் வகையில் ரூபாய் 80.88 இலட்சம் செலவில் நவீன முறையில் மேம்படுத்தப்படும். அதேபோல, பார்வையற்ற சிறுவர்களின் முன்பருவக் கல்வி மையங்களை ஐந்து மாவட்டங்களில் அமைப்பதற்கு 18 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 1-15

இறுதியாக, ஓரேயொரு கருத்தினைக் கூறி என் உரையை முடிக்க விரும்புகின்றேன். ஐந்தாவது முறையாக நமது முதல்வர் தமிழகத்தின் உயர்வுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், அந்தப் பணியில் எனக்கும் ஒரு சிறிய இடம் உள்ளது என நினைக்கும்பொழுது மனம் நெகிழ்கிறது; பெருமிதம்கொள்கிறது. நமது முதல்வரை உலகத் தலைவர்களுக்கு இணையாக ஒப்பிட்டு, உயர்த்தி பல மேடைகளிலும், இந்த அவையிலும் பேசியதை நான்



அறிந்துள்ளோன். எனக்கோ, சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு, கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்ட அசோக சக்கரவர்த்தி போன்ற முதல்வரை நாம் பெற்றுள்ளோம் எனக் கருதத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை வெளிப்படுத்துவதற்கு முக்கியக் காரணம், அசோகரின் 6-வது கற்சாசனத்தில் எழுதப்பட்ட சொற்றொடரை இங்கு படிக்க விரும்புகின்றேன். அசோகர் கூறுவதாவது: "At all times whether I am eating or at home or at the cattle shed or in my carriage or in my gardens, wherever I may be, my informants keep me in touch at public business. Thus everywhere I transact business" அதாவது "எல்லா தருணங்களிலும் நான் உண்ணும்போதும், வீட்டில் இருக்கும்போதும், தொழுவத்தில் இருக்கும்போதும், பயணிக்கும்போதும், தோட்டத்தில் இருக்கும்போதும், எங்கிருந்தாலும் தொடர்ந்து என்னுடைய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, சமுதாயத்திற்காகப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றேன்" என்று அசோக சக்கரவர்த்தி கூறுகிறார். அதேபோல, நமது முதல்வரும் இல்லத்தில் இருந்தாலும் சரி, கோட்டையில் இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சியில் இருந்தாலும் சரி, அண்ணா அறிவாலயத்தில் இருந்தாலும் சரி, 'முரசொலி' அலுவலகத்தில் இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் அத்தனை நேரமும் அரசு அதிகாரிகளையும், அமைச்சர்களையும் தம் தொடர்பிலே வைத்துக்கொண்டு, தமிழ்நாடு, என் தமிழ் மக்கள் என்று பணிபுரிந்து வரும் ஓர் உன்னத முதல்வராக (மேசையைத் தட்டும் ஒலி) அசோக சக்கரவர்த்திக்கும் மேலான, தமிழினத்தின் ஒரே சக்கரவர்த்தியாக அவரை நான் காண்கின்றேன் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அத்தகைய முதல்வரின் வழிகாட்டுதலில், ஒரு காலகட்டத்தில் உதவித் தொகை வழங்குவதும், உபகரணங்கள் வழங்குவது மட்டுமே சமூக நலத். துறையின் வேலை என்ற நிலை மாறி, இன்று சமுதாயத்தின் விளிம்பில் உள்ளவர்களுக்குக் கல்வியையும், வேலைவாய்ப்பையும் வழங்கி, அவர்களையும் தன்னம்பிக்கை உடையவர்களாக மாற்றும் துறையாக இத்துறை ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

அதாவது, நமது முதல்வர் விளைச்சலுக்கு விதை நெல்லையும் தருவார்; உண்பதற்கு உணவையும் தருவார். இனி வருங்காலங்களில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இன்னும் சிறப்பாகச் செயல்படும் என உறுதியளிக்கின்றேன். இங்கு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைக் கூறினார்கள். அதனை மனதில்

உள்வாங்கிக்கொண்டு, சிறந்த மாற்றங்களை நாங்கள் கொண்டு வருவோம் எனக் கூறிக்கொண்டு, 332 வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு பேரவைத் தலைவரின்வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட, நெடுங்காலமாக முதியோர், ஊனமுற்றோர்களுக்கு நாம் நிதி உதவி அளித்து வருகிறோம். தமிழகத்தின் சார்பிலே எத்தனை பேர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சமீப காலமாக மத்திய அரசாங்கத்தின்மூலமாகவும் ஊனமுற்றவர்களுக்கும், முதியோர்களுக்கும் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் எவ்வளவு நிதி தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது; எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது என்கின்ற விவரத்தைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் (குறுக்கீடு) அமைச்சர், மொத்தமாகப் பதில் சொல்லிவிடுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூக நலத் துறையின் சார்பாக அவையில் வைக்கப்பட்டிருக்கிற ஏடுகளில் 'தாயாகப் போகும் பெண்ணே, உனக்கு 10 கட்டளைகள்' என்ற தலைப்பில் இங்கு வைக்கப்பட்டிருக்கிற ஒரு புத்தகத்தில், 'சட்டப்படி திருமண வயது பெண்ணுக்கு 18-ம், ஆணுக்கு 21 என்றிருந்தாலும், உடல் ரீதியில் மற்றும் மருத்துவ ரீதியில் பெண்ணுக்கு 21 வயதிலும், ஆணுக்கு '25 வயதிலும், திருமணம் செய்வது சிறந்தது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'பிள்ளைப்பேற்றிற்கான உடல் பக்குவமும், மனப் பக்குவமும் ஒரு பெண் 21 வயதில்தான் அடைகிறாள்; எனவே, பெண்ணுக்கு 21 வயதிற்குப் பிறகே திருமணம் செய்ய வேண்டும்' என்று குறிப்பு சொல்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புவது,



அவரும் ஒரு மருத்துவராக இருக்கின்ற காரணத்தினாலே, பெண்களுக்கு மகப்பேறு பெறுவதிலே இப்படி நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்ற காரணத்தினாலும், பெண் தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஏதுவாக அந்த மனப் பக்குவத்தையும், தன்னம்பிக்கையும் ஏற்றுக்கொள்கின்ற வகையில் 21 வயதில் திருமணம் என்பதையும், 25 வயதில் ஆண் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதையும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து, இதைக் கட்டாயப்படுத்துவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? எதிர்வரும் காலங்களில் இதை அமல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சமூக நலத் துறையினுடைய திட்டங்கள், மத்திய, மாநில அரசினுடைய சமூக நலத் துறைத் திட்டங்களும், மாநில அரசினுடைய சமூக நலப் பணிகளும் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பணம், மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி, இந்தியாவிலேயே மிக அதிகமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வருகின்ற பணம் தமிழ்நாட்டில்தான் அதிகம் என்கிற தகவல் வந்திருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் ஏறக்குறைய 500 கோடி ரூபாய் தமிழகத்திலே இருக்கின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு சமூகப் பணிகளுக்கா வந்திருக்கிறது. இந்த நிறுவனங்கள் எதற்காக அந்தப் பணத்தை பெற்றுக்கொள்கிறார்களோ, அந்தத் திட்டத்திற்காக அந்தப் பணத்தை பயன்படுத்துகிறார்களா என்பதை ஆராய்வதற்கும், விசாரிப்பதற்கும் தமிழக சமூக நலத் துறையிடம் ஏதாவது agency அல்லது procedure இருக்கிறதா? அப்படி அவர்கள் கண்காணிக்கப்படுகின்றபோது, அவர்கள் நன்கொடையாக வெளிநாடுகளிலிருந்து திரட்டிய பணத்தை, முறையான சமூக நலப் பணிகளுக்குச் செலவிடவில்லை என்று சொன்னால், அவர்களைக் கருப்புப் பட்டியலிலே, black-list-லே சேர்ப்பதற்கும், அப்படிப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு சாதாரண பொது மக்களோ, பயனீட்டாளர்களோ நம்பி, பணத்தையோ தங்களுடைய சேவைகளையோ இழந்துவிடக்

கூடாது என்பதை அறிவிப்பதற்காக ஒரு பொது அறிவிப்புப் பட்டியலும் வெளியிடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பும் அதேவேளையிலே, உடல் ஊனமுற்றோருக்கான நல உதவிகள் 40 விழுக்காடு உடல் ஊனம் இருந்தாலே அந்த நல உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று நான் என்னுடைய கோரிக்கையினை பொது விவாதத்திலேயே வைத்தேன். ஆந்திராவிலே 80 விழுக்காடு உடல் ஊனம் இருந்தால்தான் உடல் ஊனமுற்றோருக்கான நல உதவிகளை அளிக்கலாம் என்ற அந்த விதியை மாற்றி, 40 விழுக்காடு உடல் ஊனம் இருந்தாலே போதும், அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற அறிவிப்பை ஆந்திர அரசு செய்திருக்கிறது. அந்த அறிவிப்பையும் இந்த அரசு பின்பற்ற முன்வருமா என்று உங்கள்மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நினைத்து நினைத்து எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கான பேறுகால உதவித் திட்டம் மதுரை மாநகராட்சி எல்லையில், குறிப்பாக அனுப்பானடி பகுதியிலும் வேறு பல பகுதிகளிலும், முறையாக வந்து சேர்வதில் சிரமம் இருப்பதாகத் தெரிகிறது. இதுசம்பந்தமாக தமிழக அளவிலும்கூட உரிய விசாரணை நடத்தி, பயனாளிகளுக்குச் சென்று சேர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல உடல் ஊனமுற்றவர்கள் விஷயத்தில் 40 சதமானம் என்பதே போதுமானது என்பதை வலியுறுத்த வேண்டும் என்பதையும் நானும் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, டாக்டர் திருமதி காயத்ரி தேவி சொல்லுங்கள்.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் சொன்னதுபோல், நிறைய மனிதாபிமான செயல்களைச் செய்துகொண்டிருக்கும் இந்த அரசு, யானைக்கால் வியாதியால் பாதிக்கப்பட்ட மூன்றாவது டிகிரி மற்றும் நான்காவது டிகிரி நோயாளிகளை ஊனமுற்றோராக ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதால், அவர்கள் பெரும்பாலும் பிச்சைக்காரர்களாக மாறிவிடுகிறார்கள். இவர்களை ஊனமுற்றோராக ஏற்று அவர்களுக்கு ஊனச் சான்றிதழ் வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற இந்த அரசு முன்வருமா?



அதேபோல் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிக்கொண்டிருக்கும் சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களை 1989 ஆம் ஆண்டில் பகுதி நேர நிரந்தரப் பணியாளர்களாக நியமித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞரின் அரசு, இப்போது அவர்களை முழுநேர நிரந்தரப் பணியாளர்களாக்க, ஓய்வுபெற்ற பிறகு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சகோதரி யசோதா கேட்ட கேள்விக்கான பதில். முதியோர் உதவித் திட்டத்திற்கு வருடந்தோறும், 455.15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்களிப்பும் உள்ளது. ஆனால், ஒன்றை நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். மத்திய அரசு பங்களிப்பு அளிப்பதற்கு முன்பாகவே, 400 ரூபாயாக உயர்த்திய அரசு டாக்டர் கலைஞர் அரசு என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் ஒரு கேள்வி எழுப்பினார்கள். மருத்துவ ரீதியாக அது ஒரு நியாயமான கேள்வி. கண்டிப்பாக இது கொள்கை அளவில் எடுக்கப்பட வேண்டிய முடிவு. நமது முதல்வர் அவர்களைக் கலந்தாலோசித்து உரிய பதிலை நான் தருவேன் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியதுபோல 40 சதவீதம் உடல் ஊனம் இருந்தால் உதவித் தொகை அளிக்க வேண்டும் என்பதும் ஒரு policy decision.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறித்து கடந்த வருடமும் இதே கேள்வி எழுப்பப்பட்டது. அதன்பிறகு, ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. ஒவ்வொரு தன்னார்வத் தொண்டு நிறுவனமும் அரசாங்கத்தின் வாயிலாகத்தான் செயல்பட வேண்டும்; மூன்று வருடங்கள் சிறப்பாகச் செயல்பட்டால்தான், அவர்களுக்கான

லைசென்ஸ் வழங்கப்படும். பிரச்சினையேதும் இருந்தால், அந்த லைசென்ஸ் பறிக்கப்படும். ஆனால், உறுப்பினர் சொன்னதுபோல, income tax, அது மத்திய அரசைச் சார்ந்தது. அது குறித்து கொள்கையளவில் முடிவெடுக்க வேண்டும். மத்திய அரசும், மாநிலம் அரசும் இணைந்து எடுக்க வேண்டிய ஒரு கொள்கை முடிவாகுமென நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 1-25*

அதேபோல, திரு. நன்மாறன் அவர்கள் கேட்ட கேள்வி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டியது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) அதற்கு முதல்வர் அவர்களிடம் கலந்தாலோசித்தபின் நடவடிக்கை எடுக்கிறேன். உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்கள் கூறியதுபோல, யானைக்கால் நோயாளிகளை ஊனமுற்றவர்கள் பட்டியலில் சேர்ப்பது குறித்து வருகின்ற ஆண்டில் பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 45 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45- சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,733,09,66,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.80,90,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22-4-2008)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*44. நமக்கு நாமே திட்டப் பணிகளின் மதிப்பீடுகளில் அரசின் பங்களிப்பு 50 விழுக்காடு மற்றும் அதற்குக் குறைவான அளவுள்ள இனங்களில் பங்களிப்பாளர்கள் விருப்ப அடிப்படையில் அவர்களாகவே அப்பணியை நிறைவேற்ற வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அறிவிக்கையிட்டது குறித்து நிதித்(சம்பளங்கள்) துறையின் 14-11-2007 ஆம் நாளிட்ட 548 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*45. டெல்லி மெட்ரோ இரயில் நிறுவனத்தை சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக ஓராண்டு காலத்திற்கு இடைக்கால ஆலோசகர்களாகவும், அதன் பின்னர் பிரதான ஆலோசகர்களாகவும் நியமிப்பதற்காக அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 13-2-2008 ஆம் நாளிட்ட 45 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

16. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

17. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

104. மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

105. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

106. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2008. (தமிழ், ஆங்கிலம்)

107. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

108. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)



# இணைப்பு

*(348 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 45

## சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### அத்தியாயம் 1

**முன்னுரை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்கீழ் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை புதிய மற்றும் புத்தாக்கத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது. அரசு, அதன் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகளின்மூலமாக, சமுதாயத்தின் விளிம்பில் உள்ள பிரிவினர்களாகக் கருதப்படும் மகளிர், குழந்தைகள், முதியோர், உடல் இயலாமையுற்றோர் ஆகியோருக்குமட்டுமின்றி கடைநிலை பிரிவினரென்று கருதாது அரவாணிகளுக்கும் உளங்கனிந்து வாழ்வளித்துள்ளது. இத்தகைய கடைநிலைப்படுத்தப்பட்ட பிரிவினர்கள் அனைவரையும் வாழ்வில் மேம்படுத்துவதற்கு உகந்த சூழல்களை உருவாக்குவதற்கு தாராளமாக நிதியொதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து 11-ஆவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணம் விரிவாக விளக்கமளித்துள்ளது.

சத்துணவுத் திட்டத்தில் 2 வயது முதல் 15 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு வாரத்திற்கு மூன்று முட்டைகளும், 1 வயது முதல் 2 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒரு முட்டையும் வழங்குவதை அறிமுகம் செய்தது. தமிழக அரசு தொடங்கிய ஓர் ஒப்பற்றத் திட்டமாகும். இத்தகு இளம்பிஞ்சுகளுக்கு வாரத்திற்கு மூன்று முட்டைகள் அளிப்பதனால் அவர்களுக்கு பசி தூண்டப்படுவதுடன், அது அவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கும் வழி வகுக்கும்.

இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் ஊட்டச்சத்து குறைவு பரவலாக நிலவுகின்ற போதிலும், நமது ஒட்டுமொத்த சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, ஊட்டச்சத்துக் குறைவின் சதவீதம் 0-3 வயது குழந்தைகளிடையே 0.04 சதவீதமும் 3-6 வயது குழந்தைகளிடையே 0.01 சதவீதமும் ஆகும். இது, தேசிய சராசரி சதவீதத்தை விடக் கணிசமான அளவு குறைவானதே ஆகும். வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பால் ஊட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு போதிய அளவிற்கு ஊட்டச்சத்து, உடல் நலனுக்கேற்ற உணவு, கல்வி, துப்புரவு மற்றும் உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்வது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அறியச் செய்வதற்கும் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

திருமண நிதியுதவித் திட்டங்கள் இளம் பெண்களுக்கு நிதியுதவி அளிப்பதுடன் அவர்கள் பள்ளிப் படிப்பை முடிப்பதற்கான ஊக்கத் தொகையாகவும் உள்ளது. கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரும் மணமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது ஊக்கமளிப்பதாக உள்ளது. சுருங்கக்கூறின் மாபெரும் திராவிட இயக்கங்கள் போராடிய சமுதாயப் பிரச்சினைகளான மகளிர் கல்வி, விதவைகள் மறுமணம், சாதித் தடைகளைத் தகர்த்தெறிதல் ஆகியவற்றுக்கு இத்தகைய திருமண நிதியுதவித் திட்டங்கள் வழிவகுத்துள்ளன.

இயலாமையுற்றோர் பிரிவானது கருணை காட்டத்தக்க முறைமையிலிருந்து கருணை மற்றும் அதிகாரமளித்தல் முறைமைக்கு மாறியுள்ளது. இந்திய திருநாட்டிலேயே தமிழகத்தில் மட்டும்தான், காது கேளாதோரையும், மனவளர்ச்சி குன்றியோரையும் தொடக்க நிலையிலேயே கண்டறிதல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் மையங்கள் தொடங்குதல், உடல் இயலாமையுற்றோருக்கு மோட்டார் பொருத்திய சைக்கிள்கள் வழங்குதல், காது கேளாதோருக்கான பட்டப்படிப்பு பிரிவைத் தொடங்குதல் போன்ற பல்வேறு புத்தாக்கத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. கடுமையான மனவளர்ச்சி குன்றிய சுமார் 30,000 பேருக்கு . இந்த அரசு மாதந்தோறும் ரூ.500 நிதியுதவி அளித்து வருகிறது.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்கான நிதியொதுக்கும் 14,46,804 நபர்கள் பயனடையும் பொருட்டு ரூ.703.39 கோடியிலிருந்து 836.55 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரவாணிகளும்,



ஒட்டுமொத்த சமுதாயத்தினருடன் ஒருங்கிணையும் வகையில் முதன் முதலாக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கியதன்மூலம் தமிழக அரசு வழக்கமான நடைமுறைகளைத் தகர்த்தெறியும் வகையில் நடவடிக்கையை எடுத்துள்ளது.

தமிழகம், பல்வேறு துறைகளிலும் அதிவிரைவான பொருளாதார வளர்ச்சியடைந்துள்ளதுடன், நாட்டிலேயே பல்வேறு துறைகளில் ஏனையோருக்கு முன்மாதிரி மாநிலமாக விளங்குவதால் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின்மூலமாக வளர்ச்சிக் கனியை அத்தகைய ஒதுக்கப்பட்ட பிரிவினரும் துய்ப்பதை உறுதி செய்ய வேண்டுமென்பதே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பமாகும்.

## அத்தியாயம் 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

**2.1** மகளிர் மற்றும் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை கடினச் சூழ்நிலைகளில் உள்ள பெண்கள் மற்றும் சிறார்கள் கல்வி கற்பதற்கும், ஏழை பெண்கள் திருமணம் / மறுமணம் செய்ய ஏதுவாகவும் நிதியுதவி வழங்கி பல்வேறு வகையான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதற்கும், பாலின வேறுபாட்டைக் களைவதற்காகவும், வளர் இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தும் வகையிலும் அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கி சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றது. பள்ளி செல்லும் மாணவர்க்கு ஊட்டச்சத்துமிக்க மதிய உணவு வழங்குவதன்மூலம் அவர்களின் உடல் நலத்தின் வளர்ச்சியை உறுதி செய்வதுடன், அவர்களின் கல்வித் திறனை அதிகரிக்கவும் ஏற்றவாறு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மகளிர் நலத் திட்டங்கள்**

### 2.2 திருமண உதவித் திட்டங்கள்

ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர் / பாதுகாவலர் தங்களது பெண்களுக்குத் திருமணம் செய்து வைப்பதில் உள்ள பிரச்சினைகளை நீக்கி அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, தமிழக அரசால் ஐந்து வகையான திருமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டங்களால் ஏராளமான இளம் பெண்கள் மற்றும் பெற்றோர் பயனடைகின்றனர்.

### 2.2.1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்

பெண்களின் கல்வி நிலையை உயர்த்துவதனை அடிப்படையாகக் கொண்டு, எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த, 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் திருமணத்திற்கென அவர்களின் பெற்றோருக்கு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு

திருமண நிதியுதவித் திட்டம் 3-6-1989 முதல், திருமண நிதியுதவித் தொகையாக ரூ.5,000/- வழங்கும் வகையில் தொடங்கப்பட்டது. பின்னர், திருமண நிதியுதவி பெறுவதற்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பாகவும், அத்துடன் திருமண நிதியுதவி ரூ.10,000/- ஆகவும் உயர்த்தப்பட்டது. 1.4.2002 முதல் நிறுத்தி வைக்கப்பட்ட இத்திட்டம், 3.6.2006 ஆம் தேதி முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, திருமண நிதியுதவியும் ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் நிதியாண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூ.20,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.130 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 65,000 ஏழைக் குடும்பங்கள் பயனடையும்.

### 2.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவை மறுமண நிதியுதவித் திட்டம்

இளம் வயதில் கணவனை இழந்து வாழ்வில் துயருறும் ஏழைப் பெண்கள் மறுமணம் செய்து புதுவாழ்வு பெறுவதை ஊக்குவிக்கும் சமுதாயச் சீர்திருத்தத்தினைக் கருத்திற்கொண்டு, விதவை மறுமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் பெயரில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவியாக ரூ.15,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் 20 வயதுள்ள விதவைகளுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய வருமான வரம்பு இல்லை.

2008-2009-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 166 விதவைகள் பயனடையும் வகையில் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம்

தாய் மற்றும் தந்தையை இழந்த, ஆதரவற்ற பெண்களுக்குத் திருமணம் செய்வதற்காக அன்னை தெரசா நினைவாக திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் ஒவ்வொரு ஆதரவற்ற பெண்ணின் திருமணத்திற்கும் ரூ.15,000/- திருமண நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவோர் அல்லது அப்பெண்ணின் பாதுகாவலரின் ஆண்டு வருமானம்

ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். பெண்ணிற்கு 18 வயது முடிவுற்றதாகவும், 30 வயதுக்கு மேற்படாததாகவும் இருக்க வேண்டும்.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 273 ஆதரவற்றப் பெண்கள் பயனடையும் வகையில் ரூ.11 இலட்சம் ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.2.4 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம்**

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் விதவைத் தாய்மார்கள், தங்களது பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதற்குப் போதுமான பொருளாதார வசதியின்றி இன்னலுறுகின்றனர். இம்மாதிரியான ஏழை விதவைத் தாய்மார்களின் துயர் தீர்க்கும் வகையில் அவர்களது மகள் திருமணத்திற்கென ரூ.15,000/- நிதியுதவியாக வழங்கும் திட்டம் ஈ.வெ.ரா. மணியம்மையார் பெயரில் செயல்படுத்தப்படுகிறது.

ஆண்டு வருமானம் ரூ.12,000/- வரை உள்ள விதவைத் தாயின் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்ணின் திருமணச் செலவினத்திற்கு இந்தத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 1533 ஏழை விதவையர் மகள்கள் பயனடையும் வகையில் ரூ.230.00 இலட்சம் ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.2.5 அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்**

சமுதாயத்தில் காணப்படும் சாதி வேறுபாடுகளைக் களையும் பொருட்டும், வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கும் பொருட்டும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரை பிற இனத்தைச் சேர்ந்த ஒருவர் திருமணம் செய்து கொண்டாலும், முற்படுத்தப்பட்ட ஒருவர் பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்டாலும், அவர்களுக்கு அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் பயனடைய வருமான வரம்பு ஏதுமில்லை. புதிதாகக் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினத்தவராகவும், மற்றொருவர் வேறு இனத்தைச் சார்ந்தவராகவும் இருக்கும்பட்சத்தில், ரூ.20,000/- நிதியுதவி (திருமணச் செலவிற்குக் காசோலை / வரைவோலையாக ரூ.10,000/-மும், தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.10,000/-மும்) வழங்கப்படுகிறது. முற்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிற்பட்ட அல்லது மிகவும் பிற்பட்ட இனத்தைச் சார்ந்தவரை திருமணம் செய்து கொண்டால் (திருமணச் செலவிற்காக ரூ.5,000/- காசோலை/ வரைவோலையாகவும், தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.10,000/-மும்) ரூ.15,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.



2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 2,075 தம்பதியர் பயனடையும் வகையில் ரூ.400 இலட்சம் ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.3 சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்**

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண்கள் ஆகியோரின் சுயவேலைவாய்ப்புத் திறனைப் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன், சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழக அரசால் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

20 முதல் 40 வயதிற்குட்பட்ட தையற் தொழில் தெரிந்தோர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுடையவராவார்.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.132 இலட்சம் ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.4 சேவை இல்லங்கள்.**

தமிழகத்தில் ஊரகப் பகுதியில் அநேகப் பெண்கள் பல்வேறு காரணங்களால் பள்ளிப் படிப்பினைக்கூட முடிக்காமல், இளம் வயதிலேயே திருமணம் செய்து குடும்ப தகராறு காரணமாகப் பிரிந்து வாழ்ந்து கொண்டும், பல்வேறு காரணங்களால் கணவனை இழந்து விதவைகளாகவும், திருமணம் செய்து கொடுக்க வசதியின்மையால் வறுமையான சூழலிலும் வாழ்ந்து வருகிறார்கள். இம்மாதிரியான பெண்களுக்குக் கல்வியளித்து, வேலைவாய்ப்புமூலம் அவர்கள் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடடைய, பெண்கள் தங்கிப் பயிலும் பள்ளி மற்றும் விடுதி வசதிகளுடன்கூடிய சேவை இல்லங்களை, தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி,

[2008 ஏப்ரல் 21

சிவகங்கை, நாகப்பட்டினம் மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் சமூக நலத் துறை நடத்தி வருகிறது. இச்சேவை இல்லங்களில் உள்ளுறைவோர்களுக்குத் தங்குமிடம், உணவு, கல்வி (மேல்நிலைக் கல்வி வரை) மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இச்சேவை இல்லங்களில் உள்ளுறையும் மகளிர் தமது குழந்தைகளைத் தங்களுடன் வைத்துக் கொள்ள அனுமதிப்பதுடன், இக்குழந்தைகளுக்குக் கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது.

தாம்பரம் சேவை இல்லத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி 2007-2008-ல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் ஒவ்வொரு ஆண்டும் சேவை இல்லங்கள் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் பயின்ற 40 முன்னாள் உள்ளுறைவோர்கள் பயனடைவர்.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.377.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.5 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் பெண்களுக்காக நடத்தப்படும் சேவை இல்லங்கள்

சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பெண்களுக்குக் குறுகிய காலக் கல்வி மற்றும் தையற்பயிற்சி அளித்தல் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவிகளாகும். சமூகத்தில் நலிவடைந்த பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஆகியோர் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறத் தகுதியுடையவராவர்.

இச்சேவை இல்லங்களைச் செயல்படுத்துவதற்கெனக் கீழ்க்கண்ட தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசு மானியம் அளித்து வருகிறது:—

| | |
|---|---|
| கஸ்தூரிபா சேவாஸ்ரமம், காந்தி கிராமம், திண்டுக்கல் | 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி அளித்தல் |
| ஸ்ரீசேவாமந்திர், சாலிகிராமம், சென்னை | செயலகப் பயிற்சி |
| சரணாலயம், கோவை | தையல் பயிற்சி |



2008 ஏப்ரல் 21]

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.17.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.6.1 பணிபுரியும் பெண்கள் விடுதி

நடுத்தர மற்றும் தாழ்ந்த நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பணிபுரியும் மகளிர் தங்களுக்கு உகந்த, தங்களால் வழங்கக்கூடிய வாடகையில், உறைவிடம் பெறுவதில் பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். எனவே, அவர்களுக்கு உதவும் வகையில், சென்னையில் இரண்டு, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரில் தலா ஒன்று வீதம் எட்டு பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதியில் சேர மாத வருமானமாக ரூ.10,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னையில் விடுதி வாடகையாக ரூ.200-ம் மற்ற இடங்களில் ரூ.150-ம் விடுதியில் தங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. தண்ணீர் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் உணவூட்டுச் செலவினம் ஆகியவை விடுதியில் தங்கும், பணிபுரியும் மகளிரிடமிருந்து சரிசமமாகப் பெறப்படுகிறது. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதரப் பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

பெண்களுக்கான இடைத்தங்கல் இல்லம் ஒன்று சென்னையில் செயல்படும் பணிபுரியும் மகளிர் விடுதியிலேயே செயல்பட்டு வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 81.24 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.6.2 சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டடம் கட்டுதல்

மோட்டார் வாகனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னை மற்றும் புறநகரங்களில் அதிகரித்து வருவதால், பணிபுரியும் பெண்கள் தங்குவதற்குப் பாதுகாப்பான, வசதியான இடம் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே, அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழக அரசு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்மூலம் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, சாலிகிராமத்தில் உள்ள 5.96 ஏக்கர் நிலத்தில் ரூ.13.13 கோடியில் (இதில் ரூ.5 கோடியை

மத்திய அரசும் மீதமுள்ள ரூ.8.13 கோடியை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன) பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்று, 500 பணிபுரியும் மகளிர் மற்றும் 60 குழந்தைகள் தங்கும் வகையில் பொழுதுபோக்கு மையம், குழந்தைகள் காப்பகம், நூல் நிலையம், கணினி மையம், உடற்பயிற்சி மையம் போன்ற வசதிகளுடன் சாலிகிராமம், காந்திநகரில் 5 பகுதிகளாகக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, சென்னையில் பணிபுரியும் பெண்கள் விடுதி உடனடியாகக் கட்ட வேண்டியதன் தேவையினைக் கருதி, மத்திய அரசின் மானியத்தினை எதிர்நோக்கி, மாநில அரசின் நிதியில் தேவையான கட்டமைப்புகளுடன் ரூ.2.00 கோடி. செலவில் ஒரு கட்டடப் பகுதி கட்டுவதற்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 2.7 ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஏழை விதவைத் தாய்மார்களின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகை பெற விதவைத் தாயின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்குக் குறைவாக இருக்க வேண்டும்:

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகம் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50 |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125 |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175 |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ.300 |
| +1 மற்றும் +2 வகுப்பு | ரூ.600 |

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 10,000 குழந்தைகள் பயனடையும் வண்ணம் ரூ.12.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 2.8 பெண்களுக்கு வேலைவாய்ப்பு

மகளிர் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதை உறுதி செய்யும் வகையில், கூட்டுறவு அமைப்புகளில் மகளிர் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மகளிரை மட்டும் அங்கத்தினர்களாகக் கொண்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதன்மூலம், பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்படுகிறது. இந்த வகையில் 98 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன. இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நலத் துறை செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலமும், இதர பணிகள்மூலமும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் பெண்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்பினை வழங்குபவையாக விளங்குகின்றன.

| வரிசை எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைபாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | 80 | 40,922 |
| 2. | எழுதுபொருள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | 15 | 746 |
| 3. | இதர சங்கங்கள் | 3 | 1,015 |
| | மொத்தம் | 98 | 42,683 |

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்குப் பாலியஸ்டர் மற்றும் பருத்தி நூல் இழை கலந்த துணியாலான இலவச சீருடைகளைத் தைக்கும் பணியில் 80 தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 40,922

அங்கத்தினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன்மூலம் சேவை இல்லங்கள் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள மாணவ மாணவியர் உட்பட 63 இலட்சம் பேர் பயனடைகின்றனர்.

2003-2004 முதல் தனியாரிடம் வழங்கப்பட்டு வந்த, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையைச் சார்ந்த பள்ளிகள் மற்றும் கள்ளர் முறைப்படுத்துதல் பள்ளிகள் ஆகியவற்றில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சீருடைகளைத் தைக்கும் பணியானது தற்போது மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் வருவாய் மேம்படும் வகையில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களிடம் வழங்கப்படுகின்றன.

இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் மகளிர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் தையல் கூலி சுமார் 25 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் 15 எழுதுபொருள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. இச்சங்கங்களில் 746 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வெழுதுபொருள் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அரசுத் துறைகளுக்கும் அரசு நிறுவனங்களுக்கும், அரசு அமைப்புகளுக்கும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணியினை மேற்கொள்வதன்மூலம் சங்க பெண் அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

மேற்கண்ட பயிற்சி மையங்களில் பழங்குடியின மகளிர் மட்டுமே பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் இரண்டும், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக மொத்தம் 4 தையற் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வோர் ஆண்டும் 65 பழங்குடியின மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

**குழந்தை நலத் திட்டங்கள்**

**2.9 சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்கள்**

சமுதாயத்தில் பல சூழ்நிலைகளினால் குழந்தைப் பருவத்தில் உரிய உணவு மற்றும் கல்வி பெறுவதற்கு இயலாத நிலைக்கு அநேக ஆதரவற்றக் குழந்தைகள் தள்ளப்படுகின்றனர். அவர்கள் முழுமையான



வளர்ச்சியடைய தகுந்த சூழலைப் பெறுவதில்லை. இன் றய குழந்தைகள் எதிர்காலச் சமுதாயத்தின் சிற்பிகள் என்பதைக் கருத்திற் கொண்டு, அரசே இக்குழந்தைகளைச் சிறந்த முறையில் பராமரிக்க முடிவெடுத்து அரசு குழந்தைகள் காப்பகங்களை நடத்தி வருகிறது.

ஏனைய வசதியுள்ள குழந்தைகளைப் போன்று இக்குழந்தைகளும் அனைத்து திறமைகளும், வாய்ப்புகளும், வெளியுலக அன்றாட நிலைக்கேற்ற மாற்றம் பற்றிய பொது அறிவும் பெற்று நல்ல குடிமக்களாக வளர்வதற்கு ஏற்ற வகையில், தமிழ்நாடு முழுவதிலும் 27 ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களை அரசு நடத்தி வருகிறது. காப்பகங்களிலேயே ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான தொடக்கக் கல்வி வழங்கப்படுகிறது. 6 ஆம் வகுப்பிலிருந்து குழந்தைகள் அருகேயுள்ள அரசு மற்றும் உள்ளாட்சிக்குட்பட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கல்வி கற்க அனுப்பப்படுகின்றனர். காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கு உணவு, தங்குமிடம், காலணி, கல்விச் சுற்றுலா, சீருடை, பொதுக் கல்வி, மருத்துவ வசதி அனைத்தும் இவர்கள் மற்ற குழந்தைகளைப் போல கல்வி கற்க இலவசமாக அரசால் வழங்கப்படுகின்றன.

கீழ்க்காணும் நிலையிலான குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:—

- பெற்றோர் அல்லது உறவினர் இல்லாத ஆதரவற்ற குழந்தைகள்
- தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட நிலையில் உள்ள குழந்தைகள்
- பெற்றோர் நீண்டநாள் கைதியாக இருப்பின், அவர்களால் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ள குழந்தைகள் / கைவிடப்பட்ட குழந்தைகள்
- தீவிரமான நோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

இக்காப்பகங்கள் சிறப்பாகச் செயல்படுவதைக் கண்காணித்து ஆலோசனை வழங்க, இல்லங்கள் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலத் துறைகளைச் சார்ந்த அலுவலர்களையும், சமூகச் சேவகர்களையும் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அரசு ஏற்படுத்தி உள்ளது.

இக்குழுக்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, சுகாதார வளர்ச்சி மற்றும் குழந்தைகளைக் காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்துக் கண்காணித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.827.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.10 குழந்தைகளின் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

ஆதரவற்றக் குழந்தைகள் இயல்பான குடிமக்களாக வாழ மறுவாழ்வு அளித்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். 5 வயது முதல் 18 வயது வரையுள்ள, பெற்றோர் இருவரும் இல்லாத அல்லது தாயோ, தந்தையோ இல்லாத ஆதரவற்ற குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறத் தகுதியுடையவர் ஆவர். கணவனால் கைவிடப்பட்டவர் / நீண்ட நாள் நோயுற்றிருப்பவர் / நீண்ட நாள் தண்டனை பெற்று சிறையில் இருப்பவர் ஆகியோரது குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடையத் தகுதி பெற்றவர் ஆவர். இத்திட்டத்தில் பயன் பெற பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருக்கவேண்டும்.

ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், 1-4-1992 முதல் தமிழக அரசு மானியத் தொகை அளித்து வருகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு உணவு, சில்லரை செலவினம் போன்றவை வழங்கத் தேவையான ரூ.281/-ல் 80 சதவீதமான ரூ.225/-ஐ தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 20 சதவீதமான ரூ.56/-ஐ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களே ஏற்றுக்கொள்கின்றன.

25 குழந்தைகளைக் கொண்ட ஒரு பிரிவைக் கவனிப்பதற்கு ஒரு இல்லத் தாய்/ தந்தை மற்றும் உதவியாளர் ஒருவர் வீதம் பணியாளர்கள் இருக்க வேண்டும்.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 14,477 குழந்தைகள் பயனடையும் வண்ணம் ரூ.320.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 2.11 சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பெண் சிசுவதை ஒழிப்பு ஆகியவற்றிற்கு ஊக்கமளிப்பதுடன், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக்கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவது ஆகியன இத்திட்டத்தின் நோக்கமாகும். பெண் குழந்தைகளும் இச்சமுதாயத்தில் ஆண் குழந்தைகளுக்கு இணையாகக் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின்கீழ் வேறு குழந்தைகள் எவரும் இல்லாமல் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் 35 வயதுக்கு முன்னதாகக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு இருந்தால், அக்குழந்தையின் பெயரில், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடாக ரூ.22,200/- அரசால் செலுத்தப்படுகிறது. வைப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு முதல் இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/-ஐ அப்பெண் குழந்தை கல்வி பயிலும் செலவிற்காக வழங்கப்படுகிறது. 20 ஆம் ஆண்டில் முழுமையாக வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை, அப்பெண்ணின் மேற்கல்வி / திருமணச் செலவிற்கு உதவும் வகையில் வழங்கப்படும்.

இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவரின் பெயரிலும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் தலா ரூ.15,200/-ஐ வைப்பீடாக அரசு செலுத்துகிறது. இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு வைப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்தாம் ஆண்டு முதல் அப்பெண் குழந்தைகள் கல்வி பயில ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வழங்கப்படுகிறது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். இது அக்குழந்தைகள் மேற்கல்வி / திருமணச் செலவை ஈடு செய்ய உதவிடும்.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென சுமார் 49,300 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.12 தொட்டில் குழந்தைத் திட்டம்

தொட்டில் குழந்தைத் திட்டம் முதன் முதலில் சேலம் மாவட்டத்தில் பெண் சிசுக்கொலையினை அறவே ஒழிக்கும் நோக்கோடு 1992 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் இக்கொடுஞ்செயல் அதிகமாக நடக்கின்ற மாவட்டங்களாகக் கண்டறியப்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இத்திட்டம் 2001-ல் விரிவுபடுத்தப்பட்டது. மேற்காணும் மாவட்டங்களில் தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள், போதிய பணியாளர்கள், உள்கட்டமைப்பு வசதிகளான உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள், உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள், தொலைபேசி, குளிர்சாதனப் பெட்டிகள், வெப்ப அளிப்பான் (Incubator) வசதி ஆகியவற்றுடன் தொடங்கப்பட்டுள்ளன. தேவையில்லை என ஒதுக்கப்பட்ட/ கைவிடப்பட்ட குழந்தைகளைப் பெறும் வகையில் மாவட்ட சமூக நல அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையம் / துணை சுகாதார மையம் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த வரவேற்பு மையங்கள், கைவிடப்பட்ட / தேவையில்லை என ஒதுக்கப்பட்ட சிசுக்களைப் பெற்று, அவர்களின் உயிரைக் காப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. குழந்தையில்லா தம்பதியருக்கு குழந்தையைத் தத்துக் கொடுத்து, பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு குடும்ப சூழலை உருவாக்கித் தரும் தத்துத் திட்டத்தின்கீழ் உரிமம் அளிக்கப்பட்ட தத்துக் கொடுக்கும் நிறுவனங்கள்மூலம், இக்குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. 31-3-2008 வரை 3,044 குழந்தைகள் இத்திட்டத்தின்மூலம் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

மாவட்ட சமூக நல அலுவலர்கள் இத்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்படுகின்றனர்.

2008-2009 ஆம் நிதியாண்டில் ஐந்து வரவேற்பு மையங்களுக்கு ரூ.6.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

## 2.13 தத்து எடுத்தல்

தத்துத் திட்டமானது அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து, அதன்மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மகிழ்ச்சியான சூழ்நிலையில் அன்பும்,





அரவணைப்பும் கிடைக்கவும், அவர்களிடமுள்ள செயல் திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் உதவுகிறது. மேலும் குழந்தையில்லா கணவன்-மனைவிக்குத் தங்களுக்கென குழந்தையைப் பேணிப் பராமரிக்கும் வாய்ப்பையும், மகிழ்ச்சியையும் இத்திட்டம் வழங்குகிறது. குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும், இயல்பான வளர்ச்சியைப் பெறவும், தங்களது அறிவாற்றலையும், பெருக்கிக்கொள்ள உதவுவதுடன், குழந்தைகள் தவறான வழிமுறைகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதிலும், அனாதைக் குழந்தைகள் சமூகத்தால் சிறுமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதிலும் இத்திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது.

தற்போது உள்நாட்டில் தத்துக் கொடுக்க 22 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோவை, கிருஷ்ணகிரி, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவள்ளூர் வேலூர் மற்றும் நாகப்பட்டினம், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. இவ்வாறு உரிமம் பெற்ற நிறுவனங்களில் 8 நிறுவனங்களுக்கு வெளிநாட்டினருக்கு தத்து கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தத்து நிறுவனத்தை உருவாக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உரிமம் அளிக்கப்பட்ட எல்லா நிறுவனங்களுக்கும் சட்டப்பூர்வ தத்தெடுத்தலை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மைய அரசின் மகளிர் மற்றும் குழந்தை வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் “காரா” (Central Adoption Resource Agency) நிறுவனம் வெளிநாட்டில் தத்துக் கொடுத்தல் உரிமத்தினையும், தமிழ்நாடு அரசு உள்நாட்டில் தத்துக் கொடுத்தல் உரிமத்தினையும் வழங்கி வருகிறது.

பொது மக்களிடையே தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. இத்திட்டத்திற்கு மாவட்ட சமூக நல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

தத்துத் திட்டம் தொடர்பான விவரங்கள்- திட்டச் செயலாக்கம், உள்நாடு/வெளிநாட்டில் தத்து எடுக்கும் வழிமுறைகள், தத்து தொடர்பான சட்டங்கள், தகுதி வாய்ந்த குழந்தைகள்/ பெற்றோர், உரிமம் பெற்ற தத்து நிறுவனங்கள், தத்துத் திட்டம் பற்றி அணுக வேண்டிய அரசு அலுவலர்கள் மற்றும் நிறுவனங்கள் குறித்த

விவரங்கள் அடங்கிய கையேடு ஒன்று பொது மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக உதவி, சட்டப்பூர்வமான தத்தெடுத்தலை ஊக்குவிக்கும் உயரிய நோக்கத்தோடு 3-5-2007-ல் வெளியிடப்பட்டுள்ளது.

## 2.14 முதியோர் நலம்

### 2.14.1 முதியோர் இல்லங்கள்

60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உடல், சமூக மற்றும் உளவியல் ரீதியாக உதவி அளித்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் உணவு, உறைவிடம், மருத்துவ வசதி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு போன்றவை முதியோர்களுக்கு வழங்கப்படுகிறது. 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஆதரவற்ற முதியோர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுடையவராவர்.

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் அன்றாட வாழ்வில் உணவு, உடை, உறைவிடம் இன்றி துயருறும் நிலையைப் போக்க, தனியார்த் தொண்டு நிறுவனங்களின்மூலம் முதியோர் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. ஒரு முதியோர் இல்லத்திற்கு 40 பயனாளிகள் பயன்பெறும் வண்ணம், சென்னை மாவட்டத்தில் 2 முதியோர் இல்லங்களும், பிற 14 மாவட்டங்களில் தலா ஒரு முதியோர் இல்லம் வீதம் மொத்தம் 16 முதியோர் இல்லங்களில் 640 முதியோர்கள் பயனடையும் வகையில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 15 மாவட்டங்களில் 2007-2008 ஆம் ஆண்டு முதல் 15 புதிய முதியோர் இல்லங்கள் துவக்கி நடத்த ஒரு முதியோர் இல்லத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் ரூ.30 இலட்சத்தை மானியமாக அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின்படி கூடுதலாக 600 முதியோர் பயனடைவர். முதியோர்களைப் பராமரிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு முதியோர் இல்லத்திற்கு ரூ.2,00,000/- வீதம் மானியமாக மாநில அரசால் அளிக்கப்படுகிறது. ரூ.40,000/- நிறுவனத்தின் பங்காக நிறுவனத்தால் ஏற்கப்படுகிறது. மாவட்ட அளவில் மாவட்ட சமூக நல அலுவலர்களும், சமூக நல இயக்ககத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அந்நிறுவனங்களுக்குச் சென்று இத்திட்டம் சரிவர செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்து வருகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 2.14.2 முதியோர் தின விழா

ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 1 ஆம் தேதி உலகெங்கிலும் சர்வதேச முதியோர் தினமாக கொண்டாடப்படுகிறது. 2007-08-ல் சர்வதேச முதியோர் தின விழா ரூ.5.50 இலட்சம் செலவில் கொண்டாடப்பட்டது.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.15 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாடு சமூக நல வாரியம், தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காகத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில், 1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

1. சமூக நல தன்னார்வ அமைப்புகளை ஏற்படுத்தி ஊக்குவித்தல்
2. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்குத் தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்
3. மத்திய சமூக நல வாரியம் /அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்

மேற்காணும் நோக்கங்களை எட்டும் வகையில், மத்திய சமூக நல வாரியம் தமிழ்நாடு சமூக நல வாரியம் வழியாகப் பெண்கள் முன்னேற்றம் அடையும் வகையில் கல்வி, பயிற்சி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வருவாய் பெருக்கும் வழிகள் மற்றும் இதர சேவைகள் போன்றவற்றை வழங்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவுகிறது.

தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீத நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

மத்திய அரசின்மூலம் 827 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1,923 தொண்டு மையங்களுக்கு ஏப்ரல் 2007 முதல் மார்ச் 2008 வரை ரூ.998.58 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.14.80 இலட்சம் 206 தன்னார்வத் தொண்டு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின்மூலம் சுமார் 50,560 பெண்களும், குழந்தைகளும் பயனடைகிறார்கள்.

போதை மருந்து பயன்படுத்துதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்கும் வகையில், தொண்டு நிறுவனங்களுக்கும், அரசு துறையினருக்கும் ஒருங்கிணைப்பை தமிழ்நாடு சமூக நல வாரியம் ஏற்படுத்தி வருகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்புச் சட்டம் பற்றியும் பாதுகாப்பு பற்றியும், பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்க பகல் நேர தங்கும் இல்லங்கள் அமைக்கவும், வாரியத்தால் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.16 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்**

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காகச் செயல்படும் பதிவு செய்த தொண்டு நிறுவனங்கள் அல்லது பொது அறக்கட்டளை சட்டத்தின்கீழ் பதிவு செய்து, குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குப் பால்வாடி, குழந்தைகள் காப்பகம் போன்றவற்றுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும், குழந்தைகளுக்கு விளையாட்டு சாதனங்கள் போன்றவை வாங்குவதற்கும் 50:50 என்ற சதவீதம் அளவில் அரசு மானியமாக ரூ.5,000/- வழங்கப்பட்டு வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.17 குடும்ப ஆலோசனை மையங்கள்**

தமிழக அரசு, தமிழ்நாடு சமூக நல வாரியம்மூலம் திருவாரூர், ஈரோடு, விழுப்புரம், நாமக்கல், வேலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படும் 6 குடும்ப ஆலோசனை மையங்களுக்கு உதவி புரிகிறது. சமூகத்தின் அடிப்படை அங்கமான குடும்பம் சிதறாமல் பாதுகாப்பதே குடும்ப ஆலோசனை மையத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.





இம்மையம் வரதட்சணைக் கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், மது பழக்கம் ஆகியவற்றை நீக்க உதவுவதுடன், எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது.

2008-2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 4.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.18 பெண் சிசு வதை குறித்த கருத்தரங்கு**

மத்திய சமூக நல வாரியத்தின் வழிகாட்டுதலின்படி, 30-9-07 அன்று சென்னையில் பெண் சிசு வதை குறித்த கருத்தரங்கு தமிழ்நாடு சமூக நல வாரியத்தால் நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கினைத் தொடர்ந்து, விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய வகையில், 'பெண் கருவை காப்போம்' என்னும் புத்தகம் 14-11-07 அன்று குழந்தைகள் தின விழா கொண்டாட்டத்தின்போது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

**2.19 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் முதன்முதலாக 1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது முனைவர் கும. இராமாத்தாள் அவர்களைத் தலைவராகவும், கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இவ்வாணையம் 2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது:—

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் (திருமதி) கும. இராமாத்தாள் | தலைவர் |
| 2. | திருமதி பெ. கமலாம்பாள், எம்.எல்.ஏ. | உறுப்பினர் |
| 3. | டாக்டர் கே. காயத்ரி தேவி, எம்.எல்.ஏ. | உறுப்பினர் |
| 4. | திருமதி குட்சியா காந்தி, இ.ஆ.ப. | உறுப்பினர் |
| 5. | திருமதி வி. வனிதா, காவல் துறை அதிகாரி | உறுப்பினர் |
| 6. | திருமதி ஈக்வின் பின்டோ, இராணி மேரி கல்லூரி முதல்வர் | உறுப்பினர் |
| 7. | திருமதி சி. சங்கமித்ரா, வழக்கறிஞர் | உறுப்பினர் |
| 8. | திருமதி ஆர்.அலீஸ் மனோகரி, சமூகப் பணியாளர் | உறுப்பினர் |
| 9. | செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | அலுவலால் உறுப்பினர் |
| 10. | சமூக நல இயக்குநர் | உறுப்பினர்-செயலர் |

பெண்களின் நலனைப் பாதுகாத்தல், பெண்களின் நிலை குறித்த பொதுவான பிரச்சினைகளைக் கையாளுதல் மற்றும் இவை குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசுக்குப் பரிந்துரைத்தல் ஆகியன மகளிர் ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

ஆணையத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:—

(அ) அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு உரிமைகளை ஆய்வு செய்தல்.

(ஆ) பெண்களின் மேற்கண்ட பாதுகாப்பு உரிமைகளை நன்முறையில் பேண தேவையானபோதெல்லாம் உரிய பரிந்துரை மற்றும் அறிக்கைகளை மாநில அரசுக்கு அளித்தல்.

(இ) சட்டத் திட்டங்களில் குறைகளோ மற்றும் தேவைகளோ இருக்கும்பட்சத்தில், சட்டவடிவிலான தீர்வுகள் வேண்டும்போது உரிய திருத்தங்களைப் பரிந்துரைத்தல்.

(ஈ) பெண்களின் உரிமைகளில் சட்ட மீறல்கள் இருந்தால் தக்க அதிகாரம் பெற்றவர்களை அணுகுதல்.

(உ) கீழ்க்கண்ட புகார்களைக் கவனித்தல்:—

(1) பெண்களின் உரிமை பற்றிய குறைகள்

(2) பெண்களுக்கானப் பாதுகாப்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் அவர்களின் சமத்துவம் மற்றும் வளர்ச்சி நோக்கங்களில் வெற்றி பெறல்.

(ஊ) பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் பல வேறுபாடுகள் பற்றிய குறிப்பிட்ட பிரச்சினைகள் போன்றவற்றைச் சிறப்பு ஆய்வு செய்து தீர்வுகளை பரிந்துரைத்தல்.

(எ) அனைத்து துறைகளிலும் பெண்கள் நிலைப்பாடு கொள்ளவும், அவர்கள் முன்னேற்றத்திற்காகவும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

(ஏ) சிறைச்சாலைகளிலும், பெண்கள் பாதுகாப்பு இல்லங்களிலும் அவர்கள் வசதிகள் பற்றி மேற்பார்வையிட்டு குறைகளைக் களைய தக்க நடவடிக்கை எடுத்தல்.

(ஐ) அரசால் சாட்டி அனுப்பக்கூடிய வேறேதேனும் பற்றிய பொருட்பாடு.





*2008-2009* ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.*9.43* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.20 குடும்ப வன்முறையிலிருந்து மகளிரைப் பாதுகாக்கும் சட்டம், 2005

மத்திய அரசின் இந்தச் சட்டம் மற்றும் விதிகளின்படி, அனைத்து விதமான குடும்ப வன்முறையிலிருந்தும் மகளிருக்குத் தக்கப் பாதுகாப்பு அளிக்க இடைக்கால ஏற்பாடாக, மாவட்ட சமூக நல அலுவலர்கள், மாவட்ட பாதுகாப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துடன் மாவட்ட அளவில் ஒரு சேவை அளிப்பவர் (சென்னையில் இருவர்) என மாநிலம் முழுவதும் 31 சேவை அளிப்பவர்கள், நன்கறிந்த அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உணவு, உறைவிடம், மருத்துவ வசதி, சட்ட உதவி மற்றும் ஆலோசனை வழங்கும் வசதி உள்ளவர்களாக இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் உறைவிடத்திற்கு ஆகும் செலவினை மாநில அரசிடமிருந்து சேவை அளிப்பவர் மீளப் பெறலாம். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த, மத்திய அரசின் ஆணைக்கிணங்க தனியாக பாதுகாப்பு அலுவலர் (மாவட்டங்களில் ஒருவர் மற்றும் சென்னையில் இருவர்) நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.21 தமிழ்நாடு அரவாணிகள் வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள அரவாணிகளுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பையும், சமூக அங்கீகாரத்தையும் அளிப்பதை உறுதி செய்யவும், அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கவும் அரவாணிகள் நல வாரியம் அமைத்திட முடிவு செய்துள்ளது. அரவாணிகளின் பல்வேறு பிரச்சினைகள், தடைகள், அசௌகரியங்கள் குறித்து இவ்வாரியம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும். அவர்களுடைய மேன்மைக்காக அரசு திட்டங்களைத் தீட்டி, இவ்வாரியம்மூலம் செயல்படுத்தும்.

இவ்வாரியத்திற்கு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் மற்றும் வாரியத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

*2008-2009* ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.*50.00* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 21

**2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

**சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை (தலைமைச் செயலகம்)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம்-சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையைக் கணினி மயமாக்குதல் | 17.50 |
| | மொத்தம் | 17.50 |

**சமூக நலம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | குழந்தைகளைத் தத்தெடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 6.10 |
| 2. | தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு கணினி மற்றும் மடியமர் கணினி வாங்குதல் | 1.25 |
| 3. | தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 2.00 |
| 4. | சமூக நல இயக்ககத்தின் கூட்ட அரங்கிற்கு நாற்காலிகள் வாங்குவது | 3.00 |
| 5. | சமூக நல இயக்ககத்திற்கு 10 கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்குதல் | 4.50 |
| | மொத்தம் | 16.85 |



2008 ஏப்ரல் 21]

**அத்தியாயம் 3**

**சத்துணவு**

### 3.1 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து நிறைந்த உணவினை வழங்குவதன் மூலம் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச் சத்துக் குறைவினை சரி செய்தல், குழந்தைகளின் கல்வியறிவு விகிதத்தினை அதிகரித்தல், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இடையில் நின்றுவிடுவதைக் குறைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதலில் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5 முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப் பள்ளி குழந்தைகள் ஆகியோர் பயனடையும் வண்ணம் 1-7-1982 முதல் செயல்படுத்தப்பட்டது. பின்னர், 15-9-1982 முதல் இத்திட்டம் நகர்ப் பகுதிகளிலுள்ள சத்துணவு மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, செப்டம்பர் 1984 முதல் 10 முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளும் பயனடையும் வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் ஆண்டு முழுவதும் (365 நாட்களிலும்), 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு பள்ளி வேலை நாட்களில் (220 நாட்கள்) மட்டும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

### நிர்வாகக் கட்டுப்பாடு

2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான சத்துணவு மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்கள், சமூக நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

### குழந்தைகள் மையங்கள் மற்றும் பயனாளிகள்

| வ. எண் | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2 முதல் 5 வயது வரை (25 முதல் 60 மாதங்கள்) | 50,433 | 12,03,334 |
| 2. | முதியோர் ஓய்வூதியம் | | 36,966 |
| | மொத்தம் | 50,433 | 12,40,300 |

### பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் பயனாளிகள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 39,853 | 59,31,992 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 1,810 | 3,35,731 |
| | மொத்தம் | 41,663 | 62,67,723 |

### பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் வகுப்புவாரியான பயனாளிகள்

| வகுப்பு | நகர்ப்புறம் | ஊரகம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 | 1,92,426 | 33,39,465 | 35,31,891 |
| 6 முதல் 8 | 1,06,924 | 17,24,146 | 18,31,070 |
| 9 மற்றும் 10 | 36,381 | 8,68,381 | 9,04,762 |
| மொத்தம் | 3,35,731 | 59,31,992 | 62,67,723 |



### சத்துணவுத் திட்டத்தின்கீழ் மொத்த பயனாளிகள்

| | | |
|---|---|---|
| 1. | குழந்தைகள் மையங்கள் (2 முதல் 5 வயது) | 12,03,334 |
| 2. | பள்ளி சத்துணவு மையங்கள் | 62,67,723 |
| 3. | முதியோர் ஓய்வூதியம் பெறும் சத்துணவு பயனாளிகள் | 36,966 |
| | மொத்தம் | 75,08,023 |

### நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு வீதம்

| வ. எண் | உணவுப் பொருட்கள் | வயது விவரம் (வருடங்களில்) 2-5 வயது | 5-9 வயது | 10-15 வயது 6-8ஆம் வகுப்பு | 10-15 வயது 9-10ஆம் வகுப்பு | முதியோர் உதவித் தொகை பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| 2. | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| 3. | எண்ணெய் | 2 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் |
| 4. | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் |
| 5. | காய்கறிகள், தாளிதம் மற்றும் எரிபொருள்* | 44 காசு* | 44 காசு* | 44 காசு * | 44 காசு * | |
| 6. | முட்டை — (வாரத்திற்கு மூன்று முட்டை-திங்கள், புதன் மற்றும் வியாழக் கிழமைகளில்) | 46 கிராம் (குறைந்த-பட்சம்) | 46 கிராம் (குறைந்த-பட்சம்) | 46 கிராம் (குறைந்த-பட்சம்) | 46 கிராம் (குறைந்த-பட்சம்) | |

*காய்கறி - 20 காசு, தாளிதப் பொருட்கள் - 9 காசு, எரிபொருள் - 15 காசு.

[2008 ஏப்ரல் 21

## புரதச் சத்து மிகுந்த உணவு

2 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு 3-6-1989 முதல் சத்துணவுடன் வேகவைத்த ஒரு முட்டை வழங்கப்பட்டு வந்தது. 2006 ஆம் ஆண்டு முதல், பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை திங்கள் 15 ஆம் நாள் "கல்வி வளர்ச்சி நாள்" ஆக கொண்டாடப்படுகிறது. இவ்வரசால் அறிவிக்கப்பட்டபடி, 15-7-2006 முதல் 2-15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியருக்கு வாரத்திற்கு 2 முட்டைகள் வழங்கப்பட்டு வந்தன. 15-7-2007 முதல் வாரம் 3 முறை திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் குழந்தைகள், மாணவ மாணவியர்களுக்கு வேக வைத்த முட்டை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சத்துணவுடன் சேர்த்து வேக வைத்த 20 கிராம் கருப்பு கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் பச்சைப் பயறு செவ்வாய்க்கிழமைகளிலும், 20 கிராம் வேக வைத்த உருளைக்கிழங்கு வெள்ளிக்கிழமைகளிலும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 175.81 கலோரி சக்தியும், 15.62 கிராம் புரதச்சத்தும் கிடைக்கிறது.

மேலும், 15-7-2007 முதல் 1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இணை உணவுடன் பிரதி வாரம் புதன்கிழமையன்று வேகவைத்த முட்டை ஒன்று வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 2,40,000 சிறார்கள் பயனடைகிறார்கள்.

சத்துணவு பெறும் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு முட்டைகள் வழங்க 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.177.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்கும்போது, பொதுவாக உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் இரும்புச் சத்துக் குறைவு / இரத்தச் சோகை ஏற்படாமல் பாதுகாக்க 2 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அயோடின் கலந்த உப்பு சத்துணவில் சேர்க்கப்பட்டு வந்தது. பிறகு அரசு, முன்கழுத்துக் கழலை நோய் பரவாமல் தடுக்க, திருச்சி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், கரூர், பெரம்பலூர் மற்றும் நீலகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் அயோடின் கலந்த உப்பு சத்துணவில் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தும் திட்டத்தை 20-6-2007 முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் அரசு விரிவுபடுத்தியுள்ளது.



2008 ஏப்ரல் 21]

## உணவூட்டு செலவினம்

காய்கறி, தாளிதம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் உணவூட்டு செலவினத்தை 35 காசிலிருந்து 44 காசாக 18-7-2007 முதல் உயர்த்தி (காய்கறி 20 காசு, தாளிதம் 9 காசு, எரிபொருள் 15 காசு = 44 காசு) வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## உணவுப் பொருள் விநியோகம்

சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை (அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய்) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமது வட்டக் கிடங்குகளிலிருந்து, வட்டார வளர்ச்சி அலுவலர் அளிக்கும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் மையங்களுக்கு விநியோகம் செய்கிறது. பொதுவாக, ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரையுள்ள காலத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்கான தொகை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்களுக்குச் செலுத்தப்படுகிறது. காய்கறிகள், தாளிதம் மற்றும் விறகு ஆகியவை சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூரில் வாங்கப்படுகின்றன. சத்துணவு மையங்களைத் தூய்மையாக சுகாதார முறையில் பராமரிக்க, மாதம் ஒன்றிற்கு 500 பயனாளிகளுக்குக் குறைவாக உள்ள மையங்களுக்கு ரூ.20/- வீதமும் மற்றும் 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள மையங்களுக்கு ரூ.30/- வீதமும், சோப்பு, பினாயில், துடைப்பம் போன்ற பொருட்கள் வாங்க, சில்லரைச் செலவினமாக அனுமதிக்கப்படுகிறது.

## பயனாளிகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல்

மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு வருகை தரும் நாட்களின் அடிப்படையில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மையத்திற்கும் ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

[2008 ஏப்ரல் 21

**பெண்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் பணியாளர் அமைப்பு**

இத்திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் பணியமர்த்தப்படுகின்றனர். 500-க்கு மேற்பட்ட பயனாளிகளைக் கொண்ட மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**சத்துணவுப் பணியாளர்கள் எண்ணிக்கை**

பள்ளி சத்துணவு மையங்களில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் பின்வருமாறு:-

| மையங்களின் எண்ணிக்கை | பணி வகை | பணியாளர் எண்ணிக்கை | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | வேலை நாட்களில் | விடுமுறை நாட்களில் |
| 41,663 | சத்துணவு அமைப்பாளர் | 41,178 | 62,67,723 | 5,48,966 |
| | சமையலர் | 41,424 | | |
| | சமையல் உதவியாளர் | 41,127 | | |
| | மத்திய சமையலர்கள் | 31 | | |

**சத்துணவுப் பணியாளர்களின் ஊதியம்**

சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு வரையறுக்கப்படாத ஊதிய விகிதமான ரூ.1,300-20-1,500-25-2,000-ல் ஊதியம் வழங்கப்படுகிறது.

சத்துணவு சமையலர், சத்துணவு உதவியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகியோருக்குத் தொகுப்பு ஊதியத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 21]

சத்துணவு பணியாளர்கள் குடும்ப பாதுகாப்புத் திட்டம் (FSF) சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் (SPF) ஆகிய திட்டங்களின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ரூ.50,000/-மும், சத்துணவு சமையலர், சத்துணவு உதவியாளர், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ.20,000/-மும் ஓய்வு பெறும்போது ஒட்டுமொத்த ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

**எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் பயனாளிகளுக்கு புதியதாக எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில், ரூ.85.00 இலட்சம் செலவில், 2,57,575 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புதிய எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கப்பட்டன.

**புதிய அலுமினிய சமையல் பாத்திரங்கள் வழங்குதல்**

2007-2008 ஆம் ஆண்டு ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் 1,667 சத்துணவு மையங்களுக்கு, தலா ரூ.3,000/- வீதம் புதிய அலுமினிய சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டன.

2008-2009 ஆம் ஆண்டில் 2000 சத்துணவு மையங்களுக்கு புதிய அலுமினிய சமையல் பாத்திரங்கள் வாங்கி, வழங்க ரூ.60.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பள்ளி சத்துணவு சமையலறைகளை நவீனப்படுத்துதல்**

சத்துணவு மையங்களில் தற்போது உணவு சமைக்க எரிபொருளாக விறகு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. சத்துணவு மையங்களில் சமையலராக பெரும்பாலும் பெண்களே பணியாற்றி வருகின்றனர். சத்துணவு மையங்களில் விறகுகளை பயன்படுத்துவதால், இம்மகளிருக்கு சுகாதார கேடு ஏற்படுகிறது. இதனால் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் விறகினை பயன்படுத்துவது நடைமுறை சிக்கல்களை தோற்றுவிக்கிறது. எனவே, சத்துணவு சமைக்கும் மகளிரின் துயரங்களைப் போக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புடன்கூடிய அடுப்பு வழங்க முடிவு செய்து 2006-2007 ஆம் ஆண்டில் பரீட்சார்த்தமாக 750 சத்துணவு மையங்களில் எரிவாயு

இணைப்பு மற்றும் அடுப்பு ரூ.1.50 கோடி செலவில் அமைக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி செலவில் 750 சத்துணவு மையங்கள் தலா ரூ.20,000 செலவில் எரிவாயு இணைப்புடன் அடுப்பு வழங்கி நவீனப்படுத்தப்பட்டன.

2008-2009 ஆம் ஆண்டில் 350 சத்துணவு மைய சமையலறைகளை நவீனப்படுத்த ரூ.70.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.2 தேசிய திட்டம் - ஆரம்பப் பள்ளி கல்விக்கான ஊட்டச் சத்து திட்டம், பள்ளி மதிய உணவு திட்டமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது**

தேசிய ஆரம்பப் பள்ளிக் கல்விக்கான ஊட்டச் சத்து உதவித் திட்டம் தமிழ்நாட்டில் 15-8-1995 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தினால் இலவசமாக 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஒரு பயனாளிக்கு 100 கிராம் அரிசி வீதம், ஒரு கல்வியாண்டில் 10 மாதங்களுக்கு (220 பள்ளி நாட்கள்) வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி மாணவ, மாணவியர்களுக்கு சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது.

சமையல் செய்ய ஆகும் செலவு மத்திய அரசினால் ஒரு பயனாளிக்கு ஒரு நாளைக்கு ரூ.1.50 வீதம் வழங்கப்படுகிறது. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பெற வேண்டிய ஊட்டச் சத்தின் அளவாக 450 கலோரி சக்தியும், 12 கிராம் புரதச் சத்தும் என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

மதிய உணவுத் திட்டத்தை மத்திய அரசு 1-10-2007 முதல் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கும் விரிவுப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டில் 2007-2008 ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களிலுள்ள, கல்வியில் பின்தங்கியுள்ள 44 வட்டாரங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1,26,728 பள்ளி மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டது. 1-4-2008 முதல் இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

6 முதல் 8 வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகளுக்குச் சத்துணவிற்காக மைய அரசு ஒரு பயனாளிக்கு ஒரு பள்ளி நாளுக்கு 150 கிராம் அரிசி இலவசமாக வழங்குகிறது. இதற்கான சமையல் செய்ய ஆகும் செலவினமாக ஒரு பயனாளிக்கு ஒரு நாளைக்கு



ரூ.2 அளிக்கிறது. இக்குழந்தைகளுக்கான ஊட்டச் சத்து அளவாக 700 கலோரி சக்தியும் 20 கிராம் புரதச் சத்தும் என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் பள்ளி மதிய உணவுத் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட தேசிய ஊட்டச் சத்து திட்டத்தின்கீழ் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | திட்டக்கூறுகள் | 1 முதல் 5ஆம் வகுப்பு | 6 முதல் 8ஆம் வகுப்பு |
|---|---|---|---|
| 1 | இலவச அரிசி ஒதுக்கீடு | 80,235.89 மெ.டன் | 2,318.76 மெ.டன் |
| | | ரூ.12,035.38 | ரூ.309.17 |
| 2 | சமையல் செலவினம் | | |
| 3 | சமையல் உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் 14,373 பள்ளிச் சத்துணவு மையங்களுக்குத் தலா ரூ.5000 வீதம் சமையல் உபகரணங்கள் (ரூ.459.45 + 259.20 இலட்சம்) | ரூ.718.65 | — |
| | 647 கல்வியில் பின்தங்கிய வட்டாரங்கள் | — | ரூ.32.35 |
| 4 | 844 புதிய சத்துணவு மையங்களில் பண்டக சாலையுடன்கூடிய சமையற்கூடம் தலா ரூ.60,000 செலவில் கட்டுதல் (129 + 715 = 844) | ரூ.506.40 | — |
| | 190 பள்ளிச் சத்துணவு மையங்கள் ரூ.60,000/- வீதம் கட்டுதல் (கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களுக்கு) | — | ரூ.114.00 |
| 5 | மேலாண்மை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | ரூ.298.24 | ரூ.7.00 |

## 3.3 கண்காணித்தல்

சத்துணவு மையங்களில் பயனாளிகளின் வருகைக்குத் தக்கவாறு உரிய அளவில் தரமான உணவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிச் சத்துணவு மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க மாவட்ட / வட்டார / மாநகராட்சி / நகராட்சி மற்றும் ஊராட்சி மன்ற அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களில் அலுவலர்களுடன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர்.

சத்துணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியரின் தாய்மார்களில் விருப்பமுள்ள ஒருவர் அல்லது இருவர், முறைப் பணியில் சுகாதாரமான முறையில் தரமான உணவு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைக் கண்காணித்து வருகின்றனர்.

## 3.4 மதிப்பீடு

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஒரு மகத்தான திட்டமாகும். எனவே, இத்திட்டத்தை மதிப்பீடு செய்வது மிகவும் அவசியமாகும். இதனால் திட்ட செயல்பாட்டில் குறைபாடுகள் ஏதும் இருப்பின் அதனைச் சரியான நேரத்தில் சரி செய்யலாம். இதனால் சத்துணவுத் திட்டத்தின் செயலாக்கம் மேம்படுத்தப்படும். இதுவரை ஸ்ரீ அவினாசிலிங்கம் பெண்கள் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், சென்னை வளர்ச்சி கல்வி நிறுவனம், (Madras Institute of Development Studies), சென்னை, இந்திய மேலாண்மை நிறுவனம், பெங்களூர் ஆகிய நிறுவனங்கள் இத்திட்டத்தை ஏற்கெனவே மதிப்பீடு செய்துள்ளன. தற்போது ஸ்ரீ அவினாசிலிங்கம் பெண்கள் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் இத்திட்டத்தை மதிப்பீடு செய்து வருகிறது.

## 3.5 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்

ஊட்டச் சத்து நிலை என்பது மக்களின் ஒட்டுமொத்த நலன் குறித்த ஒரு குறியீடாகும். முன்பருவ பள்ளிக் குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை என்பது சமுதாயத்தில் மக்கள் வாழும் நிலைமையினை அறிய பெரிதும் உதவும். கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்சமயம் குழந்தைகளிடையே ஊட்டச் சத்து நிலை பெருமளவில் உயர்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக 1998-ல் 51.08 சதவீதமாக இருந்த இயல்பு நிலை குழந்தைகள் எண்ணிக்கை, அக்டோபர் 2007-ல்



61.49 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடுமையான ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகள் எண்ணிக்கை 1998 ஆம் ஆண்டில் 0.54 சதவிகிதத்திலிருந்து அக்டோபர் 2007-ல் 0.05 சதவீதமாகக் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1998-ல் 53/1000 ஆக இருந்த குழந்தைகள் இறப்பு விகிதம், 2005-ல் 37/1000 ஆகக் குறைந்துள்ளது. சிசு இறப்பு விகிதம் 1000-க்கு 20 என்கிற அளவிற்குப் பதினோறாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதிக்குள் குறைக்கப்பட்டுவிடும்.

தமிழ்நாட்டில் 434 திட்டப் பகுதிகளில் மொத்தம் 47,265 குழந்தைகள் மையங்கள் மற்றும் 3,168 குறு மையங்கள் ஆக மொத்தம் 50,433 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 434 திட்டப் பகுதிகளில் 47 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டங்கள் மலைப் பகுதிகளிலும் மற்றும் 385 திட்டங்கள் கிராமப்புறங்களிலும் உள்ளன. குழந்தைகள் மையம் அமைக்க கிராம, நகர மற்றும் சாதாரண சமவெளிப் பகுதிகளில் செயல்படும் ஒரு மையத்திற்கு 400 முதல் 800 மக்கட்தொகை என்பதும், மலைப் பகுதிகளுக்கு 300 முதல் 800 மக்கட்தொகை என்பதும் ஒரு அளவுகோலாகும். இத்திட்டப் பகுதிகளின் எல்லைக்குட்படாத பகுதிகளில் 150-300 மக்கட்தொகைக்கு ஒரு குறுமையம் அமைக்கலாம் என்பதும் இத்திட்டத்தின் ஓர் அளவுகோலாகும்.

### 3.5.1 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:-

(அ) குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் பணிகளைப் பரவலாக்கல்;

(ஆ) குழந்தைப் பராமரிப்பு பழக்கங்களைக் குடும்ப அளவில் மேம்படுத்துவதோடு 0 முதல் 5 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துதல், குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுத்தல்;

(இ) பெண்களிடையே, குறிப்பாக கருவுற்றுள்ள மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்துதல்;

(ஈ) பெண்கள், வளர் இளம் பெண்கள், தங்களுடைய மற்றும் தங்கள் குடும்பத்தினரின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் திறமையுடன் எதிர்கொள்ளத் தேவையான கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதிகாரப் பகிர்வைப் பெறச் செய்தல்;

(உ) தமிழ்நாட்டை "ஊட்டச் சத்து குறைபாடற்ற மாநிலமாக" மாற்ற வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், அதிலும் முக்கியமாக கருவுற்றுள்ள மகளிர், பச்சிளம் குழந்தைகள், குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் முதியோர் ஆகியோருக்கு முழுமையான வாழ்க்கைச் சுழற்சி முறை மற்றும் ஊட்டச் சத்துப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

### 3.5.2 திட்டத்தின் பயனாளிகள்

- 6 முதல் 24 மாதங்கள் மற்றும் 25 முதல் 60 மாதக் குழந்தைகள்.
- கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்.
- வளர் இளம் பெண்கள்.
- ஓய்வூதியம் பெறும் முதியோர்.
- சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்.

### 3.6 வளர் இளம் பெண்களுக்கான திட்டம் (கிசோரி சக்தி யோஜனா)

வளர் இளம் பெண்களின் கல்வி நிலையை உயர்த்தியும், தொழிற்கல்வி அளித்தும் அவர்களை சிறப்பான குடிமக்களாக்கும் நோக்குடன், அவர்களின் நலனுக்காக மட்டுமே புதுக்கோட்டை, தருமபுரி, நாகப்பட்டினம், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திண்டுக்கல் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.



2006-2007 ஆம் ஆண்டு முதல் 434 வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, ஒரு திட்டப் பகுதிக்கு ரூ.1.10 இலட்சம் வீதம் 434 திட்டப் பகுதிகளுக்கு ரூ.477.40 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின்கீழ்,**

- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம், சட்ட உரிமைகள், வீட்டைப் பராமரித்தல், குழந்தை வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் வாயிலாக 11 முதல் 15 வயதுடைய பள்ளிக்குச் செல்லும் மற்றும் பள்ளிக் கல்வியினைத் தொடராத வளர் இளம் பெண்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி நடத்தப்படுகின்றது.
- 16 முதல் 18 வயதுடைய வளர் இளம் பெண்களுக்கு 60 நாள் தொழிற்கல்விப் பயிற்சியாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் கணினிப் பயிற்சி, சமையல் கலை, செல்போன் பழுதுபார்க்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்மூலம் சுமார் 4,03,620 வளர் இளம் பெண்கள் பயனடைகின்றனர்.

### 3.7 பள்ளி முன்பருவக் கல்வி விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்

குழந்தைகள் மையங்களில் முறைசாரா மற்றும் விளையாட்டு மூலமாக முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைகள் மையத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ.500 செலவில் முன்பருவக் கல்வி உபகரணங்களை மத்திய அரசு வழங்குகிறது. இது தவிர, ஒவ்வொரு புதிய குழந்தைகள் மையத்திற்கும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்காக முதல் கட்டமாக ரூ.1,000 ஒருமுறை மட்டும் அனுமதிக்கப்படுகிறது.

### 3.8 எவர்சில்வர் தட்டு டம்ளர்கள் வழங்குதல்

2007-2008 ஆம் ஆண்டில் 2,20,425 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்குப் புதிய எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் ரூ.66.12 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மையங்களில் சத்துணவு உட்கொள்ளும் பயனாளிகளுக்கு ஒரு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் ரூ.30 செலவில் வழங்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 21

**3.9 குழந்தைகள் மையங்களை நவீனமயமாக்குதல் - எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் குக்கர் வழங்குதல்**

(1) குழந்தைகள் மையங்களில், சமைக்கும் நேரத்தை சேமிக்கவும், சத்துக் குறையாமல் சமைத்து வழங்கவும், புகையில்லாத சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் 2006-2007 ஆம் ஆண்டில் முன்னோடியாக 3 மாவட்டங்களில் 1,000 குழந்தைகள் மையங்களுக்கு, சமையல் எரிவாயு இணைப்புடன் அடுப்பு, அடுகலன் (குக்கர்) மற்றும் மின்சார வசதி ஆகியவை ரூ.81,65,000 செலவில் வழங்கப்பட்டன.

(2) 2007-2008 ஆம் ஆண்டில், நவீனமயமாக்கப்பட்ட மையங்களின் செயல்பாடுகள் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்ததாலும், மக்களிடம் மேலான வரவேற்பு இருந்ததாலும், இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி 2,940 மையங்களை நவீனப்படுத்த ரூ.2 கோடி செலவிடப்பட்டது. ஆக, இதுவரை 3,940 குழந்தைகள் மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

(3) 2,000 குழந்தைகள் மையங்களை நவீனமயமாக்கும் பொருட்டு, 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.1.54 கோடி செலவில் சமையல் எரிவாயு இணைப்புடன் அடுப்பு மற்றும் அடுகலன் (Cooker) வழங்கி மின்மயப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.10 கண்காணிப்புப் பிரிவு**

கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுத்து, ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் சிறப்பு ஆய்வுகள் மேற்கொண்டு அதன்மூலம் பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்க, கிராம அளவிலான செயற்குழுக்கள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குழு அதே கிராமத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்களைக் கொண்டது. கிராம அளவில் குழந்தை மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதோடு, திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கு உதவுவது இக்குழுவின் பொறுப்பாகும்.

அங்கன்வாடிப் பணியாளர்களால் குழந்தைகள் மையங்களில் அளிக்கப்படும் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக மாவட்டங்களில், மாதந்தோறும் புள்ளியியல் ஆய்வாளர்களால் குழந்தைகள் மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நம்பகத்தன்மை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.



2008 ஏப்ரல் 21]

**3.11 மேலாண்மை தகவல் முறை**

மேலாண்மை தகவல் முறை அடிப்படையில் மாவட்டங்களிலிருந்து சரியான புள்ளிவிவரங்கள் கணினி மூலமாக உடனுக்குடன் அனுப்புவதற்கு ஏதுவாக மென்பொருள் தயாரிக்கப்பட்டு, தலைமையிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக மாவட்ட அளவில் தொடர்புடைய பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும் 434 திட்டத்திற்கும் கணினி வழங்கப்பட்டு, குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளை மின்னணு நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும் வகையில் புதிய மென்பொருள் ஒன்றை ELCOT உதவியுடன் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**குழந்தைகள் மையங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | | மற்றவர்கள் | | |
| | | | இணை உணவு | சத்துணவு | இணை உணவு | சத்துணவு | மொத்தம் |
| | | | 6–24 & 25–36 மாதங்கள் | 25–60 மாதங்கள் | கருவுற்ற/ பாலூட்டும் தாய்மார்கள் | முதியோர்கள் | |
| 1 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் | 47265 மையங்கள் + 3168 குறு மையங்கள் | 611112 369165 | 1203334 | 532714 | 36966 | 2753291 |

**3.12 குழந்தைகள் மையங்களின் தரம்**

குழந்தைகள் மையங்களின் தரத்தைக் கண்டறிய கீழ்க்காணும் 10 வகையான குறியீடுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு, மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

| வ.எண் | பிரிவு | குறியீடுகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1 | ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத நிலை | 7 | 20 |
| 2 | சுகாதாரம் | 10 | 17 |
| 3 | வளர்ச்சியைக் கண்காணித்தல் | 5 | 10 |
| 4 | இணை உணவு மற்றும் சத்துணவு | 5 | 10 |
| 5 | சுத்தம் மற்றும் பராமரிப்பு | 6 | 10 |
| 6 | வளர் இளம் பெண்களின் நிலை | 6 | 10 |
| 7 | பதிவேடுகள் பராமரித்தல் | 3 | 7 |
| 8 | பணியின் தரம் | 4 | 7 |
| 9 | சமுதாயப் பங்கேற்பு | 3 | 4 |
| 10 | ஒருமித்த சேவை | 3 | 5 |
| | மொத்தம் | 52 | 100 |

மேலே குறிப்பிட்டுள்ள குறியீடுகளின்படி குழந்தைகள் மையங்களின் தரம் வகைப்படுத்தப்படுகிறது.

**முதல் தர குழந்தைகள் மையம் - 80 முதல் 100 மதிப்பெண்**

**இரண்டாம் தர குழந்தைகள் மையம் - 60 முதல் 80 மதிப்பெண்**

**மூன்றாம் தர குழந்தைகள் மையம் - 60-க்குகீழ்**

ஊட்டச் சத்து குறைபாடில்லாத குழந்தைகள் மையம் எனில், முதல்தர மதிப்பு வழங்கப்படும். மாவட்டத் தொடர்பு அலுவலர், புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் மாவட்ட திட்ட அலுவலர்களால் குழந்தைகள் மையங்களின் தரம் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் இயக்குநரின் ஒப்புதல் பெறப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் இயக்குநரின் அலுவலகத்தின் மதிப்பீட்டுக் குழு மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களை ஆய்வு செய்து, மையங்களுக்கு வழங்கப்பட்ட குறியீடுகளை சரி பார்க்கிறது. ஒருங்கிணைந்த குழந்தை



வளர்ச்சித் திட்டப் பணிகள் இயக்குநரின் ஒப்புதல் பெற்ற பின்னர் முதல் தர மையங்களிலிருந்து மூன்று சிறந்த மையங்களை மாவட்ட திட்ட அலுவலர்கள் தேர்ந்தெடுத்து தேசிய விருது மற்றும் மாநில விருதிற்குப் பரிந்துரை செய்கின்றனர்.

**3.13 இணை உணவுத் திட்டம்**

2007-2008 ஆம் ஆண்டில் ரூ.142 கோடி செலவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பல்வேறு நிலையில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க நிதி ஒதுக்கப்பட்டது. இதில் 50 சதவீத செலவினத்தை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

**3.14 வளர் இளம் பெண்களுக்கான ஊட்டச் சத்து (Nutrition Programme for Adolescent Girls)**

வளர் இளம் பெண்களுக்கான ஊட்டச் சத்துத் திட்டத்தின்கீழ் (NPAG) ஊட்டச் சத்து பற்றாக்குறையுள்ள வளர் இளம் பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் 6 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது இத்திட்டம் திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 2008-2009 ஆம் ஆண்டிற்காக ரூ.250.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.15 சுகாதாரப் பணிகள்**

பொது சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைந்து கருவுற்றுள்ள மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 0 முதல் 5 வயதுள்ள குழந்தைகள் ஆகியோருக்கு உடல் நல பாதுகாப்பு, தடுப்பூசி பணிகள், நோய் பற்றிய விழிப்புணர்வுப் பணிகள் மற்றும் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைத்தல் ஆகிய பணிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2008-2009-ல் கீழ்வரும் செயல்பாடுகள் நிறைவேற்றப்பட உள்ளன.

- மருந்துகள் அடங்கிய பெட்டி ஒன்று ரூ.600/- வீதம் 38,383 குழந்தைகள் மையங்களுக்கு ரூ.230.30 இலட்சம் செலவில் வாங்கி வழங்குதல்.
- ஒவ்வொரு வருடமும் தேவைப்படும் மருந்துகள் வாங்க மாவட்ட அளவில், நகர்ப்புற வட்டாரங்களுக்கு ரூ.5,000/- மற்றும் கிராமப்புற வட்டாரங்களுக்கு ரூ.3,000/- வழங்குதல்.

### 3.16 நிருவாகம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் காலியாக இருந்த 4,283 அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் 11,400 அங்கன்வாடி உதவியாளர்கள் ஆக மொத்தம் 15,683 பணியிடங்களை விதிமுறைகளின்படி நிரப்ப ஆணையிடப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

மேலும், 1,539 கூடுதல் குழந்தைகள் மையங்கள் திறக்கவும், உபரி பணியாளர்களைக் கொண்டு நிரப்பியபின் புதிய நியமனம்மூலம் அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர்களை நிரப்பவும், புதிதாக 3,168 குறு மையங்களை தொடங்கவும், அம்மையங்களுக்கு மதிப்பூதியத்தில் அங்கன்வாடிப் பணியாளர்களை நிரப்பவும் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 3.17 சிறந்த பணியாளர்களுக்கான ஊக்கப் பரிசு

அங்கன்வாடிப் பணியாளர்களின் பணியின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு ஆண்டுதோறும் சிறப்பான முறையில் பணியாற்றும் 98 பணியாளர்களை மாநில அளவில் தேர்ந்தெடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/- வீதம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு செலவினம் ரூ.4.90 இலட்சம் ஆகும்.

### 3.18 பயிற்சி

களப் பணியாளர்களின் வேலைத் திறன் மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தி பயனாளிகளுக்கு சிறந்த முறையில் சேவை புரிய பயிற்சி வழிவகை செய்கிறது. பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி, புத்தறிவுப் பயிற்சி போன்ற பல பயிற்சிகள் மாவட்டம் முதல் கிராம அளவு வரை பணிபுரியும் அனைத்து திட்டப் பணியாளர்களுக்கும் அளிக்கப்பட்டன.

2007-2008 ஆம் ஆண்டு மத்திய அரசு, மாநில பயிற்சித் திட்ட செயல்பாட்டிற்காக ரூ.290.39 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

அங்கன்வாடி உதவியாளர்களுக்கு புத்தறிவுப் பயிற்சியும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் அந்தந்த திட்டப் பகுதிகளில் அளிக்கப்படுகிறது.

மேற்பார்வையாளர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி சென்னை நடுநிலை பயிற்சி மையத்தில் (MLTC) நடத்தப்படுகிறது.



குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கு புத்தறிவுப் பயிற்சியும், பயிற்சியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியும் சென்னை தரமணி, தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் நடத்தப்படுகிறது.

பச்சிளங்குழந்தைகளுக்கு உணவூட்டுதல் பயிற்சி அனைத்து திட்டப் பணியாளர்களுக்கும் அந்தந்தத் திட்டப் பகுதி/மாவட்டத்தில் நடத்தப்படுகின்றன.

பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி பெறாத களப் பணியாளர்களுக்கு 2008-2009 ஆம் ஆண்டில் பயிற்சியளிக்கும் வகையில் தேவைக்கேற்ப புதிய பயிற்சிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.19 தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாக தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பிரிவு விளங்குகிறது. ஊட்டச் சத்துணவு மற்றும் ஊட்டச் சத்து தொடர்பான கல்வி ஒருங்கே வழங்கப்படுகிறது. இப்பிரிவின் பணிகள் / செயல்பாடுகள், ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணிகளை மேம்படுத்தி குழந்தைகள் மையங்களின் தரத்தை உயர்த்துவதாகும். தகவல் தொடர்புப் பணிகள் சுகமான மகப்பேறு, குழந்தை வளர்ப்பின் முக்கியத்துவம், குழந்தை வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் சமுதாயத்தைப் பங்கு பெறச் செய்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளில் பங்குபெற சமுதாயத்தை ஊக்குவிக்கிறது.

தகவல் தொடர்பின் முக்கிய நோக்கம், தனி நபர், குடும்பம், சமுதாயத்தினரிடையே சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து பழக்கவழக்கங்களில் நல்ல மனமாற்றத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக ஊட்டச் சத்து குறைபாட்டை போக்குவதில் பெரும்பங்கு வகித்தல் ஆகும். பல்வேறு தகவல் தொடர்புப் பணிகள் கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டன. இந்த நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன:—

- 10,000 குழந்தைகள் மையங்களுக்குத் தேவையான நான்கு வகையான பதிவேடுகள் ரூ.20 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

➤ தகவல் மற்றும் கருத்து பரிமாற்றம் நல்ல பலனை கொடுத்து வருவதால், அடைந்த முன்னேற்றத்தை தக்க வைத்துக் கொள்ளவும், அதனை மேலும் வளர்க்கவும் 434 குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் மொத்தம் ரூ.74.86 இலட்சம் செலவில், பல்வேறு வகையான தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்

### சத்துணவு திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | பள்ளிச் சத்துணவு மையங்களிலுள்ள சமையல் அறைகளை நவீனப்படுத்துதல் | 70.00 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட சத்துணவு மையங்களுக்கு உணவு சமைக்கத் தேவையான புதிய அலுமினிய பாத்திரங்கள் வழங்குதல் | 60.00 |
| 3 | சத்துணவுத் திட்ட மையங்களுக்கு எடைத் தராசுகள் வழங்குதல் | 50.00 |
| | மொத்தம் | 180.00 |

### ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | 2000 குழந்தைகள் மையங்களில் சமையலறைகளை நவீனமயமாக்குதல் | 154.00 |
| | மொத்தம் | 154.00 |



## அத்தியாயம் 4

### ஊனமுற்றோர் மறுவாழ்வு

4.1. தமிழக அரசு, ஊனமுற்றவர்கள் வாழ்வில் அனைத்து தடைகளையும் கடந்து, பொது நீரோட்டத்தில் ஒன்றிணையக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, ஊனமுற்றோர் தமது இயலாமையைக் கடந்து, சமுதாயத்தின் ஓர் அங்கமாக வாழ வகை செய்யும் பொருட்டு அவர்களுக்கு விரிவான சமூகப்பொருளாதாரம், மருத்துவம், வாழ்க்கைத் தொழில் தொடர்பான உதவிகளை அளிப்பதற்கு இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தொழில் முனைவோர், இரக்கமுள்ள நன்கொடையாளர்கள் ஆகியோர் உட்பட சமுதாயத்திற்கு ஊனமுற்றோர் மறுவாழ்வில் கூட்டுப் பொறுப்பு உள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென இத்துறை பின்வரும் பணிகளை செயல்படுத்தி வருகிறது:—

ஊனம் ஏற்படுவதை தடுத்தல், ஆரம்ப நிலையிலேயே ஊனத்தை கண்டறிதல், ஊனத்தின் கடுமையைக் குறைத்தல் மற்றும் ஆரம்ப நிலையிலேயே பயிற்சிகள் அளித்தல் ஆகியன பற்றி விளம்பரங்கள் வாயிலாக பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

ஒவ்வொரு ஊனமுற்ற குழந்தையும், ஊனத்தின் அளவிற்கேற்றவாறு சிறப்புக் கல்வியோ அல்லது ஒருங்கிணைந்த கல்வியோ பெறும் வகையில் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி பெறுவதை உறுதிப்படுத்துதல், மேலும், ஊனமுற்ற மாணவர்கள் அவரவரின் திறமை / நிலை / தேவைக்கேற்ப மற்ற மாணவர்களுடன் ஒருங்கிணைந்து கல்வி பயிலுவதை ஊக்குவித்தல்.

ஊனமுற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பயிற்சி பெற்ற மனித வளங்களை தேவையான அளவில் பெருக்கவென ஆசிரியர் பயிற்சி மையங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை உருவாக்குதல்.

- ஊனமுற்றோர்களுக்கு சிறப்பு உதவிகளை வழங்கும் வகையில் கல்வி உதவித் தொகை, இலவசப் பயணச் சலுகை, கல்வி உபகரணங்கள், சிறப்பு உதவி உபகரணங்கள், சிறப்பு ஆசிரியர்கள் நியமனம், மாணவர் இல்ல வசதி ஆகியவற்றை அளித்து, அதன்மூலம் அவர்கள் உயர்கல்வி பெற உதவிகள் செய்தல்.
- ஒவ்வொரு வகை ஊனமுற்றோருக்கும் சில குறிப்பிட்ட நிறுவனங்களில் பணிபுரியவென உரிய தொழிற் பிரிவுகளை கண்டறிந்து, அப்பிரிவுகளில் பயிற்சி அளிக்க பயிற்சி மையங்களை நிறுவி நடத்துதல்.
- ஊனமுற்ற பயிற்சியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வாங்கிட நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.
- ஊனமுற்றோர் சுயதொழில் செய்திட கடன் பெறும் வகையில் வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்கள் தாராளமாக நிதி உதவி வழங்கிட வகை செய்தல்.
- ஊனமுற்றோருக்கு தடையற்ற சூழலை ஏற்படுத்துதல்.
- சாதாரண மாணவர்களைப் போல ஊனமுற்றவர்களும் சமூக, கலாசார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதை உறுதி செய்யும் வண்ணம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ஊனமுற்றோருக்கு சம வாய்ப்புகளை அளிக்கவும், முழுப் பங்கேற்பினை உறுதிப்படுத்தவும், உரிமைகளைப் பாதுகாக்கவும், தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

### 4.2. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ஐ செயல்படுத்துவதில் தமிழகம் இதர மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. ஊனமுற்றோர் சமுதாயத்தினரோடு இணைந்து, இயல்பான வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடும் வகையில், அவர்களுக்கு சம வாய்ப்புகளை அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளை பாதுகாக்கவும், கடந்த 1995-ல் இயற்றப்பட்ட ஊனமுற்றோருக்கான சட்டம், ஊனமுற்றோருக்கு அமைந்த ஒரு வரப் பிரசாதமாகும்.





தமிழ்நாட்டில் இச்சட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கவென ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை தலைவராகவும் செயல்பட்டு வருகிறார்.

### 4.3. மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை

2001 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை மொத்தம் 16,42,497 ஆகும். இது பற்றிய தனித் தனி விவரங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) | பார்வையற்றோர் | 9,64,063 |
| (2) | காதுகேளாதோர் | 1,97,115 |
| (3) | கை, கால் ஊனமுற்றோர் | 3,53,798 |
| (4) | மன வளர்ச்சி குன்றியோர் | 1,27,521 |

தமிழ்நாட்டில் உள்ள ஊனமுற்றோர் பற்றிய தனித் தகவல் தொகுப்பு ஏற்படுத்திடவென, மாநிலம் தழுவிய அளவில் ஊனமுற்றோர் சம்பந்தமான தகவல் சேகரிக்க ஒரு கணக்கெடுப்பு நடத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, மாநில அரசு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தகவல் சேகரிக்கும் பணிகள் விரைவில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.4. ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

அனைத்து ஊனமுற்ற குழந்தைகளும் பொதுப் பள்ளிகளின்மூலம் கல்வி பெற இயலாது. எனவே, சிறப்புப் பள்ளிகளின்மூலம் ஊனமுற்றோருக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு மொத்தம் 23 சிறப்புப் பள்ளிகளை நடத்துகிறது. இதில் 10 பள்ளிகள் பார்வையற்றோருக்கும், 11 பள்ளிகள் செவித்திறன் குறையுடையோருக்கும், ஒரு பள்ளி கடுமையாக கை, கால் ஊனமுற்றோருக்கும் மற்றும் ஒரு பள்ளி மன வளர்ச்சி குன்றியோருக்கும் நடத்தப்படுகின்றன.

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ, மாணவியர்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட வசதிகள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன:—

1. சிறப்புக் கல்வி, உணவு மற்றும் உறைவிடம்.

2. ஆண்டிற்கு இரண்டு இணை இலவச சீருடைகள்

மேலும், அரசுச் சிறப்புப் பள்ளிகள் அனைத்திற்கும் கல்வி பயிற்றுவிக்கும் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**4.5. (அ) ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை**

பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்கு படிப்பிற்கான பொருட்கள் வாங்குவதற்கு மாநில அரசு கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது:-

| வ. எண் | வகுப்பு | ஆண்டு ஒன்றிற்கான கல்வி உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | ஏற்கெனவே வழங்கப்பட்ட வீதம் | 1-4-2007 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட வீதம் |
| அ) | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.250/- | ரூ.500/- |
| ஆ) | 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.750/- | ரூ.1,500/- |
| இ) | 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை | ரூ.1,100/- | ரூ.2,000/- |
| ஈ) | பட்டப்படிப்பு | ரூ.1,500/- | ரூ.3,000/- |
| உ) | தொழில் மற்றும் பட்டமேற்படிப்பு | ரூ.1,950/- | ரூ.3,500/- |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1257.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) வாசிப்பாளர் உதவித் தொகை**

பார்வையற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையுடன் மாநில அரசால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் வாசிப்பாளர் உதவித் தொகையும், 1-10-2007 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது:-





| வ. எண் | வகுப்பு | ஆண்டு ஒன்றிற்கான வாசிப்பாளர் உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | ஏற்கெனவே வழங்கப்பட்ட வீதம் | 1-10-2007 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட வீதம் |
| அ) | 9-12 ஆம் வகுப்பு வரை | ரூ.750/- | ரூ.1500/- |
| ஆ) | பட்டப்படிப்பு | ரூ.1250/- | ரூ.2500/- |
| இ) | தொழில் மற்றும் பட்டமேற்படிப்பு | ரூ.1500/- | ரூ.3000/- |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.277.44 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.6 பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள், பள்ளித் தேர்வுகள் எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு இப்பார்வையுள்ள உதவியாளர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூபாய் 50/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட பள்ளிகளில் பயிலும் 400 பார்வையற்ற மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.

2. பார்வையற்ற மகளிருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.

3. பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.

4. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

5. புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை.

6. பார்வையற்றோருக்கான இந்திய சங்கத்தின் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.7 பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு "பேசும் மென்பொருள்" அடங்கிய கணினிகள் வழங்குதல்**

பார்வையற்ற மாணவ/மாணவிகள் கணினியை பயன்படுத்தும் வகையில் பூவிருந்தவல்லி மற்றும் திருச்சியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு, தலா 5 கணிப்பொறிகள் வீதம் மொத்தம் 10 கணிப்பொறிகள் "பேசும் மென்பொருளுடன்" வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அனைத்து பார்வையற்ற ஆசிரியர்களுக்கும் எல்காட் நிறுவனத்துடன் இணைந்து கணினி பயிற்சி அளிக்கப்பட்டது.

**4.8. பார்வையற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாடங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்கள் மற்றும் ஒலிநாடா இயக்கிகள் வழங்கல்**

பார்வையற்ற மாணவ, மாணவியர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் போது பாடங்களை வாசித்துக் காட்டும் வாசிப்பாளர் கிடைப்பதில் சிரமங்கள் இருப்பதால், இச்சிரமத்தை நீக்கும் வண்ணம், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, பார்வையற்ற மகளிருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சி மற்றும் பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் ஆகிய பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், பாடங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்கள் மற்றும் ஒலி நாடா இயக்கிகள் இலவசமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007-2008-ல் 112 மாணவ/ மாணவியர்கள் ஒலி நாடா இயக்கிகள் மற்றும் ஒலி நாடாக்களை பெற்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**4.9. செவித்திறன் குறையுடையோருக்கு பி.காம் மற்றும் பி.சி.ஏ (B.Com மற்றும் B.C.A) பட்டப் படிப்பு தொடங்குதல்**

செவித்திறன் குறையுடையோர் பயனடையும் வகையில், அவர்களுக்கென்றே சென்னை மாநிலக் கல்லூரியில், புதிதாக இரண்டு பிரிவுகள் -B.Com & B.C.A (கணினி பயன்பாடு பட்டப்படிப்பு) 2007-2008-ல் தொடங்கப்பட்டு, தலா 15 மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதன்மூலம் செவித்திறன் குறையுடைய மாணவ/மாணவியர்கள் உயர்கல்வி பயின்று, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்ள முடியும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.10. சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப் படிப்பு முடித்த, உடல் ஊனமுற்ற 20 பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்துகொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொரு பட்டதாரிக்கும் தலா ரூ.3,000/- வீதம் உதவி தொகை வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.0.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.11. காதுகேளாதோருக்கான முன்பருவக் கல்வி**

பேச்சுத் திறன் மற்றும் செவித்திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன்பருவப் பள்ளிப் பிரிவுகள், காதுகேளாதோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளிலும், அரசு மானியம் பெறும் காதுகேளாதோர் பள்ளிகளிலும் இயங்கி வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.12. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி**

வெவ்வேறு வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்கும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி தேவைப்படுவதால், அவர்களுக்குப் பிரத்தியேக பயிற்சி

அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் கால அளவு பத்து மாதங்களாகும். பயிற்சிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை. | பார்வை-யற்றோருக்கு போதிக்கும் இளநிலை பட்டயம் | 25 |
| 2 | பாலவிகார் பயிற்சிப் பள்ளி, கீழ்பாக்கம், சென்னை | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலை/ முதுநிலை பட்டயம் | 20 |
| 3 | சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை. | காது கேளாதோருக்கு போதிக்கும் இளநிலை/ முதுநிலை பட்டயம் | 50 |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.13. பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கான இடைநிலை (ஆசிரியர் கல்வி பட்டயம்) ஆசிரியர் பயிற்சி**

ஊனமுற்றோருக்கு தக்க பயிற்சிகள் அளித்து, அவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்துவதே இவ்வரசின் நோக்கமாகும். பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி மையம் (ஆசிரியர் கல்வி பட்டயம்) நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டுதோறும் கை, கால் ஊனமுற்றோர் 25 பேர்களும், பார்வையற்றோர் 25 பேர்களும் இரண்டு ஆண்டு காலத்திற்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியை பெறுவதன்மூலம் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது உறுதியாகிறது.



2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.8.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.14. மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம்மூலம் ஊனமுற்றோருக்கான பயிற்சிகள்**

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்களின் வாயிலாக ஊனமுற்றோருக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளை இலவசமாக வழங்கி வருகின்றது:-

1. ஆய்வுக்கூட தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி (2 ஆண்டுகள்)

   (சென்னை, சேலம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை)

2. கணினிப் பயிற்சி (ஆறு மாத காலம்) (அனைத்து மாவட்டங்களிலும்)

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் யாவும் கை, கால் ஊனமுற்றோர், பார்வையற்றோர் மற்றும் காதுகேளாதோர் ஆகிய பிரிவினருக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. கல்விக் கட்டணம் மற்றும் பயிற்சிக் கட்டணம் உட்பட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு, பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம் உதவி தொகையாகவும் வழங்கி வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.26.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.15. ஊனமுற்றோருக்கான பயிற்சி**

சென்னை, பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கி வரும் பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் பார்வையற்றோர்களுக்கென்று கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:-

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)
2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்) மற்றும்
3. வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (பெண்களுக்கு மட்டும்) (ஓராண்டு காலம்)

[2008 ஏப்ரல் 21

மேற்கூறிய பயிற்சித் திட்டங்கள் பார்வையற்ற 24 நபர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இதில் படிப்புக் கட்டணம், பயிற்சிக் கட்டணம், இலவச உணவு, இருப்பிடம், இரண்டு இணை சீருடைகள் ஆகியவையும் அடங்கும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.25.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.15(அ) செவித்திறன் குறையுடையோருக்கு "பொருத்துநர்" பயிற்சி**

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத ஊனமுற்ற நபர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தற்போது "பொருத்துநர் பிரிவில்" 19 நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.16. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்**

பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கி வரும் மண்டல "பிரெய்லி அச்சகம்" மூலம் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கப்படுகின்றன. இந்த அச்சகம் நவீனமயமாக்கப்பட்டு, இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.23.21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.17. பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன்கூடிய அரசு மறுவாழ்வு இல்லம், பூவிருந்தவல்லி.**

பார்வையற்ற பெண்கள் அவர்களின் வருமானத்தை பெருக்கிக்கொள்வதற்காக மாநில அரசு அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. 18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற பெண்கள், தொழிற்கூடத்துடன்கூடிய அரசு மறுவாழ்வு இல்லத்தில்



2008 ஏப்ரல் 21]

சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருட்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது 18 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் தங்கி பயனடைந்து வருகிறார்கள்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.10.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.18. மன வளர்ச்சி குன்றிய 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான இல்லம்**

14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய பெண்களுக்கு, அரசு சாரா நிறுவனங்கள், பாதுகாக்கப்பட்ட இல்லங்களை நடத்த அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள 5 இல்லங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோராண்டும் 30 பெண்கள் மறுவாழ்வு பெறும் வண்ணம், ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ.2.50 இலட்சம் வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.12.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.19. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி நடத்த அரசின் உதவி மானியம்**

தேனி மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் 25 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் சிறப்புப் பள்ளி ஒன்று துவங்கப்பட்டு, அரசின் மானிய நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி 50 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி வழங்கி வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.6.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.20. மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள்**

14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோரை பராமரிப்பதற்கான, தொழிற்பயிற்சி வசதிகள் மற்றும் தங்கும்

வசதிகளுடன்கூடிய 7 இல்லங்கள் திருவள்ளூர், மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 50 பேர் வரை தங்கி, தொழில் கல்வி பயின்று வருகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.193.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.21. மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஊதிய மானியத் தொகை வழங்குதல்**

அரசு சாரா நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு ஆசிரியர்கள், தொடர்ந்து மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு பயிற்றுவிப்பதை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.3000/- கூடுதல் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.22. 60 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல்**

மன வளர்ச்சி குன்றிய நபர்களுக்கு, இருப்பிட வசதி அளிக்கும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளுக்கு நேர்விற்கேற்ப கட்டடம் கட்ட நிதியுதவி அல்லது மாணவர்கள் தங்கும் இல்லத்திற்கு வாடகை மற்றும் மாணவர்களுக்கு உணவூட்டுச் செலவினம் வழங்கப்படுகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் 60 சிறப்புப் பள்ளிகள் பயனடையும் வகையில் ரூ.2 கோடி நிதியுதவி வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.170.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.23. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக, அரசு சாரா அமைப்புகள்மூலம் தேனி மாவட்டத்தில் 3 பகல் நேர பராமரிப்பு மையங்கள் நடத்துதல்**

90 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் தேனி மாவட்டத்தில் 3 பகல் நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு



வருகின்றன. தமிழக அரசு வழங்கும் மானிய உதவியைக் கொண்டு, அரசு சாரா அமைப்புகள் இம்மையங்களை நடத்தி வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.24 வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை.**

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு 10 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அதுவரை கீழ்க்கண்டவாறு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

| கல்வித் தகுதி | வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.450/- |
| மேல்நிலை வகுப்பு/பட்டப் படிப்பை முடிக்காதவர்கள் | ரூ.375/- |
| பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கும் குறைவாக படித்தவர்கள் | ரூ.300/- |

**தகுதிகள் :**

(அ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(ஆ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்தபட்சம் ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.42.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.25. சுய வேலைவாய்ப்பு திட்டங்கள்

ஊனமுற்றோர் பெட்டிக்கடை வைத்து நடத்துவது உட்பட சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடன் பெற்றுக்கொள்ள இத்துறை ஆக்கபூர்வமாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ரூ.3,000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அத்தொகை உதவித் தொகையாக அரசால் வழங்கப்படுகிறது. பொது இடங்களில், பெட்டிக் கடை வைக்க விரும்பும் ஊனமுற்ற நபருக்கு ரூ.5,000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அது உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் 1,050 ஊனமுற்ற நபர்கள் பயனடைகின்றனர்.

ஊனமுற்ற பெண்களுக்கு சுய வேலைவாய்ப்புக்கான பயிற்சியும், சிறுதொழில் கடனும் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள ஊனமுற்றோருக்கு கைவினைத் தொழிலும், சிறு கடையும் நடத்த முன்னுரிமை வழங்கப்படுகிறது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்படும் சுய வேலைவாய்ப்பு திட்டங்கள்மூலம், ஊனமுற்றோர் அதிக அளவில் சுய வேலைவாய்ப்பு பெற மாநில அரசு திறம்பட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.32.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.26. மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்கான சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மாநில அரசால் சுதந்திர தினத்தன்றும், அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்றும் கீழ்க்கண்ட மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன.



**சுதந்திர திருநாள் அன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்.**

| வ. எண் | விருதின் பெயர் | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோருக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/- ரொக்கப் பரிசு |
| 3 | மகளிருக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/- ரொக்கப் பரிசு |
| 4 | ஊனமுற்றோருக்கு சேவைபுரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மகளிருக்கு சேவைபுரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஊனமுற்றோருக்கு சேவைபுரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | ஊனமுற்றோர் நலனுக்காக அரும் பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ.25,000/- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 8 | சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

11-138—18a

அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்று (டிசம்பர் மாதம் 3-ம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:-

| வ. எண் | விருதின் பெயர் | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளித்த தொழிலதிபர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோரில் மிகச் சிறந்த பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | லட்சுமிகாந்தம் அம்மாள் விருது (சிறந்த இரண்டு பார்வையற்ற மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கானது) | சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.1200/- |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.27. தேசிய விருதுகள்**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள் விழாவின்போது மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம்மூலம், தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த ஊனமுற்ற பணியாளர், தொழிலதிபர், பணியமர்த்தும் அலுவலர், நிறுவனம், தனி நபர், தனித்திறன் பெற்ற ஊனமுற்ற நபர், தனித்திறன் பெற்ற ஊனமுற்ற குழந்தைகள் முன்னோடி ஊனமுற்ற நபர், ஊனமுற்றோருக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் நிறுவனம் மற்றும் ஊனமுற்றோர் பயன்படுத்தும் வகையிலான சிறந்தத் தொழில் நுட்பங்கள் ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம், ஒவ்வொரு



ஆண்டும், 12 பிரிவுகளில், 70 தேசிய விருதுகளை வழங்குகிறது. 2007-2008-ல் 10 தேசிய விருதுகளை தமிழ் நாட்டிலுள்ள ந ர்கள் / நிறுவனங்கள் பெற்றுள்ளனர்.

**4.28. பார்வையற்ற மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு**

தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் மாவட்ட / மாநில அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசும், உயர்கல்வி பெற உதவித் தொகையும் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.18.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.29. அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளாக" மாநில அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஊனமுற்றோர் தங்களுடைய கலை மற்றும் விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்திட ஊக்குவிப்பதே இந்த நாளைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கமாகும். அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளை முன்னிட்டு, ஊனமுற்ற குழந்தைகளுக்காக மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நட த்தப்படுகின்றன. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 5,000 ஊனமுற்ற மாணவ, மாணவியர் கலந்து கொள்கின்றனர். பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் மற்றவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. டிசம்பர் 3 ஆம் நாளன்று ஊனமுற்ற குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்விழாவில் ஊனமுற்றோருக்கு சிறந்த வேலைவாய்ப்பு அளித்தவர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்தப் பணியாளர், சிறந்த ஆசிரியர் மற்றும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் ஊனமுற்றோருக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 21

**4.30. நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம், கிண்டி, சென்னை.**

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம், கிண்டி, சென்னை-32, சி-22, தொழிற்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ளது. இது ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இத்தொழிற்கூடத்தில் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர சைக்கிள்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் வடிவமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மூன்று சக்கர சைக்கிள்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் மாவட்டந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட, தேவையுள்ள ஊனமுற்ற நபர்களுக்கு மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள் மூலமாக அளிக்கப்பட்டு வருகின்றது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.34.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.31. போலியோ மற்றும் முதுகு தண்டுவடம் பாதித்தோருக்கு சரி செய்தலுக்கான இலவச அறுவை சிகிச்சை**

இத்துறை அனைத்து மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்களின் வாயிலாக சிறப்பு முகாம்கள் நடத்தி, அந்தந்த மாவட்ட பகுதிகளில் இளம்பிள்ளை வாதம் அல்லது முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களை கண்டறிந்து, அவர்களுக்கு "சரி செய்தலுக்கான அறுவை சிகிச்சை" மேற்கொள்வதற்காக மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். இச்சிகிச்சையின் மூலமாக ஊனமுற்ற நபர்கள் மற்றவர்களின் உதவியின்றி நடப்பதுடன் தங்கள் வாழ்க்கைப் பிழைப்பையும் நடத்த ஏதுவாகிறது.

இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.500/- மருத்துவமனையில் தங்கும் செலவிற்காக வழங்கப்படுவதுடன், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவம்சாரா பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.300/-ம் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.4.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 21]

**4.32. ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்குதல்**

பல்வேறு வகையான ஊனத்தினால் பாதிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட, தேவையுள்ள ஊனமுற்ற நபர்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறைமூலம் கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள், ஊனத்தின் தன்மை, உபயோகத் தன்மை, திறன் மற்றும் தேவைக்கேற்ப மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகங்கள்மூலம் இலவசமாக அளிக்கப்படுகிறது.

1. மூன்று சக்கர சைக்கிள்கள்
2. சக்கர நாற்காலிகள்
3. கருப்புக் கண்ணாடிகள்
4. மடக்கு ஊன்றுகோல்கள்
5. பிரெய்லி கை கடிகாரங்கள்
6. காதொலிக் கருவிகள்
7. சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன்கள்
8. கால் தாங்கிகள்
9. தோள்பட்டை தாங்கிகள் மற்றும்
10. செயற்கை அவயங்கள்.

மேற்கூறப்பட்ட அனைத்து உதவி உபகரணங்கள்மூலம், ஊனமுற்ற நபர்கள் சமுதாயத்தில் அவர்களுடைய அன்றாட அனைத்து பணிகளையும் அவர்களே செய்துகொள்ள ஏதுவாக இருப்பதினால் பிறர் உதவி எவ்விதத்திலும் இல்லாமல் அவர்கள் சமூகத்தில் மற்ற நல்ல நிலையிலுள்ள நபர்களைப் போலவே நடமாட முடிகிறது.

மேலும், கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்கள் போன்ற உதவி உபகரணங்கள் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்களில் உள்ள முடநீக்கு பிரிவில், பணிபுரியும் தொழில் நுட்பாளர்கள் மற்றும் தோல் பணியாளர்களால் தேவைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு, இலவசமாகப் பயனாளிகளுக்கு பொருத்தப்படுகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.33. தமிழகத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் வழங்குவதற்காக 6,000 மூன்று சக்கர சைக்கிள்கள் கூடுதலாக வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு**

2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தபடி மாநிலத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைத்து உடல் ஊனமுற்ற நபர்களும் பயன்பெறத்தக்க வகையில் 6,000 மூன்று சக்கர சைக்கிள்கள் வாங்கி இலவசமாக வழங்குவதற்கு, ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**4.34. மாநிலத்திலுள்ள பார்வையற்ற நபர்களுக்கு 4,000 கருப்புக் கண்ணாடிகள் மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் கூடுதலாக வாங்கி வழங்க நிதி ஒதுக்கீடு**

2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, அனைத்து பார்வையற்ற நபர்களும் பயன்பெறும் வகையில், கூடுதலாக 4,000 கருப்புக் கண்ணாடிகள் மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் வாங்கி வழங்கும் பொருட்டு, ரூ.7.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**4.35. ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு இலவச நவீன செயற்கை அவயம் வழங்குதல்**

பொதுவாக, குறைந்த விலையில் பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட கால்தாங்கிகள் ஊனமுற்ற நபர்களுக்கு மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் மூலமாக அளிக்கப்பட்டு வந்தன. 2007-2008 முதல், இயங்கக்கூடிய வகையிலான நவீன செயற்கை அவயங்கள் உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு மாநிலம் முழுவதும் வழங்கப்படுகின்றன. இத்தகைய நவீன செயற்கை அவயங்கள் வாயிலாக ஊனமுற்ற மாணவ, மாணவியர்கள் தாங்கள் கல்வி பயிலும் இடத்திற்கு, மற்றவர்கள் துணையில்லாமல் சாதாரண மக்களைப் போலவே, சுயமாகச் சென்றுவரவும், தமது அன்றாடப் பணிகளைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளவும் இயலும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.25.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**4.36. கடும் உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்குதல் மற்றும் பணிக்குச் செல்லும் கடும் உடல் ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் வாங்கிட மானியம் வழங்குதல்**

2007-2008 ஆம் நிதியாண்டில் 60 மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் மாணவ, மாணவியருக்கு இலவசமாகவும், பணிக்குச் செல்லும் 290 கடும் உடல் ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் வாங்கிட, மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டியின் விலையில் 30 விழுக்காடு அல்லது ரூ.10,000/- இவற்றில் எது குறைவோ, அது மானியமாகவும் அளிக்கப்பட்டது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.37. ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் நபர்களுக்கான சலுகைகள்**

ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம், கீழ்க்குறிப்பிட்டவாறு சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன:—

ரூ.10,000/- என வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து ரூ.20,000/- ஆக இவ்வரசால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின்கீழ் பயனடைய வருமான வரம்பு ஏதுமில்லை.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றவரைத் திருமணம் செய்து கொள்ளும் நபருக்கான சலுகைகள் | (1) திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ.10,000/- (2) ரூ.10,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 100 |
| 2. | ஒரு கை/கால் இல்லாதவரைத் திருமண செய்துகொள்ளும் நபருக்கான சலுகைகள் | (1) திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ.10,000/- (2) ரூ.10,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 |
| 3 | காதுகேளாதவரைத் திருமணம் செய்து கொள்ளும் நபருக்கான சலுகைகள் | (1) திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ.10,000/- (2) ரூ.10,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.78.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.38. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வந்த கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித் தொகை மாதம் ரூ.200/-லிருந்து ரூ.500/- ஆக 1-9-2006 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித் தொகை, பயனாளிகளுக்கு பண அஞ்சல் (Money order) வாயிலாக மாதந்தோறும் அவர்களுடைய வீட்டிற்கே அனுப்பப்படுகிறது. கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை இந்த அரசால் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.8,400-லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.630.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.38 (அ).** கடும் உடல் ஊனமுற்றோர் படும் துன்பங்களைப் போலவே தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோரும் கடும் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர். அவர்களுக்கு உதவும் வகையில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கும் இந்நிதியாண்டிலிருந்து கடும் ஊனமுற்றோருக்கும், மன வளர்ச்சி குன்றியோருக்கும் அளிக்கப்படுவது போன்று மாதாந்திர உதவித் தொகையாக ரூ.500/- வழங்கப்படும்.

**4.39. மன வளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

60% மற்றும் அதற்குமேல் மன வளர்ச்சி குன்றிய தன்மை உள்ளவர்களுக்கு, வயது மற்றும் வருமான வரையறை ஏதுமின்றி, மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக ரூ.500/- வீதம் பண அஞ்சல் (Money order) வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, 20,000 நபர்கள் இதன்மூலம் பயன்பெறுகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1260.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.40. செவித்திறன் குறையுடையோருக்காக ஆரம்ப நிலையில் இக்குறைபாட்டைத் தடுக்கும் 10 மையங்களை நிறுவுதல்**

சென்னை, திருவள்ளூர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், கன்னியாகுமரி, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி



செவித்திறன் குறையுடைய குழந்தைகள், ஆகிய 10 மாவட்டங்களில் செவித்திறன் குறையுடைய குழந்தைகள், இக்குறைபாட்டைத் இளஞ்சிறார்களுக்கென ஆரம்ப நிலையில் இக்குறைபாட்டைத் தடுக்கும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. திறன் வாய்ந்த தொண்டு நிறுவனங்கள்மூலம் இம்மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. செவித்திறன் குறையுடைய குழந்தைகளை இளம் வயதிலேயே கண்டறிவது, பெற்றோர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் ஆரம்ப நிலை குறைபாட்டின் கடுமையைக் குறைத்து அதன்மூலம், அவர்களின் முழுத் திறனையும் வெளிக் கொணருவதே இம்மையங்களின் நோக்கமாகும். செவித்திறன் குறைபாடுள்ள, வேறு வகை ஊனமில்லாத 2½ வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் இம்மையங்களில் சேர்க்கப்பட்டு, அவர்கள் 5 வயது அடையும்போது, அவர்களின் பேச்சு மற்றும் மொழித் திறனை வளர்த்து, பின்னர் சாதாரணப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பில் சேர்த்து, பிற மாணவர்களுடன் ஒன்றிணைக்கப்படுகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.85.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.41. மன வளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 50 மன வளர்ச்சி குன்றிய 0 முதல் 6 வயதுக்குட்பட்ட மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மன வளர்ச்சிக் குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய பயிற்சிகள் அளிப்பதன்மூலம் அவர்களின் செயல்திறனை அதிகரித்து, அவர்களை மறுவாழ்வு அடையச் செய்வதில் அவர்களின் பெற்றோர்/பாதுகாவலரைப் பயிற்றுவித்து, அதன்மூலம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இயக்கம், தொடர்பு, சுய வளர்ச்சி, சமூகமயமாக்குதல் மற்றும் புரிந்து கொள்ளுதல் ஆகிய திறன்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கென மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு மையத்திற்கும் தலா ரூ.5.27 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.158.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.42. ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டம்

[2008 ஏப்ரல் 21

ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டம் தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மறுவாழ்வுப் பணியினை கிராம பஞ்சாயத்து முதல் பல்வேறு அளவில் மேற்கொண்டு, ஊனமுற்றோருக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு பணிகளை இந்த 7 மாவட்டங்களில் மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில வள மற்றும் பயிற்சி மையம், சென்னையில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையம் ஊனமுற்றோர் மறுவாழ்வு சம்பந்தமான பயிற்சிகளைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளித்து வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.137.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.43. உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை

ஊனமுற்றோர் பயன் பெறும் வண்ணம் அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. பார்வையற்றோர் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி, தமது இருப்பிடத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் வரை, அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அவர்கள், கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம் மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர இச்சலுகை வழங்கப்படுகிறது. பார்வையற்றோரும், கால் முடமானோரும், அரசு விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை தமது சொந்த ஊருக்குச் சென்று வர இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். மன வளர்ச்சி குன்றியவர்கள், எவ்வித வருமான வரம்புமின்றி, உதவியாளர் ஒருவருடன் இலவசப் பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.



2008 ஏப்ரல் 21]

ஊனமுற்றோர் அனைவரும் ஆண்டுக்கு நான்கு முறை கூடுதலாக அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து வகைப் பேருந்துகளிலும் சென்று வர 75% பேருந்து கட்டணச் சலுகை பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.308.21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.44. தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டை, பாஸ் புத்தகம் மற்றும் ஊனமுற்றோர் சான்றிதழ்கள் வழங்குதல்

இம்மாநிலத்திலுள்ள, தகுதி வாய்ந்த அனைத்து ஊனமுற்றோருக்கும், தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ன்படி, ஊனமுற்றோருக்கான மருத்துவச் சான்றிதழ்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மருத்துவக் குழுக்கள்மூலம், வாரத்தின் குறிப்பிட்ட நாள் / நாட்களில் வழங்கப்படுகின்றன. இம்மருத்துவக் குழுவில் 3 மருத்துவ நிபுணர்கள் இடம்பெறுகின்றனர். இவர்களில் காது, மூக்கு, தொண்டை மருத்துவர் / கண் மருத்துவர் / முடநீக்கியல் மருத்துவர் / மன நல மருத்துவர் / குழந்தைகள் நல மருத்துவர் ஆகியோரில் ஏதேனும் ஒரு மருத்துவ நிபுணரும் இருப்பார். சான்றிதழ்கள் வழங்குவதற்கென ஊனமுற்றோரிடமிருந்து எவ்விதக் கட்டணமும் பெறப்படுவதில்லை.

அடையாள அட்டைகள் வழங்குவதற்காக, மாநிலம் முழுவதும் வட்டாரம் மற்றும் தாலுகா அளவிலும் முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் மொத்தம் 50 ஊனமுற்றோருக்கான மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஊனமுற்ற மாணவர்களுக்கு அவரவர் பயிலும் சிறப்புப் பள்ளிகள் / அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் உள்ள பள்ளிகள் / ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் உள்ள பள்ளிகள் ஆகியவற்றிலேயே சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

## 4.45. தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்

2007 ஆம் ஆண்டு சட்டப் பேரவையின் ஒப்புதலுடன், தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம் அமைக்க ... து. அதன்படி, மாண்புமிகு சமூகநலத் து...

228412
சென்னை-600 008

தலைவராகக் கொண்டும், மூன்று அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 15 அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்டும் தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம் அமைக்கப்பட்டது. ஊனமுற்றோருக்குச் சமூகப் பாதுகாப்பும், நலத் திட்டங்களும் அளிக்கும் பொருட்டு, இவ்வாரியத்தின்மூலம் பல்வேறு வகையான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

*2008-2009* ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.*100.00* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.46. தேசிய அறக்கட்டளை**

ஆட்டிசம், மூளை முடக்கு வாதம், மனவளர்ச்சி குன்றிய தன்மை மற்றும் பல்வகை ஊனத்தினால் பாதிக்கப்பட்டோரைச் சுயமாக வாழ வழிவகை செய்யவும், அவர்கள் தனித்தும், சமுதாயத்துடன் ஒன்றிணைந்தும் வாழ அதிகாரத்தை அவர்களுக்கு அளிப்பதை நோக்கமாகக் கொண்டும் *1999* ஆம் ஆண்டு தேசிய அறக்கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை தலைவராகக்கொண்ட உள்ளூர் அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய அறக்கட்டளையின் சிறப்புக் கூறுகள் குறித்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எடுத்துரைக்கவும், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும், சட்டரீதியான பாதுகாவலர் நியமனங்கள் குறித்து விளக்கவும் ஒவ்வொரு உள்ளூர் அளவிலான குழுவிற்கும் ஆண்டுக்கு ரூ.*10,000/-* நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.47. விழிப்புணர்வு முகாம்கள்**

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறப்பதைத் தவிர்ப்பதற்கென எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், ஆரம்ப நிலையிலே கண்டறிதல் மற்றும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மருத்துவ வசதி, கல்வி மற்றும் மறுவாழ்வு வசதிகள் அளிப்பது போன்ற அரசின் நலத் திட்டங்கள் பற்றிய தகவல்கள் பொது மக்களிடையே சென்றடைய அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பெறுகின்றன. இதற்கென *2007-2008* ஆம் ஆண்டில் ரூ.*60* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



**4.48. மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்களைப் பதிவு செய்தல்**

மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்களை வரன்முறைபடுத்த வேண்டி, தமிழக அரசு இந்தியாவிலேயே முதன் முறையாக "தமிழ்நாடு மன நலம் குன்றியோர் மறுவாழ்வு மையங்கள் விதி, *2002*" இயற்றியுள்ளது. இவ்விதியின்கீழ் மனநலம் குன்றியோர் மறுவாழ்வு மையங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்.

**4.49. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பதிவு செய்தல்**

ஊனமுற்றோருக்கென பல்வகையான சேவை புரிந்து வரும் அரசு சாரா நிறுவனங்கள் அனைத்தும் ஊனமுற்றோருக்கான சட்டம், *1995*-ன்கீழ் பதிவு செய்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். ஊனமுற்றோருக்கென எவ்வித மறுவாழ்வுப் பணியை மேற்கொண்டிருந்தாலும், அத்தகைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் பதிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரிடம் ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், *1995*-ன் *52*-வது பிரிவின்கீழ் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**4.50. மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள்**

இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்தில் *30* மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு மறுவாழ்வு உதவிகளை வழங்கி வருகின்றன.

*2008-2009* ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.*542.23* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.51. ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு**

ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீட்டினைச் சரியாக, திறம்பட அமல்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. அரசுப் பணிகளில்

மற்றும் அனைத்து வகை நிர்வாகங்களின்கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் (அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) உருவாகும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் 3 சதவீதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில், 1 சதவீதம் பார்வையற்றோருக்கும், 1 சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், 1 சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறையில், ஆசிரியர்கள் பணியிடங்களில் பார்வையற்றவர்களுக்கு 2 சதவீதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காது கேளாத, பேசும் திறனற்றவர்களுக்கு 2 சதவீதமும் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3% இட ஒதுக்கீட்டின்கீழ், அரசுத் துறைகளிலும், அரசுச் சார்பு நிறுவனங்களிலும் ஊனமுற்றோருக்குப் பணிகள் அளிப்பதற்கு, மத்திய அரசின் சுழற்சி ஆணையைப் பின்பற்றும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், ஓர் ஆண்டில் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியான ஊனமுற்ற நபர்கள் அந்த ஆண்டில் இல்லாத பட்சத்தில் அந்த பணியிடங்களை மூன்று ஆண்டுகள் வரை கொண்டுசெல்ல (Carry Forward) அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**4.52. ஊனமுற்றோருக்குத் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்**

ஊனமுற்றோர், சமுதாயத்தின் இதர பிரிவினருடன் இணைந்து வாழ ஏதுவாக, ஊனமுற்றோருக்குத் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தர மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ல் குறிப்பிட்டுள்ளவாறு, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (DCR) தேவையான திருத்தங்களை வெளியிட்டு, அதன்மூலம், சென்னை பெருநகரப் பகுதியில், உடல் ஊனமுற்றோர் பயனடையும் வகையில் பொதுக் கட்டடங்களில் சாய்வு தளம் மற்றும் இதர தடையில்லா சூழ்நிலையை ஏற்படுத்த அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



ஊனமுற்றோர் சமுதாயத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழுமையாகப் பங்கேற்பதை உறுதி செய்யத் தேவையான, தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தரக் கோரி பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை ஆகிய துறைகளை மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

**4.53. அரசு மறுவாழ்வு இல்லங்கள்**

தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளித்திட, கீழ்க்காணும் இடங்களில் அரசு மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன:

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | தொடங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 2-10-1971 |
| 2. | உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் | 22-1-1972 |
| 3. | பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 18-6-1972 |
| 4. | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் | 7-1-1973 |
| 5. | மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 17-2-1973 |
| 6. | யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம் | 22-4-1973 |
| 7. | மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம் | 4-7-1973 |
| 8. | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் | 19-10-1973 |
| 9. | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் | 23-10-1973 |
| 10. | விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் | 10-1-1974 |

ஒவ்வொரு அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாகச் சேர முன் வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின், இல்லங்களில் சேருவதற்கு

அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட, தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். நோயாளிகள் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இல்லங்களில் தங்குவோர் முழுமையாகக் குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி, ஆகியவற்றுடன் பொழுதுபோக்கு வசதிகளான, விளையாட்டு, நூலகம், இசைக் கருவிகள் மற்றும் தொலைக்காட்சி பெட்டி ஆகிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள இல்லவாசிகளுக்கு பாய் முடைதல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணிகள் தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு, பெரியவர்களுக்கு ரூ.20/- செலவிலும், குழந்தைகளுக்கு ரூ.15/- செலவிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களான பொங்கல், தீபாவளி மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய தினங்களில் நபர் ஒருவருக்குக் கூடுதலாக ரூ.5/- செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன், பொங்கல் அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இலவசமாகப் பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன. 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், நோட்டு புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

இல்லவாசிகளுக்கு மருத்துவ அலுவலர்களின்மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. தேவைப்படும் மருந்துகள், தமிழ் நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் வாங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:—





| வ. எண் | விவரம் | செலவினம் ஆண்டொன்றிக்கு |
|---|---|---|
| 1. | பிரத்யேகமான காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | ரூ.1000/- |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | ரூ. 2000/- |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் புருசு வாங்குவதற்கு | ரூ.2500/- |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் | ரூ.1200/- |
| 5. | இசைக் கருவிகள் | ரூ.400/- |

மேலும், இல்லவாசிகள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/- வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.680.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.54. அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்**

தமிழ்நாடு, பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் 1945 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மேல்பாக்கத்திலுள்ள அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் 950 நபர்கள் தங்கும் வகையில் (ஆண்கள் 770+பெண்கள் 180) 1-3-1954 அன்று தொடங்கப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் நீதித் துறை நடுவர் மூலமாகத் தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள், இந்த இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச உணவு, தங்குமிடம், உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டத் தொழில் மற்றும் தையல் போன்ற பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மேலும், இல்லத்திலுள்ள ஆண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு சட்டைகள் மற்றும் இரண்டு கால் சட்டைகளும், பெண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு சேலைகள் மற்றும் இரண்டு ரவிக்கைகள் வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, பொங்கல் நாளன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும் பாய், படுக்கை விரிப்பு, தட்டு, குவளைகள், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக்

[2008 ஏப்ரல் 21

காலம் முடிந்தவுடன், சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். மொத்தம் 100 குடும்பங்கள் தங்குவதற்கு வசதியாக, புதிய இல்லம் ஒன்றைக் கட்ட இந்த அரசால் ரூ.1.29 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.749.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | மாவட்ட மறுவாழ்வு மையங்களுக்குத் துணைக் கருவிகளுடன் கணிப்பொறிகள், பிரிண்டர்கள், நிகரி இயந்திரங்கள் வழங்குதல். | 47.40 |
| 2. | தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல். | 63.10 |
| | மொத்தம் | 110.50 |



2008 ஏப்ரல் 21]

## அத்தியாயம் 5

## சமூகப் பாதுகாப்பு

5.1 சமூகப் பாதுகாப்புத் துறையானது, இடர்பாடான சூழ்நிலையிலுள்ள சிறார்களின் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பயிற்சியுடன்கூடிய மறுவாழ்வுடன் ஒழுக்கநெறி பிறழ்தலுக்கு உட்படுத்தப்படும், சிறுமியர் மற்றும் மகளிர் ஆகியோரைப் பாதுகாத்து, சேவைகள் புரிவதைக் கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் அனுமதிக்கப்படும் இல்லவாசிகளின் மறுவாழ்வினைக் கருத்திற்கொண்டு, இல்லம் மற்றும் இல்லம் சாரா அணுகுமுறையுடன்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இது தவிர, சிறார்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் முறையான வளர்ச்சிக்காகவும் துறையின் அனைத்துத் திட்டங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்தி வருகிறது.

இத்துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில், 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கு கவனிப்பு, பயிற்சி (கல்வி மற்றும் தொழிற்கல்வி) மற்றும் மறுவாழ்வும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இத்துறை நிறுவனங்களிலிருந்து நீக்கம் பெறும் சிறார்கள் மற்றும் மகளிருக்குத் தேவையான பிற்காப்பு உதவிகளையும் அளித்து வருகிறது.

மத்திய அரசானது 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தினை மறு ஆய்வு செய்து, 2006 ஆம் ஆண்டில் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) திருத்தச் சட்டம் ஒன்றினை இயற்றியது.

மத்திய அரசு, மாதிரி விதிகளை 26-10-2007 அன்றைய அரசிதழில் அறிவிக்கையாக வெளியிட்டது. தமிழக அரசு இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் விதிகளை எழுத்துப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் செயல்படுத்துவதைக் கடமையாகக் கொண்டுள்ளது. அதனை வலியுறுத்தும் விதமாகக் கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை

மாநில அரசு குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை குறித்து ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் பாதுகாப்புக் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ள உறுதி நிலைபாட்டை நிலைநிறுத்தும் விதத்தில் மாநில அரசின் குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை அமையும்.

## குழந்தைகள் நலன் மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்

குழந்தையின் முழு திறமைகளை வெளிக்கொணரத் தேவையான ஆக்கபூர்வ நடவடிக்கைகளும் குழந்தைகளுக்கே உரிய நலனில் அக்கறையும், வழிகாட்டி நெறிமுறைகளாக விளங்கும் இம்முயற்சியில், அரசுத் துறை நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், சமுதாயம் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பயன்களை ஒன்று திரட்டி அதைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். குழந்தைகள் சுகாதாரம், மருத்துவம், கல்வி, வாழ்க்கைமுறை, படைப்பாற்றல், ஓய்வு மற்றும் விளையாட்டு உள்ளிட்ட சேவைகளில் பங்காற்றும் பல்வேறு துறைகளின் திட்டங்கள் மற்றும் சேவைகளை இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் உள்ள குழந்தைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ள இத்துறை முனைப்புடன் செயல்படும். குழந்தைகளின் உடல், மனம், அறிவு, சமூகம், சமூக நீதி போன்றவை வளர்ச்சி பெறுவது உறுதி செய்யப்படும்.

## செயலாக்க ஒருங்கிணைப்பு

அரசு, குழந்தைகளுக்காகப் புரியும் சேவைகளை, மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு இச்சேவைகளை வழங்கும் அனைத்து நிறுவனங்களையும், ஒருங்கிணைத்து ஒருமுகமாகச் செயல்படுத்த சமூகநலத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அரசு ஆதரவற்றோர் காப்பகங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் போன்றவை இளைஞர் நீதிச் சட்டம் 2006-ன்படி அமைக்கப்பட்ட குழந்தைகள் நலக் குழுவுடன் இணைக்கப்படும்.

## குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாடு

இளைஞர் நீதிச் சட்டத்தைச் சீரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாகச் சமுதாயக் குழுக்கள், பெருந்தொழில் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவற்றைக்



குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாட்டில் ஈடுபடுத்தவும், ஏனைய நிறுவனங்களின் சேவையை ஒருங்கிணைப்பதற்கும் தற்போதுள்ள இளைஞர் நீதி அமைப்பை வலுப்படுத்தி, மாற்றங்கள் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## குழந்தைகளுக்கான குழுக்கள்

அனைத்து குழந்தைகள் நல நிறுவனங்களிலும் குழந்தைகளுக்கான குழுக்கள் அமைப்பதன்மூலம் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வசதி, உள் கட்டமைப்பு வசதி மற்றும் அவற்றை உறுதி செய்யவும், மேலும் திறன் மேம்பாட்டில் தன்னம்பிக்கையைப் பெறுவதற்கான திட்டக் குறிக்கோளை அடையவும் வழிவகுக்கிறது.

## 5.2.1. இளைஞர் நீதிக் குழுமங்கள்

தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் குறித்த வழக்கு விசாரணைகளை விசாரிக்க, சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கடலூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 8 இடங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுமங்கள் பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர்களைக்கொண்டு (ஒரு பெண் சமூகப் பணியாளர் உட்பட) 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பின்படி, அதிகாரங்களைக் கொண்ட நீதிமன்ற நடுவர் குழுவாகச் செயல்படுகின்றன. சம்மந்தப்பட்ட கூர்நோக்கு இல்லங்களில் இக்குழுமம் வாரத்தில் மூன்று முறை திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கூடுகின்றன.

இளைஞர் நீதிக் குழும உறுப்பினர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சிகள் யூனிசெப் (UNICEF) நிறுவன ஆதரவுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.15.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2.2. கூர்நோக்கு இல்லங்கள்

தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் மட்டுமே இளைஞர் நீதிக் குழுமம் வழியாகக் கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள்.

சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் 6 அரசு

[2008 ஏப்ரல் 21

நிறுவனங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் 2 கூர்நோக்கு இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன.

தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் நடத்தப்படும் கூர்நோக்கு இல்லங்களுக்கு ஆகஸ்டு 2007 முதல் பணியாளர்களின் ஊதியத்திற்காக மாதம் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.80,000/-மும் பராமரிப்பு மானியமாக ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.450/- வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.134.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2.3 சிறுவர் / சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ், சிறுவர் / சிறுமியருக்கான இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம், தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்பட்டு, அச்சிறார்களுக்கு கவனிப்பு, பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு போன்றவை இளைஞர் நீதிக் குழுமங்கள் ஆணையிட்டுள்ள காலம் வரை வழங்கப்படுகிறது. பெண்களுக்காக சென்னையிலும், சிறுவர்களுக்காக வேலூரிலும் 2 அரசினர் சிறப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.24.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3.1 குழந்தைகள் நலக் குழுக்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் சிறார்களின் பிரச்சினைகளைக் கையாள கீழ்கண்ட இடங்களில் 18 குழந்தைகள் நலக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. சென்னை | 7. சேலம் | 13. தஞ்சாவூர் |
| 2 செங்கற்பட்டு | 8. கோயம்புத்தூர் | 14. திருச்சிராப்பள்ளி |
| 3. இராணிப்பேட்டை | 9. விருதுநகர் | 15. மதுரை |
| 4. கடலூர் | 10. திண்டுக்கல் | 16. திருநெல்வேலி |
| 5. தருமபுரி | 11. காரைக்குடி | 17. நாகப்பட்டினம் |
| 6. ஈரோடு | 12. தூத்துக்குடி | 18. திருவள்ளூர் |



2008 ஏப்ரல் 21]

ஒவ்வொரு குழந்தைகள் நலக் குழுவும் ஒரு தலைவர் (அரசு சார்பற்றவர்) மற்றும் நான்கு உறுப்பினர்கள் கொண்ட (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) குழுவாக அமைக்கப்பட்டுள்ளது. பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இக் குழந்தைகள் நலக் குழுமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி என வாரத்தில் மூன்று நாட்கள் சம்பந்தப்பட்ட குழந்தைகள் இல்லங்களில் கூடுகின்றன.

அரசாணை (நிலை) எண் 124, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 29-6-2007-ன்படி 18 குழந்தைகள் நலக் குழுக்கள் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள் நலக் குழு உறுப்பினர்களுக்கு UNICEF நிறுவன ஆதரவுடன் அறிமுகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.17.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3.2 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

31 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களில் குழந்தைகள் நலக் குழு மூலம் அனுப்பப்படும் சிறார்களுக்குப் பராமரிப்பு, பயிற்சி, கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை, செங்கல்பட்டு, தட்டப்பாறை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், மல்லிப்புத்தூர், பஞ்சப்பள்ளி, ஈரோடு, விழுப்புரம் மற்றும் காரைக்குடி) சிறுமியர்-1 (சென்னை) | 11 |
| 2 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை-21, சென்னை-113, சென்னை-8, சென்னை-93, சென்னை-17, சென்னை-107, சென்னை-39, சென்னை-10 (2 இல்லங்கள்), காந்திகிராம், கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், மதுரை, திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி) | 20 |
| | மொத்தம் | 31 |

குழந்தைகள் நலக் குழுவின் ஆணைப்படி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக மட்டும் அனுமதிக்கப்படும் சிறார்கள், குழந்தைகள் இல்லங்களில் அனுமதித்து பராமரிக்கப்படுகின்றனர்.

அரசு சாரா நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு, ஒரு குழந்தைக்கு ரூ.450/- வீதம் ஆகஸ்டு 2007 முதல் பராமரிப்பு மானியம் அரசால் வழங்கப்படுகிறது. சென்னை, பாலவிஹார் நிறுவனத்தின்கீழ் இயங்கும் மனநலம் குன்றிய சிறார்களுக்கான குழந்தைகள் இல்லத்திற்கு ஒரு குழந்தைக்கு, ஒரு மாதத்திற்கு ரூ.450/- வீதமும், மயிலாடுதுறையில் இயங்கும் நிறுவனத்திற்கு மனம் மற்றும் உடல் நலம் குன்றிய சிறார்களுக்கு ஒரு குழந்தைக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.600/- வீதமும் மானியமாக வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.887.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3.3 பிற்காப்பு நிறுவனங்கள்

சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து விடுபடும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மூன்று "பிற்காப்பு நிறுவனங்கள்" செயல்பட்டு வருகின்றன:

| | |
|---|---|
| 1 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) |
| 2 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், மதுரை |
| 3 | அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம், வேலூர் |

பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு, வேலைவாய்ப்புடன்கூடிய வாழ்க்கைத் தொழிற்பயிற்சிகள் கற்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியேறும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், தங்கள் உயர் கல்வியினைத் தொடர, பிற்காப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.69.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 5.4. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கவென மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், இவ்வில்லங்களில் ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் தங்குவதற்கு இச்சிறுமிகள், ஆணையர் அனுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 5 மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள், கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் தலா ஒன்று வீதம் இயங்கி வருகின்றன:

- சென்னை
- மதுரை
- திருச்சி
- சேலம்
- கோயம்புத்தூர்

### 5.5. மீட்புப் புகலிடங்கள்

இப்புகலிடங்கள் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டம், 1956-ன்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கெனத் தோற்றுவிக்கப்பட்டவை ஆகும். இச்சிறுமியர் மற்றும் பெண்கள் மீதுள்ள வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரித்து தீர்ப்புக் கூறப்படும் வரையில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படுகின்றனர். இந்த வகையில் 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்புகலிடங்கள் அந்தந்த இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்படுகின்றன. ஒரு புகலிடம் வேலூரில் உள்ள பிற்காப்பு நிறுவனத்தில் செயல்படுகிறது.

### 5.6 மணமாகாத தாய்மார்கள் இல்லம்

பாலியல் கொடுமைகளால் பாதிப்பிற்குள்ளாகி மகப்பேறு அடைந்த பெண்கள் மற்றும் சிறுமியர், சென்னை-4 அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்திரிசாதானாவில் அனுமதிக்கப்படுகின்றனர்.

## 5.7 குறுகியகால இல்லம்

திக்கற்ற சிறுமிகளுக்கென தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் 2 குறுகிய கால இல்லங்கள் கீழ்க்கண்டவாறு இயங்கி வருகின்றன:

1. அபய நிலையம், சென்னை
2. புனித ஃபிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லம், அடைக்கலாபுரம், தூத்துக்குடி மாவட்டம்

இவ்வில்லங்களில் மகளிர் 90 நாட்கள் தங்க வைக்க அனுமதிக்கப்படுகின்றனர். தேவைப்படின், சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரின் அனுமதியுடன், மேலும் 45 நாட்கள் தங்க வைக்கப்படுகின்றனர். மேற்படி தொண்டு நிறுவனத்திற்கு ஒரு இல்ல வாசிகளுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.450/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள், மீட்புப் புகலிடங்கள், மணமாகாத தாய்மார் இல்லம் மற்றும் குறுகியகால இல்லங்கள் ஆகியவற்றிற்காக ரூ.200.44 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.8. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் ஆகியோருக்கு அச்சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக தக்க அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றை வழங்குவதற்காக கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களின் சிறார்களின் பிரச்சினைகளை உளவியல் ரீதியாக ஆய்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இவ்விளைஞர் வழிகாட்டி மையங்கள் அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றன. சென்னையில் இரண்டும், மதுரை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக மொத்தம் ஐந்து இடங்களில், இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கி வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இளைஞர் வழிகாட்டி நிலையங்களைப் பராமரிக்க ரூ.6.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 5.9 பள்ளிக் கல்வி

அனைத்து அரசு குழந்தைகள் இல்லங்களில் / சிறப்பு இல்லங்களில் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறுவர் குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை அரசினர் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லத்தில் 10 ஆம் வகுப்பு வரை கல்வியுடன், கணிப்பொறிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. தொடர்ந்து தங்கள் மேல்நிலைக் கல்வியை வெளியில் உள்ள பள்ளிகளில் பயில ஏதுவாக இவர்கள் இவ்வில்லங்களில் தங்க அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அவ்வகையில் தற்போது 18 மாணவர்கள் இவ்வில்லங்களில் தங்கிக் கல்வி பயின்று வருகிறார்கள்.

## 5.10 உயர் கல்வி

இத்துறை, சிறார்கள் தமது உயர் கல்வியினைத் தொடரும் பொருட்டு, மருத்துவம், பொறியியல் கல்லூரி, தொழிற்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க உரிய வசதிகள் செய்து தருகிறது. குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் உயர் கல்வி பயின்று வரும் சில சிறார்களின் விவரங்கள், கீழே வழங்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மருத்துவ பட்டப்படிப்பு | 1 |
| பொறியியல் பட்டப்படிப்பு | 1 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 61 |
| மொத்தம் | 63 |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்துறை இல்லவாசிகளின் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்விச் செலவினங்களுக்காக ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.11 வாழ்க்கைத் தொழிற்பயிற்சி

திறனை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் மறுவாழ்வு வழங்கும் நோக்குடன், பயிற்சி பெற்ற ஆசிரியர்மூலம் வாழ்க்கைத் தொழிற்பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவை தவிர, பின்வரும்

குறுகிய காலத் தொழிற்பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன:

(1) தையல்

(2) தானியங்கி பழுதுபார்ப்பு

(3) திரை அச்சுக் கலை

(4) கணினிப் பயிற்சி

(5) பாய்நெசவு

(6) கூட்டு இசைக் கருவிப் பயிற்சி

(7) புத்தகம் கட்டுதல்

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.28.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்க்கைத் தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| முழுத்திறன் பெற்ற சிறார்கள் | ரூ.70/- மாதம் தோறும் ஒரு சிறாருக்கு |
| பாதித் திறன் பெற்ற சிறார்கள் | ரூ.50/- மாதம் தோறும் ஒரு சிறாருக்கு |

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகை, சேமிக்கப்பட்டு இல்லவாசிகளின் கைச்செலவுக் கணக்கில் மாதம்தோறும் வரவு வைக்கப்படுகிறது. மாணவர்களின் கைப்பணம் ஒரு மாணவனுக்கு ரூ.5/- வீதம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு நோக்குடன் தொழிற் பிரிவுகளில் இல்லநீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகளுக்கு, கணினிப் பயிற்சி (டி.டி.பி), தானியங்கி பழுதுபார்த்தல் மற்றும் மின்வினைஞர் பயிற்சி ஆகியவை வழங்கப்படுகின்றன.

வேலூர், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் மகளிருக்கு, ஊசி வேலைப்பாடு மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



## 5.12 நிதியுதவி வழங்கும் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள்/இல்லவாசிகளுக்குக் கீழ்க்குறிப்பிட்ட நிதியுதவி வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

1. இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000-ன்கீழ் வீடேகிய இல்லவாசிகளுக்கு மறுவாழ்வுக்கு உதவும் வகையில் நிதியுதவி ரூ.5,000/-க்கு மிகாமலும் அல்லது பொருளுதவி ரூ.10,000/-க்கு மிகாமலும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 153 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

2. அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் கீழ்க்கண்ட பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும் இல்லவாசிகள், சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது:

| வ. எண். | தொழிற் பிரிவுகள் | உதவித் தொகை (துலா) ரூ. |
|---|---|---|
| | | 2000 |
| 1 | தச்சு | 1000 |
| 2 | நெசவு | 1000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 500 |
| 4 | தோட்டக்கலை மற்றும் வேளாண்மை | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2500 |
| 6 | தையல் | 1000 |
| 7 | பூத்தையல் | 1000 |
| 8 | உலோக வேலை | 1000 |
| 9 | பாய் நெசவு | |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய் பணிகள் | 1000 |
| | | 1000 |
| 11 | மின் பற்றவைப்பு | |
| 12 | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 2000 |

3. திருமண மானியமாக ஒரு பெண்ணுக்கு ரூ.3000/-மும், திருமண நாள் செலவுக்காக ரூ.2000/-மும் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.13 குடும்ப உதவித் திட்டம்**

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக, குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைய உதவி செய்யும் விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்லநீக்கம் செய்யப்பட்டு, குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களின் கல்வியினைத் தொடரும் பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி அமைக்கப்பட்ட குழு மூலம், சிறார்கள் கண்டறியப்பட்டு அவர்கள் பெற்றோர்வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/- வீதம் நிதி உதவி அவர்களின் குடும்பத்திற்கு இல்லவாசியின் வீடேகும் நாள் வரை வழங்கப்படுகிறது. இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், குழந்தைகள் தாமாகவே தாய், தந்தையருடன் தங்கிப் பயிலும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.14 சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்**

சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு சிறார்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கும் வகையில் சென்னை, இந்திய குழந்தைகள் நலச் சங்கம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று தமிழ்நாடு அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.15 சிறப்புப் பராமரிப்பு மையங்கள்**

குழந்தைகள் இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு, பெற்றோர்களின் அரவணைப்பு கிடைக்கும் வகையில் ஒரு சிறப்புப்



பராமரிப்பு மையம் (சிறுமியர்) தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஐம்பது சிறுமியர் பயன்பெறுகிறார்கள். ஒரு மாதத்திற்கு, ஒரு குழந்தைக்கு ரூ.200/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.16 சாலையோரச் சிறார்களுக்கான விரிவான திட்டம்**

சாலையோரச் சிறார்களுக்கான விரிவான திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நிறுவனத்திலும் 50 குழந்தைகள் வீதம் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு உணவு, முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்தங்குமிடங்கள் சாலையோர சிறார்களுக்குப் பாதுகாப்பான புகலிடங்களாக விளங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் 600 சிறார்கள் பயன்பெறுகின்றனர். தற்போது ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு ரூ.2,70,000/- (ஒரு இல்லவாசிக்கு ஒரு மாதத்திற்கு ரூ.450/- வீதம் X 50 இல்லவாசிக்கு X 12 மாதங்களுக்கு) பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தற்போது கீழ்க்காணும் இடங்களில் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 8 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | சேலம் | 1 |

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.32.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.17 ஆதரவற்ற மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்**

குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு, இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (தமிழ்நாடு கிளை) வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தற்காலிகக் கவனிப்பும் பாதுகாப்பும் வழங்குகிறது. குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் உரிய வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளும் வழங்குகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.18 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (Childline)

குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் என்பது பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு அவசரகால தொலைபேசி அழைப்புகள்மூலம் உதவுவதற்காக தேசிய அளவில் ஏற்படுத்தப்பட்ட 24 மணி நேரமும் இயங்குகின்ற இலவச தொலைபேசிச் சேவையாகும். 1098 என்கிற இந்த இலவச தொலைபேசிச் சேவை, நாடு முழுவதிலும் உள்ள நகரங்களுக்குப் பொதுவானது. இந்திய குழந்தைகளின் இலவச தொலைபேசி அமைப்பு (Childline India Foundation (CIF) 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியா முழுவதிலும் உள்ள மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் குழந்தைகளுக்கான இலவச அவசர காலத் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம் நாடெங்கிலுமுள்ள 73 நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் (மாமல்லபுரம்) ஆகிய 10 இடங்களில் மத்திய அரசு நிதியுதவியுடன், தனியார் தொண்டு நிறுவனங்களின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. சென்னை குழந்தைகளுக்கான இலவச அவசர காலத் தொலைபேசி அமைப்பின் ஆலோசனைக் குழுமத்தின் தலைவராக சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையர் இருக்கிறார். துயருரும் சூழ்நிலையில் பாதிப்புக்குள்ளான 0 முதல் 18 வயது வரையுள்ள குழந்தைகளைக் கண்டறிந்து காப்பாற்றி, அவர்களுக்கு உறைவிடம், மருத்துவ வசதி, மீட்பு, குடும்பத்துடன் அவர்களை இணைத்தல், உணர்வுபூர்வமான உதவி மற்றும் ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் குழந்தைகளுக்கான அவசர காலத் தொலைபேசி அமைப்பு செயல்படுகிறது.

## 5.19 மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு, அவர்கள்மீது வணிக ரீதியில் பாலியல் குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுப்பது மாநில அரசின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்திற்கென கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:



- மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் 1-8-2006 அன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
- இதேபோல மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு கிராமத்திலும் இப்பிரச்சினைகளைக் கையாளவும் / தடுக்கவும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தலைமையில் 12,547 பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டு, இப்பிரச்சினைகளில் கிராம அளவில் ஈடுபடுத்தப்படுகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக இம்மூன்றடுக்குத் திட்டம், தோற்றுவிக்கப்பட்டதில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது.
- சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் / வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் அவர்களை ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் / கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், கூராய்வு செய்தல் ஆகிய பணிகளை இக்குழு கவனிக்கும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிக ரீதியில் பாலியல் குற்றங்களுக்கு அவர்களை ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராகப் பிரசாரம் செய்யவும், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், 'சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும், அதற்காகச் செயல்படும் அமைப்புகளுக்கு, செயல்திறன் கட்டமைப்பு கூர் உணர் செயல் திட்டப் பயிற்சி எல்லா மாவட்டங்களிலும் ரூ.1.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.
- UNDP-ன் நிதியுதவியுடன், குழந்தை உரிமைகள், இளைஞர் நீதி மற்றும் சிறார் கடத்தலைத் தடுத்தல் ஆகிய தலைப்புகளில் 7,500 கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்குப் புத்தறிவுத் திட்டம் நடத்தப்பட்டது.

- ❖ யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் "குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பெண்கள் கடத்தலைத் தடுத்தல்" என்ற தலைப்பில் சம்பந்தப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டது.
- ❖ கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடைய "பங்கு மற்றும் பொறுப்புகள் பற்றிய யோசனைகள்" என்ற தலைப்பில் சிறு நூல் வெளியிடப்பட்டது.
- ❖ சிறார் கடத்தலைத் தடுக்கும் பொருட்டு, மாவட்ட அறிவுரைக் குழுமம் மற்றும் பற்று அலுவலருக்கு அந்தந்த மாவட்டங்களில் நடக்கும் கடத்தல் பற்றிய நிகழ்வுகளைத் தெரிவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
- ❖ கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குடும்ப ஆலோசனை வழங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 முதல் 5 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**பாலியல் ரீதியாகக் கடத்தப்பட்டு மீட்கப்பட்ட பெண்களின் மறுவாழ்வுக்கான உதவிகள்**

பாலியல் ரீதியாகக் கடத்தப்பட்டு மீட்கப்பட்ட/பாதிக்கப்பட்ட பெண்களுக்கு. தங்களது திறமையை வளர்த்துக்கொள்ளவும் மாற்று வேலைவாய்ப்புக்கு உதவும் வகையிலும் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதியில் இருந்து, மகளிர் காப்பகங்களில் இருந்து வீடேகிய இல்லவாசிகளுக்கு, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5,000/- வரை சிறு கடைகள், தையற் கடை, ஆடு, மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களைத் தொடங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

**தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களை ஊக்குவிப்பதன்மூலம் குறிப்பாக மறுவாழ்வுத் திட்டங்கள் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்ட பெண்களின் தேவையைக் கருத்தில்கொண்டு, அதற்கேற்றவாறு மகளிர் காப்பகங்களில் இணை மேலாண்மைத் திட்ட வாயிலாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் செயல்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காப்பகங்களில் உள்ள மகளிருக்குப்





பயிற்சி, ஆலோசனை, மருத்துவச் சேவை, குடும்பத்துடனும், சமுதாயத்தோடும் அவர்களை மீண்டும் இணைக்கும் பணிகள், வேலைவாய்ப்பு உதவி ஆகியவை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படும்.

**5.20 சமூகப் பாதுகாப்புத் துறை இணையதளம்**

இத்துறைக்கான இணையதளம் ஒன்று தேசியத் தகவல் மையத்தின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தின் முகவரி : www.tn.nic.in/socialdefence

**2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

**சமூகப் பாதுகாப்பு**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாநில அளவில் ஆண்டு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் | 5.00 |
| 2. | செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, மல்லிப்புதூர் மற்றும் பஞ்சப்பள்ளி அரசு குழந்தைகள் இல்லங்களில் உள்ள சமையலறைகளை நவீனமயமாக்குதல் | 15.46 |
| 3. | புதிதாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியளித்தல் | 5.00 |
| 4. | அரசு கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு இல்லங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுக்கான சமையல் பொருட்களுடன் கூடுதலாகக் கறி மசாலா பொருட்கள் வாரம் ஒரு முறை வழங்குதல் | 3.98 |
| 5. | அரசு கூர்நோக்கு இல்லங்கள், வேலூர் சிறப்பு இல்லம், அரசு குழந்தைகள் இல்லங்கள், ஆத்தூர் அரசு பிற்காப்பு இல்லம் ஆகியவற்றில் நவீன தொழிற்பயிற்சிகள் தொடங்குதல் | 14.00 |
| 6. | குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் அரசு குழந்தைகள் இல்லங்களை மேம்படுத்துதல் | 43.38 |
| 7. | சென்னை, இராயபுரம், அரசு குழந்தைகள் இல்ல வரவேற்புப் பிரிவை மேம்படுத்துதல் | 37.50 |
| | மொத்தம் | 124.32 |

## அத்தியாயம் 6

## சமூகப் பாதுகாப்பு வளையம்

### 6.1 ஓய்வூதியத் திட்டங்கள்

தமிழகத்தில், வயது முதியோர், வாழ்வாதாரமற்ற/ உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழும் ஆதரவற்றோருக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு தமிழக அரசு கீழ்க்கண்ட ஓய்வூதியத் திட்டங்களை வருவாய் துறைமூலம் செயல்படுத்தி வருகிறது:

(1) முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம்

(2) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

(3) ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்

(4) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

(5) கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்

மேற்கண்ட ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளுக்கு மாதம் ரூ.400/- மாவட்டங்களிலுள்ள வருவாய்த் துறையைச் சார்ந்த சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர்களால் பணவிடைமூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

### 1. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம்

(1-4-1962 முதல்)

இத்திட்டத்தின்கீழ், பிழைப்புதவி இல்லாமலும், காப்பாற்றுபவர் இல்லாமலும் உள்ள 65 வயதிற்கு மேற்பட்ட (பார்வையின்மை, தொழுநோய், மனநோய், பாரிசவாயு மற்றும் கை, கால் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நிலையிலுள்ள ஆதரவற்றோருக்கு 60 வயது) அனைத்து முதியோருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின்கீழ் முதியோர் ஓய்வூதியத் தொகை பெறத் தகுதி பெறும் நபர்

(அ) எவ்வித வருமானமோ அல்லது பிழைப்பூதியத்திற்கான ஆதாரவு வழியோ பெற்றிருத்தல் கூடாது.



தொழிலாகக் கொண்டிருத்தல் கூடாது.

(ஆ) பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொண்டிருத்தல் கூடாது.

(இ) இருபது அல்லது அதற்கு மேல் வயதுடைய மகன் அல்லது மகன்களால் ஆதாவு பெறுபவர்களாக இருக்கக் கூடாது மற்றும்:

(ஈ) ரூ.5,000/-க்கு மேல் மதிப்புள்ள சொத்து வைத்திருப்பவராக இருக்கக் கூடாது.

இத்திட்டத்தின்கீழ் உதவிபெற்ற முதியோருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.400/-ல் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.200/-ஐ வழங்கியது. மீதமுள்ள தொகை ரூ.200/-ஐ மாநில அரசு வழங்கியது.

29-02-2008 அன்றைய நிலவரப்படி, 6,25,819 பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் புதிய விதிகளுடன் இந்திரா காந்தி முதியோர் உதவித் தொகை தேசியத் திட்டம் எனப் பெயரிடப்பட்டு, 19-11-2007 முதல் செயல்படுத்தப்படுகிறது.

### இந்திரா காந்தி முதியோர் உதவித் தொகை தேசியத் திட்டம்

தேசிய முதியோர் உதவி தொகைத் திட்டம் என்பது இந்திரா காந்தி முதியோர் உதவித் தொகை தேசியத் திட்டம் எனப் பெயரிடப்பட்டு, முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் பிறந்த நாளான 19-11-2007 அன்று தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்புதியத் திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு ஆதரவற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தற்போது தளர்த்தப்பட்டு, 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட, வறுமை கோட்டிற்குகீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/-ஐ மைய அரசு வழங்குகிறது. தேசிய முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே வழங்கப்பட்டதுபோல் அத்தொகைக்குச் சமமாக தமிழ்நாடு அரசும் தனது பங்காக ரூ.200/- வழங்குகிறது. மாநில அரசால் செயல்படுத்தப்படும் மற்ற ஓய்வூதியத் திட்டங்களில் பயனாளிகளுக்கு வழங்குவது போன்று இத்திட்டத்தின்கீழும் பயனாளிகள்

அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.100/- விதம் உதவித் தொகை வழங்கப்படும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.455.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்**

(1-11-1974 முதல்)

50 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலும் நிலையான உடல் ஊனம் உள்ள 45 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வரும் அரசால் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அளவிலான குழுக்கள், ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப, தகுதியுள்ளவர்களுக்கு, வயது வரம்பை வலியுறுத்தாமல் ஓய்வூதிய அங்கீகாரம் வழங்கி வருகின்றது. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். தொழுநோயாளிகளும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் ரூ.100/- ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

29-02-2008 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தினால் பயனடைந்த ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை 83,732 ஆகும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.38.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**3. ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்**

(1-6-1975 முதல்)

மறுமணம் செய்துகொள்ளாத ஆதரவற்ற விதவையர், எந்த வயதினராக இருந்தாலும், 18 அல்லது அதற்கு மேல் வயதுடைய வாரிசு உள்ளவராக இருந்தாலும்கூட, இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குப்



பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் ரூ.400/- ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான முழுச் செலவும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

29-02-2008 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 5,49,513 ஆகும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.250.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**4. ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்**

(15-3-1981 முதல்)

60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் ரூ.400/- ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கானச் செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

29-02-2008 அன்றைய நிலவரப்படி, 96,115 ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.49.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**5. கணவனால் கைவிடப்பட்ட /ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்**

(25-04-1986 முதல்)

கணவனால் கைவிடப்பட்டு, குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு மேல் கணவரைப் பிரிந்து வாழும் / சட்டப்படி பிரிந்து வாழ நீதிமன்றத்தின்மூலம் சான்று பெற்ற, ஆதரவற்ற, 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்கள் பயன்பெறும் வகையில் முதியோர் ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 18 வயது நிரம்பிய வாரிசுகள் இருந்தாலும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறலாம். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குரிய பிற நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ்

ரூ.400/- ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான முழுச் செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

29-02-2008 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 91,625 ஆகும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.14.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 6. பிற பயன்கள்

(1) இலவச வேட்டி / சேலை வழங்குதல்:
ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின்போது, மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் ஓய்வூதியத் தொகை பெறும் பயனாளிகளில் ஆண்களுக்குத் தலா ஒரு வேட்டியும், பெண்களுக்குத் தலா ஒரு சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

(2) இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல் (15-9-1991 முதல்)

மேற்கண்ட திட்டங்களின்கீழ் பயன் பெறும் அனைத்து பயனாளிகளும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அளவுகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 4 கிலோ சன்ன ரக அரிசி.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 2 கிலோ சன்ன ரக அரிசி.

## 6.2 தேசிய குடும்ப நலத் திட்டம்

(2-10-1995 முதல்)

இத்திட்டமும் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, மைய அரசால் வழங்கப்படும் கூடுதல் மைய நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களில், பிரதான வருவாய் ஈட்டும் நபர் இறப்பின், அக்குடும்பத்திற்கு மத்திய அரசால் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. தமிழகத்தில், தேசிய குடும்ப நல நிவாரணம் பெறும் பயனாளிகள், நலிந்தோர் நிவாரணத் திட்டம் மற்றும் விபத்து நிவாரணத் திட்டம் ஆகியவற்றின்கீழ் பயனடைகின்றனர். விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.15,000/-



வழங்கப்பட்டு வருகிறது. இதில் மைய அரசின் பங்கு ரூ.10,000/- மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.5,000/- ஆகும். நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வழங்கப்படும் ரூ10,000/- பயனாளிக்கு வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.37.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

மகளிரின் தகுதி நிலை, இரு பாலருக்கான மேம்பாட்டுக் குறியீட்டு எண் நிலைமைகளுடன் கணக்கிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் இந்நிலையின் மதிப்பு 0.71 ஆகும். இது, அனைத்திந்திய நிலையான 0.59 என்ற மதிப்பை விட அதிகமாகவே உள்ளது. அதே போன்று, தமிழ்நாட்டிலுள்ள ஊட்டச்சத்து அளவு நிலை, இயலாமையுற்றோருக்கான பாதுகாப்பு நிலை ஆகியனவும், பிற மாநிலங்களை விடவும் முன்னணியிலேயே உள்ளன. இயலாமையுற்றோரின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய உலக வங்கியின் அறிக்கை, இந்நிலை அவர்களுக்குத் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கோடிட்டுக்காட்டியுள்ளது. அந்த அறிக்கை சமூகப் பொருளாதார வெளிப்பாடுகளுக்கும், சமூகத் தழும்புகள், குறிப்பாக ஏழ்மை நிலையிலுள்ள இயலாமையுற்றோரும், மனநோயால் இயலாமை நிலையில் உள்ளோரும், மன வளர்ச்சிக் குன்றியோரும் அரசின் சேவைகளைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. பெரும் நகர்பகுதி மற்றும் ஊரகப் பகுதி ஆகிய நிலைகளில் இருபாலருக்கான வேறுபாடுகள், வகுப்பு வேறுபாடுகள் இருப்பதுடன், வட்டார அளவிலும் வேறுபாடுகள் உள்ளன. 2006 ஆம் ஆண்டின் ...த்தில் அரசு, இயலாமையுற்றோருக்கான தேசியக் கொள்கை, ஒன்றுக்கும் ... வழிமுறைகளைத் தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்தது. அதற்கான நடவடிக்கைகளை ... செயல்படுத்தியுள்ளது. மேலும், இயலாமையுற்றோரை மற்றவர்களுடன் சமநிலைப்படுத்தும் வகையில் சட்டப்படியான அதிகாரங்களைக் கொண்ட இயலாமையுற்றோருக்கான நல வாரியம் ஒன்றை ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது ... பெறுவதை

அதேபோன்று, மகளிருக்கு ... தடுப்புச் சட்டம், உறுதிப்படுத்தும் பொருட்டு, குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம், மத்திய அரசால் இயற்றப்பட்டு, அது இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. நமது மாநிலத்தில் கடுந்துன்பத்திற்கும், குடும்ப

[2008 ஏப்ரல் 21

வன்முறைக்கும் உள்ளாகும் மகளிரை அவற்றினின்று மீட்பதற்காக, மாவட்டப் பாதுகாப்பு அதிகாரிகளும், சேவை புரிவோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மகளிரை விழிப்படையச் செய்வதற்காக மாவட்டந்தோறும் விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மகளிர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு மாநில மகளிர் ஆணையத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மாநில மகளிர் ஆணையம், தன்னிச்சையாகச் செயல்படுவதற்கு ஏதுவாக, அதற்குச் சட்ட ரீதியான தகுதி நிலை அளிக்கும் வகையில் தனிச் சட்டம் ஒன்று இயற்றப்பட உள்ளது.

மகளிர் நலம், குழந்தைகள் நலம், முதியோர் பாதுகாப்பு மற்றும் ஊனமுற்றோரின் நலம் ஆகியவற்றைப் பேணுவதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நமது அரசு விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இவ்வாறு கடைநிலைப்படுத்தப்பட்ட மக்களை வாழ்க்கையின் பொது நீரோட்டத்தில் இணைத்து, நமது பொருளாதார வெற்றியின் பலனை இவர்களும் பெற வழிவகை செய்ய நாங்கள் கடும் முயற்சி மேற்கொள்வோம்.

---

228412
சென்னை-600 008